திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதியில் சீத்தாமரம் நான்கு சாலை முதல் கல்வார்பட்டி வரையுள்ள சாலையானது மாவட்ட முக்கியச் சாலையாகும். வேடசந்தூர் சப் டிவிஷனில் கட்டப்பட்ட 11 கிலோ மீட்டரில் 8 கிலோ மீட்டர் தூரத்தைப் புதுப்பிப்பதற்கான பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மீதமுள்ள தூரத்தை புதுப்பிப்பதற்கான

[2016 பிப்ரவரி 19

பணி மேற்கொள்ளப்பட வேண்டும். அப்படிச் செய்கின்றபோதுதான் அந்தச் சாலையானது முழுமைபெறும் என்பதால் அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என தங்கள் மூலம் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதியில் உள்ள சீத்தாமரம் நான்கு சாலை முதல் கல்வார்பட்டி வரையுள்ள சாலை மாவட்ட முக்கியச் சாலையாகும். ரெட்டியார்சத்திரத்திலிருந்து கல்வார்பட்டி வழியாக தேவநாயக்கன்பட்டி செல்லும் சாலையாகும். இச்சாலை 28 கிலோ மீட்டர் நீளமுள்ள ஒரு வழி இடைவெளித் தடச் சாலையாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல ஒரு பகுதி சீரமைக்கப்பட்டிருக்கின்றது. அதன் மறு பகுதி சீரமைக்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின்படி மேற்படி சாலையில் 11.30 கிலோ மீட்டரிலிருந்து 15.0 கிலோ மீட்டர் வரை மற்றும் 17.0 கிலோ மீட்டரிலிருந்து 22-வது கிலோ மீட்டர் வரை ஆக மொத்தம் 8.70 கிலோ மீட்டர் நீளச் சாலையினை ரூ.4.40 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. ச. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட சாலைப் பணி தற்போது நடைபெற்று வருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய வேடசந்தூர் தொகுதியில் உள்ள கோவிலூர்-வேடசந்தூர் சாலையானது மாவட்ட இதரச் சாலையாகும். ஒரு வழித் தடமாக இந்தச் சாலை இப்போது உள்ளது. இந்தச் சாலையோடு, கரூரிலிருந்து இரு வழித் தடமாக உள்ள மாவட்ட முக்கியச் சாலையானது வந்து சேருகிறது. ஒரு வழித் தடத்தில் இரு வழிச் சாலை வந்து சேருவது பொருந்தாததாக இருக்கிறது. ஆகவே, இந்த ஒரு வழித் தடச் சாலையை கோவிலூர்-



2016 பிப்ரவரி 19]

வேடசந்தூர் வரை இரு வழித் தடச் சாலையாக மாற்றித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு சாலைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அகலப்படுத்தி வருகின்றது. போக்குவரத்துச் செறிவை ஆய்வு செய்து, அங்கே போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்றபட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலையை எதிர்காலத்திலே அகலப்படுத்துவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊருக்கு உழைத்தாலே, ஏழை உணர்வை மதித்தாலே பெருமைகள் தேடி வரும், பதவிகள் தானே நாடி வரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற தத்துவச் சொல்லுக்கேற்ப தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தத் தலைமுறைக்கு மட்டுமல்லாமல், அடுத்த தலைமுறைக்கும் திட்டங்களைத் தீட்டி, தமிழகத்தில் ஒரு பொற்கால ஆட்சி நடத்தி வருகிற இந்த நல்ல வேளையில், மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட டி. புதுப்பட்டியிலிருந்து அப்பக்கரை, அளப்பளச்சேரி, மதிப்பனூர், வீரம்பட்டி வழியாக தொட்டியப்பட்டி செல்லக்கூடிய சாலையையும், மேலக்கோட்டையிலிருந்து கீழக்கோட்டை, மைக்குடி, உலகாணி, சின்னஉலகாணி, கூடக்கோயில் வழியாக நடுக்கோட்டை செல்லும் சாலையையும் புதுப்பிப்பதற்கு சமீபத்தில் ஒப்பந்தங்கள் போடப்பட்டு, பணிகள் துவங்கக்கூடிய நிலையில் இருக்கின்றன. இதிலே இடையிடையே சில பகுதிகள் விடுபட்டிருக்கின்றன.

[2016 பிப்ரவரி 19

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முந்தைய கேள்விக்கு சொல்லிய பதிலைப் போல, அந்தப் பணி முழுமை அடைவதற்கான நல்ல பதிலைச் சொல்ல வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த இரண்டு ஊர்களுக்கும் செல்லக்கூடிய சாலைகளை முழுமையான அளவில் புதுப்பித்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரு சில இடங்களிலே முழுமையாக சாலையை சீர் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்கள். ஒரு சாலைப் பணியை மேற்கொள்கின்றபோது ஐந்தாண்டுக் காலம் என்று அதனுடைய ஆயுட் காலம் நிர்ணயம் செய்யப்படுகின்றது. ஐந்தாண்டுக் காலம் முடிந்தால்தான் அந்தச் சாலை சீர் செய்யப்படும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தச் சாலைப் பகுதியானது ஐந்தாண்டுக் காலம் நிறைவு பெறாதிருக்கின்ற காரணத்தினாலே எடுத்துக் கொள்ளப்படாமல் இருந்திருக்கும். இருந்தாலும், அதை ஆய்வு செய்து, அப்படி ஐந்தாண்டுக் காலம் நிறைவு பெறாமல் இருந்தாலும் அந்தச் சாலையை சீர் செய்வதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருவிலே இருக்கின்ற சிசுக்கள் முதல் அறுபது வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கும், தமிழக மக்களுக்கும் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை உருவாக்கி, 100 சதவீதம் சிறப்பாக நிறைவேற்றி, இன்றைக்கு 68-வது பிறந்த நாளில் அடியெடுத்து வைக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை இந்த நல்ல நாளில் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட



2016 பிப்ரவரி 19]

மானாமதுரையிலிருந்து தேனாபுதுக்கோட்டை வழியாக பரமக்குடி வரை செல்லும் பழைய இராமநாதபுரம் சாலையை அகலப்படுத்துவதோடு, மானாமதுரை காவல் நிலையத்திலிருந்து கிருஷ்ணராஜபுரம் தெருவிற்கு இடையிலே வைகை ஆற்றின் குறுக்கே ஒரு தரைப் பாலம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாலைகளை அகலப்படுத்த வேண்டும், சீரமைக்க வேண்டும் மற்றும் தரைப் பாலம் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மாவினுடைய அரசால், ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு நபார்டு திட்டத்தின்கீழ் பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் கிட்டத்தட்ட 474 பாலங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 281 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு, திறக்கப்பட்டுள்ளன. 109 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 9 பாலங்களுக்கு திருத்திய மதிப்பீடு பெறுவதற்காக ஒப்பந்த நிலையில் இருக்கின்றது. மேலும், நிருவாக ஒப்புதலுக்காக 69 பாலங்கள் இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோடிட்டுக் காட்டிய அந்தத் தரைப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், அயோத்தியாபட்டணம் முதல் வாணியம்பாடி வரையிலான சாலை தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட்டதாக அறிந்தேன். அந்தத் தேசிய நெடுஞ்சாலை உறுதி செய்யப்பட்டதா, அந்தச் சாலையை 4 வழிச் சாலையாகக்

[*2016 பிப்ரவரி 19*

*கொண்டு வருவதற்கு அரசின் செயற்குறிப்பு உள்ளதா? எனது அரூர் தொகுதி, மஞ்சவாடியிலே இருக்கக்கூடிய ஒரு பெரிய பிரம்மாண்டமான வளைவிற்கு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி, ஏழரைக் கோடி ரூபாய் செலவு செய்வதற்கு ஏற்பாடு செய்திருப்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே வரவேற்கின்றேன். அதேபோல அரூர், கோட்டப்பட்டி சிட்லிங்லிருந்து மாமஞ்சி தும்பல் வரை இருக்கக்கூடிய சாலையை வனத் துறைமூலம் சீர் செய்து செப்பனிடுவதற்கு அனுமதி கேட்கின்ற நிலைமை நீடிக்கிறது. இச்சாலையை ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றுவதற்கு கோப்புகள் அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தச் சாலையை நெடுஞ்சாலைத் துறைச் சாலையாக மாற்றம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்திலிருந்து ஊத்தங்கரை வழியாக திருப்பத்தூர் வரை செல்லும் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக அறிவிப்பதற்குப் பதில் நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்துவதற்குத்தான் மாநில அரசு, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். அதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஊராட்சி சாலைகளை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அந்தக் கருத்துரு அரசுக்கு வந்தபிறகு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

**திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட கோதையாறு பகுதியில் மின் வாரியத்திற்குச் சொந்தமான சாலை போடப்பட*



*2016 பிப்ரவரி 19*]

*வேண்டுமென்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடமும் கோரிக்கை வைத்திருந்தேன். அந்தச் சாலை குறித்து மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதுகுறித்து தகவல் தெரிவிப்பார்களா? விரைவில் அந்தப் பணிகள் நடைபெற வேண்டும். மின்சார வாரியம், நெடுஞ்சாலைத் துறை இரண்டும் சேர்ந்து பணிகளைச் செய்ய வேண்டுமா என்பது தெரியவில்லை. கோதையாறு பகுதியில் மின் வாரியத்திற்குட்பட்ட சாலைக்கு ஏற்கெனவே* sanction *ஆகிவிட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது அவைக் குறிப்பில் வந்தால் எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும். இது என்னுடைய கோரிக்கை. இதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் டெண்டர் போடுவார்களா அல்லது மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் டெண்டர் போடுவார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும், எனக்குக் கிடைத்த தகவல்படி, அது உங்களிடம்தான் இருக்கிறது என்பது தெரியும். அது அவைக் குறிப்பில் இருந்தால் வசதியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு சாலையை சுட்டிக்காட்டியுள்ளார்கள். அது மின்சார வாரியத்திற்குட்பட்ட பகுதி என்று குறிப்பிடுகின்றார்கள். ஆகவே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், நானும் கலந்தாலோசித்து அது எந்தத் துறைக்கு வருகின்றது என்பதைப் பார்த்து ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப சாலை அமைக்க அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்கள் கோதையாறு நீர்மின் திட்டம் second phase-ஐப் பற்றி

இங்கே கேள்வி எழுப்பினார்கள். அது ஆய்வுப் பணியிலே இருக்கிறது என்று சொன்னேன். அதுசம்பந்தமாக சற்று கூடுதல் விவரங்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அது திருநெல்வேலி மின் உற்பத்தி வட்டத்தில் உள்ள கோதையாறு-I புனல் மின் நிலையம், 60 மெகா வாட் மின் உற்பத்தித் திறன் கொண்டதாக சுமார் 45 வருடங்களுக்கு முன்பாக தொடங்கி வைக்கப்பட்டது. இப்பொழுதும் அது இயங்கி வருகிறது. கோதையாறு-II புனல் மின் நிலையம், ஏறத்தாழ 44 வருடங்களுக்கு முன்பாகத் தொடங்கி வைக்கப்பட்டது; இன்றும் இயங்கி வருகிறது. ஆனால், இரண்டும் நீண்டகாலமாகிவிட்டதால், அடிக்கடி பழுது ஏற்பட்டு, ஏறத்தாழ 100 மெகா வாட் அளவிற்கான உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்டுள்ளது. நீர் மின் உற்பத்தியிலே அது மிக முக்கியமான திட்டங்களாக இருப்பதால், அவற்றைச் சீரமைக்க வேண்டுமென்பதற்காகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. மேற்கண்ட இரண்டு புனல் மின் நிலையங்களில் உள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்தும் காலம் முடிவடைந்த நிலையில், அடிக்கடி பழுது ஏற்பட்டு மின் உற்பத்தி பாதிக்கப்படுவதால் கோதையாறு-I புனல் மின் நிலையத்தின் ஆயுட்காலத் தன்மையை அறிவதற்கான பணி ஆணை M/s. Mecca நிறுவனத்திற்கு ரூபாய் 93 இலட்சம் மதிப்பில் 19-9-2014 அன்று வழங்கப்பட்டது. அந்த நிறுவனம் விரிவான திட்ட அறிக்கையினை அளித்துள்ளது. இந்த அறிக்கை கூர்ந்தாய்வில் உள்ளது. இத்திட்டத்திற்கான பணிகள் இந்த ஆண்டு தொடங்கப்பட்டு 2020-ல் முடிவடையும். கோதையாறு-II புனல் மின் நிலையத்தின் பயன்படுத்தும் காலம் மற்றும் ஆய்வுப் பணிகள் முடிவடைந்து, அந்த ஆய்வின் அடிப்படையில் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே, 45 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட இந்தக் கோதையாறு மின் உற்பத்தித் திட்டங்களைப் புதுப்பிக்கின்ற பணிகளுக்கு இப்பொழுது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முக்கியத்துவம் கொடுத்து, அந்தப் பணிகளைச் செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் கேட்டதற்கு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கின்றார்கள். அவர் சாலை வசதி





கேட்கின்ற அந்தப் பகுதி தமிழ்நாடு மின்சார வாரியத்தின் எல்லைக்குட்பட்ட பகுதி. ஆகவே, அந்தப் பகுதியிலே தமிழ்நாடு மின்சார வாரியம்தான் சாலையை அமைக்க வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே அணுகுசாலையை அமைப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**78—**

## வேலைவாய்ப்பு அலுவலகம்

*__53244—திருமதி க. அழகுவேலு:__

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியில் வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கள்ளக்குறிச்சி தொகுதியினை உள்ளடக்கிய விழுப்புரம் மாவட்டத்தில் அனைத்து பணிநாடுநர்களும் பயன்பெறும் வகையில் மாவட்டத் தலைமையிடமான விழுப்புரத்தில் ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சிறப்பாக இயங்கி வருகிறது. வேலைவாய்ப்புத் துறைக்கென தனியாக இணையதளம் செயல்படுத்தப்பட்டு, கல்வித் தகுதிகளைப் பதிவு செய்தல், கூடுதல் பதிவு, பதிவு புதுப்பித்தல் ஆகிய பணிகளை இணையதள வழியாக (online) மேற்கொள்ள பணிநாடுநர்களுக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளதால், வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு நேரில்

செல்ல வேண்டிய அவசியமில்லை. எனவே, கள்ளக்குறிச்சி நகராட்சியில் தனியாக வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

**திருமதி க. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். கள்ளக்குறிச்சி நகராட்சியில் வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னாலும்கூட, நடவாத திட்டங்களையெல்லாம் நடத்தி முடிக்கும் நம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, வருங்காலங்களில் கள்ளக்குறிச்சி நகராட்சியில் வேலைவாய்ப்பு அலுவலகம் அமைத்துத் தர வேண்டுமாய் அன்போடு கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களிலும் ஒரு மாவட்டத்திற்கு ஒன்று என்கிற வகையில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையிலேதான் இன்றையதினம் வேலைவாய்ப்புக்காக ஆங்காங்கே பதிவு செய்கிற வகையில், 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு படித்தவர்களுக்கெல்லாம் ஆன் லைன் மூலமாக அந்தந்தப் பள்ளி வளாகங்களிலேயே பதிவு செய்துகொள்ளும் ஒரு நல்வாய்ப்பை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அம்மா அவர்கள் செய்து தந்திருக்கிறார்கள். அந்த வகையிலே, மாநில அளவில் 60,50,903 மாணவ, மாணவிகள் இந்தத் திட்டத்தின் மூலமாகப் பயன்பெற்றிருக்கிறார்கள். விழுப்புரம் மாவட்டத்திலே மாத்திரம் 2,51,175 மாணவ, மாணவிகள் இந்தத் திட்டத்தின் மூலமாகப் பலன் பெற்றிருக்கிறார்கள். எனவே, வேலைவாய்ப்புத் துறைக்கென இணையதள வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதால், பெரும்பாலான மனுதாரர்கள் தாங்கள் வசிக்கும் வட்டம், நகராட்சி மற்றும் கிராமங்களிலேயே வேலைவாய்ப்பு தொடர்பான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்திருக்கிற காரணத்தால், கள்ளக்குறிச்சியில் தனியாக வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**79—**

**சத்துணவு மையம்**

***54121—திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், கீழையூரிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியின் சத்துணவு மையத்தினை பள்ளி வளாகத்திற்குள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், கீழையூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் சத்துணவுக் கூடத்திற்கு ரூ.2,20,000/- செலவில் 20 சதுர மீட்டர் பரப்பளவில் வைப்பறையுடன்கூடிய சமையலறை பள்ளி வளாகத்தினுள்ளேயே கட்டி முடிக்கப்பட்டு, 5-2-2015 முதல் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[*2016 பிப்ரவரி 19*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், கீழையூரிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் சத்துணவுக் கூடம் இதுவரை பள்ளி வளாகத்திற்கு வெளியே செயல்பட்டு வந்தது. இதைப் பள்ளி வளாகத்திற்குள்ளேயே அமைத்துத் தர வேண்டுமென்ற எனது வேண்டுகோளினை ஏற்று, பள்ளி வளாகத்திற்குள்ளேயே சத்துணவுக் கூடத்தை அமைத்துத் தந்த மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, எனது தொகுதியில் முடிந்தவரை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சத்துணவுக் கூடங்கள் மற்றும் ஊட்டச் சத்து மையங்களைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கி கட்டித் தரப்பட்டுள்ளன. இருப்பினும், கீழ்வேளூர் ஒன்றியத்தில் திருக்கண்ணங்குடி ஊராட்சியிலுள்ள அகரம், கீழ்வேளூர் பேரூராட்சியிலுள்ள சந்தைத்தோப்பு, காந்தி நகர், அண்ணா நகர் மேட்டுத் தெரு ஆகிய இடங்களில் உள்ள ஊட்டச் சத்து மையங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இந்த ஊட்டச்சத்து மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டித் தர மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதி, எந்தெந்த கிராமம் என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*2016 பிப்ரவரி 19*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட ஊட்டச்சத்து மையங்களுக்குப் புதிதாகக் கட்டடம் கட்டித் தர ஆவன செய்வதாக அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்கென வாழாமல், தமிழக மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்து, வாழும் மனித தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

என்னுடைய துறையூர் தொகுதிக்குட்பட்ட துறையூர் நகரத்தில் 18-வது வார்டில் உள்ள விநாயகர் தெருவில் அமைந்துள்ள சத்துணவு அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடம் கட்டிக்கொள்ளலாம். அப்படி நீங்கள் கொடுத்திருக்கின்ற நிதியிலிருந்து ஏற்கெனவே வேறு பல கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்குமேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதி என்று அதை எழுதித் தருவார்களேயானால் உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதியிலிருந்து கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**80—**

### புதிய கட்டடம்

**52309—திருமதி எஸ். விஜயதரணி:*

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, பாகோடு Y3566 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதியில் உள்ள பாகோடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் அலுவலகம் 1966 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இருப்பினும், இச்சங்கத்திற்கு ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக புதிய அலுவலகக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, பாகோடு Y3566 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் கடந்த 60 ஆண்டுகளாக சிறப்பாகச் செயல்பட்டு, ஏழை விவசாயிகளுக்குக்





கடன் வழங்கி சேவை புரிந்து வருகிறது. இந்தச் சங்கத்தில் மொத்தம் ரூ.8 கோடி வைப்புத் தொகை உள்ளது. இந்தச் சங்கத்தில் விவசாய நகைக் கடன் தினசரி வழங்கப்படுவதால், தினமும் சராசரியாக 100 முதல் 200 வரை வாடிக்கையாளர்கள் வந்து செல்கின்றனர். இந்தச் சங்கம் பழைய ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. நகைகளுக்குப் பாதுகாப்பாகவும், வைப்புத் தொகைகளுக்குப் பாதுகாப்பாகவும் இந்தச் சங்க அலுவலகத்திற்கு புதிய ஆர்.சி.சி. கட்டடம் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும். ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். பாகோடு சொஸைட்டியில் போதுமான இடம் உள்ளது. குழித்துறை அருகில் உள்ள மேல்புறம் சந்திப்பில் இது அமைந்துள்ளது, போக்குவரத்து வசதி உள்ளது. இதனால் அதிகமான நிதி பரிவர்த்தனைகள் இங்கு நடைபெறுகின்றன. இதனை மத்திய வங்கி ஊழியர்கள் வந்து பார்வையிட்ட பிறகு, ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்ட நிதி வழங்கலாம் என்று கூறியுள்ளார்கள். ஆனால், சங்கத்தின் சேவையைக் கருத்தில்கொண்டு, புதிய, விஸ்தாரமான, வசதியான அலுவலகம் கட்ட ரூ.50 இலட்சம் அதிகமாகத் தேவைப்படுவதால், அரசு அந்த நிதியையும் அளித்தால், இரண்டையும் சேர்த்து புதுப் பொலிவுடன் இதற்குப் புதிய கட்டடம் உருவாக்க வாய்ப்பு இருக்கிறது. எனவே, அரசு முன்வந்து இந்த உதவியைச் செய்ய வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள் கட்டுவதற்கு விதிகளில் (Norms) இடம் இல்லை. எனவே, இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், இன்றைக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு பொற்காலம் என்றால், அது மிகையாகாது. எனவே, தமிழகத்தில் இருக்கிற 4,490 சங்கங்களுக்கும் கட்டடங்கள் அமைக்க வேண்டுமென்ற அடிப்படையிலும், பாதுகாப்பு வசதிகள், கணினிமயமாக்கல், வாடிக்கையாளர்கள் வைக்கிற நகைகளுக்குப்

[2016 பிப்ரவரி 19

பாதுகாப்பு போன்ற வசதிகளை செய்து கொடுக்க வேண்டிய அடிப்படையிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு, தொடர்ந்து சிறப்பாக நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் அடிப்படையிலேதான் ஏறத்தாழ 50,000 கோடி ரூபாய் இன்றைக்கு டெபாசிட்டாக இருக்கிறது என்ற ஒரு புதிய வரலாறு உருவாகியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில் தற்போது இருக்கிற கட்டடம் ஓட்டுக் கட்டடத்தில் இல்லை; ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. மேலும், 20 இலட்சம் ரூபாயில் கட்டடத்திற்கான வரைபடம் கொடுத்திருக்கிறார்கள். திட்ட மதிப்பீடு கூடினாலும், மாண்புமிகு அம்மா அவர்கள் அரசுதான் அமையப்போகிறது. அம்மா அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் மற்றும் அந்தப் பகுதி மக்கள் மகிழ்ச்சி அடையும் அளவுக்கு நிச்சயமாக கட்டடத்தைக் கட்டித் தருவார்கள், அதைப் பார்க்கப் போகிறீர்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியாவது கட்டடத்தைக் கட்டிக் கொடுத்துவிட்டால் சந்தோஷம்தான். அந்த வகையில், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதியில் புலியூர் சாலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், சாங்கை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், அண்டுகோடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், ஒய் 55 குன்னத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், ஒய் 126 விளாத்துரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் ஆகிய கடன் சங்கங்களோடு மார்த்தாண்டம் பனை வெல்ல கூட்டுறவுச் சங்கம், மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் தேன் கூட்டுறவுச் சங்கம், விளவங்கோடு கல்குளம் தாலுகா கூட்டுறவு விற்பனையாளர்கள் சங்கம் ஆகிய சங்கங்களும் உள்ளன. இவற்றிற்கும் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும்.

மிக முக்கியமான ஒரு கருத்து. தமிழகத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், கடன் சங்கங்கள் மற்றும்



2016 பிப்ரவரி 19]

பிற கூட்டுறவு வங்கிகளில், தேசிய வங்கி மற்றும் scheduled வங்கிகளில் நடைபெறும் DD, RTGS, loan advance business போன்ற பணிகளைக் கொண்டு வர வேண்டும். வங்கித் தேர்வுமூலம் பணியாளர்கள் தேர்வு செய்யப்படுவது போன்று கூட்டுறவு வங்கிகளிலும் தமிழக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், கேள்வி கேளுங்கள். நீங்கள் உரையைப் படிக்கிறீர்களே?. கேள்வி கேளுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளில், கிராமப்புறங்களில் படிக்கின்ற மாணவர்களைத் தேர்வு செய்ய அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். 14-வது சட்டமன்றப் பேரவையின் இறுதிக் கூட்டத் தொடராக இருந்தாலும், அவைக் குறிப்பில் இருந்தால் வருங்காலத்தில் நடைபெறும் என்ற ஆசையோடு இதனைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான், இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் உதவியாளர் பணிகளுக்கான தேர்வு தற்போது நடத்தப்பட்டது. தமிழ்நாடு தேர்வாணையத்தைக் காட்டிலும் ஒரு படி மேலாக, அந்தத் தேர்வு நடத்தப்பட்டது. அதில் வந்த கேள்விகள் யாரும் அறியாதவை. விடைத் தாளை machine-ல் திருத்தி, ஒவ்வொருவருக்கும் எவ்வளவு மதிப்பெண்கள் போடப்பட்டிருக்கிறதோ அந்தத் தகுதியின் அடிப்படையிலே தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு தேர்வு செய்யப்பட்டவர்கள், இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி, co-operative training படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் படித்து முடித்தவுடன் மேற்கண்ட வங்கிகளில் பணியமர்த்தப்படுவார்கள். யார் யார் எந்தெந்த வங்கியில் பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்களோ அது அவர்களின் தகுதி, rank அடிப்படையில்தான் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஏற்கெனவே

[2016 பிப்ரவரி 19

நிறைவேற்றிவிட்டது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் சில சங்கங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்று உறுப்பினர் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சங்கங்களை ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக ஐந்து வருடங்கள் செயல்படுத்துவதற்கு ஏறத்தாழ ரூ.5,837.70 இலட்சத்தில் திட்டங்கள் வகுத்து, அதற்கான பணிகள் தொடங்கப்பட்டு விரைவாக நடக்கவிருக்கின்றன. அவ்வாறு வரும்பொழுது மேற்காணும் சங்கங்களுடைய தேவையை அறிந்து, நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

முற்பகல் 10-45

**திரு. க. பீம்ராவ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி, மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட 92-வது வட்டத்தில் ஒரு ரேஷன் கடை கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அந்த ரேஷன் கடை, நீண்ட தூரம் உள்ளதால் ஆட்டோவிற்கு 40 ரூபாய் கொடுத்து, விலையில்லாமல் அரசு கொடுக்கக்கூடிய அரிசி உள்ளிட்ட பொருட்களை வாங்குகிறார்கள். எனவே, அம்பத்தூரிலே உள்ள பொது விநியோகத் திட்டத்தின்கீழ் இயங்கும் சிந்தாமணி கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் உணவுப் பொருளை வழங்குவதற்குத் தயாராக இருந்தால், நாங்கள் அந்தக் கட்டடத்தை ஒப்படைக்கிறோம் என்று சொல்கிறார்கள். இப்படி, இரண்டு துறைகளுக்கும் இது பிரச்சினையாக இருக்கிறது. இதன் காரணமாக மக்கள் அவதிப்படுகிறார்கள். மிகவும் வருத்தப்படக்கூடிய நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, உடனடியாக சிந்தாமணி கூட்டுறவுச் சங்கத்திற்கு அறிவுறுத்தி, உணவுப்



2016 பிப்ரவரி 19]

பொருட்களை வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் ஊராட்சி வளர்ச்சி நிதி போன்றவற்றிலிருந்துதான் நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும். நீங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள். அந்தப் பகுதி மக்களில் சிலர் புதிதாகக் கட்டப்பட்ட கடைக்கு நாங்கள் போக மாட்டோம் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை, நான் பொதுவாகச் சொல்கிறேன். அதாவது, இந்தப் பகுதியிலே கடை இருக்கிறது, இங்கேதான் நாங்கள் பொருட்களை வாங்குவோம் என்று சொல்வது ஒரு காரணமாக இருக்கலாம் அல்லது வேறு ஏதாவது காரணங்கள் இருக்கலாம். பொதுவாக, கூட்டுறவுத் துறையின் மூலமாக ஒரு புதிய நியாய விலைக் கடை கட்டிக் கொடுக்கப்பட்ட பிறகு, பழைய கடையிலிருந்து பொருட்களை வழங்க வேண்டும் என்று சொல்வது சட்டத்திற்குட்பட்டதல்ல. உடனடியாக புதிய கடைக்கு பொருட்களை மாற்றியாக வேண்டும். சில சட்டச் சிக்கல்கள் இருக்கும்பட்சத்தில்தான் அவ்வாறு நடைபெறும். இருந்தாலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருப்பதால், கூட்டுறவுத் துறை மூலமாக விரைவாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கடையை உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எங்கள் துறையில் ஏதாவது தாமதம் ஏற்பட்டிருந்தாலும், அதனைக் கண்டறிந்து, இந்த வாரத்திலேயே கடையைத் திறப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2016 பிப்ரவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**81—**

## பேருந்து வசதி

***31359—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி ஒன்றியம், புலியூர்குறிச்சி ஊராட்சி, கீழஉப்பூரணிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கீழஉப்பூரணிக்கு தற்போது இயக்கப்படும் பேருந்துகளே அந்தப் பகுதி மக்களின் தேவைக்குப் போதுமானதாக உள்ளது. மேற்கொண்டு பயணிகளுடைய அடர்வு அதிகமாக இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, புதிய பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி மக்கள் பயன்பெறும் வகையில் நாங்குநேரியிலிருந்து தாழைக்குளம், சிறுவரமங்கையபுரம், மீனவன்குளம், தெற்கு மீனவன்குளம், கள்ளிக்குளம், கீழதுவரங்குளம், மேலதுவரங்குளம், கள்ளிசத்திரம், பெருமாள்குளம், புத்திசுத்தி, கல்லடிசிதம்பரபுரம், தேவநல்லூர்மேலூர், தேவநல்லூர்கீழூர், மேலகாடுவெட்டி, மேலசடையன்குளம்,



2016 பிப்ரவரி 19]

கீழசடையன்குளம், கீழஉப்பூரணி வழியாக சேரன்மகாதேவிக்கு நகரப் பேருந்து இயக்கும்பட்சத்தில், அதன் மூலமாக 12 ஊராட்சிகளைச் சார்ந்த 20,000-க்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெறுவார்கள். மேலும், இவ்வழித்தடத்தில் நாங்குநேரிக்கு நேரடியாகப் பேருந்து வசதி இல்லை. இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்கப்படும்பட்சத்தில், நாங்குநேரி தாலுகா அலுவலகம் சென்று வருவதற்கு மக்களுக்கு வசதியாக இருக்கும். மாண்புமிகு அம்மா அவர்களது அரசில், நாங்குநேரியிலிருந்து கீழஉப்பூரணி வழியாக சேரன்மகாதேவிக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மேலும், நேற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, மாட்டுவண்டி செல்லும் சாலையில்கூட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பேருந்து இயக்கிக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே, எனது கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, கண்டிப்பாக இந்தப் புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்குவதற்கு ஆவன செய்து தர வேண்டுமாய்க் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கீழஉப்பூரணிக்கு இப்போது 12 நடைகளில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அந்த 12 நடைகளில், 35 சதவீதம் மக்கள்தான் பயணம் செய்து கொண்டிருக்கின்றார்கள். கீழஉப்பூரணிக்கு அருகில், இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் சடையன்குளம் இருக்கின்றது. அதோடு சாலை முடிகின்ற காரணத்தினால், இப்போது இருக்கின்ற பேருந்து வசதியே போதும் என்று நான் குறிப்பிட்டேன்.

நாங்குநேரியிலிருந்து சேரன்மகாதேவி வழியாக கீழஉப்பூரணிக்கு இப்பொழுது பேருந்து வந்து கொண்டிருக்கின்றது. அந்த ஊரினுடைய மக்கள்தொகையே ஆயிரம் பேர்தான். அந்த ஊரிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரம் சென்றால், சாலை

முடிகின்றது. இப்போது அதுவரை பஸ் சென்று கொண்டிருக்கின்றது. ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ஊருக்குப் போதுமான பஸ் வசதி இருக்கின்றது என்பதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பிற ஊர்களுக்கும் பேருந்து தேவைப்பட்டால், அதுகுறித்து தனியாகக் கோரிக்கை வைத்தால், மாண்புமிகு அம்மா அவர்களது கவனத்திற்கு அது எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும். மேலும், மாட்டுவண்டி போகின்ற பகுதியிலேகூட மாண்புமிகு அம்மா அவர்கள் தார்ச் சாலை அமைத்து, புதிய பேருந்துகளை இயக்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட மாதனூர் ஒன்றியத்தில் நாயக்கனேரி, காமனூர்தட்டு, பனங்காட்டு ஏரி ஆகிய மலைக் கிராமங்கள் உள்ளன. இவை ஆம்பூர் நகரத்திலிருந்து 18 கிலோ மீட்டர் உயரத்திலுள்ளன. மேலும், இங்கே 10-க்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் இருக்கின்றன. 5,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். ஆனால், அந்த மலைக் கிராமத்திற்கு போக்குவரத்து வசதி கிடையாது. தனியார் சிற்றுந்து மட்டும்தான் இயக்கப்படுகிறது. அதைக்கூட, வாரத்தில் ஓரிரு நாட்கள்தான் இயக்குகிறார்கள். மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வர வேண்டுமென்று சொன்னால், காட்டுப் பாதை வழியாகத்தான் இறங்கி வருகிறார்கள். தொழிலாளர்கள் வேலைக்கு வர வேண்டுமென்று சொன்னாலும்கூட, காட்டுப் பகுதி வழியாகத்தான் இறங்கி வருகின்றார்கள். ஆகவே, அந்த மலைக் கிராமத்திற்கு அரசின் சார்பாக சிற்றுந்து இயக்கித் தர வேண்டுமாய் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கின்ற வழித்தடமானது, மலைப் பகுதியாக இருக்கின்றது. அந்தப் பகுதியில் சாலை வசதி நன்றாக இருக்கும் என்று சொன்னால், மலைப் பேருந்து, சிற்றுந்து இருக்கின்றது. குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல சிரமம் ஏற்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**82—**

## கூடுதல் கட்டடம்

***52384—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டியிலுள்ள வணிக வரி மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருத்துறைப்பூண்டி வணிக வரி அலுவலகம் தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக நிலம் தேர்வு செய்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்டவுடன், திருத்துறைப்பூண்டி வணிக வரி அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

[2016 பிப்ரவரி 19

திருத்துறைப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகம் போதுமான இடவசதியுடன் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. ஆவணப் பதிவிற்கு வரும் பொதுமக்களின் வசதிக்காக, பொதுமக்கள் அமரும் அறை, கழிப்பறை வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்த வரும் நிதியாண்டில் பராமரிப்பு மற்றும் மராமத்துப் பணிகள் தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கூடுதல் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன், இருக்கையில் இல்லை. திருமதி ம. சக்தி. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டியில் சார்பதிவாளர் அலுவலகமும், வணிக வரித் துறை அலுவலகமும் செயல்பட்டு வருகிறது. இதில் வணிக வரித் துறை அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

பத்திரப் பதிவு அலுவலகத்தைப் பொறுத்தவரை, மிகச் சிறிய இடத்தில், மிகப் பழமையான கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. இந்தப் பத்திரப் பதிவு அலுவலகத்தில் ஆண்டுக்கு 3,200 முதல் 3,500 வரை பத்திரப் பதிவுகள் நடைபெற்று வருகின்றன. பத்திரப் பதிவிற்கு வருகின்றவர்கள் அமர்வதற்குப் போதிய இடவசதி, கழிவறை உள்ளிட்ட வசதிகள் இல்லாத காரணத்தால், அலுவலகத்திற்கு வெளியே நிற்க வேண்டிய ஒரு நிலைமை இருக்கின்றது. எனவே, அங்கு அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியிலுள்ள குன்னூர் சார்பதிவாளர் அலுவலகம் மிகப்



2016 பிப்ரவரி 19]

பழமையான அலுவலகமாக உள்ளது. போதிய இடவசதியின்றி இருப்பதோடு, கட்டடமும் மிகவும் பழுதுபட்டிருக்கிறது. எனவே, குன்னூரிலும் ஒரு புதிய பத்திரப் பதிவு அலுவலகம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் மூலம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகம் போதுமான இடவசதியுடன்கூடிய அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இருந்தாலும்கூட, பொதுமக்களுக்கு வசதியாக அமரும் அறை, கழிப்பிட வசதிகள் ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டுள்ளார். எனவே, வரும் நிதியாண்டில் பராமரிப்பு மற்றும் மராமத்துப் பணிகள் தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கூடுதல் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட குன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் வரும் நிதியாண்டில் பராமரிப்பு மற்றும் மராமத்துப் பணிகள் தலைப்பின்கீழ் பெறப்படும் நிதி ஒதுக்கீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடுதல் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

**திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருகின்ற 22 ஆம் தேதி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மகாமகம் வருகின்றது. கும்பகோணம் மகாமகம் குளத்தில் இலட்சக்கணக்கான பக்தர்கள் புனித நீராடி வருகிறார்கள். இதைவிடச் சிறப்பு என்னவென்றால், நம் அவதாரத் திருமகள், தெய்வத்தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்று முறை ஆட்சி செய்து, மூன்று முறையும் மகாமகத்தைக் கண்ட ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

*[2016 பிப்ரவரி 19*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

*1992, 2004 இப்போது 2016 என்று மகத்தில் பிறந்து, ஜகத்தை ஆளும் தாய்தான், 12 ஆண்டுகளுக்குப் பிறகு வர இருக்கின்ற மகாமகத்தின்போதும் ஆட்சியிலிருந்து எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஜகத்தை ஆள்வார்கள் என்று சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களின் தெய்வீகத் திருவடிகளை வணங்குகிறேன்.*

*முற்பகல் 10-55*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம் சார்பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. கொள்ளிடம் ஒன்றியம், எருக்கூர் ஊராட்சியில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்ட 7,000 சதுர அடி நிலம் பதிவு செய்யப்பட்டு, பதிவாளரிடம் நிலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே, அந்த இடத்தில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், சீர்காழியிலுள்ள சார்பதிவாளர் அலுவலகம் மிகவும் பழமையான கட்டடத்தில் இயங்கி வருகின்றது. எனவே, மேற்கண்ட இரண்டு சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக 2011 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற பிறகு, "தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் படிப்படியாக சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும்" என்று அறிவிப்பு செய்தார்கள். அதைத் தொடர்ந்து, கடந்த 5 ஆண்டுகளில் மொத்தம் ரூ.126.52 கோடி மதிப்பீட்டில் 162 சார்பதிவாளர் அலுவலகங்களும், 50 சார்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய 25 ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகக் கட்டடங்களும் கட்ட அரசாணை பிறப்பிக்கப்பட்டு, கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றில், 116 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள்



*2016 பிப்ரவரி 19]*

மற்றும் 29 சார்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய 16 ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகக் கட்டடங்கள் ஆகியவை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள், கொள்ளிடம் சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்றும், சீர்காழி சார்பதிவாளர் அலுவலகக் கட்டடத்தில் பழுதடைந்துள்ள கட்டடங்களை மராமத்து செய்து, புதிய கட்டடங்களாகக் கட்டித் தர வேண்டும் என்றும் கேட்டார்கள். கொள்ளிடம் சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட 7,000 சதுர அடி நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டுவதைப் பொறுத்தளவில், 7,000 சதுர அடி நிலம் என்பது போதுமானதாக இருக்காது என்பதை நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கின்றேன். அடுத்து, சீர்காழி சார்பதிவாளர் அலுவலகம், பராமரிப்பு மற்றும் மராமத்துப் பணிகள் தலைப்பின்கீழ் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து புதுப்பித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள்.*

**திரு. என்.எஸ்.என். நடராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, காங்கேயம் வணிக வரி அலுவலகத்திற்கு புதிய சொந்தக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என கேட்டுக்கொள்கிறேன். மேலும், காங்கேயம் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த கட்டடம் ஆகும். எனவே, காங்கேயம் சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம்

*[2016 பிப்ரவரி 19*

*100 ஆண்டுகள் பழமை வாய்ந்த கட்டடம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். காங்கேயம் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் அரசின் சொந்தக் கட்டடம் ஆகும். அக்கட்டடத்தின் stability-ஐ ஆய்வு செய்து, அந்தக் கட்டடம் எப்படி இருக்கின்றது, பழுது பார்க்கப்பட வேண்டுமா, மராமத்து நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமா என்று ஆய்வு செய்து, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.என்.பி. வெங்கட்ராமன் அவர்கள்.*

**திரு. வி.என்.பி. வெங்கட்ராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றும் ஒப்பற்ற தலைவி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

*ஆலந்தூர் பகுதியில் வணிக வரி மற்றும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்று கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்திற்கான இடத்தைத் தேர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உரிய இடம் கிடைக்கப்பெற்றவுடன், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



*2016 பிப்ரவரி 19]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**83—**

### தனி ஊராட்சி

***37899—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியம், மேட்டுக்குப்பம் கிராமத்தினை தனி ஊராட்சியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

*கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியம், மேட்டுக்குப்பம் கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரிக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்*
*அடிதழீஇ நிற்கும் உலகு"*

*என்ற வள்ளுவனின் குறளுக்கேற்ப, நாட்டு மக்களின் நல்வாழ்விற்காக தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு, நாளும்*

[2016 பிப்ரவரி 19

நல்ல பல திட்டங்களைத் தருகின்ற தருமத் தாயே, 2016-ல் நடைபெறவிருக்கும் தேர்தலில் எத்தனை தலைவர்கள் வாக்குகள் கேட்டு வந்தாலும், 234 தொகுதிகளிலும் ஈடில்லா வெற்றியைத் தருபவர் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாண்புமிகு முதல்வர் அம்மாதான் என நாட்டு மக்களால் நாளும் பேசப்படுகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன்.

கடலூர் மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், மேட்டுக்குப்பம் கிராமம், சுமார் 1,400 வாக்காளர்களைக் கொண்டது. கீழக்குப்பம், நடுக்குப்பம், வல்லம், காட்டுப்பாளையம், மேலிருப்பு போன்ற 5 ஊராட்சிகளை உள்ளடக்கிய மேட்டுக்குப்பம் கிராமத்தைத் தனி ஊராட்சியாகப் பிரித்துக் கொடுத்தால், அந்த மக்களுக்கு உரிய நிவாரணங்கள் மற்றும் அரசுமூலமாக அந்தக் கிராமத்திற்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைக்கும் என்கின்ற காரணத்தினால், அந்த ஊராட்சியைப் பிரித்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனக் கேட்டு அமர்கிறேன்.

அடுத்து, நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், எஸ். ஏரிப்பாளையம் கிராமம், சுமார் 1,000-க்கும் மேற்பட்ட வாக்காளர்களைக் கொண்டது. சிறுவத்தூர் மற்றும் சேமக்கோட்டை ஊராட்சிகளைக்கொண்ட ஏரிப்பாளையம் கிராமத்தைத் தனி ஊராட்சியாகப் பிரிப்பதற்காக அனைத்து ஆவணங்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் எங்களுடைய மாவட்ட அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் அந்தக் கிராமத்திற்குச் சென்றபோது, அந்தக் கிராமத்து மக்கள், 'எங்கள் ஊராட்சியைத் தனி ஊராட்சியாகப் பிரித்துத் தர வேண்டும்' என்று அழுத்தமாகக் கோரிக்கை வைத்தார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, எதிர்வருகின்ற காலத்தில், இந்த இரண்டு கிராமங்களையும் தனி ஊராட்சியாகப் பிரித்துக் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.



2016 பிப்ரவரி 19]

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துதல், பிரித்தல், சேர்த்தல் தொடர்பான நடைமுறைகள் குறித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தினைப் பிரித்தல், தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்மூலமாக தீர்மானம் இயற்றப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். இதுகுறித்து, மாவட்ட ஆட்சித் தலைவரால் கூட்டம் நடத்தப்பட்டு, அனைத்து சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், பெயர் பெற்ற தன்னார்வத் தொண்டு அமைப்புகள், குடியிருப்போர் நலச் சங்கங்கள் போன்றோரின் கருத்துகளின் அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவரால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு கருத்துரு அனுப்பப்பட வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவானது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையுடன் அரசிற்கு அனுப்பி வைக்கப்படும். அதன்மீது, அரசால் பரிசீலனை செய்யப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும். கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியம், மேட்டுக்குப்பம் கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரிக்கும் கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், நெய்வேலி தொகுதியில் உள்ள மற்றொரு ஒன்றியத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுகுறித்து எந்தக் கருத்துருவும் அரசிற்கு வரவில்லை என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

[2016 பிப்ரவரி 19

**84—**

**கால்நடைத் தீவனங்கள் விற்பனை மையம்**

**50148*—**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்துக் கிராமங்களிலும் வைக்கோல் மற்றும் கால்நடைத் தீவனங்கள் விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடைத் தீவனங்கள் விற்பனை மையத்தை கூடுதலாக அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதுவரையில், எந்த ஒரு ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவிற்கு, வாக்களித்த மக்களுக்காக மட்டுமல்லாமல், வாயில்லா ஜீவன்களுக்காகவும் பல்வேறு திட்டங்களைத் தந்தவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே, தீவனப் பற்றாக்குறை ஏற்படும் காலங்களிலும் தனியாரிடமிருந்து தீவனத்தைக் கொள்முதல் செய்து, கால்நடை பராமரிப்புத் துறைமூலம் தீவனக் கிடங்குகளை ஏற்படுத்தி, மானிய விலையில், கிலோ 2 ரூபாய் என்ற வீதத்தில் கால்நடைகளை வளர்ப்போருக்கு உலர் தீவனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில், 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சென்னையைத் தவிர ஏனைய மாவட்டங்களிலே 201 தீவனக் கிடங்குகளை அமைத்து, கால்நடை வளர்க்கும் விவசாயிகளுக்கு 31 இலட்சத்து 335 மெட்ரிக் டன் உலர் தீவனம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 12,31,000 கால்நடைகள் பயன்பெற்றுள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கூடுதலான விற்பனை மையங்களை அமைக்கும் அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2016 பிப்ரவரி 19]

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**85—**

**பஞ்சாலை**

**44793*—**திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் பஞ்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் பஞ்சாலை அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளார்கள். சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் புதிய பஞ்சாலை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘மக்களால் நான், மக்களுக்காக நான்’ என்ற தாரக மந்திரத்தோடு ஏழையெளிய மக்களுக்காக, விவசாயப் பெருங்குடி

மக்களுக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அவற்றை 100 சதவிகிதம் நிறைவேற்றி, இன்றைக்கு ஏழைகளுடைய நெஞ்சங்களில் நீக்கமற வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கிட்டத்தட்ட 139 ஊராட்சிகள் மற்றும் 3 பேரூராட்சிகளை உள்ளடக்கிய எனது மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் இதுவரை எந்தத் தொழிற்சாலையும் கிடையாது. ஏற்கெனவே ராஜகம்பீரத்தில் இயங்கி வந்த தனியார் வரதலட்சுமி ஆலையும், முத்தனேந்தலில் இயங்கி வந்த அரசு சோமசுந்தரம் பஞ்சாலையும் நிருவாகக் கோளாறுகளின் காரணமாக மூடப்பட்டு, இன்றைக்கு அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. அங்கே படித்த இளைஞர்களும், இளம் பெண்களும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் விவசாயத்தை மட்டுமே நம்பிக் கொண்டிருக்கின்ற அந்தப் பகுதி ஏழையெளிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு பஞ்சாலையை அரசு சார்பாக அமைத்துத் தந்தால் உதவியாக இருக்கும். எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மானாமதுரை தொகுதியில் ஒரு பஞ்சாலையை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 1958 முதல் 1985 வரையிலான காலத்தில் நிறுவப்பட்ட 15 நூற்பாலைகளில், 6 ஆலைகளுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் சுமார் 150 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தார்கள். குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் உள்ள அச்சன்குளம் பகுதியில் முழுமையாக ஆதி திராவிடர்களுக்கென்று உள்ள அந்தக் கூட்டுறவு நூற்பாலைக்கு சுமார் 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, மூடப்பட்டிருந்த ஆலை திறக்கப்பட்டு, இன்றைக்கு 200 தொழிலாளர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிற அற்புதம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் நடைபெற்றிருக்கின்றது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் தேனி, தூத்துக்குடி, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள 6 ஆலைகளுக்கு 150 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, அந்த ஆலைகள் இயங்கி வருகின்றன.





மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலை தனியாருக்குச் சொந்தமாக இருந்தது. சோமசுந்தரம் செட்டியார் என்பவருக்குச் சொந்தமாக இருந்ததை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் அது அரசு சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலையாக மாற்றப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வந்தது. பல்வேறு முயற்சிகள் எடுத்தாலும்கூட, அது இலாபத்திலே இயங்க முடியாத ஒரு நிலையில் இருந்த காரணத்தினால், அது மூடப்பட்டு, அந்த நூற்பாலையில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய நிவாரணத் தொகை உரிய முறையிலே வழங்கப்பட்டுவிட்டது. இருப்பினும், 6 நபர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கின்றார்கள். இன்றைக்கு அந்த வழக்கு நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கின்றது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் மீண்டும் ஆட்சியை அமைக்கவிருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல விவசாயிகளும், தொழிலாளர்களும் நிறைந்த அந்தப் பகுதியில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, எதிர்வரும் காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**86—**

## உள்விளையாட்டு அரங்கம்

***41128—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*2016 பிப்ரவரி 19*

*(அ) புதுக்கோட்டையில் உள்விளையாட்டு அரங்கம் மற்றும் உள்விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தின் தலைநகர் புதுக்கோட்டையில், உள்விளையாட்டு அரங்கம் மற்றும் உள்விளையாட்டு மைதானம் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.

**திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியப்புறும் அன்பு, அறிவு, துணிவு மிகுந்த பல்கலைக்கழகம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய இளைஞர்களே நாளைய இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரம் என்கிற கனவை நனவாக்குகின்ற, இந்திய மாநிலங்களில் ஒப்பில்லா ஒரே முதல்வர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள்தான். நாங்கள் கேட்ட மாத்திரத்திலேயே உள்விளையாட்டு அரங்கம் வழங்கியதற்காக புதுக்கோட்டை மாவட்ட அனைத்து விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

எங்கள் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த எல். சூர்யா என்கிற வீராங்கனை, தற்போது நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் 5 ஆயிரம் மீட்டர் மற்றும் 10 ஆயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் தங்கப் பதக்கம் வென்று, புதிய சாதனை படைத்துள்ளார் என்பதை இந்தப் பேரவையில் பதிவு



*2016 பிப்ரவரி 19*]

செய்வதில் பெருமையடைகிறேன். இதேபோன்று, எங்கள் மாவட்டத்தில், சைக்கிள் மற்றும் கால்பந்து வீரர்கள் விளையாட்டில் மிகவும் ஆர்வம் காட்டி வருகிறார்கள். இளைஞர்களின் நலனில் அக்கறை காட்டும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டுத் துறையில் புதிய திட்டங்களை அறிவிக்க ஆவன செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்களுடைய முன்னேற்றத்திற்காக மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள், இந்தியத் திருநாட்டில் வேறு எந்த முதலமைச்சரும் நினைத்துப் பார்க்காத பல்வேறு சிறப்பான திட்டங்களை தமிழகத்தில் சிறப்பான முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அன்போடு நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் உலகத் தரம் வாய்ந்த பல்நோக்கு விளையாட்டு அரங்கங்களைக் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு 2011-2012 ஆம் நிதியாண்டில், 20 மாவட்டங்களுக்கு 30 கோடி ரூபாயை நிதியாக வழங்குவதற்கு முன்வந்து, 10-2-2012 அன்று 5 மாவட்டங்களுக்கு 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவிலும், 3-8-2012 அன்று 5 மாவட்டங்களுக்கு 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவிலும், 21-1-2015 அன்று 5 மாவட்டங்களுக்கு 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவிலும், ஆகமொத்தம் 22 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கி, 15 மாவட்டங்களில் உள்விளையாட்டு அரங்கங்கள் அமைத்து, இளைஞர்களுக்கு சிறப்பான முறையில் நல்ல பயிற்சியைக் கொடுக்கின்ற அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விளங்கிக் கொண்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த பெண் 5 ஆயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயத்திலும், 10 ஆயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயத்திலும், தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்று தமிழகத்திற்குப் பெருமை தேடித் தந்திருக்கிறார் என்பதை

இங்கே அன்போடு நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேசிய போட்டிகளிலும், சர்வதேசப் போட்டிகளிலும் தமிழகத்தின் சார்பில் விளையாடி, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்குவிக்கும் விதமாக, தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் பங்குகொண்டு, இரு ஓட்டப் பந்தயப் போட்டிகளிலும் வெற்றி பெற்று, தங்கப் பதக்கத்தை வென்று புதிய சாதனை படைத்து, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த சூர்யா அவர்களுக்கு 5 இலட்சம் ரூபாயை ஊக்கத் தொகையாகக் கொடுக்கின்ற முதலமைச்சர், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே அன்போடு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு அம்மா அவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில், விளையாட்டுத் துறைக்கென்று, மாணவிகள் விளையாட்டு விடுதி ஒன்றைக் கொடுத்திருக்கின்றார்கள். இன்றையதினம் 57 மாணவிகள் அங்கே தங்கிப் படித்து, சிறப்பான முறையில் ஹாக்கி தடகளப் போட்டி மற்றும் பளுதூக்கும் போட்டிகளில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்றார்கள். மேலும், 85 இலட்சம் ரூபாய் அளவில் கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து இங்கே கோப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. விரைவில் அங்கே விளையாட்டு வீராங்கனைகளுக்காக சிறப்பான முறையில் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும்.

இன்றையதினம், தமிழகத்தில்தான் சிறப்பான முறையில் விளையாட்டு விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற விளையாட்டு வீரர்களுக்கு, விளையாட்டு வீராங்கனைகளுக்கு நாள் ஒன்றுக்கு, சத்தான உணவு சாப்பிடுவதற்காக ரூ.250/- வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்குகின்ற ஒரே முதலமைச்சர், இந்தியாவில் மட்டுமல்ல, உலக அளவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். சிறப்பான முறையில் தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் பெருமைதேடிக் கொடுக்கின்ற விளையாட்டு வீரர்களை, வீராங்கனைகளை மற்றும் இளைஞர்களைப் போற்றிப் பாதுகாக்கின்ற அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**87—**

### மாணவியர் விடுதி

***54760—திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஒன்றியம், சாமல்பட்டி கிராமத்தில் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஒன்றியம், சாமல்பட்டி கிராமத்தில் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, அரசு விதிகளுக்குட்பட்டு கட்ட இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.

**திருமதி மனோரஞ்சிதம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். நமக்கு நாமே என்று போனவர்களுக்கு நாமத்தைப் போட்டுவிட்டு, வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் மாண்புமிகு

[2016 பிப்ரவரி 19

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிதான் அமையப்போகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஒன்றியம், சாமல்பட்டி கிராமத்தில் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதியை அமைத்துத் தருவார்களா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதி, மத்தூர் ஊராட்சி ஒன்றியம், சாமல்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் 165 மாணவர்களும், 165 மாணவியர்களும் ஆக மொத்தம் 330 மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இதில், 55 மாணவிகள் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களில், சுமார் 15 பேர் மட்டுமே 3 கி.மீ. சுற்றளவில் இருந்து வருகிறார்கள். மேலும், ஊத்தங்கரை தொகுதியில் 85 மாணவர்கள் தங்கிப் பயிலும் விடுதி ஒன்றும், 85 மாணவியர்கள் தங்கிப் பயிலும் பள்ளி விடுதி ஒன்றும் உள்ளன. எனவே, எதிர்காலத்தில் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில், ஆய்வு செய்து, விதிமுறைகளுக்குட்பட்டு, ஆதி திராவிட மக்களின் பாதுகாவலராக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**88—**

### வீட்டுமனைப் பட்டா

***37686—திரு. ஏ.கே. போஸ்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2016 பிப்ரவரி 19]

(அ) மதுரை வடக்கு தொகுதியிலுள்ள கரும்பாலை, செண்பகத்தோட்டம் மற்றும் மானகிரி பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினம் காத்து நிற்கும் தமிழர் குலச் சாமி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை வடக்கு தொகுதி, கரும்பாலை, செண்பகத்தோட்டம், மானகிரி பகுதியானது கிராமக் கணக்குகளில் கண்மாய் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதாலும், மதுரை மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளதாலும், இப்புலத்தில் குடியிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், இருக்கையில் இல்லை. வினா எண்கள் 89 மற்றும் 90 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 110–ன்கீழ் அறிக்கை

### அரசு அலுவலர்களுக்கான பல்வேறு சலுகைகள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

[2016 பிப்ரவரி 19

முற்பகல் 11-20

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒளிவு மறைவற்ற, திறமை மிக்க, பொறுப்புள்ள நிருவாகத்தை அளிப்பது நல் அரசின் இலக்கணம் ஆகும். இந்த அடிப்படையிலேயே, எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. அரசின் முகமாகவும், மனமாகவும் செயல்படுகிறவர்கள் அரசு அலுவலர்கள்தான். அரசால் தீட்டப்படும் செயல் திட்டங்களும், வகுக்கப்படும் நலத் திட்டங்களும் உரிய முறையில் மக்களைச் சென்றடையச் செய்பவர்கள் அரசு அலுவலர்கள். ஓர் அரசின் செயல்திறன், அரசு அலுவலர்களின் செயல்திறனைப் பொறுத்தே அமையும். அரசின் அடித்தளமாக, அச்சாணியாக, முதுகெலும்பாக விளங்குபவர்கள் அரசு அலுவலர்கள். இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அரசு அலுவலர்களின் நலனில் எப்போதும் தனி அக்கறைகொண்டு எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அரசு அலுவலர்கள் பணி தொடர்பாகவும், ஊதியம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பாகவும் பல்வேறு கோரிக்கைகள் விடுத்துள்ளனர். அரசு அலுவலர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி அவர்களின் கோரிக்கைகளை ஆராயும்படி மூத்த அமைச்சர்கள் மற்றும் தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர் ஆகியோருக்கு நான் உத்தரவிட்டிருந்தேன். அதன்படி, அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் பல்வேறு அரசு அலுவலர் சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசியுள்ளனர். அதன் அடிப்படையில், அரசு அலுவலர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**1. குடும்ப நல நிதி:** கடந்த 40 ஆண்டுகளாக அரசு அலுவலர்களுக்கு குடும்ப நல நிதித் திட்டம் என்ற ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு அரசு அலுவலர்களிடமிருந்து மாதந்தோறும் அவர்களது சம்பளத்திலிருந்து 30 ரூபாய் பிடித்தம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்படி பணிக்காலத்தில் அரசு அலுவலர் இறந்தால் அவரின் வாரிசுதாரருக்கு 1,50,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இந்தக் குடும்ப நல நிதி உதவியை உயர்த்த வேண்டுமென பல்வேறு சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. இதனை ஏற்று



2016 பிப்ரவரி 19] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித் தொகை 3 இலட்சம் ரூபாய் என உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அரசு அலுவலரின் சம்பளத்திலிருந்து மாதந்தோறும் 60 ரூபாய் இதற்காகப் பிடித்தம் செய்யப்படும். தற்போது, இத்திட்டத்திற்கு அரசு மானியமாக ஆண்டுதோறும் 6 கோடியே 18 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. குடும்ப நல நிதி உதவித் தொகை உயர்த்தப்படுவதால் ஏற்படும் கூடுதல் செலவான சுமார் 6 கோடி ரூபாயை அரசு வழங்கும்.

**2. குழு காப்பீட்டுத் திட்டம்:** அரசு உதவி பெறும் அனைத்து கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள், சத்துணவுப் பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பணியாளர்கள் ஆகியோருக்கு குழு காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டுவரும் இத்திட்டத்திற்கு காப்பீட்டுத் தொகையாக அரசு அலுவலர்களிடமிருந்து 30 ரூபாய் மாதந்தோறும் பிடித்தம் செய்யப்படுகிறது. சராசரியாக ஆண்டொன்றுக்கு 15 கோடி ரூபாய் அலுவலர்களிடமிருந்து காப்பீட்டுத் தொகை பங்களிப்பாக பெறப்படுகிறது. ஆயுள் காப்பீட்டு நிறுவனத்திற்கு சராசரியாக செலுத்தப்படும் காப்பீட்டு பிரீமியம் தொகை 37 கோடி ரூபாய் ஆகும். அதாவது, அரசு அலுவலர்களின் பங்களிப்பு நீங்கலாக, இத்திட்டத்திற்கு அரசு ஆண்டொன்றுக்கு 22 கோடி ரூபாய் வழங்கி வருகிறது. இந்தக் குழு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 1,50,000 ரூபாயிலிருந்து 3,00,000/- ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அலுவலர்கள் தற்போது செலுத்தும் பங்களிப்பு 60 ரூபாய் என நிர்ணயம் செய்யப்படும். காப்பீட்டுத் தொகை மூன்று இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படுவதால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு 20 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

முற்பகல் 11-25

**3. கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்களின் பணி வரன்முறை:** கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு அலுவலர்கள் பணி வரன்முறை செய்யப்பட்ட பின்னரே ஊதிய உயர்வு போன்ற பல்வேறு பணிப் பலன்களை அவர்கள் பெற இயலும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒப்புதல் உள்ளிட்ட பல்வேறு நடைமுறைகள் பின்பற்றப்பட

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 பிப்ரவரி 19

வேண்டியுள்ளதால், இதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்கும் வகையில், 1-2-2016 வரை, கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித் தளர்வும் தேவைப்படாத அனைத்து நபர்களின் பணி நியமனமும் பொது அரசாணை மூலமாக முறைப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டிய பதவிகளுக்குப் பொதுவான அரசாணை வெளியிடப்பட்ட பின்னர், ஆணையத்தின் ஒப்புதல் பெறப்படும். விதித் தளர்வு தேவைப்படும் அலுவலர்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணயத்தின் ஒப்புதல் பெற்று, விதிகளைத் தளர்வு செய்வதற்கான அரசாணைகள் வெளியிடப்படும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒப்புதல் பெறப்படும் வரையில், அவர்களை தற்காலிக அரசு அலுவலர்களாகக் கருதி, அவர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு வழங்க வகை செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**4. அங்கன்வாடி மற்றும் சத்துணவுப் பணியாளர்கள்:** ஓய்வு பெற்ற சத்துணவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியம் 1,000/- ரூபாயாக 1-4-2013 முதல் எனது தலைமையிலான அரசால் உயர்த்தப்பட்டது. இந்த ஓய்வூதியம் 1,500/- ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 39,809 ஓய்வு பெற்ற அங்கன்வாடிப் பணியாளர்கள், 47,064 ஓய்வு பெற்ற சத்துணவுப் பணியாளர்கள், என மொத்தம் 86,873 பணியாளர்கள் இதனால் பயன் பெறுவார்கள். இதனால், அரசுக்கு ஆண்டுதோறும் 51 கோடியே 13 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். சத்துணவுப் பணியாளர்கள் ஓய்வு பெறும்போது வழங்கப்படும் பணப்பயன் 50,000/- ரூபாயிலிருந்து 60,000/- ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) சமையலர்களுக்கு வழங்கப்படும் பணப்பயன் 20,000/- ரூபாயிலிருந்து 25,000/- ரூபாய் எனவும், (மேசையைத் தட்டும் ஒலி) சமையல் உதவியாளர்களுக்கு வழங்கப்படும் பணப்பயன் 20,000/- ரூபாயிலிருந்து 25,000/- ரூபாய் எனவும் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**5. ஊரக வளர்ச்சித் துறை பொறியியல் அலுவலர்கள்:** ஊரக வளர்ச்சித் துறையில் பட்டயப் படிப்பு முடித்துள்ள மேற்பார்வையாளர்களுக்கு, இளநிலைப் பொறியாளர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்கான பணிக் கால தகுதி, பத்து ஆண்டுகளிலிருந்து ஏழு ஆண்டுகளாகக் குறைக்கப்படும்.



2016 பிப்ரவரி 19] [செல்வி ஜெ ஜெயலலிதா]

(மேசையைத் தட்டும் ஒலி) பொறியியல் பட்டப் படிப்பு முடித்துள்ள மேற்பார்வையாளர்களுக்கு இப்பணிக் கால தகுதி ஐந்து ஆண்டுகளிலிருந்து நான்கு ஆண்டுகளாகக் குறைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**6. பள்ளிக் கல்வித் துறை:** இரண்டாம் நிலை உடற்பயிற்சி இயக்குனராக பதவி உயர்வு பெற்றுள்ள உடற்பயிற்சி ஆசிரியர்கள் கணக்குத் தேர்வு பெற வேண்டுமென்ற நிபந்தனை நீக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

**7. மக்கள் நல்வாழ்வுத் துறை:** அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இணைப் பேராசிரியர்களாகப் பணிபுரியும் 157 மருத்துவர்களுக்கு பேராசிரியர் பதவி உயர்வு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) தொகுப்பூதியத்தில் பணிபுரியும் செவிலியர்களில் பணிமூப்பு அடிப்படையில் 1,500 செவிலியர்கள் காலமுறை ஊதியத்தின்கீழ் கொண்டு வரப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பணிமூப்பு அடிப்படையில் 605 கிராம சுகாதார செவிலியர்களுக்கு துறை சுகாதார செவிலியர்களாக பதவி உயர்வு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**8. உயர் கல்வித் துறை:** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணிபுரியும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் மாத மதிப்பூதியம் 10,000/- ரூபாயிலிருந்து 15,000/- ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**9. தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம்:** அரசு அலுவலர்கள் பணி சார்ந்த வழக்குகளை நிருவாகத் தீர்ப்பாயத்தில் தொடுத்து வந்தனர். தற்போது இந்த ஆணையம் இல்லாத காரணத்தால், இந்த வழக்குகள் உயர் நீதிமன்றத்தில்தான் தொடுக்கப்படுகின்றன. அரசு அலுவலர்களின் வழக்குகளை விசாரிக்க நிருவாகத் தீர்ப்பாயம் ஏற்படுத்தப்பட வேண்டுமென அரசு அலுவலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனை ஏற்று நிருவாகத் தீர்ப்பாயம் மீண்டும் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**10. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்:** 1-4-2003 முதல் அரசுப் பணியில் சேர்ந்துள்ள அரசு அலுவலர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட ஓய்வூதியப் பங்களிப்புத் தொகையும், அரசின் பங்களிப்புத் தொகையும், இவற்றிற்கான வட்டித் தொகையும்

அரசுக் கணக்கில் தனியே வைக்கப்பட்டுள்ளன. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பணி ஓய்வு பெற்றவர்கள் மற்றும் இறந்தவர்களின் வாரிசுதாரர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை உடனடியாக வழங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை இரத்து செய்து, பழைய ஓய்வூதியத் திட்டத்தினையே செயல்படுத்திட வேண்டுமென பல்வேறு அரசு அலுவலர் சங்கங்கள் கோரி வருகின்றன. இந்தக் கோரிக்கை குறித்து தீவிரமாக ஆராயப்பட வேண்டும். எனவே, இதுபற்றி ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரைக்க வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்படும். அந்த வல்லுநர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் தக்க முடிவெடுக்கப்படும்.

**11. ஊதிய விகிதங்கள் தொடர்பான கோரிக்கைகள்:** ஊதிய விகிதங்களை மாற்றி அமைத்தல், தொகுப்பூதியத்தின்கீழ் பணிபுரியும் பணியாளர்களை காலமுறை ஊதியத்தின்கீழ் கொண்டு வருதல், சிறப்பு காலமுறை ஊதியம் பெற்று வருவோருக்கு முறையான காலமுறை ஊதியம் வழங்குதல் போன்றவை குறித்து பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இக்கோரிக்கைகள் பல்வேறு அரசு அலுவலர்களின் ஊதிய விகிதங்களை ஒப்பிட்டு அவர்களின் hierarchy அதாவது அதிகார நிலை மற்றும் துறைகளின் parity அதாவது ஒப்புநிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்பட வேண்டும். எனவே, இத்தகைய கோரிக்கைகளை ஊதியக் குழுவே பரிசீலிக்க இயலும் என்பதால் இந்தக் கோரிக்கைகள் அனைத்தும் எதிர்வரும் ஊதியக் குழுமூலம் பரிசீலிக்கப்படும். எனது இந்த அறிவிப்புகள், அரசு அலுவலர்கள் புதிய உத்வேகத்துடன் பணிபுரிய வழிவகுக்கும் என நான் நம்புகிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

*முற்பகல் 11-35*

## 3. அரசு அலுவலர்களுக்கான பல்வேறு சலுகைகள்— முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகமே தீர்வினை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரு பிரச்சினைக்கு, போற்றுதலுக்குரிய தமிழக முதல்வர்





மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகத் தெளிந்த ஒரு நடவடிக்கையை மேற்கொண்டு, வழக்கம்போல எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்று தேடிக்கொண்டிருந்தவர்களுக்கும் சேர்த்து வைத்தியம் தந்திருக்கிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)* எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்று கிராமத்திலே சொல்வார்களே, அதைப்போல எதையாவது வைத்துக்கொண்டு அரசியலாக்குவது, லாபம் தேடுவது என்று அரசு ஊழியர்களை பகடைக் காயாக்கி, இந்த அரசுக்கு, இந்த சட்டமன்றக் கூட்டத்தொடர் முடியும் நாளிலே, இந்தக் காலகட்டத்திலே ஏதாவது ஒரு நெருக்கடியை உருவாக்க முடியாதா என்று முயன்று பார்த்தவர்களுக்கு ஒரு மரண அடியை இன்றைக்கு தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த ஆட்சி தமிழகத்திலே ஏற்பட்ட காலம் தொட்டு, ஏதாவது ஒரு முட்டுக்கட்டை போட முடியாதா? நெருக்கடியை உருவாக்க முடியாதா? தடை போட முடியாதா? எப்படியாவது இந்த ஆட்சிக்கு ஒரு நெருக்கடியை உருவாக்க முடியாதா என்று துடித்துக் கொண்டிருந்தவர்களின் மத்தியிலே, நான் நெருப்பாற்றிலே நீந்தி வந்தவள் *(மேசையைத் தட்டும் ஒலி)* எனக்கு இதுவெல்லாம் ஒரு பொருட்டல்ல, என் மீது எறியப்படுகிற கற்களைக் கூட தமிழகத்தின் முன்னேற்றத்திற்கான படிக்கற்களாக உருவாக்குகிற, அமைக்கிற *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆற்றலும், வன்மையும், பேராற்றலும் எனக்கு உண்டு என்று தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழக்கம்போல இப்போதும் நிரூபித்திருக்கிறார். புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 5 ஆண்டு ஆட்சிக் காலத்திலே 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்களை பணி நியமனம் செய்திருக்கிறார்கள். இது இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு மாநிலங்களிலே இல்லாத சாதனை. *(மேசையைத் தட்டும் ஒலி)* அரசு ஊழியர்களுக்கு அவர்களுடைய வீட்டு வசதிக் கடனை 25 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தியிருக்கிறார்கள். அதைப்போலவே, அவர்களுடைய மருத்துவக் காப்பீட்டுத் தொகையை ரூபாய் 4 இலட்சம் வரை உயர்த்தியிருக்கிறார்கள். குடும்ப ஓய்வூதியத் திட்டத்திற்கு பாராளுமன்றத்திலே சட்டத்திருத்தம் வந்தபோது அதை எதிர்த்து இடதுசாரிகளோடு வாக்களித்தவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள். ஆனால், அங்கே ஆதரித்தவர்கள் இங்கே

[முனைவர் செ.கு. தமிழரசன்] [*2016 பிப்ரவரி 19*

வந்து தடம் மாறி இன்றைக்கு அரசு ஊழியர்களை பகடைக் காயாக்கலாமா என்று முயற்சித்துப் பார்த்திருக்கிறார்கள்.

அரசு ஊழியர்களுக்கு அன்பு காட்டுவதிலும், அவர்களை அரவணைப்பதிலும், அவர்களது துயரைத் துடைப்பதிலும், அவர்களைப் பாதுகாப்பதிலும், *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒரு தாயைப் போல, அது முரண்டு பிடிக்கிற பிள்ளையாக இருந்தாலும் சரி, வேறு எப்படிப்பட்ட பிள்ளையாக இருந்தாலும் சரி, ஒருசேர அவர்களைக் கனிவோடு ஆதரித்து அவர்களது நல்வாழ்க்கைக்கு வேலியிடுகிற ஒரு தாயாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் என ஒவ்வொரு துறையிலும் அவர்களுடைய நீண்டகாலப் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களை நாடு இன்றைக்குப் பாராட்டும், அரசு ஊழியர்களும் பாராட்டுவார்கள். நல்ல உள்ளம் கொண்ட அரசு ஊழியர்கள் நிச்சயம் பாராட்டுவார்கள். திசைதிருப்பலுக்கு ஆளாகாமல், அரசியலுக்குப் பலியாகாமல், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இந்த நடவடிக்கைகளை மகிழ்ச்சியோடு அரசு ஊழியர்களும் பாராட்ட வேண்டுமென்ற வேண்டுகோளோடு வாழ்த்தி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்பவர்களுக்கெல்லாம், 'இல்லை' என்று சொல்லும் பழக்கம் இல்லாத அன்பும், கருணையும் மிக்க அரசு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு *(மேசையைத் தட்டும் ஒலி)* என்பதை அறிந்துதான் 5 ஆண்டுகளாகக் கேட்டவர்களுக்கெல்லாம் கேட்டதைத் தந்ததோடு மட்டுமல்ல, கேட்காததையும் அள்ளி அள்ளித் தந்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழ்நாட்டு மக்களினுடைய அன்பை, மகிழ்வை, அவர்களுடைய வாழ்வின் வசந்தத்தை மட்டுமே தன் உயிர் நாதமாக வைத்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டினுடைய எந்தப் பிரிவு மக்களும் போராட முடியாத அளவிற்கு தன்னுடைய அன்பு ஆட்சியால், பொற்கால ஆட்சியால் மக்கள் நல்லரசு ஆட்சியால், நிருவாகத் திறனால் மக்கள் மகிழ்ந்து



*2016 பிப்ரவரி 19*] [திரு. உ. தனியரசு]

போற்றிப் பாராட்டுகிற அரசை 5 ஆண்டுகளாக தன் நிறைவுகாலம் வரை *(மேசையைத் தட்டும் ஒலி)* அணு அணுவாய்ப் பாதுகாத்து வந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். வெள்ளத்திலிருந்து மீட்டெடுத்து மக்களைப் பாதுகாத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். விவசாயிகள் வறுமையினால், வறட்சியினால் பாதிக்கப்பட்டபொழுது ஆயிரம் கோடி ரூபாயை வறட்சி நிவாரணமாகத் தந்து விவசாயிகளை மீட்டெடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதுபோன்று, நெய்வேலி நிலக்கரி நிறுவனத் தொழிலாளர்கள் போராடியபொழுது இந்திய நாட்டின் வரலாற்றில் முன்னெப்போதுமில்லாத வகையில் பொதுத் துறை நிறுவனங்களின் பங்கை தமிழ்நாடு அரசு பெற்றுக்கொண்டு தொழிலாளர்களுடைய நலனைக் காத்த அரசு புரட்சித் தலைவி அம்மாவினுடையது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-40*

நெசவாளர்களினுடைய கோரிக்கைகளை ஏற்று அவர்களுக்கு பசுமை வீடுகளைத் தந்தது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. *(மேசையைத் தட்டும் ஒலி)* அப்படி துறையெல்லாம் செழித்து வளர, அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்களைத் தந்ததோடு, *(மேசையைத் தட்டும் ஒலி)* நம்முடைய மாநிலத் தொழிலாளர்கள் மட்டுமல்ல, இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்து வந்து குடியேறி இங்கே வேலை செய்கிற தொழிலாளர்களுக்குக்கூட தாயுள்ளத்தோடு *(மேசையைத் தட்டும் ஒலி)* கருணை காட்டி அந்தத் தொழிலாளர்களையும் வாழ வைத்த அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. அந்தத் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, அந்தத் தொழிலாளர்கள் ஈன்றெடுத்த குழந்தைகளுக்குக்கூட தரமான கல்வியை, சுகாதாரமான, சுத்தமான, ஆரோக்கியமான நல்வாழ்வுக்காக மருத்துவத் துறையிலே திட்டங்களைத் தந்தது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஈழத் தமிழர்களுக்கும், அகதிகளாக வந்து குடியேறிய இலங்கைத் தமிழர்களுக்கும்கூட தமிழ்நாட்டினுடைய அரசு நலத் திட்டங்கள் அனைத்தையும் தந்து அழகு பார்த்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* எந்தத் துறை என்று அவர்கள் பார்க்கவில்லை. அமைப்பு சாராதவர்கள், மூத்தவர்கள், வறியவர்கள், அமைப்பு

[திரு. உ. தனியரசு] [2016 பிப்ரவரி 19

சாராத, சங்கம் வைத்துப் போராட வாய்ப்பில்லாத, வசதி இல்லாத, கொத்துக் கொத்தாய் இருக்கிற முதியவர்களுக்கும்கூட 500 ரூபாய் என்றிருந்த உதவித் தொகையை ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எந்தத் துறையில் தரவில்லை? அரசு ஊழியர் சங்கங்கள் போராடுகின்றன. போராடாத மக்களுக்கே 2 மடங்கு, 3 மடங்கு, 4 மடங்கு என உயர்த்தித் தந்து, நாட்டு மக்களின் நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கிறவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் நித்தம் வணங்குகிற குல தெய்வத்திற்கு இணையாக வணங்கப்படுபவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின்பால் பற்று கொண்டிருக்கிற இந்த நல்ல அரசிற்கும், மக்களால்தான் ஆட்சி நடைபெறும் என்று சொல்லப்படுகிற மக்களாட்சியின் மாண்புக்கும் மகுடம் சேர்த்திருக்கிறவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். இந்த 5 ஆண்டுகளில் மக்களினுடைய உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து, கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்கள் நடத்தினாலும், கருணையோடு அவர்களை அணுகி, சினம்கொண்டு கடுமையைக் காட்டாமல், இரக்கம் ஒன்றையே, மனித நேயம் ஒன்றையே தன்னுடைய உயிராகக் கொண்டிருக்கிறவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எந்தப் போராட்டத்தின்மீதும் அவர்கள் கடுமை காட்டியதில்லை. அது முல்லைப் பெரியாறு பிரச்சினைக்காக கிளர்ந்து எழுந்து போராடினாலும், மீத்தேன் போராட்டமாக இருந்தாலும், கெயில் நிறுவனப் போராட்டமாக இருந்தாலும் மக்களின் உணர்வுகளுக்கு மாறாக ஆட்சி இயந்திரமான சக்கரத்தை ஒரு படிகூட நகர்த்தாத ஒரே ஆட்சி, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மக்களின் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் ஆட்சிக்கு, மகுடத்திற்கு மேல் மகுடம் சேர்த்திருக்கிற அரசுக்கு ஏதாவது களங்கம் கற்பித்துவிட முடியாதா என்று 5 ஆண்டுகள் முடிந்து தேர்தல் வருகிற நேரத்தில், எதிர்க் கட்சிகள் திட்டமிட்டு, சதி செய்து, சூழ்ச்சி செய்து உண்மைக்கு மாறானதைச் சொல்லி, அரசு ஊழியர்கள் சங்கத்தை போராட்டம் நடத்தத் தூண்டியபொழுதும்கூட அம்மா அவர்கள், அவர்களுக்கும் கருணை காட்டி, கேட்டதையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள்.



2016 பிப்ரவரி 19] [திரு. உ. தனியரசு]

அரசு ஊழியர்களின் சம்பளத்திலிருந்து 30 ரூபாய் பிடித்தம் செய்து, குடும்ப நல உதவித் தொகையாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் தந்ததை, 60 ரூபாய் பிடித்தம் செய்து 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்று, குழுக் காப்பீட்டுத் திட்டத்திலே சலுகைகள், கருணை அடிப்படையிலே பணி பெற்றவர்கள் முழு தகுதி பெறுவதற்கு உத்தரவு என அறிவித்திருக்கிறார்கள். ஓய்வு பெற்ற அங்கன்வாடி மற்றும் சத்துணவுப் பணியாளர்களுக்கு ஓய்வூதியமாக ஆயிரம் ரூபாயை அம்மா அவர்கள்தான் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள் கோரிக்கை வைத்தபொழுது, தாயுள்ளத்தோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆயிரம் ரூபாய் என்று ஏற்கெனவே ஓய்வூதியம் வழங்கியதை இப்பொழுது 500 ரூபாய் உயர்த்தி 1,500/- ரூபாயாகத் தந்து அக மகிழ்ந்திருக்கிறார்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக சுமார் 86 ஆயிரம் பணியாளர்கள் பயனடைகிறார்கள்.

முற்பகல் 11-45

அதேமாதிரி, ஓய்வுபெறும்போது, சமையல் உதவியாளர்கள் பெறும் பணப் பயன் 20 ஆயிரம் ரூபாயை 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்திருப்பவர் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதுபோன்று, மக்கள் நல்வாழ்வுத் துறையில் பணிபுரியும் 1,500 செவிலியர்களை தொகுப்பு ஊதியத்திலிருந்து கால முறை ஊதியத்தின்கீழ் கொண்டு வந்தவர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்று, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணிபுரியும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் மாத மதிப்பூதியத்தை ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரம் ரூபாயாக கருணை உள்ளத்தோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்த்தித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் என்பது தமிழக அரசால் கொண்டு வரப்பட்டதல்ல. அது தேசிய அளவிலே, பாராளுமன்றத்திலே கொண்டு வரப்பட்டாலும்கூட பழைய ஓய்வூதியத் திட்டத்தை ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரைக்க வல்லுநர் குழு அமைக்க ஏற்பாடு செய்வதாகக் கூறியுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திலே

அந்தக் காலத்திலிருந்து இன்று வரை பணப் பயனைப் பெறாதவர்கள், இப்போது அதனை உடனடியாகத் தரவேண்டுமென்ற கோரிக்கை வைத்தவுடனே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓய்வு பெற்றவர்களுக்கும் மற்றும் இறந்தவர்களின் வாரிசுகளுக்கும் பணப் பயன்களை உடனே தந்திட இன்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். இதன்காரணமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நல்லரசுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் ஓர் அங்கமாக இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்கும், ஐந்தாண்டுகள் அரசின் திட்டங்களையெல்லாம் சிந்தாமல் சிதறாமல் மக்களுடைய வீடுகளுக்கே கொண்டு சென்ற அரசு ஊழியர் பெருமக்கள் 20 இலட்சம் பேரும், அவர்களது குடும்பத்தினர் 1 கோடி பேரும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு 2016 சட்டமன்ற பொதுத் தேர்தலிலும் தங்களுடைய வாக்குகளையும், ஆதரவையும் தருவார்கள், தருவார்கள் எனச் சொல்லி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நன்றியையும், தலைதாழ்ந்த வணக்கத்தையும் பதிவு செய்து நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றையதினம் அரசு ஊழியர்களுக்காக 11 அறிவிப்புகளை அறிவித்திருக்கின்றார்கள். அரசின் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்கின்ற அரசு ஊழியர்களுக்கு என்றுமே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உறுதுணையாக, அவர்களின் பாதுகாவலனாக இருந்து வந்திருக்கிறது என்பதை ஒருபோதும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

அப்படிப்பட்ட நிலையில், அரசு ஊழியர்களிடம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை இன்றையதினம் வைக்க வேண்டுமென்று நினைத்தேன். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் முத்தாய்ப்பாக அரசு ஊழியர்களுக்கு என்னென்ன சலுகைகளை வழங்க முடியுமோ அனைத்தையும், 11 அறிவிப்புகள் மூலமாக அரசு ஊழியர்களுக்கான திட்டங்களாக இன்றையதினம் அறிவித்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





குடும்ப நல நிதி இதுவரை ஒன்றரை இலட்சம் ரூபாயாக இருந்ததை மூன்று இலட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்தது, அதேபோல குழுக் காப்பீட்டுத் திட்டம், ஒன்றரை இலட்சம் ரூபாயாக இருந்ததை மூன்று இலட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்தது. கருணை அடிப்படையிலே வேலையில் அமர்த்தப்படுகின்றவர்கள் பணி வரன்முறை செய்யப்பட்டு பணிப் பலன்களைப் பெறுவதற்கு டி.என்.பி.எஸ்.சி.-ன் ஒப்புதல் வரும் வரை காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்களுக்கு முறையான ஊதியம் வழங்கப்படும் என்று அறிவித்தது, சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களுக்கான ஓய்வூதியத்தை உயர்த்திக்கொடுத்தது, பாராட்டுக்குரியது.

அதேபோன்று, உடற்பயிற்சி ஆசிரியர்கள் கணக்குப் பரீட்சை எழுதுவதிலிருந்து எங்களுக்கு விதிவிலக்கு வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டு வந்தார்கள். அதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி விலக்களித்து அவர்களுக்குப் பதவி உயர்வும் கொடுத்திருக்கிறார்கள்.

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணிபுரியும் கௌரவ விரிவுரையாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையையேற்று, மதிப்பூதியம் 10,000/- ரூபாய் என்றிருந்ததை 15,000/- ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். இதுபோன்று 11 திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

இதற்கு என்ன காரணம்? எப்போதுமே எனக்கு யாரும் இல்லை, தமிழகத்தில் இருக்கின்ற மக்கள்தான் என்னுடைய மக்கள் என்று சொல்லி வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை. அரசு ஊழியர்களையும், அவர்களுடைய மக்களாக நினைத்து இன்றையதினம் அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். தமிழக அரசு ஊழியர்களுக்கு எந்தச் சூழ்நிலையிலும் பாதுகாப்பு அரணாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருந்து வந்திருக்கிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவும் வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அரசு ஊழியர்கள் அரசு கொண்டு வருகின்ற திட்டங்களை மக்களிடம் சேர்ப்பவர்கள். அப்படிப்பட்டவர்களை எப்படி பாதுகாக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த அடிப்படையில்தான் இன்று வல்லுநர் குழு அமைக்கப்படும் என

[திரு. பி.வி. கதிரவன்] [2016 பிப்ரவரி 19

அறிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உச்ச நீதிமன்றம், அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் சம்பந்தமாக சில கட்டுப்பாடுகளை விதித்தாலும்கூட, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அதற்கு வல்லுநர் குழு அமைக்கப்பட்டு விரைவிலே இதற்குத் தீர்வு காண்போம் என்று அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த அடிப்படையில், இன்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த அனைத்துத் திட்டங்களும், அரசு ஊழியர்களைப் பாதுகாக்கின்ற திட்டங்கள். நிச்சயமாக நமது மரியாதைக்குரிய சகோதரர் சொன்னதுபோன்று, 2016-லே நடைபெறவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தலிலும் அரசு ஊழியர்கள் நிச்சயமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு துணையாக இருப்பார்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை என்பதை இந்த நேரத்திலே அகில இந்திய பார் வார்டு பிளாக் கட்சியின் சார்பாகச் சொல்லி, திட்டங்களைப் பாராட்டி மகிழ்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள், மூத்த குடிமக்கள் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய இலவச பஸ் பாஸ் வழங்கும் அறிவிப்பை வெளியிட்டதன் காரணமாக பெரியவர்கள் எல்லாம் நல்வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள். இன்றையதினம் அரசு ஊழியர்களுக்காக 11 நல்ல அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். குடும்ப நல நிதி 1,50,000 ரூபாய் என்றிருந்ததை 3 இலட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-50

குழுக் காப்பீட்டுத் திட்டத் தொகையை ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் மூன்று இலட்சமாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்களுக்கான மாத ஓய்வூதியத்தை 86,873 பேருக்கு பயனளிக்கும் விதமாக ரூ.1,000/-லிருந்து ரூ.1,500/-ஆக உயர்த்தி, இன்றைய தினம் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அதேபோல, அவர்கள் ஓய்வுபெறுகின்றபோது வழங்கப்படும் தொகையை ரூ.50,000/-லிருந்து ரூ.60,000/- ஆக உயர்த்தியிருக்கிறார்கள்.



2016 பிப்ரவரி 19] [திரு. ஆ. நாராயணன்]

சமையலர்களுக்கு ரூ.20,000/-லிருந்து ரூ.25,000/- எனவும், சமையல் உதவியாளர்களுக்கு ரூ.20,000/-லிருந்து ரூ.25,000/- எனவும் குறிப்பிட்டு, நல்ல ஓர் அறிவிப்பை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். அதுபோல, இந்தியாவே தமிழகத்தைத் திரும்பிப் பார்க்க வைத்தது மாற்றம். அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் என்னென்ன அறிவிப்புகளை வெளியிட்டார்களோ அத்தனையையும் நிறைவேற்றி, இன்றையதினம் மக்கள் அம்மாவிற்குப் பின்னால் இருந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று அரசு ஊழியர்களையும் தனது மக்களாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் அரசு ஊழியர்களின் குடும்பத்தினர் ரொம்ப சந்தோஷமாக இருப்பார்கள். தமிழக மக்கள் தந்த பரிசு, சென்ற நாடாளுமன்றத் தேர்தலிலே அம்மா அவர்களுக்கு வெற்றி கிடைத்தது. தமிழகத்தில் மொத்தமுள்ளவை 234 தொகுதிகள். 234 தொகுதிகள் என்றால் 2, 3, 4. இரண்டு என்றால் இலை, மூன்று என்றால் அம்மாவின் வெற்றி, நான்கு அ.தி.மு.க.

வருகின்ற தேர்தலுக்கு மக்களெல்லாம் உங்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். அரசு ஊழியர்களும் ஆதரவாக இருக்கிறார்கள். 234 தொகுதிகளிலும் அம்மா உங்களுக்குத்தான் வெற்றி என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.

**திரு. ஆ. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ் அம்மா அவர்கள் 11 அறிவிப்புகளை இன்று வெளியிட்டிருக்கிறார்கள். அரசு ஊழியர்களுக்கான ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை வழங்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வணக்கத்தைக் கூறி, வெளியேயிருந்து பேசுபவர்களுக்கெல்லாம் இந்த அறிவிப்புகள்மூலம் இன்று பூட்டுப் போட்டு விட்டார்கள் என்பதை இங்கே நான் பதிய வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற 2016 சட்டமன்றத் தேர்தலில் உங்களைத்தான் மீண்டும் முதல்வராக மக்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்று கூறி, வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

[2016 பிப்ரவரி 19

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி எண் 110-ன்கீழ் அரசின் முகமாக, அரசின் செயல்பாட்டாளர்களாக விளங்கக்கூடிய அரசு ஊழியர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி தரக்கூடிய பல அறிவிப்புகளை இன்று செய்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இரட்டிப்பு மகிழ்ச்சி என்று நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், 40 ஆண்டு காலமாக ரூபாய் ஒன்றரை இலட்சமாக இருந்த குடும்ப நல நிதி, ரூபாய் மூன்று இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) குழுக் காப்பீட்டுத் திட்டம் ரூபாய் ஒன்றரை இலட்சமாக இருந்தது ரூபாய் மூன்று இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கின்றது, (மேசையைத் தட்டும் ஒலி) சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களுக்கான ஓய்வூதியம் ரூ.750/-ஆக இருந்தது, இந்த 14-வது சட்டமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே, ரூபாய் ஆயிரமாக உயர்த்தப்பட்டு, இன்றையதினம் அது ரூ.1,500/-ஆக உயர்த்தப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அதுவும் இரட்டிப்பாக்கப்பட்டிருக்கிறது. கௌரவ விரிவுரையாளர்களுக்கான மதிப்பூதியம் ரூ.7,000/-ஆக இருந்தது; இந்த ஆட்சியில்தான் ரூ.10,000/-ஆக உயர்த்தப்பட்டு, இப்போது அது ரூ.15,000/-ஆக உயர்த்தப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசு ஊழியர்களுடைய பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய வகையிலே, இன்று செய்திருக்கக்கூடிய அறிவிப்புகளில் மிக முக்கியமான அறிவிப்பாக நான் கருதுவது புதிய ஓய்வூதியத் திட்டத்தைப் பற்றிய அறிவிப்பு. ஏனென்றால், புதிய ஓய்வூதியத் திட்டம் தமிழக அரசு கொண்டு வந்தது அல்ல. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இந்தியா முழுவதும் கொண்டு வந்தது. அந்தப் பழைய ஓய்வூதியத் திட்டமே அமலில் இருக்க வேண்டும் என்பதுதான் அரசு ஊழியர்களுடைய விருப்பமாக இருக்கின்றது. நான் அறிந்தவரையில் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத நிலையில், இந்தப் புதிய ஓய்வூதியத் திட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்காக, ஒரு வல்லுநர் குழுவை அமைத்திருப்பது நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்று அரசு ஊழியர்களுக்கான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசு அலுவலர்களுக்கான நிருவாகத் தீர்ப்பாயம் மீண்டும் அமைக்கப்படும் என்பதும் வரவேற்கத்தக்க ஓர் அறிவிப்பு ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)



2016 பிப்ரவரி 19] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

முற்பகல் 11-55

ஆக, மக்கள் நலன்களில் மட்டுமல்லாமல், அரசு ஊழியர்களின் நலனிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு கண்ணுங்கருத்துமாகச் செயல்படுகின்றது என்பதைப் பறைசாற்றக்கூடிய வகையில் செய்திருக்கின்ற அறிவிப்புகளை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மனமார வரவேற்று அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

***திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று அறிவித்த அனைத்து அறிவிப்புகளையும் நெஞ்சார, மனதார வாழ்த்தி வரவேற்கிறேன் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் ஒரு தீர்க்கதரிசி. (மேசையைத் தட்டும் ஒலி) நவீன தமிழகத்தை உருவாக்குவதில் உங்களுக்கு நிகர் எவரும் இந்த உலகத்தில் இல்லை என்பதை நான் தெளிவாகக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லால், செயலால், அறிவுத் திறனால், ஆற்றலால், அறிவுக் கூர்மையால் மிகச் சிறந்த நிருவாகத்தை தமிழ்நாட்டு மக்களுக்கு அளித்திருக்கக்கூடிய ஒரே தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, இன்றைக்கு மட்டுமல்ல, இனிவரும் நூறாண்டுகள், இன்னும் பல நூறாண்டுகள் தமிழகத்தை ஆளப்போவது அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு மட்டுமல்ல; கடந்தகால வரலாற்றைக் கூற நான் கடமைப்பட்டிருக்கின்றேன். 1965 ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் போர் ஏற்பட்டபோது, தான் அணிந்திருந்த விலைமதிக்க முடியாத அனைத்து நகைகளையும் கழற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) அப்போதைய பாரதப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்களிடத்தில் போர் நிதியாகக் கொடுத்த பெருமை அம்மா அவர்களைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட பெருமை இந்தத் தேசத்தைச் சேர்ந்த தலைவர்கள் யாருக்காவது உண்டா என்பதை நாம் இந்த நேரத்திலே நினைத்துப் பார்க்க வேண்டும். நான் எதற்காகச் சொல்கிறேன் என்று

[திரு. ம. கலை அரசு] [2016 பிப்ரவரி 19

சொன்னால், Leaders are not born என்று சொல்வார்கள். ஆனால், அம்மா அவர்களைப் பொறுத்தமட்டில், பிறக்கின்றபோதே தலைமைப் பண்போடு பிறந்திருக்கக்கூடிய தலைவி நீங்கள்தான் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களால் இந்த மண் பெருமைப்படுகிறது, தமிழினம் மகிமைப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கருவிலே உருவான குழந்தை முதல் பெரியவர்கள் வரையில், தமிழ்நாட்டு மக்களுக்கு நீங்கள் ஆற்றியிருக்கக்கூடிய அத்தனை சேவைகளையும், மேலேயிருந்து ஆண்டவன் பார்த்துக்கொண்டு உங்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறான். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் சுவாமி விவேகானந்தரைப் பார்த்தது கிடையாது. வீரத் துறவி சுவாமி விவேகானந்தரைப் போன்ற ஒரு வாழ்க்கையை நீங்கள் மேற்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) எந்த மக்களுக்குப் பணியாற்ற வேண்டுமோ, அந்த மக்களுக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். 69 சதவிகித இட ஒதுக்கீட்டுக்குப் பிரச்சினை ஏற்பட்டபோது, தன்னந்தனியாக நின்று, அந்த மக்களுக்கு 69 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் மூலை முடுக்குகளில் இருக்கக்கூடிய மக்களெல்லாம் சமூக நீதி காத்த வீராங்கனை என்று அம்மா அவர்களைப் புகழ்கின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் நிறைய சொல்லிக்கொண்டே போகலாம். அம்மா அவர்கள் சொன்னதைப்போல, அம்மா அவர்களுடைய திட்டங்களையெல்லாம், பெருமைகளையெல்லாம் பேச வேண்டுமென்று சொன்னால், இந்த நேரம் போதாது, ஓராண்டுக் காலம் போதாது. பல நூறாண்டுகள் பேச வேண்டிய திட்டங்களையெல்லாம் நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் பல நூறாண்டுக் காலம் வாழ வேண்டும்; இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இறைவனும், இயற்கையும் உங்களுக்கு என்றென்றும் துணையாக இருக்க வேண்டும் என்று வேண்டி விரும்பி, என்னுடைய நன்றி மலர்களை, அம்மா அவர்களுடைய மலர்ப்பாதங்களில் காணிக்கையாக்குகிறேன் அம்மா! வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.



2016 பிப்ரவரி 19]

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசு ஊழியர்களுக்கான சலுகைகளையும், கோரிக்கைகளையும், கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்ற அறிவிப்புகளையும், அதற்கான உறுதியினையும் நமது மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதை நாங்கள் வரவேற்கின்றோம். நேற்று நான் அவையில் இல்லாவிட்டாலும்கூட, முதியோருக்கான இலவச பேருந்து அட்டை கொடுப்போம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பதையும் நாங்கள் வரவேற்கின்றோம்.

நண்பகல் 12-00

மேலும், இந்த ஐந்தாண்டு காலத்தில் மரியாதைக்குரிய முதல்வர் அவர்களிடம் நான் ஒரு சட்டமன்ற உறுப்பினராக என்னுடைய தொகுதிக்காக என்னென்ன கோரிக்கைகளையெல்லாம் கொடுத்தேனோ, அவற்றையெல்லாம் நிறைவேற்றி, எதிர்க்கட்சியெல்லாம் எதிரிக்கட்சியல்ல, உங்களுக்கும் நாங்கள் செய்வோமென்ற (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல நோக்கத்தோடு பல்வேறு நலத் திட்டங்களையெல்லாம் நீங்கள் கொடுத்தமைக்காக, பட்டுக்கோட்டை தொகுதி மக்களுடைய சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், 2001-லே மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களின் நல்லாசியோடும், உங்களுடைய நல்லாதரவோடும் அந்தக் கூட்டணியிலே நான் வெற்றிபெற்று வந்தவன். அந்த ராசி, மூன்றாவது முறையாக இன்று சட்டமன்றத்தில் பேச வாய்ப்பளித்தது நீங்கள் கொடுத்த அறிமுகம் என்றும் சொல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகவும் என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, வருகின்ற 24 ஆம் தேதியன்று பிறந்தநாளைக் கொண்டாட இருக்கக்கூடிய தங்களை வாழ்த்துவதற்கு எங்களுக்கு வயது கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆன்மிகத்திலே மிகச்சிறந்தவர் நீங்கள். உங்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் என்றென்றும் துணை நிற்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய வெற்றிப் பயணம் தொடர வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

[2016 பிப்ரவரி 19

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், மொழியையும் போற்றிப் பாதுகாப்பதும், வளர்ப்பதும் திருக்கோயில்களே. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் இறைவழிபாடும், ஆன்மிகமும் தழைத்தோங்கி நாடெங்கும் தெய்வமணம் வீசுகிறது. அதற்குக் காரணம், தெய்வப் பிறவியாக, ஜெகத்தை ஆண்டுகொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பிப்ரவரி மாதம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த பிப்ரவரி மாதத்திலே தமிழ் தாத்தா திரு. உ.வே. சாமிநாத ஐயர் பிறந்திருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்த பிப்ரவரி மாதத்தில்தான், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்திருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்த பிப்ரவரி மாதத்தில்தான், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் பிறந்திருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்த பிப்ரவரி மாதத்தில்தான் புகழ்பெற்ற விஞ்ஞானிகள் டார்வின், கலிலியோ, தாமஸ் ஆல்வா எடிசன் ஆகியோர் பிறந்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்த பிப்ரவரி மாதத்தில்தான் இராமகிருஷ்ண பரமஹம்சர் அவதரித்தார். அமைதி, வளம், வளர்ச்சி ஆகியவை பிறந்த மாதம் மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்த மாதத்தில்தான். அதனால்தான், வருடம் முழுவதும் அம்மாவின் பிறந்தநாளை வறுமையைப் போக்கும் நலத் திட்டங்கள் வழங்கும் விழாவாக தமிழகம் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழர்களின் உரிமையை மீட்பதற்காகவும், மாணவர்க்கும், மீனவர்க்கும், உழவனுக்கும், மகளிருக்கும் உயர்வு தர சுழன்று, சுழன்று தன் ஆயுளையே குறைத்துக்கொண்ட தியாகச் சுடர் மாண்புமிகு அம்மா அவர்கள். நெருப்பாற்றில் நீந்தியும், வீரத்தில், துணிவில், அறிவில், ஆளுமையில் சிறந்து விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்கள், 10 கோடி தமிழர்களின் வாழ்வில் அமைதி, வளம், வளர்ச்சி காண மீண்டும் தமிழக முதல்வராக பட்டாபிஷேகம் செய்துகொள்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் உலகத் தமிழர்களின் பிரார்த்தனை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 சட்டமன்றத் தேர்தலில் அனைத்துத் தொகுதிகளிலும் வென்று, அரசியல் வரலாற்றில் கின்னஸ் சாதனையைப் படைப்பார் மாண்புமிகு



2016 பிப்ரவரி 19] [திரு. மு. அருண் சுப்பிரமணியன்]

அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மாபெரும் வெற்றி மாண்புமிகு அம்மா அவர்களின் உழைப்பிற்கும், உண்மைக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய தர்மத்திற்கும், சமூக நீதிக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வாய்மைக்கும், தூய்மைக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய நேர்மைக்கும், சீர்மைக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய சிறந்த ஆளுமைக்கும், அறிவார்ந்த செயலுக்கும், துணிவுக்கும் கிடைக்கப்போகும் மாபெரும் வெற்றி, மகத்தான வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் வாழ, சமநீதி மலர்ந்து, நல்லாட்சி தந்துவரும், தமிழர்களின் காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் நோயற்ற வாழ்வும், நீண்ட ஆயுளும் பெற்று, மேலும் 100 ஆண்டுகள் வாழ்வாங்கு வாழ திருவள்ளூர் வீரராகவப் பெருமாளையும், திருத்தணி முருகப் பெருமானையும் வணங்கி வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஊழியர்களின் நலனிலே அக்கறை கொண்டு, விதி 110-ன்கீழ் 11 திட்டங்களை அறிவித்திருப்பதற்கு நன்றி கூறி, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்தவர் எங்களின் மாதர்குல மாதரசி அம்மா அவர்கள். 2011 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நூற்றுக்கு நூறு சதம் நிறைவேற்றிய சரித்திர சாதனையாளர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களே! இன்றைக்கு நீங்கள் அறிவித்திருக்கிற இந்த அறிவிப்புகளைப் போற்றும் இந்தப் புவனம் முழுவதும், வாழ்த்தும் இந்த வையகம். வரலாறு போற்றும் அறிவிப்பால் தலைமுறைகள் உங்களை

[திருமதி பா. வளர்மதி] [2016 பிப்ரவரி 19

வாழ்த்தும். சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களின் பரம்பரைகள் பாராட்டும், தமிழகமே தலைவணங்கும். மாண்புமிகு அம்மா அவர்களை சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகள் அனைவரும் என்றைக்கும் வாழ்த்திக் கொண்டிருப்பார்கள். ஒன்று மட்டும் எனக்கு நினைவுக்கு வருகிறது. மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சத்துணவு ஊழியர்கள் போராட்டம் நடந்தபோது, அன்றைய முதல்வர் கருணாநிதி அறிக்கை விட்டிருந்தார். போராட்டத்திலே ஈடுபட்ட சத்துணவு ஊழியர்களைப் பார்த்து ஓர் அறிக்கை விட்டார். 'போராட்டம் நடத்துகிறீர்களா? உங்களுடைய போராட்டத்திற்கு இந்த அரசு அடிபணியாது. நீங்கள் என்ன வேண்டுமானாலும் நடத்திக் கொள்ளலாம்' என்று போராட்டத்திலே ஈடுபட்ட சத்துணவு ஊழியர்களைப் பார்த்து மிரட்டிப் பேசியவர் அன்றைய முதலமைச்சர் கருணாநிதி. ஆனால், இன்றைக்கு முதல்வர், மாதர்குல மாதரசி, இந்த நாட்டினுடைய பொன் விளக்கு, எங்களின் கலங்கரை விளக்கம், தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) மிரட்டுகிற பாணியிலே அல்ல, தாயைப் போல கனிந்த பார்வையிலே, தன்னுடைய கருணை உள்ளத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) கடையேழு வள்ளல்களுக்கும் மேலாக அள்ளி, அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். எங்கள் அட்சயப் பாத்திரம் அம்மா அவர்களே, தங்களை இந்தத் துறையின் சார்பில் வணங்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களுடைய ஏகோபித்த ஆதரவு பெற்று, தமிழகத்தினுடைய 3-வது முதல்வராகப் பொறுப்பேற்ற பின்பு, அரசுக் கல்லூரிகளில் 3,284 கௌரவ பேராசிரியர்கள் பணியாற்றி வந்தார்கள். அவர்கள் அப்போது வாங்கிய மாதச் சம்பளம் 6,000/- ரூபாய். ஆட்சி அமைந்தவுடனேயே அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, 4,000/- ரூபாய் கூடுதலாகத் தந்து, அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்த முதல்வர் நம்முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா



2016 பிப்ரவரி 19] [திரு. பி. பழனியப்பன்]

அவர்கள். இன்றைக்கு அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, ஒரேயடியாக 5,000/- ரூபாயை மீண்டும் உயர்த்தித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் ஆட்சி அமைந்த 5 ஆண்டில் 9,000/- ரூபாயைக் கூடுதலாக உயர்த்தித் தந்த ஒரே முதல்வர், நம்முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். இந்தியாவிலேயே எந்த முதல்வரும் இதுபோன்ற ஒரு திட்டத்தை அறிவித்த வரலாறே கிடையாது. அந்த அளவிற்கு அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கொடுக்கிற வகையில், இதுபோன்ற உன்னதத் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பேராசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லை, சம்பளம் இல்லை. அவர்கள் இந்தப் பல்கலைக்கழகத்தை அரசுப் பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டும், அரசு தத்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். இந்தியாவிலேயே ஒரு தனியார் உதவிபெறும் பல்கலைக்கழகத்தை அரசுப் பல்கலைக்கழகமாக மாற்றிய பெருமை நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்ல, மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் அண்ணா பல்கலைக்கழகத்தைச் சிதறடித்தார்கள். தமிழகத்தில் அண்ணா பல்கலைக்கழகம் என்று சொன்னால், அதற்கு பெரும் புகழும், பாரம்பரியமும் உண்டு. அந்தப் பாரம்பரியத்தைக் காக்கிற வகையில், அந்தப் பல்கலைக்கழகத்தை ஒரு குடையின்கீழ் கொண்டு வந்து பாதுகாத்த பெருமை நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்ல, இன்றைக்கு தமிழ்நாட்டிலே அரசுக் கல்லூரிகளில் படிக்கக்கூடிய மாணவர்கள் வெளிநாட்டிற்குச் சென்று கல்வி படிக்கக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கியவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இப்படி ஆட்சி அமைந்த 5 ஆண்டுகளில் 54 கல்லூரிகள் தந்த முதலமைச்சர், நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தியாவிலே எந்த முதல்வரும் சாதிக்காத சரித்திர சாதனையைப் படைத்த முதல்வர் நம்முடைய முதல்வர் அம்மா அவர்கள். 2011-ல் உயர் கல்வி பெறுவோரின் எண்ணிக்கை

[திரு. பி. பழனியப்பன்] [2016 பிப்ரவரி 19

விகிதம் தமிழ்நாட்டில் 18 சதவீதமாக இருந்தது. 2016-ல் 44.8 சதவீதம் என்ற ஓர் உன்னத நிலையை அடையச் செய்த முதல்வர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 12-10

இன்றைக்கு, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் உயர் கல்வித் துறை முதன்மைத் துறையாக விளங்கி வருகிறது. வருகின்ற 2016 சட்டமன்றத் தேர்தலில் அனைத்துத் தொகுதிகளும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டை என்பதை நிரூபித்து, (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உயர் கல்வித் துறையை உலகத்திலேயே சிறந்த துறையாக மாற்றுவார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். உயர் கல்வித் துறையில் பணியாற்றும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு ரூபாய் 15,000/- மதிப்பூதியம் வழங்கிய வாழும் மனித தெய்வம், இயற்கை தந்த கொடை, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் நிலை பெற, தமிழர்கள் நலம் பெற, தன் வாழ்வையே அர்ப்பணித்த தமிழர்குல சாமி எங்கள் அம்மா! உலகம் வியந்து போற்றும் எண்ணில்லா திட்டங்களால், தமிழகத்தை வாழ வைக்கும் வள்ளல் திருமகள் எங்கள் அம்மாவின் புனிதப் பிறந்த நாளான பிப்ரவரி 24-ஐ உலகத் தமிழர்கள், திருவிழாவாகக் கொண்டாடி மகிழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்து மக்கள்பால் தடையில்லா பாசம் காட்டி, தமிழகத்தின் எதிர்காலத் தேவையை அறிந்து, அற்புதமாய் ஆட்சி செய்யும், தரணியெங்கும் புகழ்படைத்த தங்கத் தாயின் பொற்கால ஆட்சியை பொய்யுரைகளாலும், புரட்டு விளம்பரங்களாலும் மக்களை ஏமாற்றிவிடலாம் என நினைக்கும் தமிழக எதிர்க் கட்சிகளின் எண்ணம் என்றைக்கும் நிறைவேறாது. வரலாற்றுச் சிறப்புமிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனைகளால்



2016 பிப்ரவரி 19] [திரு. எஸ்.பி. வேலுமணி]

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. தே.மு.தி.க. போன்ற கட்சிகளுக்கு மக்கள் கொடுத்ததோ முட்டை. அதேபோல, எதிர்வரும் சட்டமன்றப் பொதுத் தேர்தலிலும் தமிழக மக்கள் அவர்களுக்குக் கொடுக்கப் போவதோ அதைவிட பெரிய முட்டை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழக மக்களின் பேராதரவுடன் 234 தொகுதிகளிலும் மகத்தான வெற்றியைப் படைப்பார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள்தான் தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் என்ற வெற்றி முழக்கம் தமிழகமெங்கும் ஒலிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

விண்ணின் ஒளியைப் போல, என்றும் அரசு ஊழியர்களின் காவல் தெய்வமாகத் திகழும் மாண்புமிகு அம்மா அவர்கள், அரசு ஊழியர்களின் வாழ்வில் ஒளியேற்றும்வகையில், தாயுள்ளத்தோடு விதி 110-ன்கீழ் 11 சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்டமைக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை சுகாதாரத் துறையில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக்கி, வளர்ந்த நாடுகளுக்கு இணையாக மாற்றுவதற்கான இலக்கை நிர்ணயித்து, பல்வேறு முன்னோடித் திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்துவதோடு மட்டுமல்லாமல், இன்று இத்துறையில் பணியாற்றும் மருத்துவர்கள் மட்டுமல்லாது, இத்துறையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் செவிலியர்களை நிரந்தர செவிலியர்களாக்கியும், கிராம மற்றும் பகுதி சுகாதார செவிலியர்களுக்குப் பதவி உயர்வு அளித்தும், தாயுள்ளத்தோடும், கருணையுள்ளத்தோடும் அள்ளி, அள்ளித் தந்த அட்சயப் பாத்திரம் நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் நம் அம்மா! தமிழகத்தின் ஆரோக்கியம் காக்கும் அன்னை நம் அம்மா! மருத்துவத்தின் மகத்துவமாம், மா தவமாம் நம் அம்மா! பரிசுப் பெட்டகம் தந்த பாசப் பெட்டகமாம் நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) இதயமாற்று அறுவை சிகிச்சையில் இந்தியாவிலேயே முதலிடத்தைப் பெற்று, அந்த இதயத்தை மாற்றும் மருத்துவர்களுடைய இதயத்திலும் இன்றைக்கு நிரந்தரமாக இடம்

பிடித்தவர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா! *(மேசையைத் தட்டும் ஒலி)* தங்களுடைய பொற்பாதங்களிலே, மக்கள் நல்வாழ்வுத் துறையின் அனைத்து அலுவலர்களின் சார்பிலே கோடானுகோடி நன்றிகளை சமர்ப்பித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசு ஊழியர்கள்மீது மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுள்ள பரிவிற்கு ஓர் உதாரணம்: 30-11-2011 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, மிகச் சிறப்பாக சட்டமன்றப் பேரவையிலே வைரவிழா கொண்டாடப்பட்டது. அப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் வைரவிழா நினைவுப் பரிசு வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடத்திலே ஆலோசனை கேட்டபோது, மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்கு மட்டுமல்ல, சட்டமன்றப் பேரவைச் செயலக ஊழியர்கள் அனைவருக்கும் நினைவுப் பரிசு வழங்க வேண்டுமென்றும், (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் மதிப்புமிக்க நினைவுப் பரிசு வழங்க வேண்டுமென்றும் ஆணையிட்டவர் கர்ணனின் வள்ளல் தன்மையை தன் கரங்களிலே கொண்ட பாசத்தின் உறைவிடம் மாண்புமிகு அம்மா அவர்கள்.*

*பிற்பகல் 12-15*

அரசு ஊழியர்களுக்கு பல்வேறு சலுகைகளை வாரி, வாரி வழங்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு மிகச் சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். தான் வேறு, மக்கள் வேறு என்று எண்ணாத, மாசறு பொன்னானவர், பாசத்தாலும், பரிவாலும் அரசு ஊழியர்களின் குறைபோக்கும் அட்சயம்! சொன்னதைச் செய்வது, அதைவிட சேர்த்துச் செய்வது, மகிழ்ச்சியைத் தந்து மகிழ்ச்சியோடு செய்வது, சரித்திர சக்தியாய் சாதனை செய்வது, சகல நிலைகளிலும் சாதித்து நிற்பது, தடைகளைத் தாண்டியே விடைகளைக் காண்பது, சீரியவை செய்து சிறப்பைத் தருவது, எண்ணியது எண்ணியாங்கு முடித்து, செய்த புண்ணியமோ, தமிழகம் செய்த தவமோ என்று சொல்லும் அளவிற்கு *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அம்மா அவர்களின் செயல்களில் தனிச் சிறப்பு. ஈகையுடைய இவருக்கே, நம் தாய்க்கே, வாகை என்றும் தொடரும், வெற்றி என்றும் தொடரும் என்கிறது தமிழகம். *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு முதலமைச்சர் அம்மா



அவர்கள், அரசு ஊழியர்களுக்கு கிள்ளிக் கொடுப்பவர் இல்லை, அள்ளி அள்ளிக் கொடுக்கும் அன்பு மனம் கொண்ட வள்ளல் தன்மை கொண்டவர். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

## 4. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள். (குறுக்கீடுகள்) என்ன? (குறுக்கீடுகள்) இல்லை. இப்படி திடீரென்று இப்படியெல்லாம் வந்து. . . (குறுக்கீடுகள்) அதைப் பார்க்கலாம், இருங்கள். (குறுக்கீடுகள்) அதையெல்லாம் பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. அதையெல்லாம் பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். நான் அனுமதி அளிக்கிறேன், உட்காருங்கள். இப்போது யார் பேசுகின்றீர்கள்? திரு. க. பாலகிருஷ்ணன், (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், அம்பளச்சேரி கிராமத்திலிருந்து திருப்பதிக்கு தெய்வத்தை வழிபடச் சென்ற பக்தர்களை ஆந்திர போலீசார் கைது செய்து, செம்மரக் கடத்தல் என்று சொல்லி, வழக்குப் போட்டு, அவர்களை சித்திரவதை செய்து சிறையிலே அடைத்திருக்கிறார்கள். இப்படி தொடர்ந்து ஆந்திர போலீசார் தமிழகத்திலிருந்து வருகிற பக்தர்கள் உள்ளிட்ட அனைவரையும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உரையாற்றியது போதும்,* record *செய்துவிட்டேன், அதை விடுங்கள். (குறுக்கீடுகள்)* Record *செய்துவிட்டேன், அதை விடுங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி. (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.*

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் திருப்பதி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தானே சொல்கின்றீர்கள்? (குறுக்கீடுகள்) இல்லை, அதைத்தானே சொல்கின்றீர்கள்? அவ்வளவுதான்; உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு முக்கியமான விஷயம் இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு வருடத்தில் தமிழகம் எங்கும் நடந்த சாதிய வன்கொடுமைகளினால் இறந்தவர்களுடைய குடும்பத்தினருக்கு அரசு வேலைவாய்ப்பு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ், நீங்கள் சொல்லுங்கள்.

*(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் பகுதியில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, record செய்தாகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், சொல்லுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நள்ளிரவு 2 மணிக்கு திருவள்ளூர் மாவட்டம், வெங்கத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர், மகளிர் என்றும் பாராமல் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அவ்வளவுதான். நான் அதை record செய்துவிட்டேன், நீங்கள் உட்காருங்கள்.

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவையிலிருந்து வெளியேறினார்.)*





## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் நான், மக்களுக்காக நான் என்று ஆட்சி நடத்தும் வாழும் தெய்வமே! நேற்று விதி 110-ன்கீழ் மூத்த குடிமக்கள் அரசுப் பேருந்துகளில் கட்டணம் இல்லா பயணம் செய்யலாம் என்று அறிவித்த மனிதநேயமிக்க தலைவியே! இன்று அரசு ஊழியர்களுக்கெல்லாம் தாயாக விளங்கி விதி 110-ன்கீழ் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் வாழ்வை வழங்கிய என்னுடைய தெய்வமே! தமிழகத்தில் இருக்கிற மக்களுக்கெல்லாம் ஐந்தாண்டு காலமாக என்னென்ன அறிவிப்புகளை வெளியிட்டார்களோ அத்தனை அறிவிப்புகளையும் முழுமையாக நிறைவேற்றியுள்ளார்கள். இன்று எதிர்க் கட்சிகள் எல்லாம் அரசு ஊழியர்களை வைத்து அரசியல் செய்யலாம் என்ற கனவையெல்லாம் மாற்றி, அரசு ஊழியர்களுக்கு பெரிய வரப்பிரசாதத்தை ஏற்படுத்திக் கொடுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

வருகின்ற 2016 சட்டமன்றத் தேர்தலிலே 234-க்கு 234 இடங்கள் என வெற்றி வாகை சூட இருக்கின்றார் மாண்புமிகு அம்மா அவர்கள். வருகின்ற 24 ஆம் தேதி, அம்மா அவர்களுடைய 68-வது பிறந்த நாள் விழாவிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் எல்லாம் வல்ல இறைவன் அருளால் நீடூழி வாழ வேண்டுமென்று வாழ்த்த வயதில்லை என்று சொன்னாலும், மாண்புமிகு அம்மா அவர்கள் நீடூழி வாழ வேண்டும் என்று சொல்லி, அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2015-2016 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 188-வது முதல் 216-வது வரையிலான 29 அறிக்கைகளைக் குழுவின் தலைவர் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருண்ட தமிழகத்தை ஒளியேற்றிய ஒளி விளக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு மற்றும் சலுகைகளை அவர்களே எதிர்பார்க்காத அளவிற்கு கருணை உள்ளத்தோடு இன்றைக்கு வாரி, வாரி வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தொழிற்சங்கத் தலைவர் என்கிற முறையிலே இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களை நான் கேட்கிறேன், அரசு ஊழியர்களுடைய வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு நீங்கள் குரல் கொடுத்தீர்கள். ஆனால், இன்றைக்கு அவர்களே எதிர்பார்க்காத அளவிற்கு, சம்பள உயர்வு, பணிக்கொடை உள்ளிட்ட எல்லாவற்றையும் வாரி, வாரி கொடுத்திருக்கிறார்களே, பாராட்டுவதற்கு உங்களுக்கு மனம் இல்லை என்று சொன்னால். . . (குறுக்கீடு) நீங்கள் எங்கே சொன்னீர்கள்? பாராட்டுவதற்கு உங்களுக்கு மனம் இல்லை என்று சொன்னால், தொழிற்சங்கவாதிகள் என்று சொல்லிக் கொள்வதற்கு நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, இன்றைக்கு நான் சொல்கிறேன். தொழிலாளர்களுக்கு அம்மா அவர்கள் இன்றைக்கு வாரி, வாரி வழங்கி இருக்கிறார்கள். அதேநேரத்தில் கடந்த சட்டமன்றத் தேர்தலில் ஒரு எதிர்க்கட்சி வருவதற்கு வாய்ப்பினை உருவாக்கித் தந்தவர்களே புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியதற்குத்தான் உறுப்பினர் பதில் சொல்கிறார், உட்காருங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசும்பொழுது பேசலாம், உட்காருங்கள்.





**திரு. ஆர். சின்னசாமி:** ஆனால், அந்த எதிர்க்கட்சி, இன்றைக்கு எதிர்க்கட்சி என்கிற நிலையிலிருந்து எதிரிக் கட்சியாக மாறி இருக்கிறது. வரக்கூடிய 2016 சட்டமன்றத் தேர்தலில் தமிழகத்திலே ஒட்டுமொத்தமாக (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சியே இல்லை என்கிற நிலையை தமிழகத்திலே அம்மா அவர்கள் உருவாக்கித் தருவார்கள். அம்மா அவர்களை நம்பி மக்கள் உறுதியாக வாக்களிப்பார்கள். 234 தொகுதிகளின் சார்பாக இங்கே நீங்கள் யாரும் இருக்க மாட்டீர்கள். முழுவதும் நாங்கள்தான் இருப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் நடக்கப் போகிறது. அதிலே எந்த சந்தேகமும் கிடையாது, அது உங்களுக்கே தெரியும்.

ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். 1953-லேயிருந்து 14 சட்டமன்றத் தேர்தல்கள் நடந்திருக்கின்றன. 13 சட்டமன்றத் தேர்தல் வரையிலேயும் எல்லா கட்சிகளும் தேர்தல் வாக்குறுதி தந்தார்கள். ஆனால், எந்தக் கட்சியும் ஐந்தாண்டுகளுக்குள்ளாக கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியதாக வரலாறே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கொடுத்த வாக்குறுதிகளையும், கொடுக்காத வாக்குறுதிகளையும் இந்த 14-வது சட்டமன்றத்தில் நிறைவேற்றி, மக்களுடைய உள்ளங்களிலே நீங்காத இடம் பிடித்திருக்கிறார்கள். ஆகவே, 2016-ல் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி உறுதி, உறுதி என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். வருகிற 24 ஆம் தேதி அம்மா அவர்களுடைய பிறந்த நாள் வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 68-வது பிறந்த நாளுக்காக மனமார வாழ்த்தி வணங்குகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, குழுவின் அறிக்கையை அளியுங்கள்.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2015-2016 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஏழாவது அறிக்கையை இக்குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





பிற்பகல் 12-25

## 7. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2016-2017 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் இப்பேரவையில் அளிக்கப்பட்டிருக்கின்ற இடைக்கால நிதிநிலை அறிக்கை குறித்த விவாதத்தில் எனது கருத்துகளையும் பதிவு செய்வதற்கு வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கின்ற தங்களுக்கு எனது நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழக நிதியமைச்சர் ஐந்தாவது முறையாக தமிழக சட்டப் பேரவையிலே தனது நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிறார். தமிழகத்திலே தொடர்ந்து இப்படி ஐந்து முறை நிதிநிலை அறிக்கையை அளிக்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற அவரையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை, 2016 சட்டமன்றப் பொதுத் தேர்தலை எதிர்நோக்கி, 5 ஆண்டுகால சட்டமன்றப் பதவிக் காலத்தின் இறுதித் தருவாயிலே அளிக்கப்பட்டிருக்கிற ஓர் இடைக்கால நிதிநிலை அறிக்கை. இந்த நிதிநிலை அறிக்கையிலே பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது, பெரும் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது, ரூபாய் 36 ஆயிரம் கோடி பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று பல்வேறு விமர்சகர்கள், கட்சித் தலைவர்கள், அரசியல் நோக்கர்கள் ஒரு கருத்தை வெளியிட்டு வருகிறார்கள். பற்றாக்குறை எங்கே ஏற்பட்டிருக்கிறது, எந்தத் துறையிலே ஏற்பட்டிருக்கிறது, எப்படி ஏற்பட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். எந்தப் பொருளியல் வல்லுநரும் வளர்ந்து வரும் ஒரு மாநிலத்திற்கோ, வளர்ந்து வரும் ஒரு தேசிய அரசுக்கோ பற்றாக்குறையற்ற ஒரு நிதிநிலை அறிக்கையைத் தந்துவிட முடியாது. வளர்ச்சி என்பதற்கு மறு இலக்கணம் பற்றாக்குறையாகத்தான் இருக்க முடியும். பற்றாக்குறை இல்லாத ஒரு நிதிநிலை அறிக்கையை, வளர்ச்சியை முன் நோக்கி அழைத்துச் செல்கிற எந்த மாநில அரசும், எந்த மைய அரசும்,

[முனைவர் செ.கு தமிழரசன்] [2016 பிப்ரவரி 19

எந்த உலக அரசும்கூட அளித்துவிட முடியாது. வளர்ச்சியினுடைய மறு இலக்கணம் பொருளியல் பற்றாக்குறைதான். அப்படித்தான் ஒரு மாநில அரசு, திட்டம் இயற்ற முடியும். ஆனால், 36 துறைகளிலும் இந்த அரசு முன்னேற்றப் பாதையில்தான் போய்க் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு துறையிலும் அந்தத் துறையின் வளர்ச்சியை, அந்தத் துறையின் சாதனையை, அந்தத் துறையிலே இந்த அரசு 5 ஆண்டு காலமாக அமைத்திருக்கின்ற செயல்பாடுகளினுடைய திட்டங்களை, பெருமைகளை பல வகைகளிலே இந்தச் சட்டமன்றப் பேரவையிலே எடுத்து வைத்திருந்தாலும்கூட, இன்னமும்கூட பற்றாக்குறை என்று சொல்பவர்களுடைய இதயத்திலே பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. பாராட்டுவதற்கு பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறதே தவிர, இந்தப் பற்றாக்குறை என்பது ஒரு பற்றாக்குறையே அல்ல. ஒவ்வொரு மாநிலத்திலும் அதனுடைய GDP, அதனுடைய தேசிய வளர்ச்சி விகிதம் எப்படி இருக்கிறது என்று பார்ப்பதற்கு இந்தியத் துணைக் கண்டத்திலே, 3 விதமாக மாநிலங்களைப் பிரித்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்கு மொத்தம் 11 உறுப்பினர்கள் பேச வேண்டிய சூழ்நிலையுள்ள காரணத்தினால், காலத்தின் பயன் கருதி மாண்புமிகு முன் வரிசைத் தலைவர்கள் சுருக்கமாகப் பேசுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் பேசத் தொடங்கியிருக்கிறேன். நேரத்தின் அருமை உணர்ந்து நான் எவ்வளவு விரைவாகப் பேச வேண்டுமோ, பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் எல்லோருக்கும்தான் சொல்கிறேன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** அது எனக்கும் பொருந்தும். எனக்கும் பொருந்தும் என்கிறவகையிலே நான் அதை உணர்ந்து பேசுகிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலே மாநிலங்களுடைய பொருளாதார வளர்ச்சியை, ஒட்டுமொத்த வளர்ச்சியை மூன்று தரமாகப் பிரித்திருக்கிறார்கள். அதிவேகமாக வளரும் மாநிலங்கள், மந்தப்போக்கில் வளரும் மாநிலங்கள், தேக்கம் நிறைந்த மாநிலங்கள் என்று மூன்று வகைகளாக பொருளியல் வல்லுநர்கள் பிரித்திருக்கிறார்கள். தமிழ் மாநிலத்தைப் பொறுத்தவரையிலே பொருளாதாரரீதியாகவும், ஒட்டுமொத்த மாநில வளர்ச்சியிலும்,



2016 பிப்ரவரி 19] [முனைவர் செ.கு தமிழரசன்]

தனி நபர் வருமான வளர்ச்சியிலும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஐந்தாண்டு காலமாக அதிவேகமான வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-30

முதல் கட்டத்திலே, மிக வேகமாக வளர்கிற மாநிலங்கள் உள்ள பட்டியலிலேதான் தமிழ்நாடு மாநிலமும் முன்னணியிலே இருக்கிறது என்று பொருளியல் நிபுணர்கள் சொல்கிறார்கள். அத்தகைய விகித வளர்ச்சியிலேதான் நம்முடைய தமிழகம் இருந்து கொண்டிருக்கிறது என்பதை பல பொருளியல் வல்லுநர்கள் எடுத்துரைத்திருக்கிறார்கள். ஆனால், இந்தச் சூழ்நிலையில்கூட, நிதிநிலைப் பற்றாக்குறையை விமர்சிக்கிறவர்கள், 'நாம் ரூ.2,40,000 கோடிக்கு மேலே கடன் வாங்கியிருக்கிறோம்; கடந்த 2011-ல் இந்த அரசு பொறுப்பேற்றபோது ஒரு இலட்சம் கோடிதான் கடன் இருந்தது; இன்றைக்கு அது 2 மடங்காக வளர்ந்திருக்கிறது' என்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டு அர்த்தம் உள்ளதாக, மக்கள் நலன் சார்ந்ததாக, மக்கள் நலத்தின் அடிப்படையிலேயிருந்து வருகிறதா என்று ஆராய்ந்து, அதை விரிவாக நோக்கினால், அந்தக் குற்றச்சாட்டு அரசியல் ரீதியாக இருக்கிறதே தவிர, ஆய்ந்த ஒரு பொருளியல் கண்ணோட்டத்தோடு இருக்கிறதா என்றால், இல்லை. ஒரு மாநிலம் கடன் வாங்குகிறது என்றால், சொத்து, அதாவது assets என்று சொல்லப்படுகிற மூலதனங்களை உருவாக்குவதிலே, மக்கள் நலத்திற்காக செலவழிப்பதிலே, திட்டமிடப்படுவதிலே அந்தக் கடன் செலவழிக்கப்பட்டிருக்கிறதா அல்லது வீணடிக்கப்பட்டிருக்கிறதா அல்லது அதில் ஊதாரித்தனம் காட்டப்பட்டிருக்கிறதா என்று பார்ப்போமேயானால், நிச்சயமாக இல்லை. தமிழக அரசின் மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள், ஏழையெளிய, நலிந்த, அடித்தளத்து, ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்கு, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, அவர்களுக்கு பாதுகாப்புத் திட்டங்களை உருவாக்குவதற்கு, ஒவ்வொரு தனி குடும்பத்திற்கும் இந்த அரசு துணை நிற்கிறது, பாதுகாப்பு அளிக்கிறது, அவர்களுடைய அன்றாட வாழ்க்கையிலே இந்த அரசு தொடர்புடையதாக இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்துகிற வகையிலே இந்திய மாநிலங்களிலேயே முதல் மாநிலமாக தமிழகம் அமைந்திருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், வருவாய்க்குள்ளேயே செலவழிக்க வேண்டும் என்று சொல்வதை, fiscal fundamentalism என்று பொருளாதார நிபுணர்கள் சொல்வார்கள். இது ஒரு வலதுசாரி அடிப்படைவாதம். இந்தக் குற்றச்சாட்டை இடதுசாரிகளே இந்த அவையிலே வைக்கிறார்கள் என்கிறபோது, இடதுசாரிகளுக்குள்ளே கொள்கையில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறதா என்கிற ஐயம் என்னைப் போன்றவர்களுக்கு எழுகிறது. இது ஒரு வலதுசாரி குற்றச்சாட்டு. இந்தக் கடன் எந்த வகையிலே செலவழிக்கப்பட்டிருக்கிறது, எதற்காக இந்தக் கடன் பெறப்பட்டிருக்கிறது என்கிற வகையிலேதான் நிதிநிலை அறிக்கையைப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு வலதுசாரி அடிப்படை வாதத்தை இடதுசாரிகளே இந்த அவையிலே வைக்கிறார்கள் என்கிறபோது, அதற்காக நான் வருந்துகிறேன்.

பக்கத்திலே இருக்கிற கேரள மாநிலத்திலேகூட எதிர்க்கட்சியாக இருக்கிற இடதுசாரிகள் 'தமிழ்நாட்டைப் போய்ப் பாருங்கள்; தமிழ்நாட்டிலேயிருக்கிற ஆட்சியின் சிறப்பை, மக்கள் நலத் திட்டங்களை, ஆட்சியினுடைய அணுகுமுறையைப் பாருங்கள்' என்று அந்தச் சட்டமன்றத்திலே அவர்கள் ஒரு குற்றச்சாட்டை அங்கேயிருக்கிற ஆளுங்கட்சியின்மீது வைக்கிறபோது, இங்கேயிருக்கிறவர்களுக்கு அது எப்படி தெரியாமல் போயிருக்கிறது என்று எனக்கு விளங்கவில்லை. நம்முடைய நிதிநிலை அறிக்கை இந்த *5* ஆண்டுகாலத்தில் அபாரமான வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. இதே அவையிலே பெருந்தலைவர் காமராஜர் ஆட்சியிலே நிதியமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் ரூ.*100* கோடி அளவிற்கு ஒரு நிதிநிலை அறிக்கையைத் தந்தார்கள். அவ்வாறு ரூ.*100* கோடி அளவிற்கு நிதிநிலை அறிக்கையைத் தந்த காலத்திலே, இந்தப் பேரவையிலே நிதியமைச்சராக இருந்த, பின்னாளில் மத்திய நிதி அமைச்சராகக்கூட வரமுடிந்த மாண்புமிகு திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் 'ரூ.*100* கோடி அளவிற்கு அரசாங்கம் நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிறது, நான் சதம் அடித்த பெருமையைப் பெற்றவன்' என்று சொன்னார். பெருந்தலைவர் காமராஜர் ஆட்சியிலே இருந்த அந்த வளர்ச்சியை *45* ஆண்டுகாலத்திற்குப் பிறகு, இன்றைக்கு தமிழகம் அடைந்திருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி அந்தச் சாதனையை அடைந்திருக்கிறது. எப்படி என்றால், ஆயிரம் மடங்கு உயர்த்தி, ஒரு இலட்சம் கோடி



ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கி, நிதிநிலை அறிக்கையை இன்றைக்கு இங்கே சமர்ப்பித்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.*100* கோடிக்கு திட்டம் தந்தபோது, நிதியமைச்சர் திரு. சுப்ரமணியம் அவர்கள் அந்தச் சாதனையை பெருமைபட இந்த அவையிலே சொன்னார். இன்றைக்கு ஆயிரம் மடங்கு அதிகரித்து, ரூபாய் *1* இலட்சம் கோடிக்குமேல் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிற ஓராண்டிற்கான நிதிநிலை அறிக்கையை இந்தச் சட்டப் பேரவைக் கூட்டத் தொடரில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள் என்கிறபோது நான் அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இது ஒரு நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் என்பதாலே, சிலவற்றை நான் சொல்லியாக வேண்டும்.

பிற்பகல் *12-35*

கடந்த ஐந்தாண்டு காலத்தில் நம்முடைய அரசு, இந்தச் சட்டப் பேரவை, இந்தியாவுக்கு ஒரு முன்னுதாரணமான சட்டப் பேரவையாக, பல்வேறு சிறப்புகளை, பெருமைகளைத் தந்திருக்கிற சட்டப் பேரவையாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆளுமையிலே அப்படிப்பட்ட பெருமையைப் படைத்திருக்கிறது என்பதை நான் சொல்ல வேண்டும்.

இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் விதி *110*-ன்கீழ் அறிவித்த அறிவிப்பு இருக்கின்றதே, என்னுடைய நினைவு சரியாக இருக்குமேயானால், அது *182*-வது அறிவிப்பாக இருக்கலாம் அல்லது *183*-வது அறிவிப்பாக இருக்கலாம். ஆக, *182* முறைக்கு மேலாக விதி *110*-ஐப் பயன்படுத்தி, ஒரு மாநில முதல்வர் சட்டப் பேரவையில் நலத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள் என்றால், இந்தியத் துணைக் கண்டத்திலேயே இந்தச் சட்டப் பேரவைதான் அந்தப் பெருமையைப் பெற்றிருக்கிறது என்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்தப் பேரவையிலே வாழ்த்தி, பாராட்டிப் பதிவு செய்ய வேண்டும். ஏன் இதை முதலமைச்சர்தான் செய்ய வேண்டுமா, மற்ற அமைச்சர்கள் செய்யக்கூடாதா, விதி *110* என்பது அவருக்கு மட்டுமே உரியதா, அது தனிப்பட்ட உரிமையா என்றெல்லாம்கூட ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள், நிருவாகப் பொறுப்பில் இருந்தவர்கள் வெளியிலே குரல் எழுப்புகிறார்கள், பேசுகிறார்கள். ஓர் உத்தரவை, ஒரு திட்டத்தை அமைச்சர் அறிவிப்பதற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பதற்கும் நிருவாக ரீதியாக ஏகப்பட்ட வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதை நிருவாக ரீதியாகவே அனைவரும்

உணர்ந்திருக்க முடியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிடுவதற்கும், ஓர் அமைச்சர் உத்தரவிடுவதற்கும் ஏகப்பட்ட வித்தியாசங்கள் உண்டு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு ஈடுபாடு இருந்தால், எவ்வளவு அழுத்தம் காட்டுகிற தன்மை இருந்தால், அவர் உத்தரவிடுகிறார் என்கின்றபோது அந்த உத்தரவின் தன்மையும், ஒரு பிரதமர் உத்தரவிடுகிறார், ஒரு குடியரசுத் தலைவர் உத்தரவிடுகிறார் என்கின்றபோது, அந்த உத்தரவினுடைய தன்மையும், ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிடுகிறார் என்கின்றபோது அந்த உத்தரவினுடைய தன்மையும், அழுத்தமும் மாறுபடுகிறது. மக்கள் வளர்ச்சியிலே, மாநில வளர்ச்சியிலே, ஒவ்வொரு துறையினுடைய வளர்ச்சியிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அக்கறை இருக்கிறது என்பதனாலேதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் இவ்வளவு நல்ல திட்டங்களைத் தமிழகத்திற்குத் தந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஈடுபாட்டை, அழுத்தத்தை, நிறைவேற வேண்டிய துரிதத்தை, அந்த ஆளுமையைப் பிரதிபலிக்கின்ற வகையிலே விதி 110-ன்கீழ் 182 முறைக்குமேல் இந்தச் சட்டப் பேரவையில் பயன்படுத்தப்பட்டிருக்கிற அந்த வரலாறு போற்றுதலுக்குரியதாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 36 துறைகளையும் தன்னுடைய சுட்டு விரலிலே வைத்து, அவற்றின் நிருவாகத்திலே எந்த ஐயம் எழுந்தாலும், எந்தக் கேள்வி எழுந்தாலும், பதில் சொல்கிற ஆற்றல் படைத்தவர். ஏனென்றால், இந்த நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் என்பது இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரின் இறுதி நிதிநிலை அறிக்கை என்பதனால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இறுதி நாளிலே பல அறிவிப்புகளை வெளியிடுவார். ஆகவே, இதைப் பதிவு செய்ய வேண்டுமென்பதற்காகவே நான் இதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட தகுதியும், பெருமையும் உடையது இந்தச் சட்டப் பேரவை. சட்டப் பேரவை நடவடிக்கைகளானாலும், நிருவாகச் சீர்திருத்தங்களானாலும், நிருவாக மேம்பாடானாலும், ஆளுமையானாலும் இந்த மாநிலம் எடுத்துக்காட்டான மாநிலம் என்று இந்தியா பாராட்டுகின்ற, பின்பற்றுகின்ற ஒரு பெருமைக்குரிய இலக்கணத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆளுமையிலே இந்தச் சட்டப் பேரவை பெற்றிருந்தது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இந்தச் சந்தர்ப்பத்திலே, இந்த நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்திலே நான் ஒன்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்திய அரசியல் சட்ட தந்தை, ஒடுக்கப்பட்ட மக்களுடைய இரட்சகர் பாபா சாகிப் அம்பேத்கர் அவர்களது 125-வது பிறந்த நாள் விழா ஏப்ரல் மாதம் 14 ஆம் தேதி அன்று வருகிறது. அந்த 125-வது பிறந்த நாள் விழாவையொட்டி, மாநில அரசு ஒரு விழாக் குழுவை, உயர்மட்டக் குழுவை உருவாக்க வேண்டும். அவருடைய அரிய கருத்துகளை, நூல்களை பல்கலைக்கழக பாடத் திட்டங்களில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தியாவிலே சாதிகளற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும், ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும். சாதிகள் என்பதுதான் இந்திய முன்னேற்றத்திற்கு, பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக முட்டுக்கட்டையாக இருக்கக்கூடிய ஒரு தன்மை படைத்ததாக தமிழக வரலாற்றிலே, இந்திய வரலாற்றிலே, ஒட்டுமொத்த தேசிய வரலாற்றிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அதற்கான ஒரு படிக்கல்லாக, சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு அரசு நிருவாகப் பணிகளில் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். அவர்களுக்கு 2 சதவிகிதமாவது இட ஒதுக்கீடு வழங்கி ஊக்கப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அவையிலே நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிறைவாக, போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆளுமையில், 5 ஆண்டுக் காலத்தில் இந்த அரசு, தமிழகத்தின் மூலை முடுக்குகளில், குக்கிராமங்களில் இருக்கிற ஏழை, எளிய மக்களுடைய வாழ்வின் பிடிப்புக்கும், நம்பிக்கைக்கும் துணை நின்று, மக்கள் ஜனநாயகத்தின்பேரில் இருக்கிற, மக்கள் அதிகாரத்தின்பேரில் இருக்கிற ஓர் ஆய்ந்த நம்பிக்கையையும், உணர்வையும் பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட சிறப்பான, திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றியிருக்கிறது.

பிற்பகல் 12-40

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ல் தேர்தல் முழக்கக் கூட்டத்திலே, "நம்முடைய வெற்றி என்பது வெறும் வெற்றியாக இருந்துவிட முடியாது. இன்னமும் ஓர் அரை நூற்றாண்டு காலத்திற்கு, தமிழகத்தை இந்தத் திராவிடம் சார்ந்த

இயக்கங்கள்தான் ஆளும், ஒரு மகத்தான மக்கள் மாற்றத்திற்கான வெற்றியை உருவாக்கும்" என்று சொன்னார்.

அதைப்போல, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆளுமை, இன்னமும் அரை நூற்றாண்டு காலத்திற்கு, அவர்கள் வாழும் வரையிலே தமிழகத்திலே நீடித்து நிற்கும். மக்கள் அப்படிப்பட்ட வெகுநம்பிக்கையைப் பெற்றிருக்கிறார்கள் என்கிற அந்த உணர்வை மீண்டும் பதிவு செய்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

**திரு. கோவி. சம்பத்குமார்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கே முழங்கு என சரித்திரம் படைக்கின்ற எங்கள் தாயே; ஆற்றலின் அன்னையே; அகிலத்தின் விலாசமே; படைப்பின் சிகரமே; பண்பின் இமயமே; தாயே, தமிழே, தமிழர் வாழ்வுதனில் பூ மழையே, முழுமதியே, வானகமே, வையகமே, வான்மழையே, தமிழர் நெஞ்சத்திலெல்லாம் கலந்திட்ட தேன் மழையே; தமிழர் வாழ்வறிந்து காக்கப் புறப்பட்ட பொன்னிலவே, புழுதிபட எதிரிப்படை ஓட ஓடவென களம் கண்ட தாயே; படை கண்டு அஞ்சாமல், தமிழர் வாழ்வுதனில் வளம் சேர்க்க வந்த வான்மதியே; வானவில்லே, அணை உடைத்த காவேரியே, அகிலத்தின் ஒளியே, ஆழ்கடலின் முத்தே, ஆழ்வார்க்கும் ஆழ்வாரே, கண்ணெதிரே இருக்கின்ற கண்கண்ட தெய்வமே, பாரெல்லாம் போற்றும் பரமனின் திருவிளக்கே, வணங்கும் கைகள் விலகும் முன்னே, வரங்கள் தருகின்ற எங்கள் அன்னையே, சாதிச் சதியும், மதப் பகையும் இல்லா சமத்துவ தேசம் காண சங்கத் தமிழ் பூமி தந்த சத்தியத் தாயே;

தமிழரின் இதயச் சிம்மாசனமே, கற்பகச் சோலையே; பகுத்தறிவிலே தந்தை பெரியாராய், அன்பு காட்டுவதிலே பேரறிஞர் அண்ணாவாய், வள்ளல் தன்மையிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆராய், தெளிவான சிந்தனையும், தீர்க்கமான முடிவும் எடுப்பதிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நிகர் அம்மாவாய்; பாரதி கண்ட பெண்ணினமே, மணிமேகலையின் மாற்றே, அம்மா உணவகம் தந்த அட்சய பாத்திரமே, உறங்காத இமையே, தமிழரின் திசையே, ஸ்ரீரங்கத்துத் தாயே, அரங்கநாதனின் அருளே, தமிழருக்காகவே பிறந்த தவமே, ஆர்.கே. நகரின்



அதிசயமே, அலைகடலென ஆர்ப்பரித்து எழுகின்ற தமிழர் நெஞ்சத்தின் இதயங்களிலெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் திராவிட இயக்கத்தின், ஒப்பாரும் மிக்காரும் இல்லா உலகப் பெருந்தலைவர்களின் ஒப்பற்ற தலைவியே;

மாற்றம் தந்த தமிழக மக்களுக்கு நாளும் ஒரு திட்டத்தைத் தந்து, தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வருகின்ற, (மேசையைத் தட்டும் ஒலி) ஏங்கி நிற்கும் ஏழைகளைத் தாங்கி நிற்கும் தமிழகத்தின் தலைமகளே; ஈரடியால் உலகளந்த இறைவன் ஈரிலையால் தமிழ் தேசமாள ஈந்திட்ட பேரறிவே! மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திசைநோக்கி வணங்கி, மலர்ப் பாதம் பணிகின்றேன், அம்மா.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுதினமும் மக்களைப் பற்றியே சிந்தித்து, மக்கள் நலனுக்காகவே வாழ்ந்து, எண்ணற்ற பல திட்டங்களைத் தீட்டி, அதன் பயன் முழுமையாக மக்களைச் சென்றடைய, அல்லும், பகலும் அயராது உழைத்து வரும் இணையற்ற மக்கள் போற்றும் தலைவியாக, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திகழ்கிறார்கள்.

அமைதி, வளம், வளர்ச்சி என்ற குறிக்கோள்களை எட்டிடும் வகையில், தமிழ்நாட்டை வழி நடத்தும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், நமது மாநிலத்தை வறுமையில்லாத மாநிலமாக, அனைவருக்கும் வேலைவாய்ப்பை உருவாக்கும் மாநிலமாக, எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இல்லாமை இல்லாத வளம் நிறைந்த மாநிலமாக உருவாக்கிட 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் கண்துஞ்சாது உழைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே முதன்மைபெற்ற மாநிலமாக உருவாக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நூறாண்டுகளில் இல்லாத அளவுக்கு, வான்மழை வந்து, தன் கோடானுகோடி கோர முகத்தைக் காட்டிய போதும், அன்பால் அனைவருக்கும் நிவாரணம் வழங்கி, அரவணைத்து தாயின் பரிவு

காட்டி, இதுகாறும் 2,313 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கி, சிறு வியாபாரிகள், பெட்டிக்கடை நடத்தும் ஏழைகளுக்கெல்லாம் கூட்டுறவுக் கடன் சங்கம்மூலம் வட்டியில்லா கடன் தொகை ரூ.5,000/- வீதம் வழங்கி, வேலையில்லா பட்டதாரிகளின் வாழ்வாதாரத்திற்கு, 25 சதவீத மூலதன மானியத்துடன் 5 இலட்சம் ரூபாய் வரையிலான கடன்கள் வழங்க நடவடிக்கை மேற்கொண்டமை இவை யாவும் உலக வரலாற்றில் இதுவரையில் எந்த மாநிலமும் நிகழ்த்தாத மாபெரும் நிகழ்வுகள். இவற்றிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு தமிழ்நாடே நன்றிக் கடன்பட்டிருக்கிறது தாயே!

பிற்பகல் 12-45

வளர்ச்சி என்பது உற்பத்தி சார்ந்தது மட்டுமல்ல, இது மக்களைச் சென்றடைய வேண்டுமெனில், அவர்கள் கல்வியிலும், உடல் நலத்திலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக, கல்வி வளர்ச்சிக்கு முழுமையான பங்களிப்பை வழங்கியிருக்கும் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் தரமான கல்வி வழங்கி, விஷன் 2023 இலக்கை அடைய, தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறைக்கு 84,568 கோடி ரூபாய் நிதி வழங்கி, கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு வழங்கியதைவிட 116 சதவீதம் உயர் அளவு ஒதுக்கீடு வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தொடக்க, நடுநிலை, இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி என அனைத்து நிலைகளிலும் மாணவர் சேர்க்கையை உயர்த்தி, இடைநிற்றலைக் குறைக்க சிறப்பு ஊக்கத் தொகை வழங்கி, பள்ளிக் கல்வித் துறையில் சாதனை நிகழ்த்தியிருக்கும் சிறந்தே பிறந்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 58 மாத கால ஆட்சியில், 26.96 இலட்சம் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் 4,723 கோடி ரூபாய் செலவில் +2 மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கியதோடு, 10 முதல் 12 ஆம் வகுப்புப் பயிலும் மாணவர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.5,000/- வீதம் இதுகாறும் 1 கோடியே 13 இலட்சத்து 76 ஆயிரம் மாணவர்களுக்கு 1,810 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் 4 இணைச் சீருடைகள்



வழங்கிட 1,698 கோடி ரூபாயும், 2012-2013 கல்வியாண்டு முதல் விலையில்லா நோட்டுப் புத்தகம், புத்தகப் பை, கணித உபகரணப் பெட்டி, விலையில்லா மிதிவண்டி, கட்டணமில்லா பேருந்து பயணச் சலுகை, சத்தான மதிய உணவுத் திட்டங்கள் எனச் செயல்படுத்தி, திட்டங்களாலே தேசங்களைத் திரும்பிப் பார்க்க வைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி மலர்கள்! (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வி வழங்கும்பொருட்டு, 12,092 ஆங்கில வழிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, 2.64 இலட்சம் மாணவர்கள் பயின்று வருகிறார்கள். ஏழையின் வாழ்விலும் ஆங்கிலவழிக் கல்வியைக் கொண்டு சேர்த்த பெருமை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களையே சாரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 5 ஆண்டுகால ஆட்சியில், 221 தொடக்கப் பள்ளிகளை புதியதாகத் தொடங்கியதோடு, 112 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 810 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்திய வரலாறு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியின் சாதனையாகும்.

இதுமட்டுமின்றி, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, 4,166 கோடி ரூபாய் செலவில் வகுப்பறைகள், ஆய்வகங்கள், குடிநீர் வசதி, கழிவறை வசதி என நிறைவேற்றி, எப்போதும் இல்லாத அளவில், இன்று தனியார் பள்ளிகளுக்கு நிகராக அரசுப் பள்ளிகளை மாற்றியமைத்திருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

மேலும், 72,843 புதிய ஆசிரியர்களை நியமனம் செய்ததோடு, 14,711 ஆசிரியரல்லாத பணியிடங்களும் நிரப்பப்பட்டு, கடந்த 5 ஆண்டுக் காலத்தில் பள்ளிக் கல்வியில் புரட்சியை ஏற்படுத்திய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தமிழ்நாடே நன்றிக் கடன்பட்டிருக்கிறது அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

உயர் கல்வித் துறை, இந்திய அளவில் முதலிடத்தில் உள்ளது என்பது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா

அவர்களின் 5 ஆண்டுகால ஆட்சியின் முத்தாய்ப்பு. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 26 பாடப் பிரிவுகள் மட்டுமே செயல்பட்ட உயர் கல்வித் துறையில் இன்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில், 959 பாடப் பிரிவுகளைக் கொண்டு, கட்டண விலக்கோடு 2,84,609 மாணவர்கள் பயன் பெறுவது தாயுள்ளத்திற்கு எடுத்துக்காட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதவள மேம்பாட்டில் முக்கியப் பங்கு வகிப்பதில் மக்கள் நல்வாழ்வுத் துறையும் ஒன்றாகும். இத்துறை வழியாக மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், தாய்மார்களுக்கான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டகத் திட்டம் மற்றும் அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம், விலையில்லா நாப்கின் திட்டம் என தமிழ்நாடு முழுக்க தாய்மார்கள் வரவேற்கும் வகையில் செயல்படுத்தப்படுவது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசின் மிகப் பெரிய சாதனைப் பட்டியலில் முக்கியமானவை.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்களின் 5 ஆண்டுகால அரசில் 172 புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தொடங்கியதோடு, 122 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதி, ஸ்கேன் வசதி, அறுவை சிகிச்சை வசதிகளுடன் ரூ.131 கோடியே 16 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 15 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்தவும், 7 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தாய்சேய் நல மையங்கள் அமைத்து மக்களின் வாழ்வில் நலம் கண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு தமிழர்களின் நெஞ்சார்ந்த நன்றிகள்!

உலகத் தரமிக்க மருத்துவக் கல்லூரிகள், மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் எனத் தொடங்கி, மருத்துவத் துறையில் புதியதோர் சாதனை படைப்பது என்பது மாண்புமிகு அம்மா அவர்களால் மட்டுமே முடியும்.

இந்தியத் திருநாட்டிலேயே முதன் முதலில் மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம் தொடங்கிய பெருமை மாண்புமிகு தமிழக



முதல்வர் அம்மா அவர்களையே சாரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழை, எளிய மக்கள் யாரையும் சார்ந்திருக்காமல், சுயமாக, தாங்களாகவே தொழில் தொடங்க பயிற்சிகள் வழங்கியும், வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தியும், தேர்வாணையம் வழியாக வேலைவாய்ப்பு அமைத்திடவும் வழிவகை கண்டு, இதுகாறும் 3,311 நபர்கள் வேலைவாய்ப்பு பெறவும், இதுவரை 1 கோடியே 8 இலட்சத்து 29 ஆயிரத்து 997 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கியும் தரப்பட்டுள்ளமை, தமிழக வரலாற்றில் முதன்முறையாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் அம்மா அவர்கள் நிகழ்த்தியிருக்கும் மாபெரும் சாதனைகளாகும்.

பிற்பகல் 12-50

வேளாண் உற்பத்திப் பெருக்கத்தின் அடிப்படையில், 2014-2015 ஆம் ஆண்டு 127.96 இலட்சம் மெட்ரிக் டன் என உற்பத்தி உயர்ந்து காணப்படுகிறது. வெண்மைப் புரட்சியைப் பன்மடங்காக உயர்த்த 60,000 பேருக்கு கறவைப் பசுக்கள், 7 இலட்சம் ஏழைகளுக்கு தலா 4 ஆடுகள் வீதம் 28 இலட்சம் வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகளை வழங்கி, ஏழையின் வாழ்வினில் உயிர் சேர்த்திருக்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை நகரங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மக்களின் பாதுகாப்பான பயணத்திற்கு 12 புறவழிச் சாலைகள் 163.94 கோடி ரூபாய் செலவிலும், 19,190.52 கோடி ரூபாய் செலவில் சாலை மேம்படுத்தலும், 1,793 பாலங்கள் 3,067.30 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டும், 10,298 கோடி ரூபாய் செலவில் பல்வேறு பணிகளும் நடைபெற்று வருகின்றன. சென்னை மாநகராட்சிப் பகுதியில் 3,989 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டில் 4,492 கிலோ மீட்டர் சாலை மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டு 3,390 கிலோ மீட்டர் பணிகள் நிறைவடைந்துள்ளன. இது தமிழக மக்கள்மீது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்ட பாசத்தின் வெளிப்பாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகப் பகுதிகளில் கடந்த 4 ஆண்டுகளில் தாய் திட்டத்தின்மூலம் 2,930 கோடி ரூபாய் மதிப்பில் திட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளதோடு, நடப்பாண்டில் 750 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் செயல்வடிவிலும் உள்ளன. பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் 6 இலட்சத்து 43 ஆயிரத்து 275 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டும், 98 ஆயிரத்து 362 வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருவதும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழையின்பால் கொண்ட கருணை உள்ளத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் என்றால் என்னவென்று கேட்கும் நிலையை ஏற்படுத்திய கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு இருளில் மூழ்கிக் கிடந்தது. மாண்புமிகு அம்மா அவர்களின் செயல்திறனால் 3,330 மெகா வாட் மின்சாரம் கொள்முதல் செய்ய ஒப்பந்தமிடப்பட்டு, தற்போது 2,830 மெகா வாட் மின்சாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. 5-6-2015 முதல் தமிழ்நாடு மின்வெட்டில்லா மாநிலம் எனும் பெருமைக்கு மகுடம் சேர்த்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தமிழக மக்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

2015 செப்டம்பர் மாதம் நடைபெற்ற சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டில் 2,42,160 கோடி ரூபாய் முதலீட்டிற்கு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்குக் கிடைத்திட்ட மற்றுமோர் மணிமகுடம் ஆகும்.

உச்ச நீதிமன்றம் சென்று, நமக்குக் கிடைக்க வேண்டிய முல்லைப் பெரியாறு அணையின் நீரை 142 அடி வரை தேக்கி வைத்துக்கொள்வதற்கும், தமிழர்கள் வாழ்வுரிமை பெறுவதற்கும் துணை நின்றது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சித் திறத்திற்கு மற்றுமோர் சாட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்



பிறந்த நாளான 24-2-2016 ஆம் தேதி முதல் இலவச பேருந்துப் பயணம் எனும் திட்டத்தை அறிவித்து, முதியோரின் பயண வாழ்விலும் ஆனந்தப் பயணத்தை உருவாக்கியவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

‘வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்’ என்ற முண்டாசுக் கவிஞன் பாரதியின் வைர வரிகளுக்கேற்ப, 1 கோடியே 91 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு மாதந்தோறும் 20 கிலோ விலையில்லா அரிசி தந்து, 1 கோடியே 91 இலட்சம் குடும்ப அட்டையுள்ள இல்லத்தரசிகளின் சிரமத்தைப் போக்க அவர்தம் கைகளில் மிக்சி, கிரைண்டர், மின் விசிறி தந்து, ஏழை எளியோர் ஏற்றம் பெற, மாற்றம் தந்த தமிழக மக்களுக்கு கறவைப் பசுக்கள் தந்து, 4 ஆடுகள் தந்து, படித்த பெண் பிள்ளைகள் திருமணத்திற்கு தாலிக்கு 4 கிராம் தங்கம் தந்து, 25,000 ரூபாயும், பட்டதாரிப் பெண்கள் எனில் 50,000 ரூபாயும் தந்து வாழ்வை வளமாக்கிய எங்கள் அன்னையே!

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் கைகளில் மடிக்கணினி தந்து, மிதி வண்டி தந்து, விலையில்லா குறிப்பேடுகள், பாடநூல்கள், புத்தகப் பை, வருடத்திற்கு 4 இணைச் சீருடை தந்து, வருடத்திற்கு ஒரு முறை காலணிகள் தந்து, வண்ணப் பென்சில்கள் தந்து, கிரையான்கள் தந்து, வரலாறு, புவியியல் வரைபடங்கள் தந்து, கணித உபகரணப் பெட்டி தந்து, சிறப்பு உதவித் தொகை தந்து, விளையாட்டுக்கு நிதி தந்து, கல்வி உதவித் தொகை தந்து, அம்மா மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தந்து, பள்ளிக் குழந்தைகளுக்கு சத்து மாத்திரைகள் தந்து, தாயையும், தந்தையையும் இழந்து நிற்கும் பள்ளிக் குழந்தைகளுக்கு நிதியுதவி தந்து, அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா மருந்தகம், அம்மா உப்பு, அம்மா மருத்துவப் பரிசோதனை நிலையம், அம்மா சிமெண்ட், அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டகம் என இப்படி வளர்தமிழ் பூமிக்கு வாரி, வாரி வழங்குகின்ற வள்ளல் மனத் திட்டங்கள் தந்து, காவேரி, முல்லையாற்று உரிமைகளை கடமையாற்றி வென்று வந்த கம்பீர வெற்றிகள் தந்து, என்.எல்.சி. பங்குகளை ஏழைத் தொழிலாளிக்கே உரிமையாக்கிய உழைப்பைப் போற்றும் உன்னதத் திட்டங்கள் தந்து, பட்டா, சிட்டா, சாதி, வருமானச் சான்றுகள் உள்ளிட்ட அனைத்தையும், மக்களின் வசிப்பிடங்களுக்கே சென்று தந்து, நிமிடமும் தாமதிக்காமல் நிறைவேற்றித் தருகின்ற அம்மா திட்டம் தந்து, மூவகைச் சான்றுகளைப் பள்ளியிலேயே மாணவச்

செல்வங்களுக்கு தந்து, பாலூட்டும் தாய்மார்களுக்கு பேருந்து நிலையங்களில் பாதுகாப்பான தனியறைகள் தந்து, வளர் இளம் பெண்களுக்கு சுகாதாரம் பேணிட சானிடரி நாப்கின் தந்து, கருத்தரித்த காலம் தொடங்கி பிள்ளைப்பேறு காலம் வரையிலும், மேலும் ஆரோக்கிய குழந்தையாக அது வளரும் காலம் வரையிலும் ஊட்டச்சத்துடன் உதவித் தொகை வழங்கும் திட்டம் தந்து, கருணையே வடிவான கனிவுளத் திட்டங்கள் தந்து, மக்கள் நலம் காக்கின்ற மகோன்னத அரசை இந்த மண்ணுலகம் கண்டதுண்டா?

பிற்பகல் 12-55

கம்பநாடன் சொல்கின்ற காவிய ராமனின் ஆட்சிபோல், மக்களுக்கு, தமிழக மக்களுக்கு எவை, எவை தேவை என்பதை அறிந்து, ஆராய்ந்து, காலத்தே செய்து, கடமை ஆற்றுகிற காப்பியங்களின் மாட்சி எங்கள் கருணைத் தாய் அம்மாவின் ஆட்சி! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மா, பிரம்மாவின் படைப்பில் ஒரு பிரத்யேகப் பதிப்பு! ஏழரை கோடி தமிழினம் வெகுமானம் பெறுவதற்கு விடிவெள்ளியாக வந்த ஒளி வானம் எங்கள் அம்மா! ஏழை எளியோர் வாழ்வில் ஒளியேற்றி வைத்து, நற்றமிழ் பூமியில் நடை கூட்டிச் செல்கின்ற பிடிமானம் எங்கள் அம்மா!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூரிலிருந்து புறப்பட்ட ஒரு குடும்பத்தை மீண்டும் திருவாரூருக்கே திருப்பி அனுப்பிய பெருமை, தமிழ்நாட்டில் எவருக்கு உண்டு? மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கே உண்டு! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் படித்தவர்கள் எல்லாம் எங்கள் பக்கம் என்றும், படிக்காத, ஏழை பாமரர்கள் எல்லாம் நடிகர்கள் பக்கம் என்றும் பிதற்றிய ஆணாதிக்கம்; தானே மிகப் பெரிய அறிவாளி என்று தம்பட்டம் அடித்தவர்களை சென்னையைவிட்டே விரட்டியடித்த பெருமை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கே உண்டு! (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது சிலர், 'கடந்த காலத்தில் நாங்கள் செய்த தவறுகளை எல்லாம் மறந்து, மன்னித்துவிடுங்கள். இனிமேல், அப்படிப்பட்ட தவறுகளை நாங்கள் செய்யமாட்டோம்' என்று பாவ மன்னிப்பு கேட்டு, ஊர் ஊராக 'நமக்கு நாமே' என்று சுற்றி



வருகிறார்கள். ஆனால், தமிழக மக்கள் ஒருபோதும் அவர்களை மன்னிக்கமாட்டார்கள். எதிர்வரும் 2016 சட்டமன்றப் பொதுத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வென்று, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே மீண்டும் தமிழகத்தின் முதல்வராக வருவார், வருவார் எனக் கூறிக்கொள்கிறேன்.

துறைதோறும், துறைதோறும் நாளும் பல திட்டங்கள் தந்து, தமிழர் வாழ்வு மேம்பட, தலை நிமிர அல்லும், பகலும் அயராது, கண்துஞ்சாமல் பணிகள் நிறைவேற்றும் தாயே! என் அன்னையே! உங்கள் திறம் சொல்ல என் தமிழுக்குள் சொல்லின்றித் தவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறுத்தத்தில் வெற்றி பெற்றான்-ஆட்டனத்தி; நிதியளித்து வெற்றி பெற்றான்-குமணவள்ளல்; திருத்தத்தில் வெற்றி பெற்றான்-ஒட்டக்கூத்தன்; வருத்தத்தில் வெற்றி பெற்றான்-வடலூர் வள்ளல்; வாளேந்தி வெற்றி பெற்றான்-சேரலாதன்; விருத்தத்தில் வெற்றி பெற்றான்-கம்பநாடன்; மக்களின் மனங்களை வென்றெடுத்தார் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில் எங்கோ ஒரு மூலையில், 'ஏழைகளின் ஊட்டி' என்று அழைக்கப்படுகின்ற ஏலகிரி மலையடிவாரத்தில் உள்ள வள்ளிப்பட்டு என்கின்ற சிற்றூராட்சியில் பிறந்த எனக்கு கிளைக் கழகச் செயலாளர், ஒன்றிய புரட்சித் தலைவி அம்மா பேரவை இணைச் செயலாளர், ஆலங்காயம் ஒன்றிய கழகச் செயலாளர், வாணியம்பாடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எனப் பல்வேறு பொறுப்புகளை வழங்கி, தாங்கள் அமர்ந்து ஆட்சி பரிபாலனம் செய்யும் வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னை புனித செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் என்னையும் அமர வைத்து, தொடர்ந்து நான்கு நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்களில் கலந்துகொண்டு உரை நிகழ்த்த வாய்ப்பளித்த, வாழும் மனித தெய்வம், தமிழர்களின் உயிர்க் காற்று, தமிழர்களின் ஜீவநாடி, எங்கள் குடும்ப குலதெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

இணையற்ற அருளின் வடிவமே! உலகத் தமிழர்களின் உயிர்க் காற்றே! அம்மா, தங்களை எதிர்கொள்ள ஓராயிரம் நரிகள் கூடி ஒன்றெனவே வந்தாலும், கூராயுதம் ஏந்தி கும்பலாகி நின்றாலும், தருமத்தின் வழி நின்று, தமிழ் மக்கள் துணைகொண்டு, நேற்றும், இன்றும், நாளையும் தொடரும் வெற்றிகள் ஏராளம்! ஏராளம்! (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் திசை பார்த்தே அம்மா, அன்னை வயலிலிருந்து புறப்பட்ட விதை நன்றி பாராட்ட பூமியின் திசை நோக்கி தலை சாய்ப்பது போல், தாயே, உங்கள் பொற்பாதங்களில் என் நன்றி மலர்களை காணிக்கையாக்கி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 2011 ஆம் ஆண்டில் தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் நிறைவேற்றப்பட்டுள்ளன. தேர்தல் வாக்குறுதிகள் மட்டுமல்லாமல், பேரவை விதி 110-ன்கீழ் சட்டமன்றத்தில் அளித்த மக்களுக்குத் தேவையான அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றப்பட்டு, அதனுடைய பலன் கடைக்கோடி மக்களுக்கும் போய்ச் சேருகின்ற நிலையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி உருவாக்கியிருக்கிறது. அதை நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த ஐந்தாண்டுகளில் பள்ளிக் கல்வித் துறைக்காக 89,193 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கது. இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும், ஏன், உத்தரப்பிரதேச மாநிலத்திலும்கூட இதுபோன்று பள்ளிக் கல்வித் துறைக்காக நிதி ஒதுக்கி இருக்க முடியாது என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.



பிற்பகல் 1-00

அதுமட்டுமல்லாமல், தமிழகம் கல்வியில் உயர்ந்த மாநிலமாக வர வேண்டும் என்பதற்காக மாணவர்களுக்கு 14 வகைகளில் சலுகைகளை அறிவித்து, கல்வி கற்பதில் இடைநிற்றல் கூடாது என்பதற்காக அவர்களுக்கு நிதி வழங்கி, நிறைவேற்றியிருக்கிறார்கள். இன்றையதினம் அதிகமான மாணவர்கள் படிக்க வருகின்ற அதே நேரத்தில், அதிகமான மதிப்பெண்களையும் பெறுகிறார்கள் என்ற பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. இந்த நிதியாண்டிலும்கூட, 24,820 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருப்பது பாராட்டப்படக்கூடியது என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு. தமிழகத்தில் கடந்த ஐந்தாண்டு காலத்திற்கு முன்னர், அதாவது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திற்கு முன்பு, சட்டம்-ஒழுங்கு தமிழகத்தில் எப்படி இருந்தது என்பதை அனைவரும் அறிந்ததனால்தான், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை மக்கள் அகற்றினார்கள். இந்த ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தை வேறு மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழகம் ஓர் அமைதிப் பூங்காவாக இருக்கிறது என்பதற்கு யாரும் மறுப்பு சொல்ல முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) 12,093 புதிய காவலர்களை நியமித்திருப்பதோடு, 8,500 தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படையை உருவாக்கிய பெருமை, தமிழகத்தைத் தவிர வேறு எந்த மாநிலத்திற்கும் கிடையாது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் அதை உருவாக்கியிருக்கிறார்கள். அதேபோன்று, 1,078 உதவி ஆய்வாளர்களை நியமித்த பெருமை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு.

அதுமட்டுமல்ல, தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு நல்ல நிலையில் இருக்கிறது. தமிழகத்தில் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையால் யாரும் பாதிப்பு அடையவில்லையென்ற நிலையை உருவாக்கியதற்கு உண்மையில் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்த நேரத்தில் பாராட்ட வேண்டும்.

100 ஆண்டுகளுக்குப் பின்னர், கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவ மழையால் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர் போன்ற மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. கடந்த 2015-ல் பெய்த கனமழையால்

பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் அறிவுறுத்தலின்பேரில், அனைத்து அமைச்சர்களும் அனுப்பப்பட்டு, 20 நாட்களுக்குள்ளாக அந்த வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதே தெரியாத அளவிற்கு, குப்பைகளை அப்புறப்படுத்தி, அந்தப் பகுதிகளில் தொற்றுநோய்களை வரவிடாமல் செய்து, மீண்டும் சகஜ நிலைக்குக் கொண்டு வந்த பெருமை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, இந்த வெள்ள நிவாரணத்திற்காக கிட்டத்தட்ட 3,039 கோடி ரூபாய் தமிழக அரசு செலவு செய்திருப்பது பாராட்டுதற்குரியது.

அதேபோன்று, உயர் கல்வித் துறையில் கிட்டத்தட்ட 39 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 4 பொறியியல் கல்லூரிகள், 11 அரசு தொழில்நுட்பக் கல்லூரிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் ஒரே ஒரு தொழில்நுட்பக் கல்லூரிதான் இருந்தது. தற்போது மீண்டும் கள்ளர் சீரமைப்புத் துறையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உசிலம்பட்டி, செக்கானூரணி, ஆண்டிப்பட்டி போன்ற பகுதிகளில் 3 தொழில்நுட்பக் கல்லூரிகளை நிறுவி, அவற்றிற்குண்டான அனைத்து வசதிகளையும் செய்து, தற்போது அந்தப் பகுதி மக்கள் நல்ல முறையில் தொழில் கல்வி பயின்று வருகிறார்கள் என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன். இதற்காக, அந்தத் தொகுதி மக்களின் சார்பாக எனது வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களுடைய வளர்ச்சிக்காக மொத்தமாக 1,20,000 ஏக்கர் நிலங்கள் எடுக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தமிழகத்தின் தென் மாவட்டங்களில் தொழிற்பேட்டை அமைக்க வேண்டும் என்ற அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, தென்மாவட்டங்களில் தொழிற்பேட்டையை உருவாக்குவதற்காக கிட்டத்தட்ட 60,000 ஏக்கர் நிலங்களை எடுப்பதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளார்கள்.

பிற்பகல் 1-05

அதுமட்டுமல்ல; உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக வரப்பெறும் 2,42,000 கோடி



ரூபாயில், சரி பாதித் தொகையை தென் மாவட்டங்களில் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, தென் மாவட்ட மக்களுடைய நீண்ட நாள் கனவை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தமிழகம் மின்வெட்டால் பாதிக்கப்பட்டதால், அவர்களை ஆட்சியிலிருந்து மக்கள் அகற்றினார்கள். 2011 ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக ஆட்சிக்கு வந்தபொழுது இங்கே கடுமையான மின்வெட்டு இருந்தது. அந்தக் கடுமையான மின்வெட்டை நீக்கி, இன்று தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றியிருப்பது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தனிப்பட்ட முயற்சி என்பதற்காக நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறையிலே, 6,090 மருத்துவர்கள், 14,707 பணியாளர்கள் இந்த ஐந்தாண்டுகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இந்த ஐந்தாண்டுகளில் கிட்டத்தட்ட 34,042.90 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக அரசு மருத்துவமனைகள் இருக்க வேண்டுமென்ற சிந்தனையோடு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறந்த திட்டங்களை மக்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பதற்காக பெருமையோடு இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதியோர் உதவித் தொகையை ரூ.500/-லிருந்து ரூ.1,000/- ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு சிலருக்கு முதியோர் உதவித் தொகை வழங்குவதை நிறுத்தி வைத்திருந்தார்கள். இப்பொழுது, நிறுத்தி வைக்கப்பட்ட முதியோர் உதவித் தொகை மீண்டும் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், அதிலும் சில பேருக்கு வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதியோர் உதவித் தொகை பெற்று வந்த அனைவருக்கும் நிறுத்தாமல் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எனது உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலத்தில் வனத் துறைக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அந்த இடத்திற்குமேல் திருமங்கலம் பிரதானக் கால்வாய் செல்கிறது. அந்தக் கால்வாயின்கீழ் இருக்கின்ற பகுதிகளில் மக்கள் 60, 70 ஆண்டுகளாக வீடுகட்டி வாழ்ந்து வருகிறார்கள். மதுரை மாவட்டத்தில், வாடிப்பட்டி மற்றும் உசிலம்பட்டி தாலுகாக்கள் இருந்து வருகின்றன. வனத் துறைக்குச் சொந்தமான 5 ஏக்கர் நிலங்களிலே மக்கள் வீடு கட்டி, தெரு விளக்கு, மின் வசதி மற்றும் சாலைகள் அமைத்து வாழ்ந்து வருகிறார்கள். ஏற்கெனவே வீடு கட்டிக் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது. இப்பொழுது மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முயற்சி எடுத்து, 5 ஏக்கர் நிலங்களுக்குப் பதிலாக 10 ஏக்கர் நிலத்தை வனத் துறைக்குக் கொடுத்துவிட்டு, பட்டா வழங்குவதற்கான முயற்சியை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். விரைவிலே அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே பெருங்காமநல்லூர் என்ற கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் 1920 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் கைரேகைச் சட்டம் வைத்திருந்தார்கள். அந்தச் சட்டத்தை அந்தப் பகுதி மக்களெல்லாம் ஒட்டுமொத்தமாக எதிர்த்தார்கள். 1920 ஆம் ஆண்டு, ஏப்ரல் 3 ஆம் தேதி ஆங்கிலேயருடன் நேருக்கு நேராகப் போராடியதில், கிட்டத்தட்ட 16 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஆங்கிலேயர் போட்ட சட்டத்திற்கு அந்த மக்களெல்லாம் எதிர்ப்பு தெரிவித்து, அவர்களை வெளியேறச் செய்ய வேண்டுமென்று போராடியதன் காரணமாக கொல்லப்பட்ட இடத்தில், ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 3 ஆம் தேதி அனைத்துக் கட்சியினரும் பெருங்காமநல்லூரில் தியாகிகள் மறைந்த இடத்திலே மரியாதை செலுத்தி வருகிறார்கள். அந்தப் பகுதி மக்கள், ஏப்ரல் 3 ஆம் தேதியை அரசு விழாவாக அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நீண்ட நாட்களாகக் கேட்டு வருகிறார்கள். அதுமட்டுமல்ல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒவ்வோர் ஆண்டும் பெருங்காமநல்லூரில் தியாகிகள் மறைந்த இடத்தில் மரியாதை செய்வது வழக்கம். ஆனால், அரசு மரியாதை செய்ய வேண்டுமென்று மக்கள் நீண்ட



நாட்களாகக் கோரிக்கை வைத்து வருகிறார்கள். இது சாதாரணமான விஷயம் அல்ல. 1919-ல் பஞ்சாபிலே, ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்ததற்குப் பின், தமிழகத்தில் நடந்த ஒரு பெரிய நிகழ்வு இது. அதிலும் குறிப்பாக, தென் பகுதியிலே 1920 ஆம் ஆண்டு, ஏப்ரல் 3 ஆம் தேதி இதுபோன்ற ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. இதுவொரு பெரிய சம்பவம்; அங்குள்ள மக்களெல்லாம் இந்தச் சம்பவத்தைப் போற்றுகின்ற வகையில், அந்தத் தியாகிகளுக்கு மரியாதை அளிக்கின்ற வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த ஆண்டு, வருகின்ற ஏப்ரல் 3 ஆம் தேதி, அதனை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டுமென்று விரும்புகிறார்கள். எனவே, எனது இந்தக் கோரிக்கையை இந்த நேரத்திலே நான் முன்வைக்கின்றேன்.

பிற்பகல் 1-10

அதேபோன்று, அந்தமானிலே தமிழர்கள் வாழ்கின்றார்கள். அந்தமானில் வாழ்கின்ற மக்களுக்கு சாதிச் சான்றிதழ் கிடையாது, மதச் சான்றிதழ் கிடையாது. அங்கே 1947-க்கு முன்பு வந்தவர்கள், 1947-க்குப் பின்பு அந்தமானுக்கு வந்தவர்கள் என்று குறிப்பிட்டு, சான்றிதழ் வழங்கும் வகையில் அங்கே சட்டம் இருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டிலிருந்து சென்ற மக்கள் நிறைய பேர் அங்கு தங்கியிருக்கின்றார்கள். சொல்லப்போனால், அந்தமானிலே வாழ்கின்ற மொத்த மக்களில், மூன்றில் ஒரு பங்கு, அதாவது 30 சதவிகிதம் அளவிற்குத் தமிழர்கள் அங்கே வாழ்கின்றார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பதற்காக, 1979-ல், அந்தமானிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு தமிழகத்திலே எம்.பி.பி.எஸ். சீட் ஒன்றை ஒதுக்கியிருக்கிறார்கள்; பி.இ. படிப்பதற்கு இரண்டு சீட்டுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன; பி.பார்ம். படிப்பதற்காக இரண்டு சீட்டுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, கால்நடை மருத்துவப் படிப்பிலே இரண்டு சீட்டுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன; பி.எல். படிப்பதற்காக ஒரு சீட் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி சீட்டுகள் ஒதுக்கப்பட்டு, பின்னர் நிறுத்தப்பட்டுவிட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, 2003-லே, அந்தமான் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த துணைத் தலைவர் திரு. ராஜ்மோகன் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைச் சந்தித்து கோரிக்கை

வைத்திருக்கிறார்கள். அப்படி கோரிக்கை வைத்த நேரத்தில், அவர்களுக்குக் கல்வியிலே முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில், பி.இ. படிப்பதற்கு 5 சீட்டும், எம்.பி.ஏ. படிப்பதற்கு ஒரு சீட்டும், எம்.சி.ஏ. படிப்பதற்கு ஒரு சீட்டும் கொடுத்து வந்திருக்கின்றார்கள். ஆனால், 2004-லே அது நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, உலகத்தில் இருக்கின்ற தமிழர்களைப் பாதுகாக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்தமானில் வாழ்கின்ற தமிழர்களையும் பாதுகாத்து, அவர்களுக்கு இந்த உரிமையைக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அத்திக்கடவு-அவினாசி திட்டம், கொங்கு மண்டலத்தில் உள்ள மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. அந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், 1,862 கோடி ரூபாய் செலவில் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், அதற்கான பணிகள் தொடங்கப்படும் என்றும் நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் தொடங்கிட வேண்டுமென்பதுதான் எங்களுடைய ஆசை. அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எய்ம்ஸ் மருத்துவமனை மத்திய அரசால் கொண்டு வரப்படுகிறது. அந்த எய்ம்ஸ் மருத்துவமனையை அமைப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்வதற்காக ஒரு குழு தமிழகத்திற்கு வந்து, 5 இடங்களைப் பார்வையிட்டுச் சென்றிருக்கிறது. அந்த மருத்துவமனையை மதுரையில் அமைக்க வேண்டுமென்று தென் மாவட்ட மக்களெல்லாம் நீண்ட காலமாகக் கோரிக்கை வைத்து வருகிறார்கள். ஏனென்றால், 12 தென் மாவட்டங்கள் அதனால் பயன்பெறும். அதுமட்டுமல்ல; கேரள மாநிலம் பக்கத்தில் இருக்கின்றது. கேரளாவிலிருந்து 3, 4 மணி நேரத்தில் மதுரைக்கு வந்துவிடலாம் என்பதால் அது கேரள மக்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் இருக்கிறது. அதனால் மத்திய அரசால் கொண்டு வரப்படுகின்ற அந்த எய்ம்ஸ் மருத்துவமனையை மதுரையில் அமைத்து, தென் மாவட்ட மக்களுடைய விருப்பத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக பகுதிநேர ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அந்தப் பகுதிநேர ஆசிரியர்கள் வாரத்திற்கு மூன்று நாட்கள் பணிபுரிகிறார்கள். முதலில் அவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் என்று வழங்கப்பட்டு வந்த சம்பளத்தை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 7 ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 16 ஆயிரம் பகுதிநேர ஆசிரியர்கள் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை என்னவென்றால், அவர்கள் வாரத்தில் 5 நாட்களும் வேலை செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். தற்பொழுது அவர்களுக்குக் கொடுக்கும் 7 ஆயிரம் ரூபாயை, 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்தால், அவர்களுடைய வாழ்வாதாரமும் பாதுகாப்பாக இருக்கும் என்பதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களுடைய கோரிக்கையை கனிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

எங்கள் பகுதியிலே 58 கிராம கால்வாய்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த 58 கிராம கால்வாய்த் திட்டம் 1999 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் முடிக்கப்பட்டு, திறக்கப்படும் நிலையில் இருந்து வருகின்றது. அதில், கிட்டத்தட்ட 98 சதவீத பணிகள் முடிந்துவிட்டன. ஆனால், 100 சதவீத பணிகளும் முடிந்தால்தான் திறக்க முடியும். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, விரைந்து முடித்திட வேண்டும். ஏனென்றால், இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு 16 ஆண்டுகள் ஆகின்றன. அந்தக் கால்வாயைத் திறக்க வேண்டும் என்ற அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பணியை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் நேரில் வந்து பார்வையிட்டு, விரைவில் அந்தப் பணிகளை முடித்து கால்வாயைத் திறப்போம் என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இப்பணியை விரைந்து முடித்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி.வி. கதிரவன்] [2016 பிப்ரவரி 19

அதேபோன்று, கடந்த ஐந்தாண்டு காலத்தில் காவேரி நதி நீர்ப் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை ஆகியவற்றை தன் கையில் எடுத்துக் கொண்டு, அந்தப் பிரச்சினைகளை நுட்பமாகக் கையாள வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் வரை சென்று, தமிழகத்தினுடைய நிலையை நிலைநிறுத்தித் தந்தவர் நமது மரியாதைக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதுமட்டுமல்லாமல், முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்துவது என்பது சாதாரண விஷயம் அல்ல. அது ஐந்து மாவட்ட மக்களின் ஜீவாதார உரிமை. அந்த உரிமையைப் பெற்றுத் தந்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குத் திட்டம் 2023-ஐக் கொண்டு வந்து, விவசாயத் துறையில் 2 மடங்கு உற்பத்தி, 3 மடங்கு வருமானம் என்ற நல்ல திட்டத்தைக் கொண்டு வந்து, இன்றையதினம் இந்தியாவிலேயே வேளாண்மை உற்பத்தியில் தமிழகம் சிறந்த மாநிலம் என்று மத்திய அரசால் பாராட்டப்பட்டு, விருதுகளைப் பெற்றிருக்கின்ற நிலையை உருவாக்கியிருக்கிறார். அதற்காக இந்த நேரத்தில் நான் பாராட்ட விரும்புகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக மக்களுடைய உரிமைகளையும், தமிழகத்தின் கடைசி மட்டத் தொண்டனுடைய நிலைமைகளையும் புரிந்து கொண்டு செயல்படுவதில் அவருக்கு நிகர் அவரேதான் என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட நிலையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி மீண்டும் தமிழகத்தில் தொடர வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, வரவேற்று, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2011-ல், ஆட்சிப்



2016 பிப்ரவரி 19] [திரு. உ. தனியரசு]

பொறுப்பேற்ற காலத்திலிருந்து நாட்டு மக்களுக்குத் தந்த வாக்குறுதிகளையெல்லாம் தங்கு தடையில்லாமல் விரைந்து நிறைவேற்றி, நாட்டு மக்களுடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற மகத்தான மக்கள் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த இறுதி நிதிநிலை அறிக்கையில் நாட்டு மக்களுக்காகச் செய்திருக்கின்ற அளப்பரிய சாதனைகளையெல்லாம் பட்டியலிட்டிருப்பதோடு, அதனால் மக்கள் தங்கள் வாழ்வில் பெற்றிருக்கின்ற வசதி வாய்ப்புகள் குறித்தும், அதை உறுதி செய்திருக்கின்ற ஏராளமான திட்டங்கள் குறித்தும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக மாற்றுவது குறித்ததாகும். நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தால், அதை விரைந்து செய்வோம் என்று சொன்னார்கள். 2006-லே தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விட்டுச் சென்ற நிலையில், 2006 முதல் 2011 வரையுள்ள ஐந்தாண்டுக் காலத்தில் முந்தைய அரசு மின்சாரத் துறையை மிக நெருக்கடியான நிலையில் வைத்து, ஒளிமயமாக இருந்த தமிழ்நாட்டை இருண்ட மாநிலமாக மாற்றி வைத்திருந்தது. 2011-ல் மீண்டும் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததிலிருந்து, சுமார் 7,500 கி.மீ. அளவிற்கு உயர் மின்னழுத்தக் கம்பி வழித்தடத்தை உருவாக்கியும், 10,000 கோடி ரூபாய் செலவில் ஏறத்தாழ 252 துணை மின் நிலையங்களை உருவாக்கியும், அமெரிக்காவைப்போல், ஐரோப்பாவைப்போல், மின் தடையே இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த வகையில் தமிழகத்தை மின்மிகை மாநிலமாக உருப்பெறச் செய்ததிலே, உயர்வடையச் செய்ததிலே மகத்தான சாதனையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1-20

நமது அரசு பொறுப்பேற்ற பிறகுதான் காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை அரசிதழிலே வெளியிடச் செய்து சாதனை படைத்திருக்கிறது. தமிழ்நாட்டினுடைய ஜீவ நதியாக இருக்கிற, பாசனத்திற்கும், குடிநீருக்கும் மிகுந்த ஆதாரமாக இருக்கிற காவேரி ஆற்று நீர் உரிமையை மீட்டெடுத்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. அதுபோன்று, மீனவர்களுடைய உயிரைப் பாதுகாத்து, உடைமையைப் பாதுகாத்து இந்தியாவில் அல்ல, உலகத்தில் வேறு எந்த இடத்திலும்

நம்முடைய தமிழக மீனவர்கள் இன்னல்களுக்கு ஆளானால், அவர்களையும் மீட்டெடுத்து, உரிய உதவிகளைச் செய்து அவர்களது படகுகள் உள்ளிட்ட உடைமைகள் சேதமடைந்திருந்தால்கூட, அனைத்துச் செலவுகளையும் ஏற்று, படகுகளையும் புனரமைப்பதற்கு மட்டுமல்லாமல், புதிய படகுகளைப் பெறுவதற்கும் மானியத்தோடு கடன் தந்து, மீனவர்களுடைய, மீனவ சமுதாயத்தினுடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற அரசாக, அளப்பரிய திட்டங்களைத் தந்திருக்கிறது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு.

இலங்கைத் தமிழ் மக்கள் தங்களது நீண்டகால அரசியல் உரிமைகளுக்காக தொடர்ந்து பாடுபடுவதை ஆதரித்து, அங்கீகரித்து, உலகம் முழுக்க பரவி வாழ்கிற தமிழ்ச் சமுதாயத்தினுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதிலே சமரசம் இல்லாமல் குரல் கொடுத்து, போராடி வருகிற அரசு இந்த அரசு. இனப்படுகொலை செய்த ஆட்சியாளர்கள்மீது சர்வதேச நீதிமன்றத்தின்மூலம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிற அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு.

இந்தியாவிலே உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை உறுதி செய்ய வேண்டும் என்கிற தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தில் வருவதற்கு முன்பாகவே, இந்தியாவிலேயே, உணவுப் பாதுகாப்பை தமிழ்நாட்டில் உறுதி செய்திருப்பவர் தமிழ்நாட்டினுடைய ஒப்பற்ற முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். தமிழன் யாரும், எவரிடத்திலும் உணவு கேட்பதோ அல்லது எனக்குப் பசிக்கிறது என்றோ கையேந்தி நிற்கக் கூடாது என்பதற்காக 20 கிலோ அரிசியை விலையில்லாமல் தந்து, உணவுப் பஞ்சமே இல்லாத அளவிற்கு, எவரும் பசிக்கிறது என்று சொல்ல முடியாத அளவிற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று அன்றைக்கு பாரதி சொன்னான். பாரதியினுடைய அந்த வரிகளுக்கு இப்பொழுது வாய்ப்பில்லாமல் செய்து உலகத்தின் பூகோளப் பந்தில் ஓர் அரசு நடக்கிறது என்றால், அது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஒரே அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்று, கிராமப்புறங்களிலே வேளாண்மைத் துறைக்கு எண்ணற்ற சலுகைகளைத் தந்திருக்கிற அரசு இந்த அரசு. இன்னமும்



கடைநிலையில் இருக்கிற வேளாண் பெருங்குடி மக்கள் மற்றும் தொழிலாளர்கள், கிராமப்புறங்களிலே அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கு 230 கோடி ரூபாய் செலவில் 60,000 கறவை மாடுகளைத் தந்த அரசு இந்த அரசு; பசுவைப் போல் மென்மையான அரசு. பசுவைப் போல் நன்மையையே செய்கிற ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வரசு 60 ஆயிரம் கறவை மாடுகளைத் தந்து அழகு பார்த்தது. 28 இலட்சம் தாய்மார்கள் கிராமப்புறத்திலே வளர்த்து பயன்பெறுவதற்கு சுமார் ஆயிரம் கோடி ரூபாயில் 28 இலட்சம் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளை, அவர்களது குடும்பத்துச் சொத்தாகத் தந்து உதவியிருப்பதோடு, கிராமப் பொருளாதாரத்தை மீட்டெடுக்க, கடைசி மனிதனும் நம்பிக்கையோடு வாழ வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித் தந்திருக்கிற ஒரே தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான்.

அதுபோன்று வேளாண் துறையைச் சார்ந்திருக்கிற கால்நடை பராமரிப்புத் துறையிலே, இதுவரையில் இல்லாத அளவிற்கு எண்ணற்ற கால்நடை கிளை மருந்தகங்களை தமிழ்நாட்டினுடைய பல பகுதிகளிலே தொடங்கியிருக்கிறார்கள். எப்படி மனிதன் சுகாதாரமாக, ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்று கருதி, அவர்களுக்குத் திட்டங்களை தருகிறோமோ, அதைப்போன்று தமிழ்நாட்டில் வாழ்கிற ஆடு, மாடு, கோழி உள்ளிட்ட கால்நடைகள்கூட யானை, மான், சிங்கம், புலி, சிறுத்தை, கரடிகள் பறவைகள்கூட மகிழ்ந்து வாழ, ஆரோக்கியத்தோடு வாழ, திட்டம் தந்த ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் தொகுதியிலே, வில்லிபுரம் என்கிற சிற்றூரிலே, சுதந்திரம் பெற்று 60 ஆண்டுக் காலம் ஆன நிலையில், கிராமப்புற விவசாயிகளின் ஆடு, மாடுகளை ஏதாவது நோய் தாக்கினால், உடனடியாக கால்நடை மருத்துவரை அணுகி, மருந்து பெற இயலாத சூழ்நிலை இருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இதுகுறித்து அந்தக் கிராமப்புறப் பகுதி மக்கள் என்னிடத்திலே மனு செய்தபொழுது, அதை நம்முடைய மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. சின்னையா அவர்களிடத்தில் சொன்னேன். ஒரு மாத காலத்திலேயே, இரண்டு நாட்களுக்கு

முன்பு வில்லிபுரத்திலே கால்நடை கிளை மருந்தகத்தைத் தந்து, அந்தப் பகுதியிலுள்ள ஒட்டுமொத்த மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றியிருக்கிற அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும், பறவைகளுக்கும் அனைத்திற்கும் தொடர்ந்து நல்லதையே செய்து வருகிற அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு.

*பிற்பகல் 1-25*

இதுவரையில் வேறு எப்போதும் இல்லாத அளவிற்கு, வரலாறு காணாத அளவிற்கு சுகாதாரத் துறையில் 6,000 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கள் நாமக்கல் மாவட்டத்தில் ஆய்வுக் கூட்டத்தின்போது நாங்களும், மாண்புமிகுத் தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் பெருமானாரும் சொன்னோம். இப்பொழுது சட்டமன்றப் பேரவையிலே, இங்கு சொல்வது மட்டுமல்ல.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

தனியார் மருத்துவமனைக்கு இணையாக, மக்களுக்கு மருத்துவ சேவையை ஆற்ற வேண்டும் என்று இங்கு மட்டுமல்ல; மருத்துவர்களோடு, மருத்துவப் பணியாளர்களோடு, அதிகாரி பெருமக்களோடு சேர்ந்து ஒவ்வொரு மனிதனுடைய ஆரோக்கியத்தையும், நல்வாழ்வையும் உறுதி செய்வதற்கு அரசினுடைய திட்டங்களையெல்லாம் பட்டியலிட்டு, ஆய்வுக் கூட்டத்தை நடத்தினோம். அந்த ஆய்வுக் கூட்டத்தில் தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக அரசாங்க மருத்துவமனைகள் செயல்பட வேண்டும் என்பதை உறுதி செய்வதுதான் இந்த அரசினுடைய நோக்கம் என்பதைத் திரும்பத் திரும்பச் சொன்னோம். தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக எல்லா வசதிகளையும் செய்து, நோய்வாய்ப்பட்ட அனைவருக்கும் உடனடியாக தாமதமில்லாமல் சிகிச்சை வழங்குகிற மக்கள்மீது, மக்களின் நல்வாழ்வுமீது அக்கறை கொண்டிருக்கிற மகத்தான அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு என்பதற்குச் சான்றாக அந்தச் செய்தி இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, சுற்றுச்சூழல் துறையில், பொது சுத்திகரிப்பு நிலையம் குறித்து ஒரு சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன். உலக அளவில்,



ஆயத்த ஆடைத் துறையிலே, உற்பத்தியில் மிகுந்த வலிமையுள்ள பகுதியாக கொங்கு மண்டலம் விளங்குகின்றது. ஈரோடு, சேலம், நாமக்கல், கரூர், திருப்பூர், கோவை போன்ற பகுதிகளில் முந்தைய ஆட்சியிலே பொது சுத்திகரிப்பு நிலையங்கள் கிடையாது. 'மாசு ஏற்படுகிறது' என்ற குற்றச்சாட்டால், உயர் நீதிமன்றம் ஒரே உத்தரவில் சுமார் 1,000 சாய ஆலைகளை மூடியபொழுது, பல்வேறு நிறுவனங்கள் மூடப்பட்டு, இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து செய்வதறியாமல் திகைத்தபோது, அந்த நிலையை மாற்றிட, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன், பொது சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்திட 200 கோடி ரூபாய் நிதியைத் தந்து, இன்று 25 இலட்சம் மக்கள் மகிழ்ந்து தொழில் செய்யவும், வாழவும், வாய்ப்பை உருவாக்கியவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தற்போது நாமக்கல், ஈரோடு, கரூர் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள சாய மற்றும் சலவை ஆலைகளுக்கு, பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க, ஏறத்தாழ 700 கோடி ரூபாய் தந்திருப்பதோடு, மேற்கு மண்டலம் தொழில் துறையிலே, ஜவுளி உற்பத்தித் துறையிலே செழித்து வளர, நீண்ட காலத் திட்டங்களுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏராளமான நிதியைத் தந்திருக்கிறார்கள். அந்த வகையில், தொழில் செழிக்க, தொழிலாளர்கள் நலன் காக்க, மாண்புமிகு அம்மா அவர்கள் அயராது தொண்டாற்றி வருகின்றார்கள்.

அடுத்து, உயர் கல்வித் துறை. உயர் கல்வி கற்போரின் எண்ணிக்கை 18 விழுக்காடாக முந்தைய ஆட்சியில் இருந்தது. இப்போது 44 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது. இதற்குக் காரணம், கல்வித் துறையிலே மாணவச் செல்வங்களுக்கு அளப்பரிய ஊக்கப் பரிசுகள், ஊக்க உதவித் தொகைகளைத் தந்திருப்பதுதான். இந்தியாவிலேயே, 44 சதவிகிதம் உயர் கல்வி பெறுகின்ற மாணவர்கள், நம்முடைய அன்னை தாய் தமிழ் மாணவச் செல்வங்கள் என்ற நிலைமையை உருவாக்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஒரு கோடியே 76 இலட்சம் குடும்பங்களுக்கு மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி கொடுப்பது எப்படி சாத்தியமாயிற்று? அப்படிப்பட்ட திட்டங்களைத் தர முடியுமென்று யாருமே எதிர்பார்க்கவில்லை. ஒரு கோடியே 76 இலட்சம் குடும்பங்களுக்கு சுமார் 7,500 கோடி ரூபாய் செலவில் பொருட்களைத் தந்து, தந்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறார். அனைத்துக் குடும்பத்திற்கும் தடையில்லாமல், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும்,

அதிகாரிகளும் கிராமம், கிராமமாய், வீடு வீடாய்ச் சென்று, இல்லத்துத் தாய்மார்களுடைய பணிச் சுமையைத் தீர்ப்பதற்கு, குறைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்புப் பரிசாய், குடும்பப் பரிசாய், மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி போன்றவற்றை அவை இல்லாத வீடேயில்லை என்ற அளவில் தந்துள்ளார்கள். கிரைண்டர், மாவை அவ்வளவு அழகாக அரைக்கின்றது. தேங்காய் எவ்வளவு போட்டாலும் அழகாக அரைக்கின்ற மிக்ஸி. எந்த அரிசியைப் போட்டாலும் நெகு நெகுவென்று அரைக்கின்ற கிரைண்டர். காற்றே இல்லை என்றாலும், மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த மின்விசிறியில், ஏ.சி.யில் காற்று வருகின்ற மாதிரி காற்று வருகிறது. தரமான பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த மூன்று பொருட்களும் ஏழைத் தாய்மார்களின் இல்லங்களில் கஷ்டத்தை, கண்ணீரை, துன்பத்தைக் குறைக்கின்றன. அப்படிப்பட்ட மகத்தான திட்டத்தைத் தந்திருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அடுத்து, போக்குவரத்துத் துறையின் சீரழிந்து கிடந்த நிலையை, நலிவடைந்த நிலையை, ஊதியமே தரமுடியாத நிலையை மாற்றி, இலட்சக்கணக்கான பணியாளர்களை நியமித்து, பல கோடிக்கணக்கான ரூபாயை அள்ளித் தந்து, தமிழ்நாட்டு மக்கள் மூலை முடுக்கெல்லாம் தங்கு தடையில்லாமல், தாமதம் இல்லாமல் பயணம் செய்வதற்கு, அதிலும் பள்ளிக் குழந்தைகள் பயணம் செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். அதேபோன்று, மாண்புமிகு அம்மா அவர்கள், தனது பிறந்த நாள் பரிசாக நேற்று மூத்த குடிமக்கள் கட்டணம் இல்லாமல் பயணம் செய்யலாம் என அறிவித்து, மிகப் பெரும்பான்மையான அளவில் பொதுமக்கள் பயணம் செய்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களான நாங்கள் எல்லாம்கூட கட்டணமில்லாமல் பயணம் செய்கின்ற அரசுப் பேருந்துகள் அவ்வளவு தரமாக இருக்கின்றன. தரமான பணியாளர்களைக்கொண்டு, சிறப்பான நிருவாகத்தை அளித்து, திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

*பிற்பகல் 1-30*

வருவாய்த் துறையில் மறுமலர்ச்சி. 10,000 இ-சேவை மையங்கள். இதுவரை இலக்கு நிர்ணயித்ததைவிட, 5 இலட்சம், 6 இலட்சம்



என வீட்டுமனைப் பட்டாக்களைத் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோன்று, அவினாசி-அத்திக்கடவு திட்டத்தைப் பொறுத்தவரை, கொங்கு மண்டலத்திலுள்ள மக்களுடைய கோரிக்கைகளை ஏற்று, திருத்தப்பட்ட அந்த மறு ஆய்வறிக்கையைத் தந்து, திட்டம் நிறைவேற உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற அறிவிப்பைத் தந்திருக்கிறார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோன்று 3 இலட்சம் பசுமை வீடுகள்; குடிசைகளில், தெருவோரங்களிலே குடியிருந்தவர்கள், குடிசை வீடுகளிலே வாழ்க்கையை வசந்தமாக்கிக்கொள்ள முயன்று தோற்றுப்போன ஏழைகள் சுமார் 3 இலட்சம் பேருக்கு இந்த அரசின் மூலமாக பசுமை வீடுகளைக் கட்டிக் கொடுத்து, அவ்வளவு மகிழ்வோடு பணக்காரர்களைப்போல வாழ்வதற்கு வாய்ப்பைத் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

10,000 நெசவாளர் பசுமை வீடுகள். ஊராட்சிகளில் மட்டும்தான் பசுமை வீடுகள் என்ற நிலை இருந்தது. பேரூராட்சியையொட்டி ஊராட்சி இருக்கும். அந்த ஊராட்சியில் இருக்கிறவர்கள் பசுமை வீடுகளால் பயன் பெறுவதற்கு அந்தப் பயனாளி தகுதியுடையவராக இருப்பார். பேரூராட்சியிலிருக்கிற குடிசை வீட்டில் இருப்பவருக்கு அந்த வாய்ப்பில்லாமல் இருந்தது. அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உணர்ந்து பேரூராட்சிகளுக்கும் அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி, பேரூராட்சியிலும் 20,000 பசுமை வீடுகளைக் கட்டித் தர ஆணை பிறப்பித்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதேபோன்று, முதியோர் உதவித் தொகையை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தித் தந்தது. மீத்தேன், கெயில் போன்ற திட்டங்களுக்கு மக்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் வந்தபோதும், அந்தத் திட்டங்களையெல்லாம் மக்களின் பக்கம் நின்று மக்களுக்கு ஆறுதலாய், ஆதரவாய் இருந்த மக்கள் அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. அப்படி நாடு முழுக்க தொடர்ந்து மக்களின் பேராதரவைப் பெற்று மக்களுக்காக திட்டங்களைத் தந்த முன்மாதிரி அரசாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இருக்கிறது. இந்தியாவிலேயே 25,000 போராட்டங்களை அனுமதித்த அரசு. இடதுசாரிகள் ஆட்சி செய்கிற மேற்கு வங்காளத்திலே

அப்படியில்லை; திரிபுராவிலே இல்லை. ஜனநாயகம் குறித்துப் பேசுகிற பாரதிய ஜனதா கட்சியோ, காங்கிரஸ் கட்சியோ இன்னும் பிற கட்சிகள் ஆளுகிற எந்த மாநிலத்திலும் போராட்டங்களுக்கு அனுமதி தருவது குறைவாக இருக்கிற நிலையில், அன்னைத் தமிழகத்திலேதான் இவ்வளவு மக்கள் நலத் திட்டங்களைத் தந்து, மக்களுக்காகவே இயங்குகின்ற ஒரு மகத்தான மக்கள் அரசாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இருக்கிறது. குறைகளை, கோரிக்கைகளை வைப்பதற்கு ஜனநாயகத்திலே உரிமையிருந்தாலும், அந்த உரிமைகளுக்கான போராட்டங்களுக்கு தடையில்லாமல் வாய்ப்பையும், அனுமதியையும் தந்து, அழகு பார்த்து, ஜனநாயகத்தை, சுதந்திரத்தை, மக்களாட்சியின் மணிமகுடமும், மாண்பும் செழித்து வளரவும், அதனை ஆதரிக்கிற ஜனநாயக அரசாகவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விளங்குகிறது. இப்படி கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றி, இனி கோரிக்கை வைப்பதற்கு எதுவுமே இல்லாத நிலையிலேதான், அரசு ஊழியர்களுடைய கோரிக்கைகளையும் மிகக் கனிவோடு, அக்கறையோடு அணுகி, மூன்றாயிரத்திற்கும் மேற்பட்ட கல்லூரி விரிவுரையாளர்களுக்கு 10,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக அவர்களுடைய மாத மதிப்பூதியத்தை உயர்த்தித் தந்திருக்கிறார்.

அதுபோன்று, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களின் ஓய்வூதியத்தை 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்த்தித் தந்த பெருமையுள்ள அரசு. அரசுப் பணியிலிருக்கிற 20 இலட்சம் குடும்பங்கள் நெஞ்சமெல்லாம் நிறைகின்ற, மகிழ்கின்ற வகையிலே ஓய்வூதியம் குறித்து இன்று விதி 110-ன்கீழ் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அறிவித்திருக்கிறது. நாட்டுமக்களுடைய வளர்ச்சிக்கும், அவர்களுடைய வசதிக்குமான திட்டங்களை பாகுபாடில்லாமல் தரக்கூடியதாக 2016-2017 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை மக்களினுடைய வரவேற்பையும், மிகுந்த நன்மதிப்பையும் பெற்றிருப்பதனால் என் சார்பாக இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, பாராட்டி, வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு நேரம் பேசுவதற்கு அனுமதி தந்த மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவருக்கு மீண்டும் மீண்டும் நன்றி தெரிவித்து, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள். நல்லபடியாகப் பேசுங்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2016-2017 ஆம் ஆண்டு இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீதும், அதேபோல, 2011 ஆம் ஆண்டு துவங்கி கடந்த 5 ஆண்டுகாலமாக நடைபெற்ற கூட்டத் தொடரினுடைய நிறைவு நாளான இன்றும் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

கடந்த 5 வருடங்களில் பல்வேறுவிதமான கருத்துகளை, அது என்னை வெற்றி பெறவைத்த ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியாக இருந்தாலும் சரி, தமிழகத்திலே வாழ்கின்ற எண்ணற்ற விவசாயப் பெருமக்கள், தொழிலாளர்கள், வணிகப் பெருமக்கள், சிறு முதலாளிகள், அரசு ஊழியர்கள் என்று அனைத்துத் தரப்பு மக்களுக்காகவும் குரல் எழுப்புவதற்கும், அதேபோல, கடல் கடந்து வாழ்கின்ற தமிழ் மக்கள், ஈழத்தமிழ் மக்கள், அவர்களுக்கெல்லாம் இன்னல் ஏற்பட்டபொழுது அவர்களுக்காகவும் குரல் கொடுப்பதற்கு, இந்தச் சட்டமன்றத்திலே வாய்ப்புகள் ஏற்பட்டபொழுதெல்லாம் என்னால் பல கருத்துகளை பதிவு செய்ய முடிந்தது. குறிப்பாக, 3 தமிழர்கள், சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டபொழுது அவர்களைக் காப்பாற்ற முடியுமா என்ற ஒரு சூழ்நிலை எழுந்தபொழுது அதற்காக அனைத்துக் கட்சிகளும் குரல் கொடுத்தன. தமிழக சட்டமன்றத்திலே ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதிலே புதிய தமிழகம் கட்சியின் சார்பாக, ஆக்கப்பூர்வமான நிலைப்பாட்டை எடுத்து, அவர்களைக் காப்பாற்றுவதற்குண்டான முயற்சிகளை எடுத்ததுதான் இந்த 5 ஆண்டுகாலத்தில், என்னைப் பொறுத்தமட்டிலும், இந்தச் சட்டமன்றத்திலே ஒரு மனநிறைவான விஷயமாக நான் கருதுகிறேன். தனிப்பட்ட முறையிலே நான் பல்வேறு கோரிக்கைகளை வைத்தேன். ஆனால், அந்தக் கோரிக்கைகள் எல்லாம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. நிச்சயமாக எதிர்காலத்திலே அதற்குண்டான வாய்ப்புகள் அமையுமென்ற வகையிலே, அமைய வேண்டுமென்ற வகையிலே மீண்டும் இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஒன்று, 6 பிரிவுகளை, அதாவது பட்டியலினத்தில் இருக்கக்கூடிய 6 பிரிவு மக்களை ஒருங்கிணைத்து, தேவேந்திர குல வேளாளர் என்று ஒரே பெயரிலே அழைத்திடுவதற்கு அரசாணை பிறப்பிக்க வேண்டுமென்று கடந்த 5 ஆண்டு காலமாக நான் வலியுறுத்தாத சட்டமன்றக் கூட்டத்தொடரே இல்லை என்பதுதான் யதார்த்தம். ஆனால், அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதேபோல, தியாகி இமானுவேல் சேகரன் அவர்களுடைய பிறந்த நாள், நினைவு நாளை அரசு விழாவாக அறிவிக்க வேண்டும். (குறுக்கீடு) குறுக்கீடு செய்யாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், குடும்பன், பண்ணாடி, காலாடி, கடையன், தேவேந்திர குலத்தான், பள்ளன் மற்றும் வாதிரியான் ஆகிய உட்பிரிவினை தேவேந்திர குல வேளாளர் என்ற ஒரே இனமாக ஆணையிடக் கோரியுள்ளார். இதுகுறித்து, தமிழ்நாடு வாதிரியார் மகாஜன சங்கம், தங்களது வாதிரியான் இனத்தை தேவேந்திர குல வேளாளர் என்ற புதிய பெயர் மாற்றத்தில் இணைக்க வேண்டாம் என்று அரசுக்குக் கோரிக்கை வைத்துள்ளது. மேலும், திரு. சிவபிரகாஷ் என்பவர், தேவேந்திர குலத்தான் உட்பிரிவுகள் அனைத்தையும் இணைத்து மல்லர் என பெயர் மாற்றம் செய்யுமாறு கோரிக்கை வைத்துள்ளார். மேலும், தமிழ்நாடு வ.உ.சி. நலப் பேரவையானது குடும்பன், பண்ணாடி, காலாடி, கடையன், பள்ளன், வாதிரியான் மற்றும் தேவேந்திர குலத்தான் ஆகிய 7 பிரிவுகளை வேளாளன் என்ற பிரிவில் சேர்க்க எதிர்ப்பு தெரிவித்துள்ளது. எனவே, குடும்பன், பண்ணாடி, காலாடி, கடையன், தேவேந்திர குலத்தான், பள்ளன் மற்றும் வாதிரியான் ஆகிய 7 இனத்தவர்களை தேவேந்திர குல வேளாளர் எனப் பெயர் மாற்றம் செய்வது தொடர்பான கோரிக்கை அரசால் ஏற்கப்படவில்லை. மேலும், இதுதொடர்பாக, திரு. சிவக்குமார், தலைவர், தமிழ்நாடு தேவேந்திர குல வேளாளர் உறவின் முறைச் சங்கம் அவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் குடும்பன், பண்ணாடி, காலாடி, கடையன், தேவேந்திர குலத்தான், பள்ளன் மற்றும் வாதிரியான் ஆகிய 7 இனத்தவர்களை தேவேந்திர



குல வேளாளர் எனப் பெயர் மாற்றம் செய்யக் கோரி தொடர்ந்த நீதிமன்ற வழக்கு எண் 19266/2015 நிலுவையிலுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல, தியாகி இமானுவேல் சேகரன் அவர்களுடைய பிறந்த நாள், நினைவு நாளை அரசு விழாவாக அறிவிக்க வேண்டுமென்று நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். அதுவும் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது.

பிற்பகல் 1-40

அதேபோல, மதுரை விமான நிலையத்திற்கு தியாகி இமானுவேல் சேகரன் எனப் பெயர் சூட்டப்பட வேண்டும். உள் இட ஒதுக்கீட்டில் இருக்கக்கூடிய குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும். கடந்த 4 ஆண்டு காலமாக தமிழகத்திலே அதிகரித்து வரக்கூடிய கௌரவக் கொலைகளைத் தடுப்பதற்கு தனிச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் இன்னும் அப்படியே நிலுவையில் இருக்கின்றன. அவை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே புதிய தமிழகம் கட்சியினுடைய கருத்து என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 5 ஆண்டுக் காலத்தில் தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளில் சாதிய வன்கொடுமைகளால் பலர் உயிரிழந்திருக்கிறார்கள். 1989 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்டோர் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படியும், அண்மையில் மத்திய அரசால் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய திருத்தச் சட்டத்தின்படியும், யார் இந்த சாதிய வன்கொடுமைகளுக்கு இலக்காகிறார்களோ, அவருடைய குடும்பத்தார் ஒருவருக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்பது அதிலே இருக்கக்கூடிய விதி. இதைத்தான் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையும் அண்மையிலே ஒரு தீர்ப்பிலே கூறி இருக்கிறது. எனவே,

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2016 பிப்ரவரி 19

இதையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேபோல, தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலும், சமூக நீதியை அடிப்படையாக வைத்துத்தான் கல்வி நிறுவனமாக இருந்தாலும் சரி, வேறு எந்தத் துறையாக இருந்தாலும் சரி, வேலைவாய்ப்பை வழங்குகிறோம். இப்பொழுது அரசினுடைய எழுத்தர் பதவியிலேகூட இட ஒதுக்கீட்டை வழங்கி வருகிறோம். ஆனால், உயர் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், அதேபோல கீழமை நீதிமன்றங்களில் மற்றும் அரசின் பிற துறைகளில் அரசு வழக்கறிஞர்களை நியமிக்கின்றபொழுது, அதிலேயும் இட ஒதுக்கீட்டை, சமூக நீதியைக் கடைப்பிடிக்காத ஒரு நிலை இருந்து வருகிறது. அரசு வழக்கறிஞர்கள்-Government Pleaders என்று அரசால் நியமனம் செய்யக்கூடிய நியமனப் பதவிகளிலும் சமூக நீதியை நிலைநாட்டுவதுதான் சரியாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

அரசு தேர்வாணைய உறுப்பினர்களின் பணியிடங்களிலும், P.R.O., A.P.R.O. என்று சொல்லக்கூடிய மக்கள் தொடர்பு அலுவலர்கள், சட்டமன்றத்திலும், ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், ஒவ்வொரு துறையிலும், வாரியங்களிலும் இருக்கிறார்கள். Vice Chancellors-துணை வேந்தர்களை நியமனம் செய்கின்றபொழுதும், பதிவாளர்களை நியமனம் செய்கின்றபொழுதும் இவையெல்லாம் அரசு பார்த்து நியமனம் செய்யக்கூடிய பதவிகள் என்பதை மனதில் வைத்து, இப்பதவிகளில் ஒட்டுமொத்தப் பதவிகள் எத்தனை என்பதைக் கணக்கிலே வைத்து, 69 சதவிகித இட ஒதுக்கீட்டை அமலாக்க வேண்டும். அப்போதுதான், நம்முடைய நிதிநிலை அறிக்கையில் பலமுறை முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல inclusive, அதாவது எல்லோரையும் உள்ளடக்கிய அரசு நிருவாகம் என்று சொல்ல முடியும். அனைத்துத் தரப்பினருக்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய மிக முக்கியமான வேண்டுகோள். இந்த வேண்டுகோள்களை நிச்சயமாக நிறைவேற்றக்கூடிய சூழ்நிலைகள் உருவாகும் என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, இப்பொழுது இரண்டே இரண்டு முக்கியமான கோரிக்கைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

அண்மையிலே தூத்துக்குடி மாவட்டத்திலே மிகப் பெரிய வெள்ளம் ஏற்பட்டது. பலருக்கு நிவாரணங்கள்



2016 பிப்ரவரி 19] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

சென்றடைந்திருக்கின்றன. ஆனால், அந்தோணியாபுரம், திரவியபுரம், சோரிஸ்புரம், அய்யனடைப்பு போன்ற எண்ணற்ற பகுதிகளில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் 60-லிருந்து 70 வீடுகள் முற்றாக இடிந்துபோய்விட்டன. ஒரு வீட்டை மீண்டும் கட்ட வேண்டும் என்று சொன்னால், குறைந்தது 5 இலட்சம் ரூபாயாவது தேவைப்படுகிறது. அதேபோல, தமிழ்நாடு அரசால், மத்திய அரசினுடைய நிதியுதவியுடன் கட்டப்பட்டிருக்கிற ஏறக்குறைய 15 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் தொகுப்பு வீடுகளில் குடியிருப்போர் அடுத்த மழைக்கு அங்கே குடியிருக்க முடியாது. எனவே, இந்த வீடுகளை இப்பொழுதே பழுதுபார்க்க வேண்டும். இல்லை என்று சொன்னால், வேறு வீடுகள் கட்டித் தரப்பட வேண்டும். இதற்காக இதுவரையிலும் எந்தவிதமான நிதியும் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சென்றடையவில்லை. வெள்ள நிவாரணத்திற்கு ஏற்கெனவே தமிழக அரசு 500 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது, மத்திய அரசு 1,750 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. எனவே, இந்நிதியிலிருந்து நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். வெறும் 5,000/- ரூபாயை நீங்கள் இடைக்கால நிவாரணமாகக் கொடுத்திருக்கிறீர்கள். அதையெல்லாம் நான் மறுக்கவில்லை. அதெல்லாம் போய்ச் சேர்ந்திருக்கும், அதுகுறித்த dispute-க்கு நான் வரவில்லை. ஆனால், முற்றாக வீடு இடிந்து போனவர்கள். . .

பிற்பகல் 1-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் வட கிழக்குப் பருவமழை காலத்தில் 4 மனித உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. நிவாரணத் தொகையாக 4 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 16 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. முழுவதும் சேதமடைந்த குடிசைகள் 621, பகுதியாக சேதமடைந்தவை 2,672. இவற்றிற்கு நிவாரணத் தொகையாக தலா ரூபாய் 5,000/- வழங்கப்பட்டுள்ளது. 116 கால்நடைகள் இழப்பிற்கு 33 பயனாளிகளுக்கு ரூபாய் 2.36 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. வீடுகளுக்குள் நீர் புகுந்ததால் பாதிக்கப்பட்டதற்கான நிவாரணமாக 22,220 குடியிருப்புகளுக்கு தலா ரூபாய் 5,000/- நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. 6,991 எக்டேர்

பயிர்ச் சேதத்திற்கு தோட்டக்கலைத் துறை மூலமாக ரூபாய் 7.69 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. 9,527 எக்டேர் பயிர் இழப்பிற்காக, வேளாண்மைத் துறையில் 7.06 கோடி ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. வெள்ளத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்ட 1,228 பள்ளி மாணவர்களுக்கு பாட நூல்கள், 1,169 மாணவர்களுக்குப் பாட குறிப்பேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவை தவிர, பாதிக்கப்பட்டவர்கள் யாரேனும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போவாரேயானால், அவற்றையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலித்து, அவர்களுக்கும் நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யாருக்கும் போய்ச் சேரவில்லை என்று நான் சொல்லவில்லை. வீட்டை முழுமையாக இழந்தவர்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

அடுத்து, தொகுப்பு வீடுகள், அத்தனையிலும் நீர்கசிய ஆரம்பித்துவிட்டன. இன்னும் ஒரு மழை வந்தால், முழுவதுமாகப் போய்விடும். உதாரணத்திற்கு, பேரூரணி என்கின்ற இடத்தில் 110 ஊனமுற்றவர்களின் வீடுகள் இருக்கின்றன. 110 வீடுகளும் எப்போது இடிந்து விழுமோ என்கின்ற சூழ்நிலையில் இருக்கின்றன. இவற்றையெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் அளவிலோ அல்லது வேறு ஏதாவது குழுவை அமைத்தோ உண்மைநிலை என்ன என்பதைப் பார்த்து நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். ஆனால், வீடு இழந்தவர்களில் பலபேர் எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கூடுதலான நிதி ஆதாரத்தை கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும். மத்தியக் குழு வந்தபொழுது, அவர்களெல்லாம் தடுத்துக் கேட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். எனவே, முற்றிலும் வீடு இடிந்து போனவர்களுக்குக் கூடுதலான நிதி வழங்க வேண்டும் அல்லது அரசினுடைய வேறு



ஏதாவது திட்டத்தின்கீழ் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, ஒட்டப்பிடாரம், விளாத்திக்குளம், கயத்தாறு, கோவில்பட்டி, ஸ்ரீவைகுண்டம் போன்ற பகுதிகளில் எண்ணற்ற ஆடுகள் இறந்துபோய்விட்டன. அவற்றை முறையாக இன்னும் கணக்கெடுக்கவில்லை. தயவுகூர்ந்து அதையும் கணக்கெடுத்து, ஆடுகள், மாடுகளை இழந்தவர்களுக்கும் நஷ்டஈடு கொடுப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தூத்துக்குடி பகுதியில் அத்திமரப்பட்டி என்கின்ற ஒரு பெரிய கிராமம் உள்ளது. ஏறக்குறைய 5,000 ஏக்கரில் அங்கு வாழை பயிரிட்டிருக்கிறார்கள். இந்த சேதத்திற்கும் இன்றுவரை நஷ்ட ஈடு கொடுக்கவில்லை. பெரிய, பெரிய கிராமங்களுக்கெல்லாம் இன்னும் நஷ்ட ஈடு போய்ச் சேரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்திலே எவ்வளவு நிவாரணத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே தெளிவாக நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதைத் தவிர, வேறு ஏதேனும் விட்டுப்போயிருந்தால், அவர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மீண்டும் ஒரு முறை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, இன்னும் 6 உறுப்பினர்கள் பேச வேண்டும். உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் உரையை முடித்து விடுகிறேன். பாதிக்கப்படாத ஒருவருக்கு நிவாரணம் கிடைத்தால்கூட பரவாயில்லை, பாதிக்கப்பட்டவர்கள் யாரும் விடுபடக்கூடாது என்கின்ற நோக்கத்தில்தான் நான் மீண்டும் மீண்டும், இந்தச்

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2016 பிப்ரவரி 19

சட்டமன்றத்திலே இதனைப் பதிவு செய்ய விரும்புகிறேன். எனவே, உடனடியாக நிவாரணம் கிடைப்பதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

அதேபோல, தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ளம் ஏற்பட்டதற்கு மிக முக்கியமான காரணம் உப்பாறு ஓடை. அதனை ஐங்கில் ஓடை என்றும் சொல்வார்கள். அந்த ஓடையினுடைய வரத்துக் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகள்தான் 10 கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கத்தில் புதுக்கோட்டை என்கின்ற பகுதியிலே உடைப்பு ஏற்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குள்ளேயே 6 அடி தண்ணீர் போனதற்குக் காரணமாக அமைந்தன. மேலும், அத்திமரப்பட்டி, குலேங்கரிசல், முத்தையபுரம் போன்ற ஊர்கள் தண்ணீரில் மூழ்குவதற்கு அதுதான் காரணம்.

ஒட்டுமொத்தத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ளம் ஏற்பட்டதற்கு அந்த உப்பாறு ஓடையில் உடைப்பு ஏற்பட்டது மிகப் பெரிய காரணம். எனவே, எந்தெந்தப் பகுதியிலே ஆக்கிரமிப்பு இருந்தாலும், அது பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும் சரி, வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும் சரி, எந்தவிதமான தடை வந்தாலும் சரி, அதை உடனடியாகத் தகர்த்தெறிந்து ஆக்கிரமிப்புகளை இந்த அரசு அகற்ற வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதுதான் எதிர்காலத்தில் தூத்துக்குடி மக்களுக்கு ஒரு பாதுகாப்பை அளிக்கும். எனவே, அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குண்டான நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும் என்பதை வலியுறுத்தி, இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். வணக்கம்.

பிற்பகல் 1-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள். ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன். (குறுக்கீடு) என்ன?



2016 பிப்ரவரி 19]

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் பேசிய. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, தொகுப்பு வீடுகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தொகுப்பு வீடுகளைச் சரிசெய்வதற்கு ரூ.25,000/-லிருந்து ரூ.50,000/-ஆக நிதியை உயர்த்தி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பழுதுபார்க்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். 20,000 ரூபாய் பழுதுபார்க்கவே முடியாது. அதனால் ரூ.50,000/-ஆக உயர்த்தி, இன்றைக்கு பழுது பார்க்கக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளார்கள்.

அடுத்து, இன்றைக்கு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் நிதியை ரூ.1,20,000/-ஆக உயர்த்தி மத்திய அரசுக்கு இணையாக, பாதிக்குப் பாதி கொடுத்துவிட்டார்கள். காங்கிரஸ் அரசால் இந்திரா நினைவு திட்டம் குடியிருப்பு என்ற பெயர் இருந்தாலும்கூட, மத்திய அரசு திட்டமாக இருந்தாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மத்திய அரசைவிட கூடுதலாக இன்றைக்கு நிதியைத் தருகிறார்கள்.

அடுத்து, பசுமை வீடுகள் திட்டம். இத்திட்டத்தின்கீழ் 300 சதுர அடியில் ஓர் அற்புதமான வீட்டை அனைத்துப் பகுதிகளிலும் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கட்டித் தந்துள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன். (குறுக்கீடு) என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதாவது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி with restrictions என்பது உங்களுக்குத் தெரியும், அத்தொகை செலவழிக்கப்பட்டுவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் பழுதினை சரி செய்வதற்கு ரூ.25,000/- என்றுதான் இருந்தது. அந்த நிதி போதாது என்று கருதி, அதனை ரூ.50,000/-ஆக உயர்த்தியிருக்கிறார்கள். உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை கூடுதலாக அதற்குப் பயன்படுத்தி இருக்கலாம். (குறுக்கீடு) நீங்கள் பழுது பார்ப்பதற்காகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், என்ன?

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொல்கின்றபோது, **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், உட்காருங்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

**திருமதி க. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழினத்திற்கும், தமிழ் மண்ணுக்கும் பெருமை சேர்த்த புதிய சரித்திரமாக, தமிழக அரசியலின் தன்மானச் சிங்கமாக, குடிசைகளை கோபுரமாக்கி, ஏழைகள் மனதில் குடியிருந்த கோயிலாக, அள்ள அள்ளக் குறையாது கொடுக்கும் அட்சயப் பாத்திரமாக, (மேசையைத் தட்டும் ஒலி) நாடி வந்தோர்க்கு இல்லையெனச் சொல்லாது அள்ளிக் கொடுக்க அவதரித்த அன்னையாக, மக்களைக் காத்திடும் மகா சக்தியாக, சத்தியாகிரகம் நடத்தி, சட்டப் போர் நிகழ்த்தி, காவேரி முல்லைப்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பெரியாறு உரிமைகளை கைவசமாக்கி, வேளாண்மை காத்திட்ட பேராண்மைத் தாயே! ஈழத் தமிழர்கள் வாழ்வுக்காக கம்பீரத் தீர்மானங்களை புனித ஜார்ஜ் கோட்டையில் புறப்பட வைத்த புரட்சித் தலைவியே! பொன்விளையும் பூமியை மீத்தேன் அரக்கனுக்கும், கெயில் கெடுதலுக்கும் ஒப்பந்தம் போட்ட தமிழருக்கு ஒவ்வாமையானவர்கள் மத்தியில் மல்லுக்கு நின்று, மக்களுக்காகப் போராடிய எங்கள் தாயே! அகிலம் போற்றும் அன்னையே! வாழும் மனித தெய்வமே, அம்மா தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்கள் நினைத்தால் தங்கள் தலையெழுத்தை மட்டுமல்ல, மற்றவர்களின் தலையெழுத்தையும் மாற்ற முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்குத் தேவை வாய்ப்புகள். அந்த வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குவதே என் இலட்சியம் என்று பெண் குலத்தின் விடிவெள்ளியாக, பெண்களின் காவல் தெய்வமாக (மேசையைத் தட்டும் ஒலி) கறவை மாடு தந்து, ஆடு தந்து, புதுவாழ்வுத் திட்டம் தந்து, மகளிர் சுய உதவிக் குழுத் திட்டம் தந்து, மகப்பேறு உதவித் தொகையை இரட்டிப்பாக்கித் தந்து, பெண் கல்விக்கு ஊக்கம் தந்து, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் தந்து, தாலிக்குத் தங்கம் தந்து, தொட்டில் குழந்தைத் திட்டம் தந்து, கவலை போக்கும் வாழ்வைத் தந்தார் எங்கள் அம்மா!

பிற்பகல் 1-55

நாட்டிலேயே முதன்முறையாக, பெண் மருத்துவ உதவியாளர்களும் இயக்கும் முதலுதவி ஸ்கூட்டர் தந்து, அம்மா பரிசுப் பெட்டகம் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா மகப்பேறு சஞ்சீவி மூலிகைத் திட்டம் தந்து, இன்னும் பிற எத்தனையோ திட்டங்கள் தந்து, என்றுமே கேள்விக்குறியாய் வாழ்க்கை இருந்திடுமோ என்றிருந்த அச்சத்தைத் துடைத்தெறிந்து, தாய்க் குலத்தைக் காக்கும் அரசு, நம் அம்மாவின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான், வழி நடத்துவது தெய்வமே என்று நினைக்கும் பக்தர்கள், வானத்தில் பறக்கிற கருடனையும் கடவுளின் வடிவத்திலே காண்பது போலத்தான், தமக்கென வாழாது, தம் ஆயுளையே தமிழகத்திற்காக ஒப்படைத்து

உழைக்கின்ற எங்கள் அம்மாவை, ஏழையெளிய மக்கள் கை கூப்பி வணங்குகிறார்கள்; கடவுளின் வடிவமாகவே காண்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் கலந்துகொண்டு எனக்குப் பேச வாய்ப்பு வழங்கிய இதய தெய்வம், எங்கள் குல தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

ஏங்கி நிற்கும் ஏழை முகம் சிரிக்க, எந்நாளும் உழைக்கின்ற நம் அம்மா, 2011 ஆம் ஆண்டு மே மாதம் பதவியேற்ற முதல் நாளன்றே அனைத்து அரிசி அட்டைதாரர்களுக்கும் விலையில்லாமல் அரிசி வழங்கி, தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றினார்கள். கடந்த ஐந்தாண்டுகளில் உணவு மானியமாக 25,000 கோடி ரூபாயும், பொது விநியோகத் திட்ட கடைகளை நடத்துவதற்கு, கூட்டுறவு அமைப்புகளுக்கு நிருவாக மானியமாக 762.93 கோடி ரூபாயும் வழங்கி, ஒப்பில்லா தாயாளும் தமிழ் மண்ணில் உறு பசியில்லை என்று, உலைக்கு அரிசி தந்த உன்னதத் தாய், எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் உணவு மானியத்திற்காக 5,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். விலை உயர்வின் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க 71 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், 100 கோடி ரூபாய் அளவிலான விலை கட்டுப்படுத்தும் நிதியம், 530 அம்மா உணவகங்கள், 106 அம்மா மருந்தகங்கள், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா சிமெண்ட் போன்ற திட்டங்களை வழங்கி, இல்லாதோர் வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து பெருமை சேர்த்திருக்கிறார்கள் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

சிறப்புத் திட்ட அமலாக்கத் துறையின் மூலமாக இதுவரை 31.78 இலட்சம் மடிக் கணினிகள் வழங்கப்பட்டு, தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 1.76 கோடி பேருக்கு 7,755.73 கோடி ரூபாய் செலவில் மிக்சி, கிரைண்டர், மின் விசிறி மற்றும் மின் அடுப்பு வழங்கி, மேலும் ஒரு தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

திருமண உதவித் திட்டத்தின்கீழ், இதுவரை 2,537.74 கோடி ரூபாய் பண உதவி பெற்று, 7,72,643 பெண்கள் பயனடைந்துள்ளனர். கடந்த ஐந்தாண்டுகளில் திருமாங்கல்யத்திற்கென 786.64 கோடி



ரூபாய் மதிப்பிலான தங்கம் வழங்கப்பட்டு, மேலும் ஒரு தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

முதியோர் உதவித் தொகையை 1,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்து, கடந்த ஐந்தாண்டுகளில் சமூகப் பாதுகாப்பு உதவித் தொகைகளுக்காக 19,204 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததோடு, இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் 3,820 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, வாழ்வில் தள்ளப்பட்டோர் தம்மை அரவணைத்து, ஆறுதல் அளித்து, நம்பிக்கை தந்து, மேலும் ஒரு வாக்குறுதியை நிறைவேற்றிய அரசு, நம் அம்மாவின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

தன்னையே கொடுப்பதில் வாழைக்கு ஈடு, சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசு மாடு. ஏழையெளிய மக்களின் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு, 60,000 பயனாளிகளுக்கு 231.11 கோடி ரூபாய் செலவில் 60,000 விலையில்லா கறவைப் பசுக்களும், 927.75 கோடி ரூபாய் செலவில், ஏழு இலட்சம் பெண்களுக்கு 28 இலட்சம் ஆடுகளையும் வழங்கி, மேலும் ஒரு வாக்குறுதி நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதன் பயனாக, 70,994 பசுங்கன்றுகளையும், 42.95 இலட்சம் ஆட்டுக் குட்டிகளையும் கூடுதல் சொத்தாகப் பெற்றிருப்பதோடு, நாளொன்றுக்கு 2.6 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியைப் பெருக்கி சாதனை படைத்த அரசு, நம் அம்மாவின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 2006-2011 தி.மு.க. ஆட்சிக் காலத்தில், கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு ரூ.1,437.25 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால், நம் அம்மாவின் பொற்கால ஆட்சியிலோ, கடந்த ஐந்தாண்டுகளில் மூன்று மடங்கிற்குமேல் உயர்த்தி, 4,826.67 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து வாயில்லா ஜீவன்களுக்கும் வாழ்வளித்திருக்கிறார்கள் நம் அம்மா.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திருமதி க. அழகுவேலு:** தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த, வேளாண்மைத் துறையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி, குறிப்பாக, சிறு, குறு விவசாயிகளுக்கு நுண்ணீர்ப் பாசனத்திற்கு 100 சதவிகித மானியமும், பிற

விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் வழங்கி, கடந்த ஐந்தாண்டுகளில் 986.38 கோடி ரூபாய் செலவில், 1,76,390 ஹெக்டேரில் நுண்ணீர்ப் பாசனம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இதேபோல், கடந்த ஐந்தாண்டுகளில் 201.94 கோடி ரூபாய் செலவில் டிராக்டர்கள், உழவு மற்றும் பயிர் அறுவடை இயந்திரங்கள் உள்ளிட்ட 62,735 கருவிகள் வழங்கி, விவசாயிகளின் பாதுகாவலனாக இருந்ததால்தான் இன்று மக்காச்சோளம், நிலக்கடலை, எண்ணெய்வித்துக்கள் உற்பத்தித் திறனில் நாட்டிலேயே முதல் இடத்தையும், கரும்பு இரண்டாமிடத்தையும், சூரியகாந்தி மற்றும் நெல் உற்பத்தித் திறனில் மூன்றாம் இடத்தையும் தமிழகம் பெற்றுள்ளது.

வேளாண்மைத் துறைக்கு 2010-2011 ஆம் ஆண்டு, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒதுக்கிய நிதி வெறும் ரூ.2,072.43 கோடி. ஆனால், நம் அம்மாவின் ஆற்றல்மிகு ஆட்சியிலோ 2015-2016 ஆம் ஆண்டில் 6,503.40 கோடி ரூபாய் என உயர்த்தி, வேளாண் துறைக்கு இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் 6,938.57 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, விவசாயிகளின் வியர்வையைத் துடைத்த வித்தகர் நம் அம்மா.

கூட்டுறவு வங்கிகள் மூலமாக, குறுகிய கால பயிர்க் கடனாக 22,486 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கி, கடனை தவணை தவறாது திருப்பிச் செலுத்துவதை ஊக்குவிக்க வட்டி மானியமாக 755.23 கோடி ரூபாய் வழங்கிய அரசு, நம் அம்மாவின் அரசு.

வலியோர் ஏழையை வாட்டிடும் கொடுமையை இனி ஒரு நாளும் நடக்க விடமாட்டேன் என்ற உறுதியோடு, சமூக விரோத, தீவிரவாத மற்றும் நில அபகரிப்பு சக்திகள் ஒடுக்கப்பட்டு, சட்டம்-ஒழுங்கை சீராக வைத்திருக்கும் அரசு, நம் அம்மாவின் அரசு. இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில், காவல் துறைக்கு ரூ.6,099.88 கோடி ஒதுக்கீடு செய்து, தமிழ்நாட்டை அமைதிப் பூங்காவாக வைத்திருக்கும் அரசு, நம் அம்மாவின் அரசு.

கடந்த ஐந்தாண்டுகளில் "தாய்" திட்டத்திற்கு 3,680 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, இத்திட்டத்தின் மூலமாக குக்கிராமங்கள்கூட அடிப்படை வசதியைப் பெறக்கூடிய நல்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த அரசு, நம் அம்மாவின் அரசு.



கடந்த ஐந்தாண்டுகளில், ஆண்டுதோறும் 60,000 வீடுகள் வீதம் மூன்று இலட்சம் சூரிய ஒளி மின்வசதி கொண்ட பசுமை வீடுகளைக் கட்டுக் கொடுத்து, குடிசைகளையெல்லாம் கோபுரமாக்கிய அரசு, பாசத் தாயின் அரசு.

கடந்த ஐந்தாண்டுகளில், புதிய திட்டங்களைச் செயல்படுத்தியதன் மூலமாக 4,455.50 மெகா வாட் உற்பத்தித் திறனும், நடுத்தரகால மற்றும் நீண்டகால மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் மூலமாக 3,030 மெகா வாட் உற்பத்தித் திறனும் கூடுதலாகச் சேர்க்கப்பட்டு, 31-12-2015 அன்றைய நிலவரப்படி, மாநிலத்தின் மின் உற்பத்தித் திறன் 26,806.50 மெகா வாட் அளவை எட்டி, கடந்த மைனாரிட்டி ஆட்சியால் கொண்டு வரப்பட்ட மின்வெட்டுப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து, இன்று மின்மிகை மாநிலமாக ஆக்கிக் காட்டிய அரசு, நம் அம்மாவின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

2011 முதல் 2016 வரை சாலைக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, ஒருங்கிணைந்த சாலை கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.14,841 கோடி தந்துள்ள நம் அம்மாவின் அரசு, இந்தத் திட்டத்தின்கீழ் 5,935 கிலோ மீட்டர் மாநில சாலைகளும், 6,740 கிலோ மீட்டர் மாவட்ட முக்கிய சாலைகளும், 11,879 கிலோ மீட்டர் இதர மாவட்ட சாலைகளும், மேலும் நபார்டு வங்கியின் உதவியோடு 1,184.84 கிலோ மீட்டர் சாலைகளும், 914 பாலங்களுக்காக 2,563.87 கோடி ரூபாயும், மேலும், சாலை, பாலம், நடைபாதை அமைக்க 1,595.35 கோடி ரூபாயும், 52 இரயில்வே பாலங்கள் அமைக்க 1,116.94 கோடி ரூபாயும், இரண்டாவது திட்டப் பணிகளுக்காக 5,171 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்து சாலைகளைச் சீராக வைத்துள்ள அரசு, நம் அம்மாவின் அரசு.

பிற்பகல் 2-05

கடந்த ஐந்தாண்டுகளில் 9 புதிய வருவாய்க் கோட்டங்களையும், 65 புதிய வட்டங்களையும் உருவாக்கியுள்ளார்கள். முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 3,032 கோடி ரூபாய் அளவில் 37.52 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

வருவாய்த் துறைக்கு இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் 5,974 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, பட்டா, சிட்டா இவற்றிற்கான சான்றிதழ்கள், வசிப்பிடத்தைத் தேடி வந்து

வாஞ்சையோடு கொடுப்பதற்கு வழிவகை செய்தது நம் அம்மாவின் அரசு.

பள்ளிக் கல்வித் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், இதுவரையில் கண்டிராத சாதனையாக, கடந்த 5 ஆண்டுகளில் 86,193 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் 24,820 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, 14 வகையான பொருட்களை விலையில்லாமல் கொடுத்து, ஆரம்பக் கல்வி முதல் அயல்நாட்டுக் கல்வி வரை இலவசமாய் தந்த அம்மாவின் ஆட்சி, இது அகிலத்திற்கே சாட்சி.

அனைவரும் உயர் கல்வி பெற வேண்டும் என்ற தொலைநோக்குச் சிந்தனையோடு 39 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி, 4 அரசு பொறியியல் கல்லூரி, 11 அரசு பல் தொழில்நுட்பக் கல்லூரிகளைத் தொடங்கி, முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்தைத் திரும்ப வழங்கும் திட்டத்தின்கீழ், கடந்த ஐந்தாண்டுகளில் 2,84,609 மாணவர்களுக்கு 2,544 கோடி ரூபாய் வழங்கப்பட்டதன் விளைவாக, இன்றைக்கு பெண்கள் மற்றும் ஆதி திராவிடர்களின் உயர் கல்வி சேர்க்கை அதிகரித்து, இந்தியாவிலேயே உயர் கல்வித் துறையில் தமிழகம் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்திருக்கிற அரசு, நம் அம்மாவின் அரசு.

மக்களின் ஆரோக்கியத்தில் அக்கறை கொண்டுள்ள நம் அம்மாவின் அரசோ, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு கடந்த ஐந்தாண்டுகளில் 34,042.90 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தது. கடந்த தி.மு.க. அரசின் ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 14,980.74 கோடி ரூபாயை விட 127 சதவீதம் அதிகரித்து, மக்கள் நலன் காத்திட்ட அரசு, நம் அம்மாவின் அரசு.

சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையை ஊக்குவிக்க, கடந்த ஐந்தாண்டுகளில் 91,210 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் 348.13 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நம் அம்மா அவர்களின் சிறப்புத் திட்டமான முதல் தலைமுறை தொழில் முனைவோரை ஊக்குவிக்க NEEDS என்ற திட்டம் கொண்டு வரப்பெற்று, இளைஞர் நலன் காத்திட்ட, இன்னல்கள் போக்கும்



அரசாக, பாரதி கண்ட தேசமாக, பாங்குடன் அமைந்த அரசு, நம் அம்மாவின் அரசு.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனில் அக்கறை கொண்டுள்ள அரசு, நம் அம்மாவின் அரசு. கடந்த ஐந்தாண்டுகால தி.மு.க. ஆட்சியில் மாணவர்களுக்கு உயர் கல்வி உதவித் தொகைக்காக வெறும் 836 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கினார்கள். ஆனால், அம்மா அவர்களின் நல்லரசோ நான்கு மடங்காக 3,607 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பாதுகாவலராக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் ஆதி திராவிடர் நலனுக்காக 2,702.22 கோடி ரூபாயும், பழங்குடியினர் நலனுக்காக 261.66 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்து பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

மாற்றுத் திறனாளிகள் நலனைப் பாதுகாப்பதில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலத்திற்கான விருதை 2013-2014 ஆம் ஆண்டு நம் அம்மாவின் அரசு பெற்றுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் மாற்றுத் திறனாளிகளுக்காக 1,490.83 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் 391.93 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2006-2011 தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மீன் வளத் துறைக்கென ஒதுக்கீடு செய்தது வெறும் 538.60 கோடி ரூபாய். ஆனால், மீனவர் துயர் துடைக்கும் நம் அம்மாவின் ஐந்தாண்டுகால ஆட்சியிலோ 2,335.20 கோடி ரூபாயாக உயர்த்தி ஒதுக்கீடு செய்ததோடு மட்டுமல்லாமல், இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு 742.99 கோடி ரூபாயாக உயர்த்தி ஒதுக்கீடு செய்து மீனவர் நலன் காத்திட்ட அரசு, நம் அம்மாவின் அரசு.

2011-ல் தேர்தல் வாக்குறுதியாகக் கொடுத்த அத்தனை வாக்குறுதிகளையும் இன்றைக்கு 100 சதவீதம் நிறைவேற்றிய ஒரே முதலமைச்சர் நம் அம்மா மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்ந்து கிடந்த தமிழ் மண்ணை ஆழ்ந்த ஞானத்தால், அயராத போராட்டத்தால்,

அண்ணார்ந்து பார்க்கவைத்து, விண்முட்டும் வெற்றிகளால் வீறுநடை போடவைத்த வெற்றித் திருமகளே!

ஆட்சியல்ல இது காட்சி, அதுவும் காணொலிக் காட்சி என்றார் ஒருவர். அம்மா! அவர் ஓர் அறியாப் பிள்ளை, பாவம். அம்மாவின் திட்டங்களை நேரில் சென்று திறந்து வைக்க 5 ஆண்டுகள் போதாது, ஆயுள் முழுவதும் வேண்டுமென்று அவருக்குத் தெரியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

வேலையற்ற வீணர்களின் மூளையற்ற வார்த்தைகளைக் கேட்டு மக்கள் ஏமாறமாட்டார்கள். எலிகளின் கீச்சுக்கு புலிகளே பயந்ததில்லை. எங்கள் அம்மாவோ சிங்கம்! வேட்டை காணாது விடப்போவதில்லை. கோட்டையை விட்டவர்கள் புலம்புவதால் இலை மலர்ந்ததும், இனி மலரப் போவதும் மாறப்போவதில்லை. கருகிய சூரியன் இனி காட்சிக்கு வரப்போவதும் இல்லை. தமிழகத்தின் நீராதாரங்களைப் பறித்தவர்களுக்கு, தமிழகத்தின் உரிமைகளை அண்டை அயலாரிடம் தூக்கிக் கொடுத்தவர்களுக்கு, நமது இலட்சோபலட்சம் தொப்புள் கொடி உறவுகளை, ரத்தவெறியன் ராஜபக்சேயோடு கூட்டு சேர்ந்துகொண்டு, வேரறுத்த விலங்கினும் கீழான கொடியவர்களுக்கு, காவேரி கன்னடருக்கு, கச்சத் தீவு சிங்களர்க்கு, முல்லைப் பெரியாறு கேரளர்க்கு, முள்ளி வாய்க்கால் மட்டும்தான் தமிழனுக்கு என்று மன்னிக்க முடியா பாதகங்களை அரங்கேற்றிய வஞ்சகர்களை இனி தமிழ் மக்கள் ஒரு போதும் மன்னிக்கமாட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தின் கண்களுக்கு, கண்டிராத கள்ளக்குறிச்சி. அம்மா, உங்கள் ஞானப் பார்வையாலே நாளும் சிறந்ததம்மா! ஐம்பதாண்டுகால கனவுகளையெல்லாம் ஐந்தே ஆண்டுகளில் நிறைவேற்றி, ஆண்டாண்டுக் காலமாய், அருங்கனவாய், வெறும் நினைவாய், நீடித்த இரயில் திட்டத்தை சின்னசேலம் முதல் கள்ளக்குறிச்சிவரை அகல இரயில் பாதைத் திட்டத்திற்கு அம்மா உங்கள் அருட்கொடையாய் அளித்திட்ட 64.5 கோடி ரூபாய், ஆண்டாண்டு காலம் சொல்லும் அம்மா அழிவில்லா உங்கள் புகழை! வள்ளலுக்கு வள்ளல் அம்மா நீங்கள்! கொடுப்பதற்கே பிறந்த அம்மா! எடுத்துக்கொள் 64.5 கோடி என மத்திய அரசுக்கே மகிழ்ச்சியுடன் கஜானாவைத் திறந்த அம்மா! நீங்கள் கை காட்டிய இடத்திற்கு இரயில் வரும், நீங்கள் இருவிரல் என்னும் ஈரிலை



விரித்தாலோ இந்தியாவே இங்கு வரும். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் இருக்கு main, அதை செய்து முடிக்க இருக்காங்க நம்ம அம்மா queen. காத்திருக்கு sixteen, two thousand sixteen (2016) என்ன தவம் செய்தேனோ இந்தத் தமிழகத்தில் பிறந்ததற்கு, என்ன மாதவம் செய்தேனோ மாதரசி அம்மா உங்கள் ஆட்சியில் வாழ்ந்ததற்கு. தனித் தொகுதி கள்ளக்குறிச்சியை தத்தெடுத்து தரணி போற்ற எண்ணற்ற திட்டங்கள் இயங்க வைத்தார் தொகுதியிலே, தன்னிறைவுகொள்ள வைத்த தங்கத் தாரகை அம்மாவுக்கு, நன்றி சொல்ல நாவில்லை. பொற்பாதம் பணிந்து வணங்கி வாய்ப்புக்கு நன்றிகூறி, அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016-2017 ஆம் ஆண்டு இடைக்கால நிதிநிலை அறிக்கைமீதான பொது விவாதத்தில் பங்கு கொண்டு உரையாற்றும் வாய்ப்பைத் தந்தமைக்காக முதலில் தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக அத்திக்கடவு-அவினாசித் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கொங்கு பகுதி மக்கள் போராடி வருகின்றார்கள். இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில், இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் தொடங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளதை மனிதநேய மக்கள் கட்சி வரவேற்கின்றது. இந்த ஆரம்ப கட்டப் பணிகள் தொடங்கப்படுவதற்காக நிருவாக உத்தரவுகள் உடனடியாகப் பிறப்பிக்கப்பட வேண்டுமென அப்பகுதி மக்கள் விரும்புகிறார்கள். தொடர்ந்து இன்று 12-வது நாளாக உண்ணாநிலைப் போராட்டம் மேற்கொண்டிருக்கிறார்கள். அம்மக்களின் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்ற தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஐந்தாண்டுக் காலமாக இந்த அரசு நிறைவேற்றியுள்ள பல திட்டங்கள் குறித்து விரிவாக இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக, தமிழகத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் 221 புதிய ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 112 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 810 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப்

பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன; இது பாராட்டத்தக்கது. கல்வி தனியார்மயமாக்கப்படும் சூழலில் அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவது ஏழையெளிய மக்கள் பயனடைவதற்கு உண்மையிலேயே நல்ல நடவடிக்கையாகும். இதேபோல், அரசு உதவிபெறும் பள்ளிக்கூடங்களில், தரம் உயர்த்தப்பட்ட வகுப்புகளுக்கு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-15

சிறுபான்மை மொழி மாணவர்கள் 10 ஆம் வகுப்புத் தேர்வை தங்களுடைய தாய் மொழியிலே எழுத வேண்டும் என்பது அவர்களின் நீண்டகாலக் கோரிக்கை. நேற்றுகூட நம்முடைய இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. குணசேகரன் அவர்கள் இதைக் குறிப்பிட்டார்கள். இப்போது அரசாணை வெளியிடப்பட்டு, வருகின்ற 10 ஆம் வகுப்புத் தேர்வை சிறுபான்மை மொழி மாணவர்கள் தங்களுடைய தாய் மொழியிலே எழுதலாம் என்று உத்தரவிட்டதற்காக மாநில அரசிற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தனது உரையில், தமிழகத்திலுள்ள அனைத்து மீனவர்களின் நலனிலும், குறிப்பாக, பாக் நீரிணைப்பில் உள்ள பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன் பிடித்துவரும் மீனவர்களின் நலனிலும், அவர்களின் பாதுகாப்பிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெரும் கவனம் செலுத்தி வருவது குறித்தும், தமிழக முதலமைச்சரின் அயராத முயற்சிகளின் காரணமாக இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட 357 மீன்பிடிப் படகுகளுடன் 2,271 தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளது குறித்தும் குறிப்பிட்டுள்ளார்கள். மீனவர்களின் உரிமைகளை நிலைநாட்ட தமிழக முதலமைச்சர் எடுத்துள்ள முயற்சிகளுக்காக நான் முதலில் நன்றி சொல்கிறேன். தமிழக மீனவர்களின் நலன் காக்க தமிழக முதலமைச்சருக்கு இருக்கும் அக்கறையும், கவலையும் மத்தியில் ஆட்சியில் வீற்றிருக்கும் பா.ஜ.க.-வினருக்கு கிஞ்சிற்றும் இல்லை என்பதை நான் இங்கே திட்டவட்டமாகக் குறிப்பிட விரும்புகிறேன். பாக் நீரிணைப் பகுதியில் நமது பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலைநாட்டும் முயற்சியை சிறிதும் எடுக்காத நிலையில் மத்திய பா.ஜ.க. அரசில் இடம் பெற்றுள்ள தமிழக



அமைச்சர் மாண்புமிகு திரு. பொன். ராதாகிருஷ்ணன் அவர்கள், வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோல், மீனவர்கள் பிரச்சினைக்கு தமிழக மீனவர்கள்மீது பழிபோடும் வகையில் பேசி வருகின்றார். தற்போது 27 மீனவர்களும், 71 படகுகளும் இலங்கைவசம் உள்ளன. இந்த நிலையில், சமீபத்தில், 2, 3 தினங்களுக்கு முன்பு, இலங்கை மீன் வளத் துறை அமைச்சர் மகிந்த அமரவீர என்பவர் தமிழக முதல்வரின் அச்சுறுத்தலுக்கு இலங்கை அரசு பயப்படாது, பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் விசைப் படகுகள் திரும்ப அளிக்கப்படமாட்டாது, இந்திய-இலங்கை மீனவப் பேச்சுவார்த்தை குறித்து இந்திய அரசுடனேயே பேச்சுவார்த்தை நடத்துவோம், தமிழக அரசுடன் பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறியுள்ளார். நமது மாநிலத்தின் முதலமைச்சர் குறித்து இலங்கை அமைச்சரின் இந்த வாய்க்கொழுப்பெடுத்த பேச்சை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். தமிழக மீனவர்கள் பிரச்சினையில் மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு கடைப்பிடிக்கும் மெத்தனப்போக்குதான் இலங்கை அமைச்சரின் திமிர் பிடித்த பேச்சுக்குக் காரணமாக அமைந்திருக்கின்றது. நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களும், அவர்களுடைய படகுகளும் உடனடியாக மீட்கப்படுவதற்கு மேலும் வலிமையான நடவடிக்கைகளை நமது அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைக்கால நிதிநிலை அறிக்கையில் 3,231.74 கோடி ரூபாய் மதிப்புள்ள 31.78 இலட்சம் மடிக் கணினிகள் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 786.64 கோடி ரூபாய் மதிப்பில் தாலிக்குத் தங்கம் வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 7,755.73 கோடி ரூபாய் மதிப்புள்ள, 1.76 கோடி எண்ணிக்கையில் மின்விசிறி, மிக்சி, கிரைண்டர் முதலிய வீட்டு உபயோகப் பொருட்கள் விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளன. முதியோருக்கும், சமூகத்தில் நலிவடைந்த பிற பிரிவினருக்கும் வழங்கப்படும் மாதாந்திர சமூகப் பாதுகாப்பு உதவித் தொகைகளுக்காக 19,204 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோன்று மக்களுக்குப் பயன் தரும் திட்டங்களை நிறைவேற்றியதன்மூலம் இந்த அரசு ஏழை எளிய

மக்களின் நலனில் அக்கறை கொண்ட அரசாக விளங்குகிறது என்பது தெரிய வருகிறது. இருப்பினும் தமிழகத்தில் வாழும் மக்களில், குறிப்பாக, ஏழை எளிய குடும்பங்களில் மன அமைதியும், மன நிறைவும், நல்லிணக்கமும், ஆரோக்கியமும் நீடித்து நிலைப்பதற்காக முழுமையான மதுவிலக்கை அமல்படுத்தும் அறிவிப்பை இந்த அரசு உடனடியாக வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையை தொடர்ந்து நாம் நடைமுறைப்படுத்துவதை சிதைக்கும் வகையில் சிலர் எடுத்து வரும் முயற்சிகளை முறியடிக்க, இந்த அரசு எடுத்து வரும் முயற்சிகள் பாராட்டத்தக்கது; இந்த முயற்சிகள் தொடர வேண்டும். சமூக நீதிக்கு எதிரானவர்களின் திட்டம் முறியடிக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு அளிக்கப்படும் 3.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டின் அளவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக கடந்த ஐந்தாண்டுகளில் பல்வேறு விவாதங்களில் நானும், எனது சக மனிதநேய மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. அஸ்லம் பாஷாவும் வலியுறுத்தி வந்துள்ளோம். அந்தக் கோரிக்கையை தகுந்த முறையில் நிறைவேற்ற இந்த அரசு கனிவுடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நடைமுறையில் உள்ள இட ஒதுக்கீடு சரியான முறையில் பின்பற்றப்படுகின்றதா என்பதை கண்காணிப்பதற்கு மட்டுமல்ல, தவறு நேர்ந்திருந்தால் அதனைத் திருத்துவதற்கும் அதிகாரம் கொண்ட மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சமவாய்ப்பு ஆணையம்-Equal Opportunities Commission ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-20

காவல் துறையில் பலதரப்பட்ட மதத்தவர்களின் பிரதிநிதித்துவம் குறித்து ஆண்டுதோறும் தேசிய குற்ற ஆவணக் காப்பகம்-National Crime Records Bureau தகவல்களையும், புள்ளிவிவரங்களையும் வெளியிட்டு வருகின்றது. 2013 ஆம் ஆண்டில் இந்திய அளவில் 17.3 இலட்சம் எண்ணிக்கையில் உள்ள இந்திய காவல் படைகளில் முஸ்லிம்களின் விகிதம் 6.27 விழுக்காடு மட்டுமே என்று சொல்கிறது. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் ஆய்வறிக்கை, 2013 ஆம் ஆண்டில் தமிழகத்தைப் பொறுத்தவரையில், சுமார் 1 இலட்சம் எண்ணிக்கை கொண்ட காவல் துறையில்,



முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் 1.82 விழுக்காடு மட்டுமே என்று தெரிவிக்கின்றது. தமிழகத்தில் நியாயமாக 3.5 விழுக்காடு பிரதிநிதித்துவம் காவல் துறையில் முஸ்லிம்களுக்கு இருந்திருக்க வேண்டும். இதுபோன்ற குறைபாடுகளை நீக்குவதற்குத்தான், நான் குறிப்பிட்ட அதிகாரமிக்க சம வாய்ப்பு ஆணையம்-Equal Opportunities Commission அமைக்கப்பட வேண்டுமென்று கேட்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், சிறைத் துறை பற்றி பல குறிப்புகளை தன்னுடைய உரையிலே குறிப்பிட்டார்கள். நான் இந்த 14-வது சட்டமன்றத்திலே முதல் பட்ஜெட் கூட்டத் தொடர் 2011 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நடைபெற்றபோதும், பிறகு ஒவ்வோர் ஆண்டும் 3-5-2012, 23-4-2013, 7-8-2014, 23-9-2015, 23-1-2016 ஆகிய தேதிகளில், 10 ஆண்டுகளுக்கும் மேலாக தண்டனை அனுபவித்துவரும் ஆயுள் சிறைவாசிகளை, அரசமைப்புச் சட்டத்தின் 161-வது பிரிவைப் பயன்படுத்தி முன்கூட்டியே விடுவிக்க வேண்டுமென்று தொடர்ந்து கோரி வருகின்றேன். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி எமது மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக சென்னை, மதுரை மற்றும் கோவையில் கடந்த பிப்ரவரி 7 ஆம் தேதியன்று நடைபெற்ற கோரிக்கை ஆர்ப்பாட்டத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் தன்னெழுச்சியுடன் பங்கு கொண்டார்கள். பேரறிவாளன், அபுதாஹிர் உள்ளிட்ட, 10 ஆண்டுகளுக்கும் மேலாக, வாழ்நாள் சிறைவாசிகளாக உள்ள அனைவரையும் இந்த அரசு விடுவிக்க வேண்டும் என்பதுதான் எனது கோரிக்கை.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், தனது இடைக்கால நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருப்பதை நான் மேற்கோள் காட்ட விரும்புகின்றேன். "சிறைக் கைதிகளை சீர்திருத்தி, அவர்களின் பொருள் ஈட்டும் திறனை வளர்த்து, அவர்கள் விடுதலையான பின்னர் சமுதாயத்தோடு ஒருங்கிணைந்து இணக்கமுடன் வாழ சிறைச்சாலைகள் வழிவகுக்க வேண்டுமென இந்த அரசு கருதுகின்றது" என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்த நல்ல நோக்கத்தை நிச்சயமாக 10 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் உள்ளவர்கள் நிறைவேற்றியிருப்பார்கள். எனவே, அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கி, அரசமைப்புச் சட்டம் 161-வது பிரிவின்கீழ் விடுதலை செய்வதற்கு இந்த அரசு

உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்டும் திட்டத்திற்கு கேரள மாநில அரசின் நிதிநிலை அறிக்கையில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சர் உம்மன்சாண்டி தன்னுடைய நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்திருக்கின்றார். 'முல்லைப் பெரியாறு அணையின் உறுதித்தன்மை குறித்து நீதிபதி ஆனந்த் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்பதாகவும், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடி உயரம் வரை உயர்த்தலாம்; புதிய அணை கட்டுவதற்காக கேரள சட்டமன்றத்தில் கொண்டு வந்த சட்டம் அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்பதால் இரத்து செய்கிறோம்; அணையைப் பராமரிக்க மூன்று பேர் கொண்ட குழுவை அமைக்கின்றோம்' என்று உச்ச நீதிமன்றத்தினுடைய அரசியல் சாசன அமர்வு கடந்த 2014 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் தேதி தீர்ப்பு வழங்கியது. ஆனால், முல்லைப் பெரியாறு அணையைத் தகர்த்துவிட்டு, புதிய அணை கட்டுவதற்காக நிதிநிலை அறிக்கையில் கேரள அரசு 100 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிரானது, கண்டனத்திற்குரியது. எனவே, உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வின் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேரள அரசை மத்திய அரசு வலியுறுத்தும் வகையில், தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் மிக முக்கியமாக 4 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏன் ஏற்படுகின்றது என்பதைப் பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். கச்சா எண்ணெய் விலை சர்வதேச சந்தையிலே பெருமளவிலே சரிந்து வரக்கூடிய நிலையிலே அதற்குச் சமமாக பெட்ரோல், டீசல் விலை குறைவதில்லை. இதற்கு என்ன காரணம் என்றால், மத்திய அரசு கலால் வரியை உயர்த்தி வருகின்றது. ஆனால், தமிழக அரசு அந்த அடிப்படையிலே கலால் வரியை உயர்த்தாததன் காரணமாக ரூபாய் நான்கு ஆயிரம் கோடி அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். மத்திய அரசைப் போன்று, பிற மாநில அரசுகளைப் போன்று மக்களை வஞ்சிக்கக்கூடியவகையில் பெட்ரோல், டீசல் விலை சர்வதேச சந்தையில் சரிந்தபோதிலும்கூட கலால் வரியை உயர்த்தாமல், மக்களின் பணச் சுமையை உயர்த்தாமல் இருந்ததற்காக நான் முதலிலே தமிழக அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மத்திய அரசு பெட்ரோல், டீசல் விலைக் குறைப்பின் பலன் மக்களுக்குச் சென்றடையாமல் தடுக்கின்றது.



பிற்பகல் 2-25

அடுத்து, தமிழக நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளை அப்புறப்படுத்த வேண்டும். பிற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, தமிழகத்திலுள்ள சுங்கச்சாவடிகளில், வாகனங்களுக்கு வசூலிக்கப்படும் தொகை அதிகமாக இருக்கின்றது. ஒட்டுமொத்தமாக இந்த சுங்கச்சாவடிகளை அப்புறப்படுத்துவதற்கு மத்திய அரசை, தமிழக அரசு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநில நெடுஞ்சாலை மேம்பாலப் பணிகளுக்கு நிலங்களைக் கையகப்படுத்தும்போது, பணி துவங்குவதற்கு முன்பே இழப்பீட்டுத் தொகையை உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகளில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி இணைப்புகளுக்கான உரிமத்தை ஏற்கெனவே உரிமம் பெற்றவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

சிறுபான்மையினர் பள்ளிகளில் சத்துணவு மையங்களில் பணியாற்ற நிருவாகம் பரிந்துரைக்கும் நபர்களுக்கே உரிமை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே, மேற்கு மாவட்டங்களில், குறிப்பாக, கோவை, திருப்பூர், ஈரோடு, தருமபுரி, கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளில் கெயில் நிறுவனம், விவசாய விளைநிலங்களில் எண்ணெய் குழாய்களைப் பதிக்க வரும்போது, கடுமையான எதிர்ப்பு தெரிவித்து, தமிழக அரசு அதைத் தடுத்து நிறுத்தியது. சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய அந்தத் திட்டத்திற்கு உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியிருக்கக்கூடிய சூழ்நிலையில், அதை மீண்டும் தடுத்து நிறுத்துவதற்கு மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஏற்கெனவே கூடங்குளம் அணுஉலையின் ஒன்றாவது பிரிவு இயங்கிக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், ஒரு மிகப் பெரிய தொழில் நோயாளியை இந்தியாவிலே பார்க்க வேண்டுமென்றால், கூடங்குளம் அணுஉலையைத்தான் பார்க்க முடியும். சமீபத்தில்கூட, அணுஉலையை இயக்கத் தொடங்கியபோது, மீண்டும் அதில் பழுது ஏற்பட்டதால் உற்பத்தி நிறுத்தப்பட்டிருக்கின்றது. இந்திய அணுசக்தி நிறுவனத்தினுடைய தலைவர் திரு. கோபால கிருஷ்ணன் அவர்கள் சமீபத்தில் சென்னையிலே பேசும்போது, தரமற்ற பாகங்களால் அந்த அணுஉலை நிறுவப்பட்டிருக்கின்றது என்று மத்திய அரசை குறைசொல்லிப் பேசினார். இப்போது அங்கே மூன்றாவது அலகும், நான்காவது அலகும் தொடங்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில், இது ஒரு மிகப் பேராபத்திற்குரியதாக அமைந்துள்ளது என்பதால், தமிழக அரசு இதைத் தடுத்து நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஆந்திராவைச் சேர்ந்த ஜி.வி.கே. என்ற தனியார் நிறுவனம், 108 ஆம்புலன்ஸ் சேவையைச் செய்து வருகிறது. இந்நிறுவனம் 32 மாவட்டங்களில், 684 ஆம்புலன்ஸ்களை இயக்குகின்றது. அந்நிறுவனத்தில் 3,500 ஊழியர்கள் பணியாற்றி வருகின்றார்கள். அது தனியார் நிறுவனம் நடத்தக்கூடிய சேவைதான். ஆனாலும்கூட, ஆம்புலன்ஸ்களினுடைய தன்மை, அவற்றினுடைய இயங்கும் திறன், அவை சரியான முறையிலே இயங்குகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்கும், அந்த ஆம்புலன்ஸ் ஊழியர்கள் சந்திக்கும் ஏராளமான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கும் இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ச்சி என்று சொல்லி மத்தியில் ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. இன்று வெறுப்புணர்ச்சியைத் தூண்டும் ஆட்சியை மத்தியில் நடத்தி வருகின்றது. மாட்டிறைச்சி என்ற பெயரால் அரசியல் நடத்தி, தாம்பரத்தில் இந்திய விமானப் படையில் பணியாற்றிவரும் திரு. முஹம்மது சர்தாஜ்ஜின் தந்தை திரு. அஹ்லாக் என்ற முதியவரைக் கொன்றார்கள். சத்ரபதி சிவாஜி ஒரு மதச்சார்பற்ற ஆட்சியாளர். அவரது படைகளில் முஸ்லிம்கள் இடம்பெற்றார்கள் என்பதை வலுவான சான்றாவணங்களுடன் 'சிவாஜி கோன் ஹோட்டா', சிவாஜி யார் என்ற நூலை எழுதிய அறிஞர் கோவிந்த்



பன்சாரேவை சுட்டுக்கொன்றார்கள். டெல்லி பல்கலைக்கழகத்தில் 'முசாபர் நகர் பாக்கி ஹை' என்ற ஆவணப் படம் திரையிடப்பட்டபோது, தாக்குதல் நடத்திய ஏ.பி.வி.பி. மாணவர்களைக் கண்டித்ததற்காக ஹைதராபாத் பல்கலைக்கழக மாணவர் ரோகித் வெமூலா தற்கொலை செய்துகொள்ளும் அளவிற்குத் துன்புறுத்தப்பட்டுள்ளார். இளைய தலைமுறையின் மதச்சார்பின்மை மனப்பான்மைக்கு தொட்டிலாக விளங்கும் டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவர் கன்னையா குமார் மற்றும் அவரைச் சார்ந்த மாணவர்கள்மீது தேசத் துரோக வழக்கு அபாண்டமாக சுமத்தப்பட்டது மட்டுமல்லாமல், தொடர்ந்து சி.பி.எம். தலைமையகம், நீதிமன்றம் எனத் தொடர்ச்சியாக வெறுப்புணர்ச்சி அரசியலை, வன்முறை அரசியலை பா.ஜ.க. நடத்தி வருவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். தமிழகம் இத்தகைய வெறுப்புப் பிரச்சாரத்திற்கு இடமில்லாத மாநிலமாக உள்ளது. அப்படியே நடந்தாலும், அதனை முளையிலேயே கிள்ளியெறியும் மாநிலமாக விளங்கும் வகையில் இந்த அரசு கடும் நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. இந்த நிலை தொடர வேண்டும். பா.ஜ.க.-வின் வெறுப்பு அரசியல் தமிழகத்தில் தனிமைப்படுத்தப்பட வேண்டும். சமூக நல்லிணக்கத்தையும், சமூக ஒற்றுமையையும் நிலைநாட்டும் ஆட்சி தொடர வேண்டும். அதற்காக நாங்கள் எப்போதும் இணைந்து செயல்படத் தயாராக இருக்கின்றோம்.

கடந்த ஐந்தாண்டுகளில் இந்த அவையின் உறுப்பினராகச் செயல்பட வாய்ப்புத் தந்த வல்ல இறைவனுக்கும், 2011-ல் மனிதநேய மக்கள் கட்சி இடம்பெற்ற கூட்டணிக்குத் தலைமைதாங்கிய அ.தி.மு.க.வினுடைய மரியாதைக்குரிய பொதுச் செயலாளர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இராமநாதபுரம் மற்றும் ஆம்பூர் தொகுதி மக்களுக்கும், எனது பணியில் உறுதுணையாகச் செயல்படும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் மற்றும் மனிதநேய மக்கள் கட்சியின் நிருவாகிகள் மற்றும் தொண்டர்களுக்கும், நல்ல வாய்ப்புகளை எனக்கு நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

*பிற்பகல் 2-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 14-வது சட்டமன்றப் பேரவையின் இறுதிக் கூட்டத் தொடரில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனக்கு இந்த வாய்ப்பை அளித்த எங்களுடைய நிறுவனர் தமிழினப் போராளி மருத்துவர் ஐயா அவர்களுக்கும், முன்னாள் நடுவண் சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த மருத்துவர் திரு. அன்புமணி ராமதாஸ் அவர்களுக்கும், என்னை இந்தச் சட்டமன்றத்துக்கு அனுப்பி வைத்து, பணி செய்வதற்குப் பணித்த செஞ்சி தொகுதி மக்களுக்கும், என்னை ஈன்றெடுத்து எல்லா காலங்களிலும் எனக்கு உறுதுணையாக இருந்த என் தாய், தந்தையருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கடந்த ஐந்தாண்டுக் காலமாக உறுப்பினர்களாக இருக்கும் நாம், எதிர் எதிர் அணியில் இருந்தாலும், வாதங்களின்போது கடுமையாக மோதிக் கொண்டாலும், நல்ல நண்பர்களாகப் பழகியிருக்கிறேன் என்று எண்ணும்போது உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். அதேநேரத்தில் அடுத்து அமையவிருக்கும் புதிய அவையில் எத்தனை பேரை மீண்டும் நான் சந்திக்க முடியும் என்று எண்ணும்போது உள்ளபடியே வருத்தமடைகிறேன். (சிரிப்பு) உங்களில் எத்தனை பேரை மீண்டும் நான் சந்திக்கப் போகிறேன் என்பதை நினைக்கும்போது உள்ளபடியே வருத்தமடைகிறேன். (சிரிப்பு)

நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விதி 110-ன்கீழ் தாக்கல் செய்த அறிக்கையில், 60 வயதிற்கும் மேற்பட்ட மூத்த குடிமக்கள் சென்னை மாநகரப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் இலவசமாகப் பயணம் செய்யலாம் என்று அறிவித்தார்கள். இந்தத் திட்டம் எந்தவகையில் பயனளிக்கும்? அதுகுறித்து ஒரு சில ஐயங்களை நான் எழுப்ப விரும்புகிறேன். மாதத்திற்கு 10 டோக்கன்கள் வழங்கப்பட்டால் அதை வைத்துக்கொண்டு 5 முறை மட்டுமே பயணம் செய்யலாம்; போய் திரும்பி வரலாம். இது போதுமானதாக இருக்க முடியாது. மாநகரப் பேருந்துகளில் ஒருமுறை பயணம் செய்வதற்கு குறைந்தபட்சக் கட்டணமாக ரூ.3/- மட்டுமே வசூலிக்கப்படுகிறது. அதன்படி பார்த்தால் மாதத்திற்கு ரூ.30/-க்குப் பயன் கிடைக்கும். அதுமட்டுமின்றி, மாதா மாதம் டோக்கன்கள் வாங்குவதற்கு



முதியோர்கள் பணிமனைக்குச் சென்று வர வேண்டிய சுமையும், நேரச் சுமையும் இருக்கிறது. எனவே, மூத்த குடிமக்கள் அனைவருக்கும் நிரந்தர இலவசப் பயணச் சீட்டு வழங்கி, மாநகரப் பேருந்துகளில் நிபந்தனையின்றி, எத்தனை முறை வேண்டுமானாலும் பயணம் செய்யும் வகையில் இந்தத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். ஏனென்றால், 2011 ஆம் ஆண்டு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல குறைந்தபட்சக் கட்டணம்தான் 3 ரூபாய். அவர்கள் சென்னையிலே எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். தாம்பரத்திலிருந்து சென்னைக்கு வரலாம். ரூ.15/- முதல் ரூ.20/- வரை கட்டணம் இருக்கிறது. அதனால் குறைந்த கட்டணத்தை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்கக்கூடாது. மாதம் ரூ.30/- மட்டும்தான் மக்களுக்கு மீதியாகும் என்று கூறினார். பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கின்ற இந்தத் திட்டத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொச்சைப்படுத்த வேண்டாமென்று (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொச்சைப்படுத்தவில்லை. எந்தவொரு நிபந்தனையுமின்றி, மாநகரப் பேருந்துகளில் எத்தனை முறை வேண்டுமானாலும் முதியோர்கள் இலவசமாகப் பயணம் செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்று சொன்னால், 2011 ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலின்போது அ.இ.அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் 15-வது பக்கத்தில், '58 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் உள்ளூர் மற்றும் பக்கத்தில் உள்ள நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் அரசுப் பேருந்துகளில் சென்று வர இலவச பஸ் பாஸ் வழங்கப்படும்'

என்று அறிவித்திருக்கிறது. அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த முதல் நாளிலே இந்தத் திட்டத்தை ஏன் நிறைவேற்றவில்லை என்று நாங்கள் பல முறை கேள்வி எழுப்பியிருக்கிறோம். ஆனால், இப்போது தேர்தல் வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றாமல் பாதியாக நிறைவேற்றியிருப்பதுதான் ஏமாற்றம் அளிக்கிறது. எனவே, இதனைப் பார்த்து மக்கள் ஏமாற மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது தேர்தல் அறிக்கையில், அரசுப் பேருந்துகளில் பக்கத்தில் உள்ள நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் இலவசமாகச் சென்று வர பஸ் பாஸ் வழங்கப்படும் என்று அறிவித்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். இங்கிருந்து செங்கல்பட்டு வரை மாநகரப் பேருந்து செல்கின்றது. அந்தப் பேருந்துகள் செல்கின்ற வழிகளில் இருக்கிற இடங்களெல்லாம் கிராமமாக இருக்கிறதா, நகரமாக இருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், டீசல் விலை உயர்ந்தும்கூட, இன்றையதினம் இந்தியாவிலேயே குறைந்த கட்டணத்தில் அரசுப் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கின்ற அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும், பயணிகளுக்கு தொந்தரவு வரக்கூடாது என்பதற்காக அனைத்து நிதிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. டீசலுக்குண்டான அனைத்து மானியத்தையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசே கொடுத்து, அரசுப் பேருந்துகளை குறைந்த கட்டணத்தில் இயக்கிக் கொண்டிருக்கிற ஒரே அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மட்டும்தான் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தது, நீங்கள் தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதியை இப்போது அறிவித்துள்ளீர்கள். இதனால் மக்கள் ஏமாற



மாட்டார்கள் என்று சொன்னீர்கள். நீங்கள்தான் ஏமாற்றம், மாற்றம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள்தான் ஏமாறப் போகிறீர்கள் என்பது வருங்காலத்தில், 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலினுடைய ரிசல்ட்டாக (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-35

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் அதை மக்களே வருங்காலங்களில் தீர்மானிப்பார்கள். கடந்த ஐந்தாண்டுகளில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ள திட்டங்கள் மற்றும் விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட 600-க்கும் மேற்பட்ட திட்டங்கள், இன்னும் நிறைவடையாத சூழ்நிலையில்தான் இருந்து கொண்டிருக்கின்றன. இத்திட்டங்களுக்கான நிதியும் இன்னும் ஒதுக்கப்படாத சூழ்நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. கடந்த காலங்களில் பட்ஜெட் மற்றும் 110 விதியின்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எவை, எவை? அவை எந்தெந்த நிலையில் இருக்கின்றன என்பது குறித்த ஒரு வெள்ளை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே வெளியிட வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்; தர்மம் மீண்டும் வெல்லும்' என்ற பொதுமறைக்கு இலக்கணமாக, அதற்கு செயல் வடிவம் கொடுப்பதுபோல் அமைந்தது, மரக்காணம் நிகழ்வுக்குக் கிடைத்த நீதி. 2013 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் மகாபலிபுரத்தில் நடைபெற்றது சித்திரை முழு நிலவு பெருவிழா நிகழ்வு. அன்று பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த இருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்கள். அன்றைக்கு, இதே அவையில் நாங்கள், அந்த நிகழ்வு குறித்து நியாயம் கேட்டோம். **

இதுகுறித்து மக்கள் மன்றத்தில் போராடச் சென்ற எங்களுடைய நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள், 11 நாட்கள் காரணமில்லாமல் சிறை வைக்கப்பட்டார். ஆனால், இதையெல்லாம்

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கடந்து, கடந்த மாதம் வந்த தீர்ப்பில் உண்மை நிலை வெளிவந்திருக்கிறது. இதன்படி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும். கொலை செய்யப்பட்ட செல்வராஜ் மற்றும் வினோத் ஆகியோருக்குக் குறைந்தபட்சம் ரூ.25 இலட்சம் இழப்பீடு வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும். ஏனென்று சொன்னால், ** நீதிமன்றத்தின் தீர்ப்பிலேயே இருக்கிறது. ** (குறுக்கீடு) இல்லை. நீதிபதிகளே அந்தத் தீர்ப்பை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் ஆதாரமில்லாமல் வந்து நீங்கள் பேசுகிறீர்கள். நீங்கள் ஆதாரமில்லாமல் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) வேறு ஏதாவது பேசுங்கள். ஆதாரத்தைக் கொண்டு வந்து காட்டுங்கள். (குறுக்கீடு) இல்லை. அதற்கெல்லாம் ஆதாரம் வேண்டும். ஆதாரமில்லாமல் உங்கள் இஷ்டத்திற்குப் பேச முடியாது. (குறுக்கீடு) அதையெல்லாம் நீங்கள் என்னிடம் கொண்டுவந்து காட்டியிருக்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் என்னிடம் கொண்டுவந்து காட்டி, அனுமதி வாங்கியிருக்க வேண்டும். (குறுக்கீடு) திரு. கணேஷ்குமார், 'இதைப் பேசப் போகின்றேன்' என்று நீங்கள் என்னிடம் கொண்டுவந்து காட்டி, என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் நீங்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) திடீரென்று இப்படியெல்லாம் பேச முடியாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் வேறு விஷயங்களைப் பேசுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** எதற்காக அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்? ** நீதிபதிகள் தீர்ப்பிலேயே **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எதைப் பேசுவதாக இருந்தாலும், என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் பேச வேண்டும்.

**திரு. அ. கணேஷ்குமார்:** நான் அதைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இதுபோன்று ஆதாரம் இல்லாமல் பேசக் கூடாது. நீங்கள் வேறு சப்ஜெக்ட்டைப் பேசுங்கள். அதையெல்லாம் நீக்கிவிட்டேன். நீங்கள் வேறு சப்ஜெக்ட்டைப் பேசுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. அ. கணேஷ்குமார்:** அதை ஏன் நீக்க வேண்டும்? அவைக் குறிப்பிலிருந்து ஏன் அதை நீக்க வேண்டும்? இதுகுறித்துப் பேசியபோது சென்ற முறை எங்கள்மீது குற்றம் சாட்டப்பட்டது. எங்களுடைய கட்சிக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைத் தலைவருடைய உரிமையில் நீங்கள் தலையிட முடியாது. நான் நடவடிக்கை எடுத்திருக்கிறேன். நான் சொல்லிவிட்டேன். அதை நீக்கிவிட்டேன். நீங்கள் வேறு சப்ஜெக்டை பேசுங்கள். (குறுக்கீடு) அதையெல்லாம் நீங்கள் கேள்வி கேட்க முடியாது.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் குற்றம் சாட்டவில்லை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு பேசுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** நான் என்ன கேட்கிறேன்? ** பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் வேண்டுமென்றுதான் கேட்கின்றேன். (குறுக்கீடு) நான் கேட்கவில்லை. நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் பேச வேண்டாம். வேறு பொருள் பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடு) இதெல்லாம் வேண்டாம். நான்தான் விளக்கம் சொல்லிவிட்டேன் இல்லையா? பேரவைத் தலைவரிடம் ஆதாரங்களையெல்லாம் கொண்டு வந்து காட்டி, அனுமதி வாங்கிப் பேச வேண்டும். அனுமதியில்லாமல் பேசினால் அது அவைக் குறிப்பில் ஏறாது. நீக்கிவிட்டேன், நீங்கள் வேறு பொருள் பற்றிப் பேசுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** நான் இந்த அவைக்கு முரணாக எதுவும் பேசவில்லை. நீதிபதிகள் தீர்ப்பிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைத்தான் உங்களிடம் சொல்கிறேனே தவிர. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதன் நகலை என்னிடம் கொண்டு வந்து காட்ட வேண்டும்.

**திரு. அ. கணேஷ்குமார்:** நான் என்ன தவறாகச் சொல்லிவிட்டேன்?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதன் நகலைக் கொண்டுவந்து என்னிடம் காட்டி அனுமதி வாங்கியிருக்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் அதையெல்லாம் கொண்டு வந்து, என்னிடம் காட்டி, அனுமதி கேட்டு அதற்கு நான் அனுமதித்திருந்தால் நீங்கள் பேசலாம். அனுமதிக்காதவற்றை நீங்கள் பேசக் கூடாது. அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. நீங்கள் வேறு பொருள் பற்றிப் பேசுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** நான் என்ன தவறாகப் பேசியிருக்கிறேன்?

*பிற்பகல் 2-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரும்பத் திரும்ப இதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. நீங்கள் பேசியதை நான் நீக்கியாகிவிட்டது. வேறு சப்ஜெக்ட்டை பேசுங்கள். (குறுக்கீடு) நான் உங்களைப் பேச அனுமதித்திருக்கிறேன். வேறு சப்ஜெக்ட்டை பேசுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** நான் என்ன பேசினாலும், தேவையான விஷயங்களைக் கேட்கும்போது அவைக் குறிப்பிலிருந்து நீக்குவீர்கள் என்றால், என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். என்னுடைய அனுமதியில்லாமல், ஆதாரத்தைக் கொண்டு வந்து காட்டாமல் நீங்கள் பேசியதால், அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். நீங்கள் வேறு சப்ஜெக்ட்டை பேசுங்கள். உங்களுக்கு மைக் கொடுத்திருக்கிறேன். கொடுத்திருக்கிற வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்துங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** நான் என்ன பேச வேண்டும் என்பதை உங்களிடம் முன்னாலேயே எழுதிக் கொடுத்து, அனுமதி வாங்கிவிட்டுத்தான் பேச வேண்டுமா? நான் அதைத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சில விவரங்களைக் குறித்துப் பேசுவதற்குமுன் என்னிடம் ஆதாரத்தைக் கொண்டுவந்து காண்பிக்க வேண்டுமல்லவா?

**திரு. அ. கணேஷ்குமார்:** நான் தவறாக எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். பேரவைத் தலைவரை நீங்கள் கேள்வி கேட்க முடியாது. நான் அளித்த தீர்ப்பின்மீது நீங்கள் மேற்கொண்டு எதுவும் பேசக் கூடாது. புதிதாகப் பேசுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்கிறேன். எந்தத் தவறான விஷயத்தையும் நான் இங்கே பதிவு செய்யவில்லை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? இல்லையென்றால், வேறு உறுப்பினரைப் பேசுவதற்கு அழைக்க வேண்டிவரும். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் இன்னும் இருக்கிறது. (குறுக்கீடு) உங்களிடம் விவாதம் செய்வதற்கு நேரமில்லை. பேரவைத் தலைவருடைய தீர்ப்பின்மீது நீங்கள் மேற்கொண்டு பேசக் கூடாது. நீங்கள் வேறு சப்ஜெக்ட்டை பேசுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** அனைத்து விவரங்களையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்வது மாதிரியெல்லாம் நீக்க முடியாது. நீங்கள் வேறு சப்ஜெக்ட்டை பேசுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** 2011 ஆம் ஆண்டு சட்டப் பேரவை தேர்தலுக்கான அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுவிட்டதாக நேற்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். **

மாறாக, சுதந்திரம் அடைந்து 2011 ஆம் ஆண்டு வரை 64 ஆண்டுகளில் தமிழ்நாடு பெற்றிருந்த கடன் ஒரு இலட்சம் கோடி ரூபாய் ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நாளும் எதிர்க்கட்சிகள் இந்தக் கடனைப்பற்றி கேள்வி கேட்பதும், அதற்கு உரிய, உரிய, உரிய, உரிய பதிலை நான் சொல்வதும் வாடிக்கையாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேஷ்குமார், நான் பதில் சொல்லும்போது இந்தச் சபையில் இருக்க வேண்டும். உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கும்போது பேசிவிட்டு, சட்டமன்றத்தைவிட்டுச் சென்றுவிடுகிறீர்கள். மற்ற உறுப்பினர்கள் இதுசம்பந்தமான கேள்வி கேட்கும்போது நீங்கள் இங்கு இருப்பதில்லை. ஆகவே, கடன் சம்பந்தமாக, நான் ஏற்கெனவே சொன்ன பதிலை, மீண்டும் சொன்னதாக எடுத்துக்கொண்டு, உறுப்பினர் இப்பொழுது பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர், வேறு சப்ஜெக்ட்டை பேசுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடன் பற்றியே கேட்கவில்லை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேஷ்குமார், நீங்கள் வேறு சப்ஜெக்ட்டை பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபைக்கு ஒழுங்காக வந்திருந்தால் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிந்திருக்கும். பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காகப் போகாத பிள்ளைக்கு எப்படி சப்ஜெக்ட் தெரியும்? அதுபோல, மாண்புமிகு உறுப்பினர் சபைக்கு ஒழுங்காக வருவதுமில்லை. சப்ஜெக்ட் தெரிந்த விவரமான ஆளாக இருந்து, நீங்கள் மட்டும் இதைக் கண்டுபிடித்துச் சொல்லவில்லை. இங்கே இருக்கிற எல்லோரும் விவரமானவர்கள்தான். பலமுறை இந்தப் பிரச்சினை குறித்துப் பேசியிருக்கிறார்கள். ஒருமுறைக்குப் பலமுறை நமது நிதியமைச்சர் அவர்களும் அதற்குரிய விளக்கங்களை

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அளித்திருக்கிறார்கள். அதற்குப் பின்பும், நீங்கள் சபைக்கு வராமலிருந்துவிட்டு, பதிலே சொல்லவில்லை, பதிலே சொல்லவில்லை என்று சொன்னால் எப்படி? தூங்குகிறவனை எழுப்பலாம், தூங்குவதுபோல நடிக்கிற உங்களைப்போன்ற ஆட்களை எப்படி எழுப்புவது? (மேசையைத் தட்டும் ஒலி) கடன் குறித்து பலமுறை நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். அதையே விளக்கமாக ஏற்றுக்கொண்டு, அடுத்த சப்ஜெக்ட்டை பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர், அந்தக் கட்சியை ஆரம்பிக்கும்போது, "நானோ, என் குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ, என் உறவினர்களோ யாரும் பொறுப்புக்கு வரமாட்டோம், அப்படி வந்தால், என்னைக் கேள்வி கேளுங்கள், என்னை முச்சந்தியில் நிறுத்தி சவுக்கால் அடியுங்கள்" என்றெல்லாம் பேசினார். அவர் சொன்ன வார்த்தையை நான் சொல்கிறேன். அந்த வாக்குறுதியை அவருடைய தலைவர் முதலில் காப்பாற்றினாரா என்று கேளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பேசிக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் கூறியது பற்றி பேச வேண்டுமென்று சொன்னால், முன்னாள் முதலமைச்சர், மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பல கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அதைக் குறித்தெல்லாம் விவாதிக்க வேண்டுமென்று சொன்னால், நேரம் அதிகமாகும். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்பது, கடனைப் பற்றிக் கேட்கவில்லை, கடன் எவ்வளவு இருக்கிறது என்று இடைக்கால நிதிநிலை அறிக்கையில் தெளிவாகக் கொடுத்திருக்கிறீர்கள். என்னென்ன கடன் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

[திரு. அ. கணேஷ்குமார்] [2016 பிப்ரவரி 19

**கடன் குறித்த விவரம் என்னவென்று ஏற்கெனவே எனக்குத் தெரியும். அதற்கு வெள்ளை அறிக்கையைக் கேட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், மின்சார வாரியத்திற்கும், பொதுத் துறை நிறுவனங்களுக்கும் சேர்த்து எவ்வளவு கடன் என்று வெள்ளை அறிக்கை வேண்டுமென்றும் கேட்டிருக்கிறேன். இதுவரை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை.

பருத்தி உற்பத்தி இரண்டு மடங்கு அதிகமாக்கப்பட்டு, பருத்தி விவசாயிகளின் தனி நபர் வருமானம் இரண்டு மடங்கு ஆக்கப்படும் என்றீர்கள். ஆனால், பருத்தி உற்பத்தியோ குறைந்திருக்கிறது. விவசாயிகளைப் பங்குதாரர்களாகக் கொண்ட 6 ஆயத்த ஆடை சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் தொடங்கப்படும் என்றும், இதன்மூலம் 70 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும் கூறியிருக்கிறீர்கள். அதுவும் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இருண்ட தமிழகம் ஒளிபெற 2013 ஆம் ஆண்டு 5,000 மெகா வாட் மின்சாரம் கூடுதலாக உற்பத்தி செய்யப்படும் என்று தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்று, ஒரு திட்டம் தீட்டி, இதுவரை எத்தனை மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தி குறித்து நான் இந்த அவையில் பல முறை சொல்லியிருக்கிறேன். திரு. அ. கணேஷ்குமார் அவர்கள் அப்போது அவைக்கு வராததால், உங்களுக்காக மீண்டும் ஒரு முறை திரும்பச் சொல்கிறேன். தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய மொத்த நிறுவு திறன் இன்றைக்கு 26,806.50 மெகா வாட். சரி தானே! அதற்குப் பிறகு, நீர் மின் உற்பத்தித் திட்டத்திலே 2,288 மெகா வாட், அனல் மின் திட்டத்திலே 4,660 மெகா வாட், எரிவாயு மின் திட்டத்தில் 516 மெகா வாட், மத்திய தொகுப்பு மின் நிலையங்களிலிருந்து 5,464 மெகா வாட். மின்

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2016 பிப்ரவரி 19] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

கொள்முதலைப் பொறுத்தவரையில், 15 ஆண்டுகளுக்குக் குறைந்த விலையிலேதான் மின் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. Independent Power Purchase Plan என்று தனியார் மின் உற்பத்தி நிறுவனங்கள் மின் உற்பத்தி செய்து, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மட்டுமே வழங்கினால், அதை நிறுவு திறனில் சேர்த்துக்கொள்வது வழக்கம், அதிலே 958 மெகா வாட். அடுத்து, தன்பயன் மின் உற்பத்தி நிலையங்கள், 986.5 மெகா வாட். நீண்டகால அடிப்படையில் 15 ஆண்டுக் காலத்திற்கு ஒப்பந்தம் 2,830 மெகா வாட். நடுத்தரக் கால மின் உற்பத்தி 300 மெகா வாட். ஆக மொத்தம் 18,002.5 மெகா வாட். இவையெல்லாம் மரபு சார்ந்த மின் உற்பத்தி.

மரபு சாராத எரிசக்தி ஆதாரங்கள்மூலம் காற்றாலை மின் உற்பத்தி 7,506 மெகா வாட், சூரிய ஒளி மின் உற்பத்தி 409 மெகா வாட், தாவரக் கழிவுகளிலிருந்து 230 மெகா வாட், இணை மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து 659 மெகா வாட். ஆக 8,804 மெகா வாட் அளவிற்கு இங்கு மரபுசாரா எரி சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. ஆக மொத்தம், தமிழகத்திலே இன்றைக்கு 26,806.50 மெகா வாட் அளவிற்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இதிலே 4,455.50 மெகா வாட் அளவிற்கு, நமது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே புதியதாக நிறுவு திறன் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 4,455 மெகா வாட்டுக்கு உரிய விளக்கங்களை எப்போது வேண்டுமென்றாலும் என்னிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். மற்றவர்களின் நேரத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதற்காகச் சுருக்கமாகச் சொல்கிறேன். கூடுதல் விளக்கம் வேண்டுமானால் என்னிடம் தனியாக வந்துகூட கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். எல்லா விவரங்களையும் உங்களுக்கு நாங்கள் தெரிவிக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அளவில் சாதனைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி, தமிழகத்தை மீண்டும் ஒளிமயமான தமிழகமாக உருவாக்கியிருக்கிறார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். பாராட்ட மனம் இல்லையென்றாலும், நீங்கள் குறை சொல்லாமலாவது இருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல மனம் படைத்தவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். கள்ள மனம் படைத்தவர்கள் குறை சொல்லிக்

கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் இப்போது நடக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரத்தின் அருமை கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தனியாக வந்து தெரிந்துகொள்கிறேன். ஏனென்று சொன்னால், நிறைய கேள்விகள் என்னிடம் இருப்பதால், பின்னர் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பால் உற்பத்தியை தினமும் ஒரு கோடி லிட்டர் அளவிற்குப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் நேரத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டது. அந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை.

பிற்பகல் 2-50

சென்னை மாநகரில் உள்ள ஏழையெளிய மக்கள் பயனடையும்வகையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தினமும் 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சில நாட்களுக்கு முன்னர் அறிவித்தார்கள். இந்தத் திட்டம் எந்தத் தேதியிலிருந்து செயல்படுத்தப்படும் என்று இன்னமும் அறிவிக்கப்படவில்லை. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் முடிவதற்கு எத்தனை மாதங்கள் தேவைப்படும்? வரும் 1 ஆம் தேதிக்குப் பிறகு தேர்தல் அட்டவணை வெளியிடப்பட்டுவிட்டால், அந்தத் திட்டங்களெல்லாம் எவ்வாறு செயல்படுத்தப்படும்? அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை. அந்தத் திட்டங்கள் குறித்த தெளிவான விளக்கங்களும் இன்னமும் வழங்கப்படவில்லை. ஏனென்றால், ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதந்தோறும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வீடுதோறும் வந்து சேரும் என்று 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற பட்ஜெட் கூட்டத் தொடரின்போது கூறப்பட்டது. அந்தத் திட்டம் குறித்த எந்தத் தெளிவான பார்வையும் இந்த நேரத்தில் இல்லை. இதையெல்லாம் கணக்கில் வைத்து, என்னுடைய தொகுதியைச் சார்ந்த அதிலும். . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தைப் பற்றிக் கூறினார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தத் திட்டத்தை அறிவித்தாலும், அந்தத் திட்டம் சரியான முறையில் மக்களைச் சென்றடையும்; மாண்புமிகு உறுப்பினர் கவலைப்பட வேண்டியதில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் திட்டத்தை அறிவித்துவிட்டார்கள்; அது மக்களைச் சென்றடையும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில் குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக கிட்டத்தட்ட 21,350 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வெறும் 7,650 கோடி ரூபாய்தான் ஒதுக்கினார்கள். குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக இவ்வளவு அதிகமான நிதியை ஒதுக்கி, எங்கும் குடிநீர்ப் பிரச்சினை இல்லாமல், அதைத் தீர்த்து வைத்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கவலைப்பட வேண்டியதில்லை; மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தத் திட்டத்தைத் துவக்கி வைப்பதை நீங்களே பார்ப்பீர்கள். தேர்தல் நேரத்தில் அறிவித்த எல்லா வாக்குறுதிகளையும், 54 வாக்குறுதிகளையும் நிறைவேற்றிய முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றி. அப்படி எல்லா திட்டங்களும் வந்துவிட்டால், எங்களுக்கும் மகிழ்ச்சிதான். பேரவை விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட பல

திட்டங்களும் இன்னும் மக்களைச் சென்றடையவில்லை என்ற காரணத்தினால்தான் நான் கேள்வியை எழுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

என்னுடைய செஞ்சி தொகுதியைப் பொறுத்தவரையில், நான் இந்த அவையில் வைத்த ஒரு சில கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல், செஞ்சி தொகுதி மக்கள் நீண்டநாட்களாகக் கோரியபடி செஞ்சிக் கோட்டையை சுற்றுலா மையமாக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுகுறித்த கோரிக்கை இந்த ஆட்சி பொறுப்பேற்ற 2011 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இந்த அவையில் வைக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து எந்தவிதமான நடவடிக்கையும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், அன்புச் சகோதரர் திரு. அ. கணேஷ்குமார் அவர்களுக்கு செஞ்சிக் கோட்டை மத்திய அரசினுடைய தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பது நன்றாகத் தெரியும். ஏற்கெனவே நாங்கள் அங்கு சுற்றுப் பயணம் வந்தபோது, அவரும் வந்திருந்தார். அங்கு சாலைகள் மற்றும் மற்ற சீரமைப்புப் பணிகளுக்காக, சுற்றுலாத் துறை சார்பாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டன. செஞ்சிக் கோட்டை மத்திய அரசினுடைய தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் அனைவரும் வந்து செல்லக்கூடிய அளவில் செஞ்சிக் கோட்டையை தொல்லியல் துறை பாதுகாத்து வருகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் வந்து பார்வையிட்டார்கள்; அதற்கான திட்டப் பணிகளையெல்லாம் மேற்கொண்டார்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மத்திய அரசு தடையாக இருக்கிறது என்பதைத்தான் நான் கடைசியாகக் கூற வந்தேன். மத்திய அரசினுடைய தொல்லியல் துறை தடையாக இருக்கிறது. அந்தத் தடையை நீக்கி, அந்தப் பகுதிக்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை செய்து தர வேண்டும். ஏனென்றால், சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதற்கான வாய்ப்பு அங்கே இருக்கிறது. மாதந்தோறும் அமாவாசை தினத்தில் மேல்மலையனூர் கோயிலுக்கும், பௌர்ணமி தினத்தில் திருவண்ணாமலை கோயிலுக்கும் செல்லும் இலட்சக்கணக்கான பக்தர்கள் இங்கும் வந்து பார்க்கக்கூடிய விதத்தில் மையப் பகுதியில் செஞ்சிக் கோட்டை அமைந்திருக்கின்றது. எனவே, மாநில அரசு கூடுதல் முயற்சி மேற்கொண்டு, மத்திய அரசை வலியுறுத்தி, அதற்கான அனுமதியினைப் பெற்றுத் தர வேண்டுமென்றும், குறைந்தபட்சத் தேவையான தங்கும் வசதி, சிற்றுண்டி வசதி போன்றவற்றைச் செய்து தருவதற்கு முன்வர வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கின்றேனே தவிர, வேறொன்றும் சொல்லவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்தார்கள், பார்த்தார்கள். ஆனால் பணிகள் ஏதும் நடைபெறவில்லை. சுற்றுலாப் பயணிகளுக்கு இடையூறாக இன்னும் நிறைய விஷயங்கள் இருக்கின்றன.



அதேபோல், மேல்மலையனூர் ஊராட்சியில் ஒரு பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் என்று நீண்டநாட்களாகக் கோரி வருகின்றேன். அங்கு பேருந்து நிலையம் இல்லாத காரணத்தால், அமாவாசைதோறும் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், உரையை முடியுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கைகள் இரண்டை மட்டும் சொல்லி, என் உரையை முடித்துவிடுகிறேன். மேல்மலையனூர் ஊராட்சியில் பேருந்து நிலையம் மற்றும் காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், ஒவ்வொரு தடவையும் அங்கு வரக்கூடிய பக்தர்களின் பாதுகாப்பிற்காக, வளத்தி காவல் நிலையத்திலிருந்துதான் பாதுகாவலர்கள் வருகிறார்கள். அங்கு

[திரு. அ. கணேஷ்குமார்] [2016 பிப்ரவரி 19

போதுமான பாதுகாவலர்கள் இல்லாத காரணத்தால் பாதுகாப்புக் குறைபாடுகள் ஏற்படுகின்றன. எனவே, மேல்மலையனூரில் தனியாக காவல் நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், நெல் மூட்டைகளையெல்லாம் எடை போடுவதற்கு electronic weighing machine நிறுவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அரசு நிதி ஒதுக்கியும், electronic weighing machine நிறுவப்படவில்லை என்று தெரிய வருகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து கனிவோடு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நிதி ஒதுக்கப்பட்டு, திட்டப் பணிகளெல்லாம் நடந்துவிட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால், அங்கு electronic weighing machine வைக்கப்படவில்லை. செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டிலேயே மிக அதிக அளவு நெல் பரிமாற்றம் நடக்கக்கூடிய இடமாகும். செஞ்சி பொன்னி என்று ஒரு புதிய ரகப் பெயரே வரக்கூடிய அளவிற்குப் புகழ் பெற்றிருக்கிறது. அங்கிருக்கக்கூடிய வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்குப் பிரச்சினையாக இருக்கின்ற விஷயம் என்னவென்றால், தினசரி பட்டுவாடா குறித்ததாகும். வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு அதனை சரியான காலத்தில் வழங்குவதில்லை. 2, 3 மாத கால அளவிற்கு நிலுவைத் தொகை இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது.

பிற்பகல் 2-55

** வியாபாரிகள் நிர்ணயிக்கின்ற விலையும்கூட, கிட்டத்தட்ட 2, 3 மாதங்கள் கழித்து கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை நிலவிக் கொண்டிருக்கிறது. அந்த ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். நானும் பல முறை மாவட்ட ஆட்சியரிடம் அதுகுறித்து விளக்கம் கேட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2016 பிப்ரவரி 19]

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளைகிற நெல்லை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில்தான் விற்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது. அப்படியே ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** என்பது தவறான செய்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதை விட்டுவிடுங்கள். வேறு பொருள் குறித்துப் பேசுங்கள். மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சன்ன ரக நெல்லுக்கு 70 ரூபாயும், சாதா ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு 50 ரூபாயும் கொடுத்து, இதுவரை தமிழகத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கு 39 கோடி ரூபாயை ஊக்கத் தொகையாக வழங்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஐந்தாண்டுகளில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசு வழங்கிய ஆதார விலைக்கு மேலாக ஊக்கத்தொகையாக மட்டும் 402 கோடி ரூபாயை நெல்லுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அங்கிருக்கிற நிலைமையைக் கேட்டு, சீர்செய்து தாருங்கள் என்றுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்கின்றேன். வேறு ஒன்றும் நான் கேட்கவில்லை. (குறுக்கீடு) Government record-ல் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நெல் விளைகிற எந்தப் பகுதியானாலும் உடனடியாக அந்தப் பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்திட வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அப்படி ஆணையிட்டதன் அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரத்தையும் வழங்கியிருக்கிறார்கள். நெல் விளைகிற எந்தப் பகுதியாக இருந்தாலும், அந்தப் பகுதியில் உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும். விளைகிற நெல்லும் உடனடியாக வாங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு அறிவித்த பசுமை வீடுகள் திட்டம் அனைவரையும் சென்றடைந்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அனைவரையும் சென்றடையாவிட்டாலும் 80 சதவீதம் சென்றடைந்திருக்கிறது. என்னுடைய தொகுதியில் 4, 5 ஊராட்சிகளில் ஒரே ஒரு வீடுகூட ஒதுக்கப்படாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, மழவந்தாங்கல், என்.ஆர். பேட்டை, செவலபுரை போன்ற ஊராட்சிகளில் ஒரு வீடு கூட இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனைக் கனிவோடு பரிசீலனை செய்து, அந்தப் பகுதி மக்களுக்கும் பசுமை வீடுகள் திட்டத்தின் மூலமாக வீடுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல், சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக மலையனூர் ஒன்றியம், தென்பாளை ஊராட்சிக்கு, குடிநீர் வழங்கிக்கொண்டிருந்த 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கீழே விழுந்து உடைந்ததனால், தற்போது அந்தப் பகுதிகளுக்கெல்லாம் sintex tank மூலமாகத்தான் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதுவும் சீராக செய்யப்படுவதில்லை. எனவே, ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும்



என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

இந்தப் பதினான்காவது சட்டமன்றப் பேரவையில், ஐந்தாண்டு காலம் மக்கள் பணியை ஆற்றுவதற்கு எனக்கு வாய்ப்பை வழங்கிய தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து வருகின்ற 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் மாற்றம், முன்னேற்றம் தரக்கூடிய மருத்துவர் அன்புமணி ராமதாஸ் அவர்களின் தலைமையில், மீண்டும் ஒரு முறை இதே அவையில் ஆளுங்கட்சி உறுப்பினராகப் பேசுவேன் என்ற நம்பிக்கையோடு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செஞ்சி சட்டமன்ற உறுப்பினர், திரு. கணேஷ்குமார் அவர்கள் ஒன்றை நினைவுகூர வேண்டும். 2001-ல் புதுச்சேரியில் ஆட்சி அமைப்பேன் என்று சொன்னீர்கள். 2006-ல் தமிழகத்தில் ஆட்சி அமைப்பேன் என்று சொன்னீர்கள். புதுச்சேரியில் ஏமாற்றம் வந்தது. தமிழகத்தில் மாற்றத்தில் ஏமாற்றம் வந்தது. நீண்டகாலமாக ஒவ்வொரு வருடமும், நிழல் பட்ஜெட் போடுகிறீர்கள். 15-வது சட்டமன்றப் பேரவைத் தேர்தலில், 2016-ல் நிஜ பட்ஜெட் போடுகின்ற ஒட்டுமொத்த மக்கள் சக்தியுடைய தலைவியாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வருவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்,.

பிற்பகல் 3-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றுமில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்கெல்லாம் நேரமில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, அவருடைய தொகுதியிலே பசுமை வீடுகள் வழங்க

வேண்டும் என்றும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட வேண்டுமென்றும் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியான செஞ்சி தொகுதிக்குட்பட்ட பேரூராட்சிகளில் ஊரக வளர்ச்சித் துறை மூலமாக 29,470 பணிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் செய்து தரப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 375.79 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலே அனைத்துப் பகுதிகளிலும் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 127 கோடி ரூபாய்தான் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு மடங்குக்கும் அதிகமான திட்டப் பணிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அதற்கு நன்றி சொல்லவே இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பசுமை வீடுகள் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். பசுமை வீடுகள் திட்டத்தைப் பொறுத்தளவில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3½ இலட்சம் வீடுகளை கட்டித் தருவதாக அறிவித்து, இன்றைக்கு முழுமையாக அனைத்துத் தொகுதிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இடம் தேர்வு செய்யப்பட்டு, பட்டா போன்றவை சரியான முறையில் இருந்தால், எந்தப் பாகுபாடும் இல்லாமல் சரியான முறையில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, 3 இலட்சம் வீடுகளும் கட்டி முடிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு I.A.Y. வீடுகளுக்கு ஒதுக்கப்பட்டு வந்த நிதி ரூ.70,000/-தான். அதில் மாநில அரசின் பங்குத் தொகை ரூ.35,000/-; மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.35,000/- ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் I.A.Y. திட்டத்தின்கீழ் ரூ.1,20,000/- கொடுக்கிறார்கள். அதில் மாநில அரசின் பங்குத் தொகை ரூ.85,000/-. மத்திய அரசாங்கம் வெறும் 35,000/-தான் கொடுக்கிறது. அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு ரூ.1,20,000/-க்கும் கூடுதலாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கழிப்பிடம் கட்டக்கூடிய நிதியிலிருந்தும், MGNREGS திட்டத்திலிருந்தும் கிட்டத்தட்ட ரூ.1,48,000/- வரை இந்த வீடுகளுக்குக் கொடுக்கிறார்கள். இந்தத் திட்டமெல்லாம் வேறு எங்கும் கிடையாது. குஜராத், உத்தரப்பிரதேசம், மேற்கு வங்காளம், ஜார்கண்ட் மற்றும் பீஹார் போன்ற மாநிலங்களிலே இதுபோன்று



கூடுதலாக வழங்கப்படுவதில்லை. மத்திய அரசின் இந்தத் திட்டத்தைக்கூட சிறப்பான முறையிலே செயல்படுத்தி வருகிறார்கள். இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உங்கள் தொகுதிக்குக்கூட நிறைய வீடுகளைத் தந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள், சுங்கக் கட்டணத்தைப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். தமிழகத்திலே 42 சுங்கச் சாவடிகள் இருக்கின்றன. அவற்றில் 41 சுங்கச் சாவடிகளில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் சுங்க வரி வசூலிக்கப்படுகின்றது. மற்றொன்று, தமிழ்நாடு தேசிய நெடுஞ்சாலைத் துறை அலகின் மூலமாக சுங்க வரி வசூலிக்கப்படுகின்றது. 1997 ஆம் ஆண்டு, சுங்க வரிக் கொள்கையின்படி அமைக்கப்பட்ட 22 சுங்கச் சாவடிகளுக்கு ஆண்டுக்கு ஒரு முறை மொத்த விலைக் குறியீட்டின் உயர்வில்-Whole Sale Price Index அடிப்படையில் சுங்கக் கட்டணம் செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி உயர்த்தப்படுகின்றது. அதேபோல 2008 ஆம் ஆண்டு, சுங்க வரிக் கொள்கையின்படி அமைக்கப்பட்ட 19 சுங்கச் சாவடிகளுக்கு ஆண்டுக்கு ஒரு முறை மொத்த விலைக் குறியீட்டின் உயர்வில்-Whole Sale Price Index அடிப்படையில் சுங்கக் கட்டணம் ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி உயர்த்தப்படுகின்றது.

தமிழ்நாடு தேசிய நெடுஞ்சாலை அலகின்மூலம் நடத்தப்பெறும் ஒரு சுங்கச் சாவடிக்கு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை, ஏப்ரல் மாதம் சுங்கக் கட்டணம் உயர்த்தப்படுகின்றது. சுங்கக் கட்டணம் நிர்ணயிக்கும் முறை ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் இலகுரக வாகனம், கனரக வாகனம் மற்றும் பல சக்கர-multi axle வாகனங்களுக்கு, 2008-சுங்கச் சாவடி கொள்கையின்படி அடிப்படை சுங்கமாக ஒரு தொகை நிர்ணயிக்கப்படும். பின்னர், அச்சாலையில் 10 கோடி ரூபாய்க்கு மேல் பாலங்கள் மற்றும் சர்வீஸ் சாலைகள் அமைக்கப்படுகின்றபொழுது, அவற்றின் மொத்தச் செலவை 5 கோடியால் வகுத்து நிர்ணயிக்கப்படும் தொகையைக் கணக்கிட்டு அடிப்படைச் சுங்கத்துடன் சேர்த்து

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2016 பிப்ரவரி 19

வசூலிக்கப்படும். அடுத்த ஆண்டு சுங்கக் கட்டணத்தை நிர்ணயிக்கும்போது, மேற்கண்ட மொத்த சுங்கத் தொகையை அடிப்படையாகக் கொண்டு மொத்த விலைக் குறியீட்டின் உயர்வில்-Whole Sale Price Index அடிப்படையில் சுங்கக் கட்டணம் ஒவ்வோர் ஆண்டும் 1997, 2008 ஆம் ஆண்டு சுங்கக் கொள்கையின்படி ஆண்டுதோறும் உயர்த்தப்படுகின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த உயர்வு தோராயமாக, 3 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சுங்கக் கட்டணம் மாநில அரசால் நிர்ணயிக்கப்படுவதில்லை. மத்திய அரசுதான் சுங்கக் கட்டணத்தை நிர்ணயிக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) நேரமில்லை, பதிலுக்குப் பதில் எல்லாம் பேசிக் கொண்டிருக்க முடியாது, திரு. கணேஷ்குமார். (குறுக்கீடு) இன்றைக்கு நேரமில்லை. திரு. ஜே.ஜி. பிரின்ஸ், பேசுகிறீர்களா அல்லது வேறு உறுப்பினர் யாரையாவது பேச அழைக்கவா? (குறுக்கீடு)

**திரு. அ. கணேஷ்குமார்:** நான் அவருக்கு நன்றிதான் சொல்கிறேன், வேறொன்றுமில்லை. (குறுக்கீடு) நான் ஒரு கோரிக்கைதான் வைக்கிறேன், வேறொன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** என் தொகுதி சம்பந்தமான ஒரு கோரிக்கையை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமில்லை, உட்காருங்கள். திரு. பிரின்ஸ், பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு)

**திரு. அ. கணேஷ்குமார்:** ஒரே ஒரு கோரிக்கை மட்டும்தான்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** நான் எப்படிப் பேசுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் பேசவில்லையா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். (குறுக்கீடு) அப்படியானால் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)



2016 பிப்ரவரி 19]

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒரு நிமிடம் அவருக்கு வாய்ப்புக் கொடுங்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 3-05

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம் வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உங்களுடைய நேரம் போகிறது. (குறுக்கீடு)

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் உரையைத் தொடங்கவேயில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் பேசவில்லையென்றால், நான் ஒன்றும் செய்ய முடியாது. (குறுக்கீடு)

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு) இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு நான் நன்றி சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு)

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், 5 ஆண்டுகள் என்னுடைய பணியைச் செய்வதற்கு ஒத்துழைத்த (குறுக்கீடு) அன்பிற்குரிய அமைச்சர் பெருமக்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வாழ்த்துகளையும், வணக்கங்களையும் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவையிலிருந்து வெளியேறினார்.)

இந்த அவையிலே பலமுறை நான் பேசுவதற்கு, அதிகமான கேள்விகளைத் தொடுப்பதற்கு நீங்கள் வாய்ப்பைக்

கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறை சொல்வதைவிட, சில விஷயங்களை மட்டும் சுட்டிக்காட்டுவது சிறந்தது. காங்கிரஸ்காரர்களுடைய பாரம்பரியம் அப்படித்தான், அதனால்தான் சொல்கிறேன். பல்வேறு வகைகளிலே குறைகள் சொன்ன அமைச்சர்கள் உண்டு; நண்பர்கள் உண்டு. எங்கள் கட்சியைக் குறை சொன்னதும் உண்டு. அதைப் பொறுத்துக் கொள்வதற்கான சக்தியும் எங்களுக்கு உண்டு. ஏனென்றால், அந்தச் சக்தியால்தான் மீண்டும் நாங்கள் மத்தியிலாவது ஆட்சிக்கு வருவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. நான் உள்ளதைச் சொல்ல வேண்டும்; முடியாததை முடியும் என்று சொல்வதற்கு நான் தயாராக இல்லை.

முதியோர் உதவித் தொகை வழங்குவதிலே பிரச்சினை உள்ளது. Practical ஆக நடந்து கொண்டிருக்கின்ற பிரச்சினை; ** என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி ஏதேனும் அவருடைய கவனத்திற்கு வருமேயானால், ** அவர் அதை மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கோ அல்லது Deputy Collector (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அவர்களுடைய கவனத்திற்கோ அல்லது R.D.O. அவர்களுடைய கவனத்திற்கோ கொண்டு செல்லலாம். ஆகவே, அவர் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். ** என்று அவர் சொன்ன அந்தக் கருத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.ஜி. பிரின்ஸ், எதற்காக வம்பு செய்கிறீர்கள்? (குறுக்கீடு) ** என்று அவர் குறிப்பிட்டது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் வேறு சப்ஜெக்ட்டை பேசுங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** நான் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்கள் பட்டியலில் ** காரணமாக ஏற்படுகிற பிரச்சினையைத்தான் நான் குறிப்பிடுகிறேன். நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுடைய பட்டியலில் இருப்பவர்களுக்கு மாத்திரம் அல்ல; ஆதரவற்றோர் என்பதற்காக இரண்டு அரசாணைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்பொழுது வழங்கியிருக்கிறார்கள். 5 ஆயிரம் ரூபாய் என்றிருந்த சொத்து மதிப்பை 50 ஆயிரம் ரூபாயாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். அதேபோல, மகன், மகள் இருந்தால், முன்பு அவர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் கிடையாது. இப்போது அவர்களுக்கும் முதியோர் ஓய்வூதியம் வழங்கிட வேண்டுமென்று தாயுள்ளத்தோடு ஆணையிட்ட தலைவி, நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலேதான், 4,200 கோடி ரூபாயை முதியோர் ஓய்வூதியமாக ஒவ்வோராண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்குகிறார்கள். ஏறத்தாழ 32 இலட்சம் பேர் அதன்மூலம் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள். அவருடைய மாவட்டத்திலோ அல்லது அவருடைய தொகுதியிலோ, இன்னும் தகுதியுள்ள நபர்கள் இருப்பார்களானால், அதையும் மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், தகுதியுள்ள அனைவருக்கும் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். ஏனென்றால், இதிலே ceiling எதுவும் கிடையாது. மாண்புமிகு அம்மா அவர்கள் இதிலே வரையறை எதையும் நிர்ணயிக்கவில்லை. தகுதியுள்ள அனைவருக்குமே வழங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேசமயத்தில், கொடுக்காதவர்களுக்கு கொடுக்கலாம் என்று நீங்கள் சொல்கிறீர்கள். அது வரவேற்கக்கூடியது. நிச்சயமாக நீங்கள் கொடுக்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை சொல்ல விரும்புகிறேன்.

*பிற்பகல் 3-10*

விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர் போன்ற பொருட்களையெல்லாம் இந்த அரசு கொடுக்கிறது. உண்மையிலேயே நீங்கள் தவறாக நினைக்கக்கூடாது. நான் குற்றம் சொல்பவன் அல்ல. எனக்கு அது பிடிக்காது. நீங்கள் வழங்கும் பொருட்களெல்லாம் சரியாகவே இல்லை. சில பொருட்கள் நன்றாக இருக்கின்றன. சரியாக இல்லாதவற்றை China made பொருட்களா என்றுகூட சிலர் கேட்கிறார்கள். எனது தொகுதியில்கூட பல பகுதிகளில் இந்தப் பொருட்கள் கொடுக்கவில்லை. அதைக் கொடுப்பதற்கு நீங்கள் முன்வர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். தரமான பொருட்களைக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய இல்லத்தரசிகளுடைய இன்னல்களைப் போக்குவதற்காக அறிவிக்கப்பட்ட அற்புதமான திட்டமான மிக்சி, கிரைண்டர், மின்விசிறி போன்ற பொருட்களை வழங்குகின்ற திட்டத்தைப் பற்றிக் குறை சொன்னார்கள். இந்த ஐந்தாண்டு காலத்தில், இந்தச் சட்டமன்றத்தில் இதுபோன்ற ஒரு குற்றச்சாட்டை யாரும் எழுப்பவில்லை. சேராத இடத்திலே அவர்கள் சேர்ந்த காரணத்தினால் இப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டை வைக்கின்றார்.



மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சொன்ன சொல்லை நிறைவேற்றக்கூடிய அற்புதமான தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி) அரசால் வழங்கப்பட்ட மிக்சி, கிரைண்டர், மின்விசிறி போன்றவற்றில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால், அவற்றைப் பழுதுபார்ப்பதற்கு வட்டார வாரியாக சேவை மையங்கள் இருக்கின்றன. 2 வருடங்களுக்கு guarantee இருக்கிறது. இவ்வாறு உத்தரவு கொடுத்திருக்கின்ற தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்களது வீட்டில் இருக்கின்ற மிக்சி, கிரைண்டர், மின்விசிறி போன்ற பொருட்களில் வேண்டுமானால் கோளாறு இருக்கலாமே தவிர, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுக்கின்ற மிக்சி, கிரைண்டர், மின்விசிறியிலே எந்தவிதமான கோளாறும் ஏற்படாது (மேசையைத் தட்டும் ஒலி) ** என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் சம்பந்தமாக தனிப்பட்ட முறையில் கூறிய வாசகம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** என்னைக் கொச்சைப்படுத்திப் பேசினாலும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துகளைச் சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால், அது எங்களுடைய பண்பாடு. சேராத இடத்தில் சேர்ந்தோம் என்று எங்களைச் சொல்கிறீர்கள். எங்கு நன்மை நடக்குமோ, அங்கேதான் நன்மை நடக்கும். மனிதன் நினைப்பதல்ல, இறைவன் நினைக்க வேண்டும். அதுதான் என்னுடைய விருப்பம். ஆகவே, நான் குற்றச்சாட்டுக்கு வரவில்லை. நீங்கள் சொல்லிவிட்டாலும் நான் அதைப் பொறுத்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் 3 இலட்சம் பசுமை வீடுகள், நெசவாளர்களுக்கு பத்தாயிரம் பசுமை வீடுகள், பேரூராட்சியில் வாழும் வீடற்றவர்களுக்கு இருபதாயிரம் பசுமை வீடுகள் கட்டித் தரப்படும் என்று நீங்கள் சொன்னீர்கள். என்னுடைய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தொகுதியில்கூட, பலருக்கு இன்னும் பசுமை வீடுகள் கிடைக்கவில்லை. இனிமேலாவது, குறுகிய காலத்தில் வீடுகள் கொடுக்க நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மத்தியிலே ஓர் ஆட்சி இருக்கிறது. ** ஆட்சி செய்கின்றார்கள். ** போன்று நம்முடைய பிரதமர் சுற்றி வருகின்றார். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதற்காக தனிப்பட்ட முறையில் விமர்சனம் செய்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்கள் ** என்றும் ** என்றும் சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. ஜேஜி. பிரின்ஸ்:** மத்தியில் காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில் கச்சா எண்ணெய்யின் விலை barrel ஒன்று 170 ரூபாய். ஒரு லிட்டர் பெட்ரோல் 71 ரூபாய்க்கு நாங்கள் கொடுத்தோம். ஆனால், இன்றைக்கு கச்சா எண்ணெய் விலை barrel ஒன்று 27 ரூபாய். அப்படியானால் 15 ரூபாய்க்கு பெட்ரோலும், 17 ரூபாய்க்கு டீசலும் கொடுக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அரசு பல்வேறு கடிதங்களை மத்திய அரசுக்கு நேரடியாக எழுதுகிறது, பல்வேறு திட்டங்களைக் கேட்கிறது. பெட்ரோல், டீசல் பிரச்சினையைப் பற்றி ஏன் கேட்கவில்லை? நீங்கள் இதைப் பற்றியும் கேட்க வேண்டும் என்று நான் வேண்டுகின்றேன். விலையைக் குறைக்கச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விலைவாசி குறையவில்லை, குறையவில்லை என்று சொல்கிறீர்கள். ஏன் குறையவில்லை? உலக அளவில் கச்சா எண்ணெய்யின் விலை குறைந்திருக்கின்றபோது, இப்போதாவது நீங்கள் மத்திய அரசிடம் கேட்டு, பெட்ரோல், டீசலின் விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கக்கூடாதா என்பதுதான் என்னுடைய கேள்வி.

அடுத்து, கேன்சர், இருதய நோய், கல்லீரல் சம்பந்தமான நோய்களுக்கு 30 ரூபாய்க்குக் கிடைத்து வந்த capsule இன்றைக்கு 300 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பிற்பகல் 3-15

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்கள், பெட்ரோல், டீசல் விலை உயர்ந்தபோதெல்லாம் நீங்கள் குரல் கொடுப்பதில்லை என்ற தவறான தகவலை இங்கே சொல்கின்றார். (குறுக்கீடு) பிறகு என்ன சொன்னீர்கள்? (குறுக்கீடு) முதலில் சொன்னீர்கள். பெட்ரோல், டீசல் விலை உயரும்போதெல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெட்ரோல் விலையையும், டீசல் விலையையும் குறைக்க வேண்டும் என்று ஒவ்வொரு முறையும் பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதிக்கொண்டே இருக்கிறார்கள், கோரிக்கையினை மாண்புமிகு அம்மா அவர்கள் வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதைப் பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜேஜி. பிரின்ஸ்:** மருந்துகள் விற்பனையில் மிகப் பெரிய அளவில் குளறுபடிகள் உள்ளன. மூன்று ரூபாய்க்கு விற்கும் மருந்துகள் 16 ரூபாய்க்கு விற்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசின் வரிச் சலுகை இரத்து அறிவிப்பு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மருத்துவமனையில், மருத்துவத் துறையில் அந்நிய முதலீட்டை அனுமதித்ததால், உள் நாட்டு மருந்து நிறுவனங்கள் பல, வெளிநாட்டு மருந்து நிறுவனங்களால் வாங்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. வெளிநாட்டு மருந்து நிறுவனங்களுக்கு, உள் நாட்டு மருந்து கம்பெனிகள் விலைபோய்விட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மருந்துகளின் விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேலையில்லாத் திண்டாட்டம். தமிழகத்தைப் பொறுத்தமட்டில், சுமார் 29 இலட்சம் மக்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். பல்வேறு முயற்சிகளை நீங்களும் எடுத்திருக்கிறீர்கள், இல்லையென்று நான் சொல்லவில்லை. இப்படி இருக்கக்கூடிய சூழ்நிலையில், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில்லை என்றால் வருடந்தோறும் படிக்கிற இளைஞர்களுக்கு, படித்து முடித்த இளைஞர்களுக்கு எப்படி வேலை வாய்ப்பு கொடுப்பது?

அவர்களுக்கு என்ன ஏற்பாடுகளைச் செய்வது? குறைந்த காலமாக இருந்தாலும், அதற்கான யுக்திகளைப் பயன்படுத்தி ஒரு சில மாதங்களிலேயே அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இலவச பஸ் பாஸ் கொடுத்திருக்கிறீர்கள். சென்னையைச் சேர்ந்த மக்களுக்குத்தான் அது பயன்படுகிறதே தவிர தமிழக மக்கள் அனைவருக்கும் அது முழுமையாகப் பயன்படவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள், தேர்தல் அறிக்கையிலே அனைத்து முதியவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். நான் வேண்டிக்கொள்வது, அரசுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டாலும், பாரபட்சம் இல்லாமல் அனைவருக்கும் இலவச பஸ் பாஸ் கொடுப்பது நல்லது, அதை நான் இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு முதல்வர் அவர்கள், தேர்தல் அறிக்கையில் சொன்னவற்றை நிறைவேற்றிவிட்டேன் என்று சொன்னார்கள். 2011 ஆம் ஆண்டு அருமனையில் நடந்த கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்துகொண்டார்கள். நானும் அதிலே கலந்துகொண்டேன். ஒரு வேளை உங்களுக்கு என்னைத் தெரியாமல் இருந்திருக்கலாம். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் கிறிஸ்தவ மக்கள் வழிபாடு செய்வதற்கு தகுதியான இடத்திற்கு அனுமதி பெறுவது கஷ்டம். இந்தப் பிரச்சினை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது. அந்த நிகழ்ச்சியிலே, "கர்த்தருடைய கிருபையால் பட்டா நிலங்களிலே கிறிஸ்தவர்கள் வழிபாடு செய்வதற்கு தடைகள் இருந்தால், நான் ஆட்சிக்கு வந்தால் தடைகள் நீக்கப்படும். இனிமேல், கிறிஸ்தவர்கள் வழிபாடு செய்வதற்கு பட்டா நிலங்களிலே தடை இருக்காது, அதற்கான ஏற்பாடுகளைச் செய்வேன்" என்று வெளிப்படையாகச் சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய அனைத்து கிறிஸ்தவ மக்களுடைய சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். இன்று நூற்றுக்கணக்கான ஆலயங்கள், அனுமதியின்றி கட்ட முடியாமல் 20 வருடங்களாக இருக்கக்கூடிய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத வழிப்பாட்டுத் தலங்களைக் கட்ட உரிய ஆவணங்களுடன் அந்தந்த மாவட்ட நிருவாகத்தை அணுகி அனுமதி பெற வேண்டும். மதக் கலவரங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெற வேண்டும். நடைமுறையில் இருக்கக்கூடிய, பல ஆண்டுகளாக இருக்கக்கூடிய, வழிபாடு நடத்திக்கொண்டிருக்கக்கூடிய ஆலயங்களைக்கூட புதுப்பிப்பதற்கு, renovate செய்வதற்கு அனுமதி கேட்டால் கிடைக்காது. எங்கேயாவது ஒருத்தன், ஒரு R.S.S-காரன், எங்கேயாவது ஒரு B.J.P-காரன், எங்கேயாவது, எந்த ஊரிலிருந்தாவது ஒரு complaint பண்ணினால் அப்படியே விட்டுவிடுவார்கள். அது கிடப்பிலே போடப்படுகின்ற சூழ்நிலை, ஆராதனை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவேதான், இந்த அவையிலே, அதற்கான ஏற்பாடுகளை நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் பணிவுடன் வேண்டுகிறேன். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில், மது விலக்குப் பிரச்சினை, முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசை குற்றம் சொல்வதுபோல, ஏதோ மத வாதம் நடத்துவதுபோல அவர் சொல்கிறார். அதைச் சரிபார்த்து, அவர் சொன்ன அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நான் அவைக் குறிப்பைப் பார்க்கின்றேன். திரு. பிரின்ஸ், பேசுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களை குற்றம் சொல்லவில்லையே, உங்களிடத்தில் வேண்டுதல்தானே வைக்கின்றேன். அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றுதான் நான் கேட்கிறேன். கிறிஸ்தவர்கள் ஆலயம் கட்டுவதற்கு இனிமேலாவது அனுமதி வழங்க வேண்டும், குறுக்கீடுகள் இருக்கக் கூடாது என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தைச் சொன்னார்கள். சமீபத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்திலேகூட, கிறிஸ்தவ பாதிரியார்கள் இடையேறிப்பாளையம், மைலேறிப்பாளையம் ஆகிய இரண்டு பகுதிகளில் சர்ச் அமைப்பதற்கு அனுமதி கேட்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக அதனைச் செயல்படுத்தியதன் காரணமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அந்த கிறிஸ்தவ மக்கள் எல்லாம் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள். ஆகவே, எங்குமே அந்த மாதிரி சூழ்நிலைகள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இந்தப் பிரச்சினையைப் பற்றி பொதுவாகப் பேச வேண்டாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நீங்கள், அப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்து, நாங்கள் தொழுகை நடத்துவதற்கு எந்தவித இடையூறும் இல்லாமல் அனுமதி கொடுத்தால் வரவேற்கக்கூடியதாகும். நான் அதைத்தான் வேண்டுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அந்த வாய்ப்பைக் கொடுங்கள் என்றுதான் கேட்கிறேன்.

மது விலக்குப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினையாகும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருத்தப்படக் கூடாது.



நான் அப்படிச் சொல்லவில்லை. பொதுவாகத்தான் சொல்கிறேன். நான் யாரையும் wound செய்து பேசவில்லை. ** Statistics சொல்கின்றது. அதற்கு அரசு காரணம் என்று நான் சொல்லவில்லை. இன்றைக்கு 1½ இலட்சம் பேர் கல்லீரல் நோயினால் கஷ்டப்படுகின்றார்கள். பல இலட்சம் மக்கள் இன்றைக்கு மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார்கள். அதனால், மதுவிலக்கை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பிரின்ஸ், நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்? ** கூறுவதற்கு ஏதேனும் ஆதாரம் வைத்திருக்கிறீர்களா? ** என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா? (குறுக்கீடு) இல்லை, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் வேறு சப்ஜெக்ட்டை பற்றிப் பேசுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவினால் தமிழக மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மதுவை ஒழித்துக் கட்டுவதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Statistics-ஐ விட்டுவிடுங்கள். நான் Statistics வைத்திருக்கிறேன். உங்களிடம் கொடுக்கவில்லை, அதுதான் mistake.

பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்தில், எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் விளாத்துறை பகுதியில் நீரேற்றும் திட்டம் வைத்திருந்தார்கள். அது அப்படியே முடக்கப்பட்டிருக்கிறது, பயன் இல்லாமல் இருக்கிறது. அதைத் தொடர்ந்து நடத்துவதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்யாறு இடதுகரைக் கால்வாய் தண்ணீர்ப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. இன்றைக்கு அந்தப் பொருள் நீதிமன்றத்தில் இருப்பதாக அறிகிறேன். அதன் நிலை எங்களுக்குத் தெரியாது. அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தனியார் காடு பிரச்சினை. ஏற்கெனவே இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த அவையில் அதைப்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பற்றி நான் ஏற்கெனவே பேசியிருக்கிறேன். அந்தக் குழுவின் தீர்ப்பு சரியாக இல்லை. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் பார்த்தால், விவசாயப் பெருமக்கள், குறிப்பாக இரப்பர் விவசாயப் பெருமக்கள் பயன்பெற முடியாது. முழுமையாகப் பயன்படுகிறவகையில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் இரப்பர் அதிகமாக இருக்கின்றது. முன்பு, ரூ.260/-, ரூ.280/- என்று விலை இருந்தது. ஆனால், இப்போது ரூ.72/-, ரூ.75/- என இருக்கிறது. ஆனால், கேரளாவில் ரூ.150/- என விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். கரும்பு, நெல் போன்றவற்றைத்தான் முக்கியமாக நினைப்பீர்கள். ஆனால், எங்களுடைய மாவட்டத்தின் நலனைக் கருதி, கேரளாவைப்போல் மானியம் வழங்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். விலை நிர்ணயம் செய்யவில்லை என்றால், இரப்பர் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுவார்கள். எனவே, விலை நிர்ணயம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்களுக்கு satellite கருவி கொடுப்பதாகச் சொன்னீர்கள். ஆழ்கடலில் மீன் பிடிக்கின்றபோது, ஆபத்தான நேரத்தில் மீனவர்களைக் கண்டுபிடிப்பதற்கு, மீனவர்களை எங்கிருந்தாலும் கண்டுபிடித்து, அவர்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், இன்னும் அதனை நடைமுறைப்படுத்தவில்லை; அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

AVM Channel, பேச்சிப்பாறை அணையைத் தூர்வாருவது சம்பந்தமாக நான் இந்த அவையிலே கேட்டு, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சம்மதம் தெரிவித்து, அறிவித்தார்கள். ஆனால், இன்னமும் அந்தப் பணி துவங்கப்படவில்லை. அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குளச்சல் தொகுதி, கடற்கரைக் கிராமங்களான மண்டைக்காடு, புதூர், கடியப்பட்டினம், குரும்பனை, சைமன் காலனி போன்ற பகுதிகளில் தூண்டில் வளைவு அமைக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். மீண்டும் அந்த வேண்டுகோளை வைக்கின்றேன். என்னுடைய தொகுதியில் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, இரணியல், காட்டாத்துறை கூட்டுக் குடிநீர்த்



திட்டத்திற்கு 169 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்தப் பணி இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

பிற்பகல் 3-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆழ்கடலிலே மீன் பிடிக்கிற மீனவர்கள் காணாமல் போகின்றபோதோ அல்லது ஏதாவது விபத்து நடந்தாலோ அதைக் கண்டுபிடிப்பதற்கு satellite மூலம் செயல்படும் பாதுகாப்புக் கருவி வேண்டுமென்று கேட்டார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விதி 110-ன்கீழ் சட்டமன்றத்திலே அறிவித்ததற்கிணங்க, மீனவர்களிடமிருந்து 18,400 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. மத்திய அரசின், Commissioner of Telecommunications-உடைய அனுமதி பெற்ற பின்னர், விரைவிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த மீனவர்களுக்கு இதனை வழங்க இருக்கிறார்கள். H.F., V.H.F. போன்ற கருவிகளையெல்லாம் வழங்க இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மீன்பிடி இறங்கு தளங்கள் வேண்டுமென்று சொல்கிறார். தமிழ்நாட்டிலே, கடற்கரையையொட்டியுள்ள 1,076 கிலோ மீட்டர் பகுதிகளில் 13 மாவட்டங்கள் இருக்கின்றன. இதிலே கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் 14 திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள். சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அவர்களைத் தூக்கிப் பிடித்தவர்கள் இவர்கள். இவர்கள் அந்த ஆட்சியிலே பங்குபெறவில்லை. ஆனால், அவர்களை காங்கிரஸ் கட்சி தூக்கிப் பிடித்தது. அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, 5 ஆண்டுகாலமாக இந்த மீன் வளத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி என்பது வெறும் ரூபாய் 538 கோடியே 40 இலட்சம் மட்டும்தான். ஆனால், இன்றைக்கு அவர் சார்ந்திருக்கிற கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

[திரு. கே.ஏ. ஜெயபால்] [2016 பிப்ரவரி 19

கொடுத்திருக்கிற நிதி ரூபாய் 458 கோடியே 60 இலட்சம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த நேரத்திலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்; மாண்புமிகு உறுப்பினர் வெளியிலே பேசுகிறபோது, தொலைக்காட்சியிலே பேசுகிறபோது, இந்த அரசிடமிருந்து பல்வேறு நலத் திட்டங்களை என்னுடைய தொகுதிக்கும், இந்த மாவட்டத்திற்கும் பெற்றுத் தந்திருக்கிறேன் என்று சொல்கிறார். வெளியிலே பேசுகிறபோது, பல்வேறு நலத் திட்டங்களை பெற்றுத் தந்திருக்கிறேன் என்று சொல்கிறார். ஆனால், இங்கு பேசுகிறபோது ஒன்றும் செய்யவில்லை, ஒன்றும் செய்யவில்லையென்று சொல்வது இரு வேறு கருத்தாக இருக்கிறது. நான் உங்களை அன்போடு, தயவுசெய்து மனசாட்சியோடு இதயத்தைத் தொட்டுப் பேசுங்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உரையை முடியுங்கள், நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) உரையை முடியுங்கள், நேரமாகிவிட்டது.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை சீக்கிரம் முடித்து விடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நான் உண்மையைச் சொல்கிறேன். பொய் சொல்ல வேண்டிய தேவை இல்லை. என்னுடைய தொகுதியில் தண்ணீர்ப் பிரச்சினை மிகவும் முக்கியமான பிரச்சினை. காட்டாத்துறை-இரணியல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 169 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணியை இன்னும் ஆரம்பிக்கவில்லை. அந்தப் பணியை ஆரம்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். விளவங்குடி பேரூராட்சி, கோடியூரில் R.T.O. Office ஒன்று வேண்டுமென்று நான் கேட்டேன். இந்த அவையிலே உத்தரவாதம் கொடுக்கப்பட்டது, ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால், இன்றுவரை அதை ஆரம்பிக்கவில்லை. அந்தப் பணி தொய்ந்திருக்கிறது.

இரணியலில் ஒரு பழமை வாய்ந்த அரண்மனை உள்ளது. 2012-ல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுகுறித்து அறிவித்தார்கள். ஆனால், தூசிகூட இன்னும் அடிக்கப்படவில்லை, பிரச்சினை இன்னும் இருக்கிறது. அதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



2016 பிப்ரவரி 19] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

குளச்சலில், பயணிகள் விடுதி ஒன்றை அமைத்துக் கொடுப்பதாக இந்த அவையிலே அறிவிக்கப்பட்டது. அந்தப் பணியும் ஆரம்பிக்கப்படவில்லை.

மிக முக்கியமான பிரச்சினையாகக் கருதுவது சாலைகள் பிரச்சினை. என்னுடைய தொகுதியில் திங்கள் நகர் மணவாளக்குறிச்சி சாலை, இரணியல் சாலை, திங்கள் நகர் அழகிய மண்டபம் சாலை, கடலோரச் சாலைகள் எல்லாம் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. நடந்து போகவே முடியாத நிலைமை உள்ளது. என்ன நிலை ஏற்பட்டிருக்கிறதென்று தெரியாது. அந்தப் பகுதிகளில் நடந்தே போக முடியாது, எந்த வாகனமும் போக முடியாது, மோசமாக இருக்கிறது. இது எனது நீண்ட நாள் கோரிக்கை. டெண்டர் போட்டதாகச் சொன்னார்கள், ஆனால், நடைமுறைப்படுத்தவில்லை. அதற்கு உடனடியாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கன்னியாகுமரியில் CRF திட்டத்தின்மூலமாக 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுவிட்டது. அதோடு மாநில அரசு 57 கோடி ரூபாயை இந்த மாவட்டத்திற்கு ஒதுக்கியுள்ளது. ஆகவே, கடந்தகால ஆட்சியிலே சாலைகள் பராமரிக்கப்படாத காரணத்தாலேதான் இந்தச் சாலைகள் எல்லாம் மோசமாக இருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நான்கரை ஆண்டு கால ஆட்சியில் எல்லா மாவட்டங்களிலுமே தேவையான அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பழுதடைந்த சாலைகள் எல்லாம் சீர்செய்யப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலைகளுக்கு இப்போது டெண்டர் விடப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இப்போது விரைவாக டெண்டர் விடப்பட்டு, அந்தப் பணிகள் எல்லாம் துவங்கக்கூடிய நிலையில் இருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு கோரிக்கையை இங்கே வைக்கிறேன். ஒரு சாலை செப்பனிடப்பட்டால் 5 ஆண்டு tenure என்று நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால், 2 மாதங்கள், 3 மாதங்களில் மோசமடைந்து விடுகின்றன. மழை அதிகமாக இருக்கக்கூடிய பகுதி என்பதால், rubberised roads ஆகப் போட்டால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3-30

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தை இங்கே பதிய வைக்கின்றார். 3 மாதங்களில் எந்த சாலையும் பழுதடையாது. இன்றைக்கு சாலைகள் அமைக்கப்படுகின்றபோது, சாலையின் தரத்தை உறுதி செய்தபிறகுதான் அந்த ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்படுகிறது. சாலை அமைத்தவுடனே தொகை வழங்கப்படுவதில்லை. அந்தச் சாலை சரியாக அமைக்கப்பட்டிருக்கிறதா? உறுதித்தன்மை இருக்கின்றதா? அதையெல்லாம் ஆராய்ந்த பிறகுதான் அந்த ஒப்பந்ததாரருக்கு பணம் ஒதுக்கப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலே சிறப்பான முறையில் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 3 பருவமும் மழை பெய்கின்றது. ஆகவே, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து தவறானது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழகம் முழுவதும் சாலைகள் சிறப்பாக அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உரையை முடியுங்கள். நேரமாகிவிட்டது.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** சந்தோஷமாக இன்னும் இரண்டு நிமிடங்கள் பேச வாய்ப்புக் கொடுங்கள். அதை நான் குற்றமாகச்



சொல்லவில்லை. இனிமேல் அந்தச் சாலைகளைப் போடும்போது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** இன்னும் இரண்டே இரண்டு விஷயங்கள் மட்டும்தான். சாலைகள் சரியில்லை என்றால், அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும். They should be held responsible. வருங்காலத்தில் அதற்குரிய சட்டம் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாலை அமைக்கின்றபோது சாலைப் பணிகள் முடிந்த பிறகு quality control என்ற தனி wing இருக்கிறது. அவர்கள் போய் பார்வையிட்டு அந்தச் சாலையின் உறுதித் தன்மையை ஆராய்ந்த பிறகு, அவர்கள் சான்றிதழ் கொடுத்த பிறகுதான் உரிய ஒப்பந்ததாரருக்கு பணம் வழங்கப்படுகிறது. சாலை மோசமாக இருந்தால், அந்த ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்படுவதில்லை. மீண்டும் சாலையை சரிசெய்த பிறகுதான் அந்த ஒப்பந்ததாரருக்கு அதற்குரிய தொகை வழங்கப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து, தவறான கருத்து. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலே, எந்தச் சாலைகள் அமைக்கப்பட்டாலும் அந்தச் சாலைகளுடைய தரத்தை உறுதிசெய்த பிறகுதான் ஒப்பந்ததாரருக்கு உரிய தொகை வழங்கப்படுகிறது. ஆகவே, 3 மாதங்களில் எந்தச் சாலையும் பழுதடையவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் சாலையை செப்பனிட்டுத் தந்தால் போதும், வேறொன்றுமில்லை. போக்குவரத்து தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய அகவிலைப்படி கொடுக்கப்படாமல்

28 மாதங்களாகக் கிடப்பிலே இருக்கிறது; இன்னும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் கூட்டுறவு வங்கியில் கிடைக்கக்கூடிய loan கேட்டால்கூட . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேச ஆரம்பித்து அரை மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது. உரையாற்றியது போதும். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) மணி என்ன? உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** கூட்டுறவுச் சங்கங்களில் கடன் கேட்டால்கூட கொடுக்கவில்லை. அதற்கான நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் நெய்யாறு பிரச்சினையைப் பற்றி இங்கே சொன்னார்கள். மாநில அளவில் எல்லைகள் எல்லாம் வரையறுக்கப்பட்டு, 1956-வது சட்டத்தின்படி பிரிக்கப்பட்டு, அதற்குப் பின்னால் 1965-லிருந்து 2004 வரை கேரள அரசு நெய்யாறு ஆற்றிலிருந்து தமிழ்நாட்டுக்குரிய 9,500 ஏக்கர் பாசனத்திற்குரிய தண்ணீரை தந்து கொண்டிருந்தது. 2004-க்குப் பிறகு நிறுத்தப்பட்டுவிட்டது. நிறுத்தப்பட்ட பிறகு மாண்புமிகு அம்மா அவர்கள், கேரள அரசிடம் பல முறை கோரிக்கைகள் வைத்தார்கள். அதற்கு அவர்கள் செவி சாய்க்கவில்லை. இந்தப் பிரச்சினையை மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று, இப்போது அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களால் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு இரண்டு முறை கோரிக்கை மனு அனுப்பப்பெற்றது. அதாவது, 3-6-2014 மற்றும் 7-8-2015 ஆகிய நாட்களில் இரண்டு முறை வழங்கிய பல்வேறு பிரச்சினைகள் குறித்த கோரிக்கை மனுக்களை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் அளித்தபோது, 'நெய்யாறு பிரச்சினையில் கேரள அரசு தண்ணீர் விடுவதற்கு நீங்கள் அறிவுறுத்த வேண்டும்' என மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.



அதற்குப்பின்பும், அவர்கள் தண்ணீர் தராத சூழ்நிலைதான் இருக்கிறது. உச்ச நீதிமன்றத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் இடைக்கால மனுவுடன்கூடிய civil வழக்கை அங்கே தொடுத்து, வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நெய்யாற்று நீரை தமிழகத்துக்குரியதைத் தருவதற்கான உரிமையைப் பெறுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) Point-க்கு எல்லாம் நேரமில்லை. (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** எல்லைப் போராட்ட தியாகிகளுக்கு பென்சன் இன்னும் கொடுக்கப்படவில்லை, அதைக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்வதாக இருந்தால் அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமான கேள்விகளைக் கேட்பதற்கும், இன்று அதிகமாகப் பேசுவதற்கும் வாய்ப்புத் தந்தமைக்கு உங்களுக்கு என் அன்பார்ந்த, மனமார்ந்த வணக்கங்களையும், நன்றிகளையும் தெரிவிப்பதோடு, அனைவருக்கும் எனது நன்றிகளைச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம்.

பிற்பகல் 3-35

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016-2017 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன். 2011 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை அரசு செயல்படுத்தியுள்ள நலத்

திட்டங்கள் மற்றும் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான தொகுப்பாக வரவு-செலவுத் திட்டம் அமைந்துள்ளது. தமிழக அரசின் வளர்ச்சிக்கு புதிய திட்டங்களுக்கான அறிவிப்புகள் குறிப்பிடப்படவில்லை என்று இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் 60,610 கோடி ரூபாய் உத்தேசமாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மொழி வளர்ச்சிக்காக ஒரு தனிப் பெரும் முக்கியத்துவத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்துள்ளார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிப்ரவரி 21 ஆம் நாள் உலகத் தாய்மொழி தினமாகும். தமிழ்நாட்டுப் பள்ளிகளிலும் இதனைக் கொண்டாட தமிழக அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 21 ஆம் நாளை உலகத் தாய்மொழி தினமாகக் கொண்டாட வேண்டுமென ஐக்கிய நாட்டு சபை, யுனெஸ்கோ தீர்மானித்துள்ளது. உலக நாடுகள் முழுவதும் அவரவர் தாய்மொழியைக் காப்பாற்ற உறுதியேற்கும் நாளாக இது கொண்டாடப்பட்டு வருகிறது. முந்தைய கிழக்கு பாகிஸ்தானாக இருந்த தற்போதைய வங்கதேசம், வங்க மொழிக்குப் பதிலாக உருது மொழியை பாகிஸ்தான் அரசு கல்வி மற்றும் அரசு மொழியாகத் திணித்ததை எதிர்த்து, தாய்மொழிக்கு ஆதரவாக 1952 பிப்ரவரி 21-ல் டாக்கா பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 மாணவர்கள் கொல்லப்பட்டனர். அதன்பின் ஆண்டுதோறும் மொழிப் பாதுகாப்பு தினமாக அந்த நாட்டில் கொண்டாடப்பட்டது. 2000 ஆம் ஆண்டில் ஐ.நா. அந்த நாளை உலகத் தாய்மொழி தினமாகக் கடைப்பிடிக்குமாறு தீர்மானித்தது. தமிழ்நாட்டில் 2008 ஆம் ஆண்டு முதல் ISCUF மற்றும் இதுபோன்றிருக்கக்கூடிய அமைப்புகள் கொண்டாடி வருகின்றன. சென்ற ஆண்டில் மத்திய கல்வி அமைச்சகம், மத்திய பள்ளிகளில் இந்த நாளைக் கொண்டாட வேண்டுமென அறிவுறுத்தியுள்ளது. தமிழ்நாட்டிலும் அனைத்துப் பள்ளிகள், கல்லூரிகளில் பிப்ரவரி 21 ஆம் நாளை தாய்மொழி தினமாகக் கொண்டாட தமிழக அரசு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



சட்டம்-ஒழுங்கு என்ற தலைப்பில் சில விஷயங்கள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. கடந்த 1993 வரை கொலை, கொள்ளை, ஆள் கடத்தல், யானை வேட்டை மற்றும் சந்தனக் கடத்தல் போன்ற வனக் குற்றங்களில் ஈடுபட்ட சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்க அன்றைய ஐ.ஜி., மரியாதைக்குரிய திரு. தேவாரம் அவர்கள் தலைமையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சிறப்பு அதிரடிப் படையை அமைத்தார்கள். அதில் பல காவலர்கள், அதிகாரிகள் தங்கள் உயிரையும் பணயம் வைத்து, சிறப்பாகப் பணியாற்றி, 2004 ஆம் ஆண்டு வீரப்பனையும், அவன் கும்பலையும் கூண்டோடு சுட்டுக் கொன்று, வீரப்பனின் அட்டகாசத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அதில் ஈடுபட்டு பணியாற்றிய வீரர்களுக்கு வெகுமதியும், பதவி உயர்வும் கொடுக்கப்பட்டது. அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டது. அதில் பதவி உயர்வு பெற்ற சிலருக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில், முந்தைய அரசு அறிவித்த அரசாணையை மாற்றி, புதிய அரசாணை வெளியிடப்பட்டு, இன்றளவும் பதவி உயர்வு தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாகவும், அப்படி பதவி உயர்வு வழங்கப்படாதவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

*[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஓ.கே. சின்னராஜ்) தலைமை]*

தன் உயிரையும் பொருட்படுத்தாமல் அதிரடிப் படையில் இணைந்து பற்பல மோதல்களில் உயிரிழந்தும், உடல் உறுப்புக்களை இழந்தும் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டிய காவல் துறை வீரர்களுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசால் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பதவி உயர்வு கிடைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

கடந்த 5 ஆண்டுகளில் புதிய வருவாய்க் கோட்டங்கள், புதிய வட்டங்களை உருவாக்கி அறிவித்திருந்தாலும், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டத்தை அறிவிக்க 20-2-2013 அன்று, அரசாணை எண் 53 வெளியிடப்பட்டது. திருவாரூர் மாவட்டத்திலுள்ள

திருத்துறைப்பூண்டி மற்றும் மன்னார்குடி வட்டத்திலிருந்து பிரித்து 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20 ஆம் நாளிலிருந்து முத்துப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஒன்று முத்துப்பேட்டையில் 21 குறு வட்டங்களும், பாலையூர் பிர்காவில் 18 குறு வட்டங்களும் கொண்டு செயல்படும் என்று அரசுச் செயலாளர் அறிவித்துள்ளார்கள். அது இப்போதே நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-40

அதேபோல, பொள்ளாச்சி வட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆனைமலையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் அமைப்பதற்கான கருத்துரு பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளதாகத் தெரிய வருகிறது. மக்கள் நலன் கருதி, வால்பாறை சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்டிருக்கக்கூடிய ஆனைமலையை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் பெய்த வரலாறு காணாத பெருமழை, உயிருக்கும், பொருள்களுக்கும் கடுமையான பாதிப்பையும், இழப்பையும் ஏற்படுத்திச் சென்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நிதி வழங்கவில்லை என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகிறது. இதைக் கண்டறிந்து நிவாரண நிதி வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய வட்டம், புதிய கோட்டம் பிரிப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மக்கள்தொகை, வருவாய் கிராமம், பரப்பளவு என்ற அடிப்படையிலே புதிய வட்டம், புதிய கோட்டம் ஆகியவற்றை உருவாக்குவதற்கு உயர்மட்டக் குழு ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலே, இதுவரை வருவாய்த் துறையின்



வரலாற்றிலே இல்லாத வகையிலே, சவாலாக பெருமையோடு இந்த அவைக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 65 புதிய வட்டங்களை, நிருவாகத்திற்காக உருவாக்கித் தந்தார் முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு 9 புதிய கோட்டங்களையும் உருவாக்கித் தந்தார் முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வெள்ள நிவாரணம் இன்னும் நிறைய பேருக்குக் கிடைக்க வேண்டியிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஏறத்தாழ 6 அரசாணைகள் மூலமாக 3,039 கோடி ரூபாயை தாயுள்ளத்தோடு வெள்ள நிவாரணத்திற்காக வழங்கியிருக்கின்ற முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். நாங்கள் ஏற்கெனவே இந்த அவையிலே இதைப் பதிவு செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு ஏதேனும் மனுக்கள் வருமானால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே அதைக் கொடுக்கலாம். C.R.A. - Commissioner of Revenue Administration அவர்களின் கவனத்திற்கு அவர்கள் உரிய முறையில் கொண்டு வருவார்கள். அதற்கு உரிய முறையிலே நடவடிக்கைகளெல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையில் புதிய வட்டம் உருவாக்கப்படவில்லை என்று நான் குறிப்பிடவில்லை; உருவாக்கியுள்ளீர்கள். ஆனால், 2013 ஆம் ஆண்டு, அரசாணை 53-ன்படி, திருப்பூர் மாவட்டத்தில் புதிய வட்டம் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அது இன்னமும் கிடப்பில் உள்ளது. ஏன் அதை உடனே தொடங்கவில்லை என்றுதான் நான் உங்களிடத்திலே கேட்க விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், நிதிநிலை அறிக்கையில், அத்திக்கடவு-அவினாசி திட்டத்தை 1,862 கோடி

ரூபாய் செலவில் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை 2011 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அத்திக்கடவு-அவினாசி திட்டத்தினை உடனடியாக செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள் என்றும், இதன்படி மத்திய அரசுக்கு உரிய கருத்துரு உடனடியாக அனுப்பப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வதெல்லாம் 2011 ஆம் ஆண்டில் 1,862 கோடி ரூபாய்க்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டதாகவும், அன்று ஆட்சியிலிருந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணியினுடைய அரசு அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளீர்கள். அத்திக்கடவு-அவினாசி திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு நிதி வழங்காவிட்டாலும், மாநில அரசே பொறுப்பேற்று, இத்திட்டம் நிறைவேற்றப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அம்மா அவர்கள் இதே அவையிலே அறிவித்தார்கள். ஆனால், இதுவரையில் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு இதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்றாலும்கூட, இதன்மீது ஐந்தாண்டு காலம் இந்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டத்திலுள்ள அவினாசி வட்டமானது, ஆண்டிற்கு சராசரியாக 600 மில்லி மீட்டர் முதல் 700 மில்லி மீட்டர் வரையிலான குறைந்த மழைப் பொழிவைப் பெற்று வரும் ஒரு வறண்ட பகுதியாகும். இந்த வட்டத்தின் ஒரு பகுதியில் பவானி ஆறு சென்றாலும், இதன் பிற பகுதிகளுக்கு இந்த ஆற்று நீர் சென்று பயனடையும் வழிவகைகள் எதுவும் இதுவரை இல்லை. மேலும், அவினாசி தவிர பிற வறண்ட பகுதிகளான அன்னூர், திருப்பூர் மற்றும் பல்லடம் பகுதிகளில் வசிக்கும் மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு வருவதாலும், இப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் மிகவும் குறைந்துவிட்ட காரணத்தாலும், பவானி ஆற்றின் உபரிநீரை இப்பகுதிகளுக்குத் திருப்பி, குளங்கள் மற்றும் குட்டைகளுக்கு நீர் வழங்குவதன்மூலம் பாசன வசதி அளித்திட நீண்டகாலமாகக் கோரி வருகின்றனர்.



பிற்பகல் 3-45

இப்பகுதி மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கையை நிறைவேற்றும்வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பில்லூர் அணையிலிருந்து அத்திக்கடவு என்ற இடத்தில் ஒரு கால்வாய் அமைத்து, மேற்கண்ட பகுதி மக்கள் பயன்பெறும்வகையில் அத்திக்கடவு-அவினாசி கால்வாய்த் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று ஆணையிட்டு, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இத்திட்டத்தில் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள 31 பொதுப் பணித் துறை ஏரிகள், 40 ஊராட்சி ஒன்றியக் குளங்கள் மற்றும் ஏனைய 538 நீர்நிலைகள் ஆகியவற்றை நிரப்புவதன்மூலம் நிலத்தடி நீர் செறிவூட்டப்படுவதுடன் பாசனத்தையும் மேம்படுத்திட உத்தேசிக்கப்பட்டது. அத்திக்கடவு-அவினாசி கால்வாய்த் திட்டத்தினை ஆய்வு செய்து, பவானி ஆற்றில் உபரி நீர் ஏற்படும் காலங்களில் ஆண்டொன்றிற்கு 2 டி.எம்.சி. நீரினை கால்வாய்மூலம் திருப்புவதற்கு சாத்தியக்கூறு உள்ளது எனவும், பவானிசாகர் அணை நிரம்பி, உபரி நீர் வெளியேறும் நிலையில், உபரி நீரை பில்லூர் அணையிலிருந்து நீர்ப் பரப்புப் பகுதியிலிருந்து திருப்பி விடலாம் எனவும், இதுதொடர்பாக விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும் எனவும், அந்த ஆய்வுக் குழு பரிந்துரை செய்தது. இப்பரிந்துரையை ஏற்று இத்திட்டத்திற்கான ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்க வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நவம்பர் 2011-ல் அரசாணை வெளியிடப்பட்டது. இதன்படி அத்திக்கடவு-அவினாசி கால்வாய்த் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை 2011-2012 விலை விகிதப்படி ரூ.1,862 கோடி என மத்திய அரசின் வெள்ள மேலாண்மைத் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தில் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள ஏரிகள் மற்றும் குளங்களுக்கு பவானிசாகர் அணையின் மேற்புறத்தில் உள்ள பில்லூர் அணையிலிருந்து பவானி ஆற்றின் உபரி நீரைத் திருப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டது. மேற்கண்ட திட்ட அறிக்கையானது மத்திய அரசின் வெள்ள மேலாண்மைத் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறுவதற்காக ஏப்ரல் 2013-ல் அனுப்பப்பட்டது. இத்திட்டம் வெள்ள மேலாண்மைத் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி அமைய வாய்ப்பில்லை என மத்திய நீர்வளக்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 19

குழுமம் தெரிவித்தது. எனினும், பவானி வடிநிலத்தில் உள்ள பாசனக் கட்டுமானங்களை நவீனப்படுத்துவதன்மூலம் சேமிக்கப்படும் நீரைப் பயன்படுத்தி இத்திட்டத்தை பாசனத் திட்டமாக மாற்றி அமைக்கலாம் என நவம்பர் 2013-ல் தெரிவித்தது. பவானி வடிநில பாசனக் கட்டுமானங்களை நவீனப்படுத்துவது அவசியம் எனக் கருதியதன் அடிப்படையில், மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான ஆணையின்படி பவானி வடிநிலத்தில் அமைந்துள்ள காளிங்கராயன் வாய்க்காலின் தலைப்பகுதிகளை ரூ.91 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 2014-ல் அவை முடிக்கப்பட்டன. இதைத் தவிர, தடப்பள்ளி வாய்க்கால் மற்றும் அரக்கன்கோட்டை வாய்க்கால்களின் தலைப்பகுதிகளை ரூ.40.55 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 2015-ல் முடிக்கப்பட்டன. மேலும், பவானி வடிநிலத்தின் பிற பாசனக் கட்டுமானங்களை நவீனப்படுத்திட தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விவசாயப் பெருங்குடி மக்களின் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நீர்ப்பாசன நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கல் திட்டமாக அத்திக்கடவு-அவினாசி திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில், இதற்கான ஆரம்ப கட்டப் பணிகளை உடனடியாகத் துவக்கிடவும் மற்றும் திருத்திய கருத்துருவினை மத்திய அரசுக்கு அனுப்பிடவும் ஆணையிட்டுள்ளார்கள். இதுகுறித்து, இடைக்கால நிதிநிலை அறிக்கையில் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ளது, அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஆரம்ப கட்டப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக ஓர் ஆலோசனை நிறுவனத்தை நியமித்து, மத்திய அரசின் வனத் துறை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர்களின் ஒப்புதலை அவற்றின்மூலம் பெற்றுத் தருதல், நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு கள ஆய்வு மேற்கொண்டு ஆவணங்கள் தயாரித்தல் போன்றவற்றிற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.3 கோடியே 27 இலட்சம் ரூபாய்க்கு நிருவாக ஒப்புதலை நேற்று தந்திருக்கின்றார்கள் என்ற நல்ல செய்தியை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக 16 ஆம் தேதி மாண்புமிகு அம்மா அவர்கள்,



2016 பிப்ரவரி 19] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

நிதிநிலை அறிக்கையின் மூலமாக அறிவித்த ஒரு திட்டத்திற்கு 18 ஆம் தேதியே அரசாணை தந்த ஒரே முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை நான் இங்கே பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், தலைமைப் பொறியாளர் (நீர்வள ஆதார திட்ட உருவாக்கம்) அவர்கள், அத்திக்கடவு-அவினாசி திட்டத்தினை பாசனம், நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கல் ஆகியவற்றை உள்ளடக்கிய திட்டமாக திட்ட மதிப்பீட்டினைத் தயாரித்து அரசுக்கு அளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார் என்பதனையும் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 3-50

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்த அவினாசி-அத்திக்கடவு நீர் செறிவூட்டுதல் திட்டம் சம்பந்தமாக, கடந்த 8 ஆம் தேதியிலிருந்து 14 பேர் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். சட்டமன்றத்திலே அறிவித்திருக்கக்கூடிய இந்த அறிவிப்பின்படி, அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடராமல் இருக்க, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்ற முறையில் அரசின் சார்பாக ஓர் அறிவிப்பை வெளியிடுவார்களேயானால், உண்ணாவிரதப் போராட்டம் ஒரு முடிவுக்கு வரும் என்று நான் கருதுகிறேன். அந்த அடிப்படையில், ஓர் உறுதியான நிலையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்தாக அறிவித்தால், இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவது மட்டுமல்ல . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அத்திக்கடவு-அவினாசி திட்டத்தினுடைய சரித்திரத்தையெல்லாம் சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்கள், அதன் ஆய்வுக்குரிய நிதியையும் தாராள மனதோடு நேற்றே ஒதுக்கி அரசாணை தந்திருக்கின்றார்கள். இதற்கு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 19

மேலும் போராட்டம், ஆர்ப்பாட்டம் என்று நடத்துவது என்பது விரும்பத்தகாத ஒன்றாகத்தான் இருக்கும் என்று நான் கருதுகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்ல நடவடிக்கைக்கு, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் ஆதரவாக இருக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்கள், ஒரு திட்டத்தினை அறிவித்தார்கள் என்று சொன்னால், அதனை முடித்தே தீருவார்கள் என்பது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், முதலில் நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) அத்திக்கடவு-அவினாசி திட்டத்திற்கு நன்றி சொல்லுங்கள் என்று சொன்னேன்.

**திரு. எம். ஆறுமுகம்:** அத்திக்கடவு-அவினாசி நீர் செறிவூட்டும் திட்டத்திற்காக நடைபெற்ற 60 ஆண்டுக் கால போராட்டத்திற்கு இன்றையதினம் தமிழக அரசு அறிவித்திருக்கக்கூடிய இந்த அறிவிப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இதைக் கிடப்பில் போடாமல் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, அது வெள்ள நீர் மேலாண்மைத் திட்டமாக இருக்காது என்று அறிவித்துள்ளதன்படி, இந்தப் பாசனக் கட்டுமானங்களை நவீனப்படுத்துவதற்கு முன்பு 91 கோடி ரூபாயும், அப்புறம் 45 கோடி ரூபாயும் மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர் நிகழ்ச்சியாக, அந்தப் பகுதிகளுக்குக் கொடுத்து, நவீனப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள், அந்தப் பகுதிக்கு நிறைவேற்றியே தீர வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் நவீனப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே மேலும் ஒரு தகவலாகச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2016 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வன விலங்குகளைப் பாதுகாப்பதிலும், வன ஆதாரங்களை மேம்படுத்துவதிலும், பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் மேலாண்மையிலும் தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது. வால்பாறை, சத்தியமங்கலம், கூடலூர் போன்ற பகுதிகளில் புலிகள் சரணாலயம் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில், மனித உயிர்கள் கொடிய மிருகங்களால் உயிர்ப் பலியாகி வருகின்றன. மனித உயிர்களை மிருகங்களிடமிருந்து பாதுகாக்க நிரந்தரமான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்துடன் உயிரிழப்பு ஏற்பட்டால் தற்போது வழங்கும் ரூ.3 இலட்சம் என்பதை உயர்த்தி ரூ.10 இலட்சமாக வழங்க வேண்டும். அத்துடன் விஷப் பாம்பு கடித்து உயிரிழந்தால் அதற்கான நிவாரணம் வழங்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. வால்பாறை, சத்தியமங்கலம் போன்ற பகுதிகளில் விஷப் பாம்பினால் உயிரிழப்பு ஏற்பட்டால், அதற்கும் நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்தைப் பொறுத்தவரையில், புதிய வழித் தடங்களில் பேருந்துகளை இயக்குவது, பெட்ரோல், டீசல் விலை உயர்ந்தும்கூட, பஸ் கட்டணம் உயராமல் இருப்பது போன்ற நடவடிக்கைகள் சிறப்பானதாக இருந்தாலும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பணியாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணப் பயன்கள் உரிய காலத்தில் வழங்கப்படவில்லை என்பதை வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். போக்குவரத்துக் கழகங்களின் வளர்ச்சியில் தொழிலாளர்களுக்கும் பங்களிப்பு உள்ளது. தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்யப்படும் சமூகப் பாதுகாப்புத் திட்டப் பணத்தையும் வழங்கவில்லை. மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளுக்குச் செலுத்தப்பட்ட தொகையினையும் வழங்கவில்லை. அக்டோபர், 2013 முதல் தொகுப்பூதியம் வழங்கப்படவில்லை. 2014 முதல் அகவிலைப்படி நிலுவை இதுவரை வழங்கப்படவில்லை. 2012 முதல் அனைத்துக் கழகங்களிலும் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கு பணிக்கொடை வழங்கப்படவில்லை. 2012 அக்டோபர் முதல் வருங்கால வைப்பு

நிதி வழங்கப்படவில்லை. ஓய்வுபெற்றவர்களுக்கும், பணியாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கும் இந்தப் பணப் பயன்களை உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3-55

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, ஓய்வுபெற்றவர்களுக்கு ஓய்வூதியம் தரப்படவில்லை, அகவிலைப்படி தரப்படவில்லை என்று சொன்னார்கள். கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. அரசு போக்குவரத்துத் துறைக்காக ஒதுக்கிய தொகை 3,685 கோடி ரூபாய். மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த 5 ஆண்டுக் காலத்தில் பல்வேறு கஷ்டங்களுக்கிடையில், ஒதுக்கிய நிதி 6,281 கோடி ரூபாய். அதுமட்டுமல்லாமல், சோதனைச் சாவடிகளுக்கு கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் கிட்டத்தட்ட 82 கோடி ரூபாய் அளவிற்கு மட்டும்தான் பணம் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால், இப்பொழுது, இந்த ஐந்தாண்டுக் காலத்தில் கிட்டத்தட்ட 536 கோடி ரூபாய் அளவிற்கு சுங்கச்சாவடிக்கு மட்டும் பணம் செலுத்த வேண்டியிருக்கிறது. அதுபோன்று ஒவ்வொன்றிலும் அதிக செலவாகிக் கொண்டிருக்கின்றது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற பஸ் பாஸ்க்கு ஒதுக்கப்பட்ட தொகை கடந்த கால ஆட்சியிலே 1,466 கோடி ரூபாயாக இருந்தது. இப்போது 2,262 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இப்படி பல்வேறு வகைகளிலே செலவுகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. அப்படியிருந்தும்கூட, 3,685 கோடி ரூபாயில் ஓய்வு பெற்றவர்களுக்கு கடந்த கால ஆட்சியில் கொடுத்தது வெறும் 928 கோடி ரூபாய். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் இதுகாறும் கொடுத்திருப்பது 1,376 கோடி ரூபாய். ஆக, தொழிலாளர்களுக்கு என்ன சேர வேண்டுமோ, அதை முடிந்தவரை மாண்புமிகு அம்மா அவர்கள் நிதிநிலைக்கேற்ப கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, கடந்த காலத்தோடு ஒப்பிடுகின்றபோது, மாண்புமிகு அம்மா அவர்கள், போக்குவரத்துத் துறைக்காக கிட்டத்தட்ட 100 சதவிகிதம் அதிக நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள்.



இருந்தாலும், ஓய்வு பெற்றவர்கள் ஓய்வூதியம் மற்றும் அகவிலைப்படியெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். புதிய ஒப்பந்தத்தின்படி தினந்தோறும் கிட்டத்தட்ட 24 கோடி ரூபாய் வசூலாகிறது என்று சொன்னால், 15 கோடி ரூபாய் சம்பளத்திற்குச் செலவாகின்றது. நான் சம்பளம் வழங்குவதைக் குறை சொல்லவில்லை. கடந்த காலத்திலே 8.60 கோடி ரூபாயாக இருந்தது, இப்போது 15 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது; செலவினம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆகையால்தான் அகவிலைப்படி மற்றும் ஓய்வூதியம் ஆகியவற்றைக் கொடுக்க முடியாமல் இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து முடிந்தவரை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் எடுத்துவரக்கூடிய நடவடிக்கைகள் பற்றி தெரியும். இலவச பஸ் பாஸ் உள்ளிட்ட நிறைய commitments இருக்கிறது என்பதும் தெரியும். டீசல், பெட்ரோல் விலைகள் உயர்ந்தாலும்கூட, spare parts விலை உயர்ந்தாலும்கூட பஸ் கட்டணம் உயரவில்லை என்பது எங்களுக்குப் புரியாமல் இல்லை. மத்திய அரசாங்கத்திடம் சுங்கச்சாவடிகளுக்கு இவ்வளவு பணம் ஓராண்டுக்குக் கட்டுகிறோமே, அதற்கு ஏன் விதிவிலக்கு கொடுக்கக் கூடாது என்று ஏன் கேட்கக் கூடாது? இது அரசாங்க பஸ். National Highways என்று ரோட்டில் பெரிய board போட்டிருக்கிறார்கள், யார் யாருக்கு விதிவிலக்கு அளிக்கப்படுகிறது என்று. அதில் அரசாங்கத்தினுடைய வண்டிகளுக்கெல்லாம் விதிவிலக்கு என்று இருக்கிறது. ஏன் நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்குண்டான விதிவிலக்கை நாம் கேட்டிருக்கின்றோம். ஆனால், மத்திய அரசு ஒத்துக்கொள்ளவில்லை. அதுவும், கடந்த கால மைனாரிட்டி தி.மு.க.

அரசும், காங்கிரஸ் அரசும் மத்தியிலே இருக்கின்றபோது இதுபோன்ற சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். இப்போது பல முறை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும் கேட்டு வருகிறது. ஆனால், அதற்கு ஒத்துக்கொள்ளாத காரணத்தால்தான் கிட்டத்தட்ட வருடத்திற்கு 560 கோடி ரூபாய் அதற்காக மட்டும் செலவாகிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறியாளர்கள் கோவை, திருப்பூர் மாவட்டங்களில் கடந்த 28-1-2016 முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். 2014 ஆம் ஆண்டு பிப்ரவரியில் கோவை, திருப்பூர் மாவட்ட ஆட்சியர்கள் முன்னிலையில், ஜவுளி உற்பத்தியாளர்களுக்கும், கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்களுக்குமிடையே கூலி உயர்வு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. தற்போது ஜவுளி உற்பத்தியாளர்கள், கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறியாளர்களுக்கு, ஒப்பந்தப்படி கூலி உயர்வினை வழங்காத காரணத்தினால், விசைத் தறியில் பணிபுரியும் 5 இலட்சம் தொழிலாளர்கள் வேலையில்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசு தலையிட்டு, இரண்டு முறை பேச்சுவார்த்தை நடைபெற்றிருக்கிறது. திருப்பூரில் நம்முடைய அமைச்சர் உட்பட கலந்து கொண்டிருக்கிறார்கள். அதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். இருந்தாலும் 5 இலட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல, அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமானமும் பாதிக்கப்படுகின்றது. எனவே, அரசு தலையிட்டு, 2014 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் செய்துகொண்ட ஒப்பந்தத்தை அமல்படுத்த வேண்டுமென ஜவுளி உற்பத்தியாளர்களுக்கு உத்தரவு வழங்க வேண்டும், வேலைநிறுத்தப் போராட்டத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மக்கள் நல்வாழ்வுத் துறை. அரசு சிறந்த மருத்துவக் கட்டமைப்பு வசதிகளை அளித்தாலும், மாண்புமிகு முதலமைச்சரின் விரிவுபடுத்தப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், சில தனியார் மருத்துவமனைகள் சிகிச்சையளிக்க மறுப்பதும், பணம் கட்டினால் மட்டுமே சிகிச்சை அளிக்கப்படும்



என்ற நிலையும் இருந்து வருகிறது. கோவை இ.எஸ்.ஐ. மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை மாநில அரசு ஏற்றுக்கொண்ட நிலையில், தொழிலாளர்களின் பங்களிப்பு மற்றும் நிருவாகத்தின் பங்களிப்புமூலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக மாற்றப்பட்டுள்ளது. இந்த மருத்துவக் கல்லூரியில், 50 சதவிகிதம் இ.எஸ்.ஐ. திட்டத்தில் உறுப்பினராக உள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு மருத்துவப் படிப்பு படிக்க இட ஒதுக்கீடு செய்ய மாநில அரசு உத்தரவாதப்படுத்த வேண்டும். தனியார் மருத்துவமனைகளில் பணிபுரியும் செவிலியர்கள் மற்றும் துறை சார்ந்த பணியாளர்களது பணியினை வரன்முறைப்படுத்தவும், அரசு வழங்கும் ஊதியத்தை வழங்கவும் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 4-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். ஆறுமுகம்:** சிறுபான்மையினர் மற்றும் தனியார் பள்ளி, கல்லூரிகளில் அரசு நிர்ணயம் செய்துள்ள கட்டணங்களை மட்டுமே வாங்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். கூடுதல் கட்டணம் வசூல் செய்யும் சிறுபான்மையினர் மற்றும் தனியார் பள்ளி, கல்லூரிகளின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறுபான்மையினர் மற்றும் தனியார் பள்ளிகளில் 25 சதவிகிதம் இட ஒதுக்கீட்டுக்கான நடைமுறையை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

எஸ்.எஸ்.எல்.சி. முடித்து அதே பள்ளியில் +1 சேருவதற்காகச் சென்றால், போதிய மார்க் இல்லை எனச் சொல்லி, அவர்களை +1-ல் சேர்ப்பதற்கு பல தனியார் பள்ளிகளும், சிறுபான்மையின நிறுவனங்களும் மறுத்து வருகின்றன. எனவே, காலத்தே நடவடிக்கை எடுத்து, இதனை ஒழுங்குபடுத்த வேண்டும்.

தொழிலாளர் துறையைப் பொறுத்தமட்டிலும், கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின்கீழ் பிற மாநிலங்களைச் சார்ந்த 15,653 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் தொழில் நகரங்களான சென்னை, கோவை, திருப்பூர், ஈரோடு போன்ற மாவட்டங்களில்

பீகார், அஸ்ஸாம், மேற்கு வங்கம், ஒரிசா, குஜராத் போன்ற வட மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் அதிகம் பணியில் அமர்த்தப்படுகிறார்கள். பஞ்சாலை, பனியன், சாயப் பட்டறை, நெசவு, சலவைப் பட்டறை மற்றும் பாலங்கள் அமைத்தல், கட்டுமானப் பணிகள் போன்றவற்றில் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள். வட மாநில தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை, தொழிலாளர் நலச் சட்டங்கள்மூலம் முறையாகக் கிடைக்க தொழிலாளர் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோவை மாவட்டம், செட்டிபாளையம் பஞ்சாயத்து, ஓராட்டுக்குப்பை கிராமம், கே.கே. சாவடி போலீஸ் எல்லைக்குட்பட்ட ஸ்ரீ பைப்னோ ரைசிங் பிரைவேட் லிமிடெட் என்ற தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்த மேற்கு வங்கத்தைச் சேர்ந்த 6 தொழிலாளர்கள் பழைய டயர்களை வேக வைத்து, எரித்து, உருக்கி அதிலிருந்து ஒரு வகையான பர்னர் oil தயாரித்து தொழிற்சாலைகளில் எரிபொருளாகப் பயன்படுத்தப்படும் ஆலையில் பணியாற்றியபோது, 11-2-2016 ஆம் தேதி காலை 11-00 மணிக்கு boiler-ஐ open செய்யும்போது, 6 தொழிலாளர்கள் படுகாயம் அடைந்து, கோவை அரசு மருத்துவமனையில் admit செய்யப்பட்டு, சிகிச்சை பெற்றும் பலனளிக்காமல் இறந்துவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்காக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, ஒவ்வொருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் தர வேண்டும் என்று உத்தரவிட்டு, அம்மா அவர்களுடைய ஆணை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று அந்தத் தொழிற்சாலை உரிமையாளர்களிடத்திலேயும் அவர்களுக்கு உடனடியாக ஒரு நிதியைத் தர வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிற நடவடிக்கைகளில் தொழிலாளர் துறை ஈடுபட்டிருக்கிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.



**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆறு பேர் இறந்திருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் நிவாரணம் அறிவித்திருக்கின்றார்கள். அவர்கள் வட நாட்டைச் சார்ந்தவர்கள். ஒரு இலட்சம் ரூபாய் என்பது போதாது. கூடுதலாக நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதே ஆலையைப் போல அங்கே 12 ஆலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த ஆலைகளை இயக்குவதற்கு எந்த அனுமதியும் பெறவில்லை. எனவே, அனுமதி பெறுவதற்கு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் வலியுறுத்த வேண்டும் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். தவறான முறையில் இந்த ஆலைகளை நடத்தியதன் விளைவாகத்தான் 6 பேர் உயிரிழந்திருக்கின்றார்கள். எனவே, அந்த ஆலைக்குச் சொந்தமான இயக்குநர்கள்மீது கொலை வழக்கு பதிவு செய்து, நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்படிப்பட்ட நிகழ்வுகள் எதிர்காலத்தில் நிகழாமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அடுத்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன். இதற்காக அரசு ஒதுக்குகிற நிதி முறையாகப் பயன்படுத்தப்படுகிறதா அல்லது வேறு வகை செலவினங்களுக்குத் திருப்பி விடப்படுகிறதா? செலவு செய்யாமல் மீண்டும் surrender செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறதே!

சமீப காலங்களில் ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டுவதற்கான இடத்தை கையகப்படுத்தும் முறை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. தமிழகத்தில் நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் எவ்வளவு? இதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை என்ன என்பதனை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதோடுமட்டுமல்ல, வால்பாறை பகுதியில் மூன்று எஸ்டேட்கள் உள்ளன. அனைத்தும் தேயிலை எஸ்டேட்கள். இவை குறித்து துணை சபாநாயகர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். High Forest Estate, NEPL Kavarkal Estate, Waverley இந்த மூன்று எஸ்டேட்களும் 15 ஆண்டு காலமாக sick-ஆக உள்ளதால், அங்கே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களிடம் P.F. பிடித்தம் செய்தும்கூட

பணத்தைக் கட்டவில்லை, வேலை செய்த காலத்திற்கான gratuity கொடுக்கவில்லை, maternity benefit கொடுக்கவில்லை, அதேபோல casual leave கொடுக்கவில்லை, annual leave with wages கொடுக்கவில்லை. இப்படிப்பட்ட பிரச்சினைகள் எல்லாம் 15 ஆண்டுக் காலமாக இந்த மூன்று எஸ்டேட்டுகளிலும் இருந்து கொண்டிருக்கிறது. இந்த எஸ்டேட்டுகளில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள், NEPL Kavarkal Estate-ல் மூன்று மாதங்களாக strike-ல் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 4-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆதி திராவிடர் நல துணைத் திட்டத்தில் நிதி செலவழிக்கப்படுகின்றதா, அந்த நிதி வேறு துறைக்கு மாற்றம் செய்யப்படுகின்றதா என்று கேட்டார்கள். ஆதி திராவிட மக்களால் வீட்டு மனை வேண்டுமென்று எங்கெல்லாம் கோரிக்கை வைக்கப்படுகிறதோ அங்கெல்லாம் தனி தாசில்தார்கள் மூலமாக நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. உங்கள் தொகுதியில் ஏதேனும் நிதிப் பற்றாக்குறை இருக்கிறது என்ற குறை இருந்தால் சொல்லுங்கள், உடனே நாங்கள் அதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** நீதிமன்றத்தில் எவ்வளவு வழக்குகள் இருக்கின்றன? அந்த வழக்குகளின்மீது துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத்தான் நான் கேட்கிறேன். பத்து, பதினைந்து வருடங்களாக வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:** நீதிமன்ற வழக்குகளில் நாங்கள் தலையிட முடியாது. நீதிமன்றத்தில் இருக்கும் வழக்குகளின்மீது உரிய நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது. சமீபத்தில், இரண்டு நாட்களுக்கு முன்புகூட, நீதிமன்றம்மூலம் இரண்டு வழக்குகளில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும்போது நாங்கள் அதில் தலையிட முடியாது. இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசுகின்றபோது, ஆதி திராவிட பெருமக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை ஒப்படைப்பு செய்யும் பணிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்ற தொனியில் பேசினார். அதுபோன்று, அரசின்மூலமாக எந்தப் பணியும் நிறுத்தப்படவில்லை. ஒரு சில இடங்களில் வழக்குகள் நீதிமன்றத்திற்குச் செல்லுமாயின், அந்த வழக்குகள் முடியும்வரை அது தொடர் நடவடிக்கையில் இருக்கும். வழக்குகள் முடிந்த பிறகு, ஆதி திராவிடப் பெருமக்களுக்கு வழங்கப்படுகின்ற நிலம் உறுதியாக அரசின் மூலமாகக் கையகப்படுத்தி, உடனடியாக வழங்குகின்ற சூழ்நிலையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது என்பதை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** வால்பாறையில் உள்ள அந்த மூன்று எஸ்டேட்டுகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் கடந்த மூன்று மாதங்களாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். அந்த மூன்று எஸ்டேட்டுகளையும் அரசு தேயிலைத் தோட்டக் கழகம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அதை நடத்தப் போவதில்லை; அந்த எஸ்டேட்டுகள் நலிவடைந்துள்ளன. கிட்டத்தட்ட 500 தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பல பேர் gratuity செட்டில் செய்யப்படாமலே இறந்துவிட்டார்கள். வருங்கால வைப்பு நிதியாக தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்திருக்கக்கூடிய பணத்தையும் அவர்கள் கட்டவில்லை. அதற்கு ஈடாக முதலாளிகள் கொடுக்கக்கூடிய பணத்தையும் அவர்கள் கட்டவில்லை. பெரிய சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட

[திரு. எம். ஆறுமுகம்] [2016 பிப்ரவரி 19

வாய்ப்பிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர், அங்கிருக்கக்கூடிய அதிகாரிகள், எங்கள் மாவட்டத்தின் அமைச்சர் ஆகியோர் தலையிட்டு, தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆனாலும், அந்த முதலாளிகள் பணத்தைக் கட்டாமல் இருந்து கொண்டு வருகிறார்கள். எனவே, அந்த எஸ்டேட்டுகளை அரசு தேயிலைத் தோட்டக் கழகம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டிருக்கக்கூடிய பழையசர்க்கார்பதி குடியிருப்பில் மலைவாழ் மக்கள் நிரந்தரமாகக் குடியிருந்து வருகின்றார்கள். அவர்களுடைய முன்னோர்களுக்கு வனத் துறைமூலம் 42 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டது. அந்த நிலத்தில் அவர்களின் வாரிசுகள் விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள். தென்னை, வாழை போன்றவற்றை விவசாயம் செய்து கொண்டிருக்கும் இடத்தில் போதிய தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் காண்டூர் கால்வாயிலிருந்து வரும் கசிவு நீரை செக்டேம் கட்டி, அதில் சேரும் தண்ணீரை மண் வாய்க்கால்மூலம் எடுத்துவந்து, நிலங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கான ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-10

அடுத்து, ஈரோடு மாநகராட்சிக்குட்பட்டிருக்கக்கூடிய 27-வது வார்டில், அழகர்சிங் வீதியில் 1887 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் தேதி, ஸ்ரீனிவாசன்-கோமளத்தம்மாள் தம்பதியருக்கு தாய் வழி பாட்டனார் இல்லத்தில் கணித மேதை இராமானுஜம் அவர்கள் பிறந்துள்ளார். உலகத்தின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வல்லுநர்கள் ஈரோடு மாநகரில் அவர் பிறந்த இல்லத்தைப் பார்வையிட்டுச் செல்கின்றனர். அவரது நினைவைப் போற்றும்வகையில், ஈரோடு மாநகரில் எவ்வித அடையாளமும் இதுநாள்வரையில் இல்லாமல் இருந்துவருவது வருத்தம் அளிக்கிறது. இதுசம்பந்தமாக ஈரோடு மாமன்றம் 30-12-2013 அன்று அவசரக் கூட்டம் நடத்தி, அவர் பிறந்த வீதியான அழகர்சிங் வீதிக்கு கணித மேதை இராமானுஜம் வீதி எனப் பெயரிடலாமென



2016 பிப்ரவரி 19] [திரு. எம். ஆறுமுகம்]

தீர்மானம் 1-ல் தொடர் வரிசை எண் 803-ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. எனவே, கணித மேதை இராமானுஜம் வீதி என்று அதற்குப் பெயர் வைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே அரசை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். வால்பாறை பகுதி ஒரு பெரிய மலைப் பகுதி. அந்த மலைப் பகுதியில் இருக்கக்கூடிய. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள். வால்பாறை பகுதி ஒரு மலைப் பகுதிதான் என்பது எல்லோருக்கும் தெரியும். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிறைய சுற்றுலாப் பயணிகள் இன்று வால்பாறை பகுதிக்கு வரத் தொடங்கிவிட்டார்கள். கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்களிலிருந்து நிறைய சுற்றுலாப் பயணிகள் வந்து கொண்டிருக்கின்றார்கள். சுற்றுலாப் பயணிகள் அங்கு வந்து தங்குவதற்கான இடங்கள் அங்கே குறைவாக இருக்கின்றன. தமிழ்நாட்டிலே, கோவை மாவட்டத்திலே, வால்பாறை மட்டும்தான் இன்றைக்கு settlement-ஏ இல்லாத area என்று நினைக்கின்றேன். 1927 ஆம் ஆண்டில் 56 டீ எஸ்டேட்களுக்கு 99 வருடங்களுக்கு லீசுக்கு வெள்ளைக்காரர்கள் எழுதிக் கொடுத்துவிட்டார்கள். அநேகமாக இப்போது lease period முடியப்போகிறது. அது நம்முடைய இடம். வால்பாறை தேயிலைத் தோட்டங்களில் பணி புரியக்கூடிய தொழிலாளர்களுக்கு 60 வயது முடிந்துவிட்டது என்று சொன்னால், superannuation period-க்குப் பின்னால், அவர்கள் சொந்த ஊருக்குச் சென்றுவிட வேண்டும். அங்கு குடியிருக்க முடியாது. எதிர்காலத்தில் வடநாட்டுத் தொழிலாளர்கள் அங்கே வேலை செய்ய வேண்டிய அவல நிலை இருக்கின்றது. ஆகையினால், அங்கே குடியிருக்கக்கூடிய settlement ஆகாத பகுதிகளில் உள்ள ரெவென்யூ இடங்களிலெல்லாம் எஸ்டேட் நிருவாகம் ஆக்கிரமிப்பு செய்து, இப்போது தேயிலை பயிரிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, அதை re-survey செய்து, வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் குடியிருக்கக்கூடிய பகுதிகளில், வீட்டுமனையை அவர்களுக்கு சொந்தமாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வால்பாறையை சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டும். 44 ஏக்கர் நிலத்தை, மாவட்ட ஆட்சித் தலைவர்

மற்றும் அதிகாரிகள் எல்லாம் பார்வையிட்டு, அங்கே ஒரு Botanical Garden அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்பொருட்டு, பூர்வாங்க அறிக்கை இங்கே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, படகுத் துறை கட்ட வேண்டும் என்பதற்காக இடங்கள் கையகப்படுத்தப்பட்டு, அதற்கான கோப்புகளும் இங்கே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே, வால்பாறையை சுற்றுலா மையமாக அறிவிப்பதோடு, இதனையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லி, உரையை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் 4 மணிக்குப் பேச அழைக்கப்பட்டுள்ளேன். இந்தக் கடைசி நேரத்தில் உங்களையெல்லாம் கஷ்டப்படுத்துவதால் எல்லோரும் பொறுத்துக்கொள்ள வேண்டும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதினான்காவது சட்டமன்றப் பேரவையினுடைய கடைசி அமர்வு இது. பழகிக் களித்த அனைவருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் உறுப்பினர்கள் சார்பிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கடைசி அமர்வில் உறுப்பினர்களின் விவாதத்தில் இறுதியாக நான் பேசுகிறேன். எனவே, நான் பேசி முடிக்கும் வரையில் அனுமதிக்க வேண்டுகிறேன். (சிரிப்பு) ஃபாசிஸ்ட் தன்மையிலான கருத்து ஒடுக்குதல்கள் இந்தியா முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பல்கலைக்கழகங்கள், நீதிமன்ற வளாகங்கள் போன்ற அனைத்து இடங்களிலும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் வன்முறையால் மாற்றாரின் வாயை அடக்கப் பார்க்கிறது. தமிழக ஐ.ஐ.டி. வரை அது வந்து போனது. பெரியாருக்கு எதிராக, கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிராக, சிறுபான்மையினருக்கு எதிராக வெறுப்புப் பிரச்சாரங்கள் தமிழகத்தில் தீவிரமாகியுள்ளன. மதச்சார்பற்ற சக்திகள் இதில் எச்சரிக்கையாக ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டிய தருணம். தமிழகத்திலே விழிப்போடு இருந்து இதை முறியடிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

கடந்த பத்து நாட்களாக அரசு ஊழியர்கள், சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், கௌரவ



விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் தங்களது இருபது அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு, பேசி, தீர்வு காண வேண்டும் என்று நாங்கள் சட்டமன்றத்தில் வலியுறுத்தினோம். அப்படி நாங்கள் வலியுறுத்தியபோது, நம்முடைய அண்ணா தொழிற்சங்கப் பேரவையினுடைய பொதுச் செயலாளர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள், ‘நானும் தொழிற்சங்கத் தலைவன்தான், உங்கள் கோரிக்கையை ஆதரித்து நானும் வருகின்றேன்’ என்று வந்திருந்தால் நான் மகிழ்ந்திருப்பேன். ஆனால், சம்பந்தா சம்பந்தமில்லாமல், விதி 110 அறிவிப்புக்கு நன்றி சொல்ல உனக்கு மனமில்லையா, நீ தொழிற்சங்கத் தலைவனா என்கிற பாணியில், என்னைப் பார்த்து இங்கே பேசினார். அப்படி அவர் பேசுகின்றபோது, போக்குவரத்து அரங்கத்திலே, நான்கு நாட்கள் வேலைநிறுத்தம் நடந்தபோது அவர் என்ன செய்தார் என்பது எனக்கு ஞாபகம் வருகின்றது. நாகரிகம் கருதி, அந்த விவரத்திற்குள் நான் செல்லவில்லை.

நான் விஷயத்திற்கு வருகிறேன். தாமதமாகவேனும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்று அரசு ஊழியர்களுக்கு சில அறிவிப்புகளைச் செய்துள்ளார்கள். இந்த அறிவிப்பிற்குப் பிறகு, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கம் தங்களின் 8 கோரிக்கைகளையாவது ஏற்றிருக்க வேண்டுமென்று ஆதங்கப்பட்டு, அறிக்கை கொடுத்திருக்கிறது. எனினும், மக்களின் சிரமங்களைக் கருதி, இந்த அறிவிப்புகளைக் கொண்டு, வேலைநிறுத்தத்தைத் திரும்பப் பெறுவது குறித்து பரிசீலிக்க வேண்டுமென C.I.T.U சார்பிலே நான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளேன். அவர்கள், நிச்சயமாக, வேலைநிறுத்தத்தைத் திரும்பப் பெறுவது குறித்து பரிசீலிப்பார்கள் என நான் நம்புகிறேன். அரசு ஊழியர்களுக்கு இப்போது அறிவிக்கப்பட்டுள்ள இந்தக் கோரிக்கைகள்போக, அவர்களுக்கு இன்னும் சில கோரிக்கைகள் மீதம் இருக்கின்றன. அந்தக் கோரிக்கைகளை மக்கள் நலக் கூட்டணி ஆட்சி வந்து நிறைவேற்றும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதாவது, நான் சென்ற முறையே சொன்னேன். அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும் என்று நான் பாட வேண்டியிருக்கும்

என்று சொன்னேன். (சிரிப்பு) ஆளும் கட்சியினர் பல முறை அந்தப் பாடலை இங்கே பாடியிருக்கின்றீர்கள். (குறுக்கீடு) சரி.

பிற்பகல் 4-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாற்றுத் திறனாளிகளின் போராட்டத்தையும் இதேபோல தீர்த்து வைக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

பட்ஜெட்டில் வருவாய் நிருவாகம் முக்கியப் பங்காற்றுகின்றது. புதிய வருவாய்க் கோட்டங்கள், புதிய வருவாய் வட்டங்கள் அமைத்தது பற்றி பட்ஜெட்டிலே கூறப்பட்டுள்ளது. வருவாய்த் துறையில் கடுமையான ஊழியர் பற்றாக்குறை இருக்கிறது. வணிக வரித் துறையில் ஊழியர் பற்றாக்குறை இருக்கிறது. வணிக வரியில் 4 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வசூல் குறைவும் ஏற்பட்டுள்ளது. மொத்தத்தில் அரசுத் துறைகளில் ஒன்றரை இலட்சத்திற்குமேல் காலிப் பணியிடங்கள் உள்ளன. வேலைநிறுத்தம் செய்கின்ற அரசு ஊழியர்கள், காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்பதை ஒரு கோரிக்கையாக வைத்திருக்கின்றனர். அரசு தனது அலுவலகங்களிலேயே உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பி, வேலை வழங்காமல், வேலைவாய்ப்பை எங்கோ உருவாக்குகிறேன் என்று பேசுவது வேடிக்கையாக உள்ளது.

திறன் மேம்பாடு கடந்த 30 ஆண்டுகளாக அனைத்து மட்டங்களிலும் பேசப்பட்டு வருகின்ற ஒன்று. இது தேவை. அவர்களைப் பயன்படுத்திக் கொள்கின்ற தனியார் நிறுவனங்கள் ரூபாய் 5 ஆயிரம், 6 ஆயிரம் என்றும், B.E. படித்தவர்களுக்கே ரூபாய் 8 ஆயிரம் என்றும் ஊதியம் தருகின்றனர். தமிழக அரசு தனது பொதுத் துறை நிறுவனங்களான போக்குவரத்து, மின்சார வாரியம் போன்றவற்றிலும் ஒப்பந்த ஊழியர்களை நியமித்து குறைந்த கூலி தருகின்றது. திட்டப் பணியாளர்களான அங்கன்வாடி, சத்துணவு, டாஸ்மாக் ஊழியர்களுக்கும் தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்புக் காலமுறை ஊதியம் என்ற முறையிலே குறைவான ஊதியமே வழங்கப்படுகிறது. எனவே, மற்ற தனியார் நிறுவனங்களைப் பார்த்து நீங்கள் நியாயமாக நடந்துகொள்ள வேண்டுமென்று கூறுகிற தகுதியை தமிழக அரசின்



தொழிலாளர் துறை இழந்துவிட்டது. B.E. பட்டம், தொழில்நுட்பப் பட்டயம் போன்ற படிப்பும், திறனும் ஒருசேரப் பெற்றவர்கள் கண்ணியமான வேலை கிடைக்காமல் திண்டாடுவது இன்று தமிழகத்தில் மிக முக்கியப் பிரச்சினையாக உள்ளது. 89 இலட்சம் பேர் வேலைவாய்ப்பிற்காக வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்து காத்திருக்கின்றனர். இப்படிப் பதிவு செய்யாதவர்கள் மேலும் பல இலட்சம் பேர் உள்ளனர். தமிழகத்தில் சுமாராக 7 பேரில் ஒரு இளைஞனுக்கு வேலையில்லை என்பது அபாயகரமானது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்த அரசு வெற்றி பெறவில்லை.

அம்மா உணவகங்களின் எண்ணிக்கை 530. தமிழகத்தில் இன்றுள்ள ஏழைக் குடும்பங்கள், குறைந்த வருவாய்ப் பிரிவினர், தொடர்ச்சியாக வேலையில்லாதவர்கள் என்று பார்த்தால், இந்தக் கடைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கின்றது. இந்த உணவகங்கள் அறிவிக்கப்பட்டபோது இங்கே வரவேற்றுப் பேசியவன் நான். இது நிச்சயமாக பல வகைகளிலே பயன்படும் என்று நான் அன்றைக்குப் பேசினேன். காரணம், அடுத்த 4 ஆண்டுகளிலே, 5 ஆண்டுகளிலே இன்னும் நிறைய உணவகங்கள் வரும், அதனுடைய தாக்கம் வெளிச்சந்தையிலே இருக்கும் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், இன்றைக்கு இருக்கின்ற கடைகளின் எண்ணிக்கை அதற்கேற்ப இல்லை. வெளிச்சந்தையில், உணவு விடுதிகளில் விலை குறையும் என்ற அந்த எதிர்பார்ப்பும் இன்று நிறைவேறவில்லை. இது ஒரு அடையாளத் திட்டமாக-Token திட்டமாக உள்ளது. இந்த உணவகங்களுக்கான செலவை உள்ளாட்சி அமைப்புகளே செய்கின்றன. உள்ளாட்சி அமைப்புகளால் இந்த நிதிச் சுமையைத் தாங்க முடியாது. அரசே இதை ஏற்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகள் பல அடிப்படைப் பணிகளை நிறைவேற்றுகின்றன. உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி இப்பொழுது போதுமானதாக இல்லை. மாநில வரி வருவாயிலிருந்து இன்னும் அதிக அளவில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியொதுக்கப்பட வேண்டும். 35 ஆயிரம் கோடி ரூபாய் கடந்த 5 ஆண்டுகளில் கிராமப்புற ஊராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் சேர்த்து ஒதுக்கப்பட்டிருக்கின்றது. வருடத்திற்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் என்ற அளவில் உள்ளது. நம்முடைய மொத்தச் செலவிலே வருடத்திற்கு 7 சதவிகிதம்தான் உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கப்படுகின்றது. உள்ளாட்சி அமைப்புகளில் பணியாளர்கள் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது.

சென்னையிலேயே தெருவிளக்கு பராமரிப்பு, குப்பை அகற்றல், பூங்காக்கள் பராமரித்தல் போன்றவற்றிற்குப் போதுமான ஆட்கள் இல்லை. ஒப்பந்தக் கூலி முறை இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஆகாது. வீடு, வீடாகச் சென்று குப்பைகளைச் சேகரித்தல், தரம் பிரித்தல், தகுந்த முறையில் மறுசுழற்சி செய்தல் போன்ற பொறுப்புகள் கிராம ஊராட்சிகளில் தூய்மைக் காவலர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பட்ஜெட்டிலே கூறப்பட்டுள்ளது. வீடு வீடாக குப்பை சேகரிப்பது வரவேற்கத்தக்கது. தூய்மைக் காவலர்களுக்கு ரூ.183/-தான் சம்பளம் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும். சென்னை போன்ற மாநகராட்சிகளில் இதுபோன்ற எந்த ஏற்பாடும் இல்லை. ஒரு நாளைக்கு 4,500 டன் குப்பை உருவாகும் இடத்தில் இந்த ஏற்பாடு ஏன் இல்லை? கொடுங்கையூர், பெருங்குடி போன்ற குப்பை கொட்டும் வளாகங்கள் பெரும் தீமையாகவே உள்ளன. இந்த 5 ஆண்டுகளில், இந்த அரசு, இந்த மிக அத்தியாவசியமான பணியில் ஏன் உரிய அக்கறை செலுத்தவில்லை?

பிற்பகல் 4-20

குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றுதல் விஷயத்தைப் பொறுத்தவரை, புதிய பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் பற்றி அறிவிப்புகள் உள்ளன; அவை தேவை. ஏற்கெனவே சென்னை போன்ற இடங்களிலுள்ள பாதாளச் சாக்கடைகளில் நீர் கடத்தும் திறன் உயர்த்தப்படாததாலும், பல இடங்கள் பழுதுபட்டிருப்பதாலும் பெரும் அளவில் சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன. சென்னையில் உடனடியாகக் குழாய்களை அகலப்படுத்தி, புனரமைப்பைச் செய்து முடிக்க வேண்டும். இங்கும் ஊழியர் பற்றாக்குறையும், ஒப்பந்தக் கூலி முறையும் போக்கப்பட வேண்டும்.

சென்னை நகரப் பேருந்துகளில் மூத்த குடிமக்களுக்கு மாதத்திற்கு 10 இலவச பயண ஏற்பாட்டுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்திருக்கிறார்கள். அந்த அறிவிப்போடு தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் முடிந்துவிட்டன. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் எந்தப் பகுதியிலும் குப்பை தேங்கியிருக்கிறது என்ற சூழ்நிலை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இதுகுறித்து தெரியும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவிற்கிணங்க சிறப்பான முறையில் குப்பைகள் அகற்றப்பட்டிருக்கின்றன. சென்னை மாநகராட்சியில் மட்டும் தினமும் 5,000 டன் குப்பை சேருகிறது. அதுபோல், சென்னையைத் தவிர, மற்ற மாநகராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகளிலெல்லாம் 7,000 டன் குப்பை சேருகிறது, ஆக மொத்தம் 12,000 டன் குப்பை தினமும் சேருகிறது. சென்னை மாநகராட்சி 19,233 துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு 5,000 டன் குப்பையை எடுப்பதற்கு சிறப்பான முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. கடந்த கால தி.மு.க. ஆட்சியைவிட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக 2011-ல் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து, திடக் கழிவு மேலாண்மைக்காக கிட்டத்தட்ட ரூ.320.26 கோடி நிதி ஒதுக்கி, சிறப்பான முறையில் அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 88 நவீன குப்பை நொறுக்கும் இயந்திரங்கள், இலகு இரக வாகனங்கள், 100 டிப்பர் வாகனங்கள், புதிய இரக வாகனங்கள் எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு சிறப்பான முறையில் குப்பைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சென்னை குடிநீர் வாரியப் பணி குறித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். கழிவுநீர் பிரச்சினையைப் பற்றி manhole பிரச்சினையைப் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகமாகப் பேசுவார்கள். அதற்கு 2 பிரிவுகளாக நிதி ஒதுக்கப்பட்டு, முதல் பிரிவிற்கு ரூ.150 கோடி, இரண்டாவது பிரிவிற்கு ரூ.173 கோடி என நிதி ஒதுக்கப்பட்டு, அந்த வேலைகளும் சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பிரிவு ஒன்றில் ரூ.150/- கோடி அளவில் நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் முடிவடையும் தருவாயில் இருக்கின்றன. ரூ.173 கோடி அளவில் நிதி ஒதுக்கப்பட்ட பணிகளுக்கும் இப்பொழுது டெண்டர் கோரப்படும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில், 2011-ல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், 40 super sucker வாகனங்கள்,

23 jet-cum-suction வாகனங்கள், 63 jet rodding இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. கடந்த ஆட்சியில் 2, 3 இயந்திரங்கள் என்ற அளவில்தான் இருந்தன. இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் நவீன இரக வாகனங்களெல்லாம் வாங்கப்பட்டு, சிறப்பான முறையில் பணிகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் எப்பொழுது பேசினாலும் சத்துணவுத் திட்டத்தைப் பற்றிப் பேசிக்கொண்டே இருப்பார். ஆனால், அவருக்கு ஓர் உண்மை தெரியும். தெரிந்திருந்தும்கூட, அவர் திரும்பத் திரும்பப் பேசுகிறார் என்பதுதான் வருத்தம். இருந்தாலும், இன்றைக்குக் காலையிலே நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிற அறிவிப்புகள் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலேயும் அறிவிக்கப்படாதவை. (மேசையைத் தட்டும் ஒலி) இதைப் பாராட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மனம் இருக்கிறதா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும் ஓர் உண்மையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும், அவருக்குத் தெரிந்திருக்கும். இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் மட்டும்தான் சத்துணவுப் பணியாளர்களை பகுதிநேர நிரந்தரப் பணியாளர்களாக வகைப்படுத்தி, சிறப்பு காலமுறை ஊதிய விகிதத்தில் ஊதியம் மற்றும் பிற படிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசால் சமையல் உதவியாளர் என்கிற ஒரேயொரு பணியிடம் மட்டும்தான் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்தியாவிலே எல்லா மாநிலங்களிலேயும் இதே நிலைதான். சமையல் உதவியாளர் மட்டும்தான். அவர்களுக்கு சம்பளம் எவ்வளவு என்று கேட்டால் வெறும் ரூ.1,000/- தான். ரூ.1000/-க்கு மேலே ஒரு ரூபாய்கூட கிடையாது. ஆனால், இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒவ்வொரு சத்துணவுக் கூடத்திற்கும்



அமைப்பாளர், சமையலர், சமையல் உதவியாளர் என்று மூன்று பேர்களை நியமித்துள்ளார்கள். ஒரு சத்துணவுக் கூடத்திலே அமைப்பாளருக்கு ரூ.9,204/-ம், சமையலருக்கு ரூ.4,446/-ம், சமையல் உதவியாளருக்கு ரூ.3,307/-ம் சம்பளமாக வழங்கப்படுகிறது. நீங்கள் ஏன் இப்படித் திருப்பித் திருப்பி இதையே பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஏற்கெனவே இந்த உண்மைகள் உங்களுக்குத் தெரிந்திருந்தும்கூட, இந்தப் போராட்டத்தை நடத்திக் கொண்டே இருக்க வேண்டுமென்ற எண்ணத்திலே இப்படிப் பேசுகிறீர்களா என்று எனக்குத் தெரியவில்லை. தயவுசெய்து, நீங்கள் இந்தச் சம்பள உயர்வைப்பற்றி புரிந்துகொள்ள வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் துறை முடங்கிவிட்டதோ என்பதுபோல ஒரு கருத்தை மூத்த உறுப்பினர் அண்ணன் திரு. சவுந்தரராசன் அவர்கள் இங்கே பதிய வைத்தார்.

தொழிலாளர் துறையைப் பொறுத்தமட்டில், அவர்கள் சென்ற ஆட்சியிலேயும் தொழிலாளர் துறையைப் பார்த்திருப்பார்கள். இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேயும் தொழிலாளர் துறையினுடைய நடவடிக்கைகளை அவர்கள் பார்த்திருப்பார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்த காரணத்தினாலேதான், தொழில் தகராறு சட்டத்தின்கீழ் தனிநபர் தாவாக்கள், 2A என்கின்ற அந்தத் தாவாக்களில் 15,316 தாவாக்கள் முடித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, தொழிற்சங்கங்களால் எழுப்பப்பட்ட 2A தாவாக்கள் 10,909. ஆக மொத்தம் 26,225 தாவாக்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் முடித்து வைக்கப்பட்டிருக்கின்றன என்ற தகவலை தங்கள் வாயிலாக மாண்புமிகு மூத்த உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி. சென்னை நகரப் பேருந்துகளில் மூத்த குடிமக்களுக்கு மாதத்திற்கு 10 இலவசப் பயணம் என்கிற அறிவிப்போடு தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுவிட்டன என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த அறிவிப்பே சென்னையைத் தவிர இதர மாவட்ட மக்களுக்குப் பொருந்தாது என்கிறபோது தேர்தல் வாக்குறுதி எப்படி நிறைவு பெற்றதாகும்? (குறுக்கீடு) இல்லை. இன்றைய அறிவிப்பு பொருந்தாது. இன்றைய அறிவிப்பு சென்னைக்கு மட்டும். மற்றவர்களுக்கு இனிமேல் வருமா? (குறுக்கீடு) மற்றவர்களுக்கு இனிமேல் வருமா? வாக்குறுதி எப்படி நிறைவு பெற்றதாகும்? இதற்கு வரவேற்பு எப்படி உள்ளது என்று பார்த்துவிட்டு, மற்ற இடங்களுக்கு விஸ்தரிக்கப்படும் என்று முதல்வர் சொல்லியிருக்கிறார்கள். இதிலே வரவேற்காமல் இருப்பதற்கு என்ன இருக்கிறது? வரவேற்பா, இல்லையா என்று பார்க்கிற பிரச்சினையே இதில் இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. எல்லோரும் வரவேற்கத்தானே செய்வார்கள். ஆகவே, தமிழ்நாடு முழுவதற்கும் பொருந்துமாறு இதை இன்றே ஏன் அறிவிக்கவில்லை? மற்ற மாவட்டங்களில், 30 நடைகள் பயணம் செய்ய வழி இல்லையே என்கிற குறைதான் இருக்குமே தவிர இதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். நான் ஏன் ஆட்சேபிக்கப் போகிறேன்? நிச்சயமாக ஆட்சேபணைக்கே இடமில்லை. அதே நேரத்தில் மற்ற மாவட்டத்து மக்கள் என்ன பாவம் செய்தார்கள் என்பதுதான் கேள்வி. இதுபோன்ற இலவசங்களுக்கு ஆகும் செலவை மின் வாரியத்தில் உடனுக்குடன் அரசு ஈடுகட்டுவதைப்போல, போக்குவரத்துத் துறையிலும் ஈடுகட்ட வேண்டும். நிதிநிலையில் போக்குவரத்துக் கழகங்கள் விளிம்பு நிலைக்கு வந்துவிட்டன. ஏற்கெனவே, மாணவர்களுடைய இலவசப் பயணத்திற்காக ரூ.6 ஆயிரம் கோடி போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு ஈடுகட்ட வேண்டியுள்ளது. நான் சொல்வது 1990 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை, கணக்குப் பார்த்தால் ரூ.6 ஆயிரம் கோடி வருகிறது. இந்த ஆட்சியில் மட்டும் பாக்கி என்று நான் சொல்லவில்லை. ஆக, ரூ.6 ஆயிரம் கோடி போக்குவரத்துக் கழகங்களுக்கு வர வேண்டியுள்ளது, அதற்கான விவரங்கள் என்னிடம் இருக்கின்றன.



*பிற்பகல் 4-30*

ஓய்வுபெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு உரிய பணமே இரண்டாண்டுகளாக வழங்கப்படவில்லை. ஓய்வுபெற்ற தொழிலாளர்களின் பணம் ரூ.500 கோடி போக்குவரத்துக் கழகங்களால் பாக்கி வைக்கப்பட்டுள்ளன. போக்குவரத்துக் கழகங்கள் அதை செலவு செய்திருக்கின்றன. இந்த பட்ஜெட்டிலும் போக்குவரத்துக் கழகங்களுக்கு உரிய பணம் ஒதுக்கப்படவில்லை. நம்முடைய அரசுக்கு இருப்பதாக இந்த பட்ஜெட் கூறுகிற அந்தக் கடனில், போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு அந்தக் கழகங்கள் வைத்திருக்கிற கடன் சேருமா என்பது எனக்குத் தெரியவில்லை. ரூ.2 இலட்சத்து சில்லரை கோடியில் இது சேருமா என்று தெரியவில்லை. மின் வாரியத்தில் கடன் இருக்கிறது. போக்குவரத்துத் துறையில் கடன் இருக்கிறது. நெல்லை அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் கோவில்பட்டி பணிமனையைச் சேர்ந்த ஓட்டுநர் நடராஜன் என்பவர் கடந்த பிப்ரவரி 1 ஆம் தேதி ** அவர் 30-4-2014-ல் பணி ஓய்வு பெற்றவர். அவருக்கு பணப் பலன்கள் தரப்படவில்லை. 'நான் கடன் தொல்லையில் அவதிப்படுகிறேன். எனக்கு அந்தப் பணத்தைக் கொடுங்கள்' என்று அவர் விண்ணபப்பித்திருந்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 3 கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். முதற்கட்டமாக, சென்னையில் இருக்கின்றது என்று சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் நேற்றைய தினம் அறிவிக்கின்றபோதே மூத்த குடிமக்களுக்கு முதல்கட்டமாக என்றுதான் சொல்லியிருக்கின்றார்களேயொழிய, ** ஏனென்று சொன்னால், முதல்கட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவதாக, நடராஜனைப் பற்றிச் சொன்னீர்கள். நடராஜனுக்கு முழுமையாகக் கொடுக்காமல் இருக்கவில்லை. கிட்டத்தட்ட ரூ.2,50,000/- அளவுக்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ரூ.6 இலட்சம் கொடுக்க

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வேண்டும். அதைத்தான் நான் பல முறை சொன்னேன். ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கடந்த காலங்களைக் காட்டிலும் கிட்டத்தட்ட 3,000 கோடி ரூபாய் அதிகமாக போக்குவரத்துத் துறைக்குக் கொடுத்திருக்கிறது. போக்குவரத்துத் துறைக்குப் போதிய நிதி ஒதுக்கவில்லை என்று, நீங்கள் இப்பொழுது கேட்கிறீர்கள். ஐந்தாண்டுக் காலத்தில் இவ்வளவு விலைவாசி உயர்ந்தும்கூட, மாண்புமிகு அம்மா அவர்கள், ரூ,3,000 கோடி அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். இதிலிருந்து எந்தவிதத்தில் போக்குவரத்துத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதியைக் குறைத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் தயவுசெய்து நினைத்துப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், நான் ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசியபோது, Toll gate-ல் எவ்வளவு செலவாகிறது என்பது குறித்து விளக்கமாகச் சொன்னேன். கடந்த காலத்தில் நீதிமன்றச் செலவிற்காக மட்டும் கிட்டத்தட்ட 94 கோடி ரூபாய் செலவானது. இந்த ஐந்தாண்டு காலத்தில் 261 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச பேருந்து பயண அட்டைக்காக கடந்த ஐந்தாண்டு காலத்தில் ரூ.1,466 கோடி செலவிடப்பட்டது. இப்பொழுது ரூ.2,262 கோடியாக உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். இப்படி பல்வேறு வகைகளிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு போக்குவரத்துத் துறைக்கு பல சலுகைகளை வழங்கிக் கொண்டிருக்கிறது.

ஓய்வு பெற்றவர்களுடைய பணப் பலனைப் பொறுத்தவரை, கடந்த கால ஆட்சியில் ரூ.928 கோடிதான் கொடுத்தார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் ரூ.1,376 கோடி கொடுத்திருக்கின்றார்கள். எதுவும் கொடுக்காமல் அரசு எடுத்துக் கொண்டதைப் போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, தவறான கருத்து என்பதை நான் பல முறை சொல்லியிருக்கிறேன்; இப்போதும் சொல்கிறேன். போக்குவரத்துக் கழகத்திலே ஒப்பந்தத் தொழிலாளர்களை எடுத்திருக்கின்றார்கள் எனவும், தொழிலாளர் துறை சம்பந்தமாகவும் உறுப்பினர் சொல்லியிருக்கின்றார்கள்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரை, மாண்புமிகு அம்மா அவர்கள் ஐந்தாண்டு காலத்தில் 31,000 பேரை தேவையான



இடங்களுக்கு எடுத்திருக்கின்றார்கள். ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்கின்றவர்களுக்கு நாங்கள் எதுவும் செய்ய முடியாது. பி.இ. படித்தவர்களுக்கெல்லாம் ரூ.8,000/-, ரூ.9,000/- சம்பளம் கொடுக்கின்றார்கள் என்று சொல்கிறார்கள். Apprentice ஆகப் போனவர்களுக்கு ஓராண்டு கால ஒப்பந்தம் இருக்கிறது. ஓராண்டிற்குப் பின்னால் அவர்கள் நிரந்தரம் ஆகின்றபோது சம்பளம் அதிகமாகக் கிடைக்குமென்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், அரசைப் பொறுத்தவரை, தேவையானவற்றிற்கு நிரந்தரப் பணியாளர்களைத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஐந்தாண்டு காலத்தில், கிட்டத்தட்ட 3 இலட்சம் பேரை அரசுத் துறைகளுக்கு மட்டுமே எடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், எந்தவிதத்தில் குறைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்குணர்ந்து பார்க்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள், போக்குவரத்துக் கழகம் அதிக கடனில் இருக்கிறது, அரசு கடனைத் தராத சூழ்நிலையில் இருப்பதைப்போல ஒரு தோற்றம் உள்ளது என்று சொன்னார்கள். மானியங்கள், பங்கு மூலதன உதவி, கடன்கள் போன்ற பல்வேறு நிதி உதவிகளை மாநில போக்குவரத்துக் கழகத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு தொடர்ந்து வழங்கி வருகிறது.

2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை மாணவ மாணவியர் பயணக் கட்டணத்திற்கு மானியமாக 2,276 கோடி ரூபாயும், டீசல் மானியமாக 1,800 கோடி ரூபாயும், பங்கு மூலதன உதவியாக 1,190 கோடி ரூபாயும், கடனுதவியாக 1,015 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 6,281 கோடி ரூபாயை நிதியுதவியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக்கான வைப்பு நிதியத்திற்கு 110 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில்

போக்குவரத்துத் துறைக்கு 1,590 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று இடைக்கால நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

*பிற்பகல் 4-35*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமக்கள் கொடுத்திருக்கிற அந்த விளக்கங்களிலே எனக்கு சின்னச் சின்ன வேறுபாடுகள் உள்ளன. நான் எதுவுமே கொடுக்கவில்லை என்று சொல்லவில்லை. எவ்வளவு அங்கே தேவைப்படுகிறதோ, எவ்வளவு அங்கே பற்றாக்குறை இருக்கிறதோ அதை ஈடுகட்ட முழுமையாகத் தரவில்லை என்பது மட்டும்தான் என்னுடைய வாதம். அதனால்தான், கிட்டத்தட்ட 5,000 தொழிலாளர்களுக்கு கடந்த இரண்டாண்டுகளாக 500 கோடி ரூபாய்க்குமேல் பணம் தரப்படாமல் இருக்கிறது. ஓய்வு பெற்ற பிறகு பணத்தைத் தர மறுத்தால் அல்லது கொடுக்க இயலவில்லை என்று போக்குவரத்துக் கழகம் சொன்னால், அந்தத் தொழிலாளி எங்கே போவான்? நான் குறிப்பிட்ட திரு. நடராஜன் என்கிற தொழிலாளி காவல் துறை ஆய்வாளருக்குக் கடிதம் ** நான் என்ன கேட்கிறேன் என்றால், இந்த நிலையில் ஆயிரக்கணக்கான—நேற்று ஒரு தொழிலாளி என்னுடைய தொழிற்சங்கத்திற்கு வந்து "நான் தீக்குளிப்பேன்" என்று என்னை மிரட்டுகிறார். என்னிடம் வந்து, "என்னுடைய பிள்ளையை நான் admit செய்திருக்கிறேன், நான்கு இலட்சம் ரூபாய் எனக்கு செலவாகியிருக்கிறது, மருத்துவமனையிலே பணம் கேட்கிறார்கள், எனக்கு இங்கே எட்டு இலட்சம் ரூபாய் வர வேண்டியிருக்கிறது, தர மறுக்கிறார்கள், கேட்டால், சீனியாரிட்டி அடிப்படையில் தருவோம் என்று கழகம் சொல்கிறது, நான் என்ன செய்வது?" என்று அந்தத் தொழிலாளி கேட்கிறான். என்னுடைய கேள்வி இதுதான். ஓய்வு பெற்ற பிறகு அந்தத் தொழிலாளிக்கு உரிய பணத்தைக் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா? அன்றே கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா, எடுக்காதா? இது மட்டும்தான் என்னுடைய கேள்வி. ஒரு வருடம், இரண்டு வருடம் wait. . .

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ இந்த ஐந்தாண்டு காலத்தில்தான் நாங்கள் ஓய்வு பெற்றவர்களுக்கு பணம் கொடுக்காததைப்போல சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இது காலங்காலமாக இருந்து வருகின்றது, அது accumulate ஆகிக் கொண்டிருக்கின்றது. கடந்த கால ஆட்சியில் 928 கோடி ரூபாய்தான் கொடுத்திருந்தார்கள். இப்பொழுது 1,376 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 400 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் அதிகமாகத்தான் கொடுத்திருக்கின்றார்கள். தொழிலாளர்களின் பேரில் மாண்புமிகு அம்மா அவர்கள் அதிகக் கவனம் செலுத்துகிற காரணத்தினால்தான், இதற்கு அதிக நிதியை ஒதுக்கி, இப்பொழுது 400 கோடி ரூபாய் அதிகமாகக் கொடுத்திருக்கின்றார்கள். ** என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது தவறான தகவல். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இதைக் கவனித்து, அது அவைக் குறிப்பில் இருக்க வேண்டுமா என்பது குறித்து முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், முதியோர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டத்தை முதன்முதலாக மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அதை வரவேற்பதை விட்டுவிட்டு, பல பேர் கருத்து வேறுபாடாகச் சொல்வது தவறானது. ஏனென்று சொன்னால், எவ்வளவு பெரிய திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். திட்டத்தை அறிவிக்கும்போதே, 'முதல் கட்டம்' என்று சொல்லியிருக்கின்றார்கள். அதை நீங்கள் நன்கு புரிந்துகொண்டு, இந்தத் திட்டத்தை வரவேற்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஆதாரமில்லாமல் சொன்ன ** என்பது தொடர்பான வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை உங்களிடம் நான் கொடுத்த ஆதாரங்களில், அவர் கைப்பட எழுதிய கடிதம் இருக்கிறது. அந்தக் கடிதத்தை நீங்கள் verify செய்துகொள்ளலாம். அதற்குப் பிறகு நீங்கள் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கலாமா, வேண்டாமா என்பதை முடிவு செய்யுங்கள். கோவில்பட்டி காவல் நிலையத்தில் விசாரித்துவிட்டு, அதற்குப் பிறகு நீங்கள் முடிவு செய்யுங்கள். இதற்கு ஆதாரமான அந்தக் கடிதத்தை இன்று காலையில் உங்களிடம் நான் கொடுத்திருக்கிறேன்.

அடுத்து, மின் வாரியம். மின் வாரியம் குறித்து நீங்கள் ஏற்கெனவே நிறைய விளக்கங்கள் சொல்லிவிட்டீர்கள். அந்த விவரங்களுக்குள் நான் மறுபடியும் போகவில்லை. அனல் மின்சாரம் 13,496 மெகா வாட், புனல் மின்சாரம் 3,030 மெகா வாட், காற்றாலை மின்சாரம் 8,000 மெகா வாட், சூரிய சக்தி 986 மெகா வாட், கிட்டத்தட்ட 26,860 மெகா வாட் என்பதெல்லாம் சரிதான். என்னுடைய கேள்வி, நமக்கு இப்போது தேவை 15,000 மெகா வாட். 26,860 மெகா வாட் உற்பத்தி என்பது காற்றாலை மின்சாரம் 8,000 மெகா வாட்டையும் சேர்த்துத்தான். காற்றாலை என்பது seasonal. முதலாவதாக, காற்றாலைமூலம் கிடைக்கக்கூடிய மின்சாரத்தை நம்பி நாம் மின் மிகை மாநிலம் ஆகிவிட்டதாகச் சொல்லக் கூடாது. இரண்டாவதாக, ஏதாவது பக்கத்து மாநிலம் நம்மிடம் வந்து, 100 மெகா வாட் மின்சாரம் பத்து வருடங்களுக்குக் கொடுங்கள் என்று கேட்டால், நம்மால் கொடுக்க முடியுமா? நீங்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறீர்களா? அப்படிக் கொடுப்பதற்கு நம்மால் முடியாது. நான் தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு) நீங்கள் என்னை சொல்ல விடவில்லையே? நம்முடைய உற்பத்தி, நம்முடைய தேவை, இந்த இரண்டும் இப்போது வாய்க்கும், கைக்கும் என்கிற முறையிலே சரியாக இருக்கிறது. இதை இன்னும் அதிகப்படுத்த வேண்டும். Demand-ம் கூடிக் கொண்டேயிருக்கின்றது. இந்தச் சூழ்நிலையிலே, மின் மிகை மாநிலம் என்று சொல்லி, நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்காமல் விட்டுவிடக் கூடாது என்பதுதான் என்னுடைய கவலை. அப்படிப்பட்ட நிலைமைக்கு நீங்கள் போக வேண்டாம். யாராவது நம்மிடம் மின்சாரம் வேண்டுமென்று கேட்டால், கொடுக்கிற நிலையில் நாம் இப்போது இல்லை. அப்படி கொடுக்கிற நிலையில் எப்போது வருகிறோமோ, அப்போதுதான் மின் மிகை மாநிலம் என்பதைச் சொல்ல முடியும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் மிகை மாநிலம் என்று அம்மா அவர்கள் சொன்னதில் எந்தவிதத் தவறும் இல்லை. எள்ளளவு, எள் முனையளவுகூட தவறில்லை. இதுசம்பந்தமாக நான் ஏற்கெனவே பல முறை விளக்கம் சொல்லியிருந்தாலும்கூட, மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், நிறுவு திறன் முழுவதும் பயன் தராது. நிறுவு திறன் என்பது உச்சபட்சமாக உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தைக் குறிப்பிடுவது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நீர் மின் உற்பத்தித் திட்டங்கள்மூலம் 2,288 மெகா வாட் மின் உற்பத்தி கிடைக்கிறதென்று சொல்கிறோம். எல்லா நீர்நிலைகளிலும், எல்லா அணைகளிலும் நீர் முழுமையாக இருந்தால், அனைத்து உற்பத்தி நிலையங்களும் முழுமையாக இயங்கினால், 2,288 மெகா வாட் நிறுவு திறன் வரும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், அதில் 1,400 மெகா வாட் மின்சாரம்தான் கிடைக்கும். மூலப்பொருள்களுடைய இருப்பைப் பொறுத்து, அந்த அளவு மாறுபடும். நிறுவு திறன் என்பது வேறு, நிறுவு திறனிலிருந்து கிடைக்கக்கூடிய மின்சார உற்பத்தி அளவு என்பது வேறு என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். 26,860 மெகா வாட் என்று நான் சொல்வது, நிறுவு திறன். இதிலிருந்து முழு அளவில் மின் உற்பத்தி வரும் என்று நாங்கள் சொல்லவில்லை.

பிற்பகல் 4-40

அதேபோல, அனல் மின் நிலையங்களில்கூட 4,666 மெகா வாட் அளவிற்கு நிறுவு திறன் இருந்தாலுங்கூட, நமக்கு 4,000 மெகா வாட் மின்சாரம்தான் கிடைக்கிறது. P.L.F. - Plant Load Factor தான் காரணம். ஏறத்தாழ மின் உற்பத்தித் திறனின் அளவு சராசரியாக 80 முதல் 85 சதவிகிதத்திற்குத்தான் கிடைக்கும். ஆக, முழு நிறுவு திறன் இருந்தாலும், அதில் மின் உற்பத்தி எவ்வளவு கிடைக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே, எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்பதையும், முழுமையாக

எவ்வளவு பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும், சொல்ல முடியும்.

இப்போதும்கூட, தமிழ்நாட்டில் மின் தேவைக்கும் மேலாக, கூடுதலாக மின் உற்பத்தி செய்ய முடியும். ஆனால், தேவைக்கு மேல் மின் உற்பத்தி இருப்பதால், நமக்கு தேவைக்கு மேல் மின்சாரம் கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால்தான் இப்போது நாம் மின் மிகை மாநிலம் என்று சொல்கிறோம். அதில் என்ன தவறு? இப்போது மின் உற்பத்தி excess தான். எல்லா வகை மின்சாரத்தையும் சேர்த்து, இன்றைக்கும் தமிழகத்தில் தேவைக்கு அதிகமாகத்தான் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இன்னும் சொல்லப்போனால், இதிலே எந்தவகை மின்சாரம் கூடுதலாக செலவாகிறதோ, அதன் கொள்முதலை நிறுத்திவிடுவார்கள். அதைத்தான் Merit Order Despatch என்று சொல்கிறோம். Class எடுப்பதுபோல சொல்லிவிடுகிறேன்; நான் பல தடவை Class எடுத்திருக்கிறேன். நமக்கு எவ்வளவு மின்சாரம் தேவை இருக்கிறதோ, அந்தத் தேவைக்கு எல்லா வகைகளிலும் நமது சொந்த உற்பத்தியைப் பயன்படுத்துவது. அதற்கடுத்தபடியாக, மற்ற மின்சாரக் கொள்முதலிலே குறைந்த விலையில் கிடைப்பதைப் பயன்படுத்துவது. ஒரே விலை இருக்காது என்பதால், அதிலும் நம்முடைய மின்சாரத் தேவை நிறைவடையவில்லை என்றால், அடுத்ததாக, கூடுதலான விலையில் கொள்முதல் செய்து மின்சாரத்தை வாங்குவது. அதற்கும் மேலாக தேவை நிறைவடையவில்லை என்றால், அதற்கும் அதிகமாக உள்ள விலையில் படிப்படியாக, ஏறுமுக வரிசையில் மின்சாரம் கொள்முதல் செய்யப்படும். எந்த இடத்தில் நம்முடைய மின்சாரத் தேவை நிறைவடைகிறதோ, அதோடு அந்த மின்சாரக் கொள்முதல் நிறுத்தப்படும். அதற்குமேல் கூடுதல் விலை இருந்தால், அது idle ஆக இருக்கும், அந்த உற்பத்தியைத் தொடங்குவதில்லை; உற்பத்தியாளர்களிடமிருந்து மின்சாரத்தை வாங்குவதும் இல்லை.

அதேபோலத்தான், இப்போது தேவைக்கு அதிகமாக உற்பத்தித் திறன் இருக்கிறது. அதனால் நமது மாநிலம் மின் மிகை மாநிலம்தான். சமீபத்தில் கர்நாடக மாநிலம்கூட, ‘கூடுதல் மின்சாரம் உங்களிடம் இருக்கிறதே, அதை எங்களுக்குக் கொடுங்கள்’ என்று கேட்டார்கள். சில நேரங்களில் நமது தேவையை நிறைவு செய்வதற்கு, நிரந்தரமாக மின் உற்பத்தி கிடைக்கும் என்று சொல்ல முடியாது. நீர் மின் நிலையத்தில் நீரின் இருப்பு வறண்டுவிட்டது அல்லது அனல் மின் நிலையங்களில்



ஏதாவது எதிர்பாராத பழுது ஏற்பட்டுவிட்டால், கூடுதலாக உற்பத்தியாகின்ற மின்சாரத்தில் பற்றாக்குறை ஏற்பட்டுவிடும். ஆகவேதான், excess, கூடுதல் மின்சாரம் இருந்தாலும்கூட, மின் நிலையங்களில் திடீரென்று பழுது ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அம்மாதிரியான பழுது ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், கூடுதலாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை யாருக்கும் கொடுக்காமல் அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், பிற மாநிலங்களுக்கு மின்சாரத்தைக் கொடுக்கக்கூடிய திறன் நம்மிடம் இருக்கிறது. நம்முடைய மின் தேவைக்கு ஏற்ப கூடுதலாக மின் உற்பத்தி செய்யும் திறன் இருக்கிறது. தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றாக்குறையே இல்லை என்பதை மீண்டும் ஒரு முறை உறுதியோடு உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் மீண்டும் ஒரு முறை சொல்கிறேன், 100 சதவிகிதம் தமிழகத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி, தமிழகத்தை மீண்டும் மின் மிகை மாநிலமாக (மேசையைத் தட்டும் ஒலி) ஆக்கியிருக்கிறார் என்பதை நீங்கள் தயவுசெய்து ஒப்புக்கொண்டு, பாராட்ட மனம் இல்லாவிட்டாலும், குறை சொல்லாமல் இருங்கள் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு மிக்க நன்றி. தமிழ்நாடு மின்சார வாரியத்தில், கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 300 தொழிலாளர்கள் விபத்தில் இறந்துள்ளனர். இது முன்னெப்போதும் இல்லாத அளவிலான எண்ணிக்கையாகும். இதற்கு ஒரு காரணம், ** இன்னொரு காரணம், போதுமான களப் பணியாளர்கள் இல்லாததால், இருக்கின்ற ஒப்பந்த ஊழியர்களே கூடுதல் நேரம் பணி அழுத்தத்தோடு இரவு-பகலாக வேலை செய்வதும் காரணம் என்று தொழிலாளர்கள் கூறுகின்றனர். இதில் அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 25,000 களப் பணியாளர்களை உடனே நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 4-45*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று ஒரு பொறுப்பான உறுப்பினர் பேசுவது உண்மையிலேயே வருந்தத்தக்கது. ** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த அடிப்படையில் கூறுகிறார் என்று தெரியவில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதை, நான் கூறியது உட்பட தயவுசெய்து நீக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எந்தப் பொருள் வாங்கப்பட்டது, எது பழுதடைந்திருக்கிறது, எதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது, எந்தப் பொருள் கூடுதலான விலையில் ** என்பதை எந்த ஆய்விலே நீங்கள் கண்டறிந்தீர்கள்? இதற்கு என்ன ஆதாரங்களை நீங்கள் கையில் வைத்திருக்கிறீர்கள்? ஏதோ உங்கள் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இரண்டு பேர் சொல்வதைக் கேட்டுக்கொண்டு, நீங்கள் பொத்தாம்பொதுவாக ஆதாரமில்லாமல் பேசுவது சரியான அணுகுமுறை அல்ல. அவர்கள் பல்வேறு அரசியல் காரணங்களுக்காக பல்வேறு செய்திகளைச் சொல்கிறார்கள். பொதுக் கூட்ட மேடையில் பேசும்போது பயன்படுத்துவதைப் போன்று சட்டமன்றப் பேரவையில் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள் ஆதாரமில்லாமல் கூறியது, அதுகுறித்து மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் பேசியது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** ** என்று ஆதாரத்தோடு நிரூபித்தால் அதற்குரிய தண்டனை வழங்கப்படும். அதில் no compromise. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, எந்தவிதத்திலும் தவறு நடப்பதற்கு ஒருபோதும் இடம் கொடுக்காது என்பதை மீண்டும் உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பணியாளர்கள் பற்றாக்குறை இருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. பணியாளர்கள் பற்றாக்குறையைப் போக்க வேண்டும் என்பதற்காகத்தான், மின்சார வாரியத்தில் மின்சாரப் பொறியாளர்களைத் தேர்வு செய்வதற்காக தேர்வுகள் நடத்தினோம். அதற்கும் தடை கோரி நீதிமன்றம் சென்று விடுகிறார்கள். பணியாளர்களின் புதிய நியமனத்திற்காக எல்லா வகைகளிலும் தமிழ்நாடு மின்சார வாரியம் எடுத்த நடவடிக்கைகள், தற்போது நீதிமன்றத்தின் குறுக்கீட்டின் காரணமாக, வழக்கு நிலுவையில் இருக்கின்ற காரணத்தால் நிறைவடையவில்லை. வழக்கு முடிவுற்ற பின்பு, பணியாளர்களை நியமிக்கும் பணி தொடங்கப்பட்டு, பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லா வகைப் பணியாளர்களையும் நியமிக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது உங்களுக்கும் தெரியும். நீதிமன்றத் தடையாணையின் காரணமாகத்தான், அந்தப் பணி நிலுவையில் இருக்கிறது. வழக்கு முடிந்ததற்குப் பிறகு, நிச்சயமாக காலிப் பணியிடங்களில் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் துறையில், ACL எனப்படும் உதவி தொழிலாளர் ஆணையர்கள் மொத்தம் 24 பேர் இருக்க வேண்டும்; இப்போது ஒருவர் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்; 23 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்று ஏற்கெனவே இங்கே பேசியபோது குறிப்பிட்டேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை, அவர்கள் கிட்டத்தட்ட மாஜிஸ்ட்ரேட்டுக்கு சமமானவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இதுகுறித்து ஏற்கெனவே இங்கே குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். அந்த வகையில், அதற்குரிய பட்டியல்களெல்லாம் தயார் நிலையில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ACL எனப்படும் உதவி தொழிலாளர் ஆணையர்கள் இல்லாத காரணத்தால் தொழிலாளர்களின் 15,000 பணிக்கொடை வழக்குகள் நிலுவையிலேயே இருக்கின்றன; சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அவர்களை நியமனம் செய்து, தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பெரும்புதூர் அலுவலகத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று நான் இந்த அவையில் கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று கூறினார்கள். அதுவும் நிறைவேற்றப்படவில்லை. அங்கு ஏராளமான வழக்குகள் வருகின்றன; ஒரு அதிகாரியால் சமாளிக்க முடியவில்லை; தொழிலாளர்களுக்கும் பாதிப்பு இருக்கிறது.

கட்டுமானம் மற்றும் உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தில் நிரந்தரச் செயலாளர்கள் இல்லை. தற்போது, In-charge தான் பார்த்துக்கொண்டு வருகிறார். அதனால், ஏராளமான பணிகள், ஏராளமான விஷயங்கள் தீர்க்கப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே, இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நிதிநிலை அறிக்கையில் பெட்ரோல், டீசல் விலை குறைகிற காரணத்தினால், நமக்கு வரி வருவாய் குறைந்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பெட்ரோல், டீசல் விலை உயரும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவற்றின் விலையைக் குறைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுகிறார்கள்; நாங்களும் ஆட்சேபிக்கிறோம். அரசும் ஆட்சேபிக்கிறது. விலை குறைகிறபோது வரி வருவாய் குறைகிறது என்று நிதிநிலை அறிக்கையில் நாம் குறிப்பிடுகிறோம். என்னுடைய கேள்வி என்னவென்றால், விலைக்கு ஏற்ப இத்தனை சதவிகிதம் வரி என்று நிர்ணயம் செய்வதற்குப் பதிலாக ஒரு லிட்டருக்கு இத்தனை சதவிகிதம் வரி என்று ஏன் நிர்ணயம் செய்யக் கூடாது? அப்படிச் செய்தால் பெட்ரோல்மூலம் இந்த ஆண்டு எவ்வளவு வரி வருவாய் வரும் என்று நமக்கு நிச்சயமாகத் தெரியும். அரசு குறிப்பிட்ட வரி வருவாயை எதிர்பார்த்து, பெட்ரோல், டீசல்



விலை குறைந்துபோய், அதனால் வரி வருவாய் குறைந்துபோய், நாம் ஏமாற வேண்டிய அவசியம் இல்லை. வரியை விலையோடு இணைக்காமல், அளவோடு இணைத்து ஏன் வரி விதிக்கக்கூடாது? நாம் அப்படி வரி விதித்தோமானால், நமக்கு இந்தக் குழப்பம் இருக்காது. என்ன வரி வருவாயை நாம் எதிர்பார்க்கிறோமோ, அது நமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் என்று கருதுகிறேன். மத்திய அரசு விலையோடு இணைத்து வரி போடுகிறது. விலை குறையும்போது இன்னொரு வரியை போட்டுவிடுகிறார்கள். அதுபோல், நம்மால் செய்ய முடியவில்லை. எனவே, இதற்கு ஒரு மாற்று வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பது மட்டும்தான் என்னுடைய வேண்டுகோள்.

பிற்பகல் 4-50

உணவுப் பாதுகாப்பு மசோதா இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழக அரசு இதை அமல்படுத்த ஓராண்டு அவகாசம் கேட்டிருக்கிறது. முதல்வர் இதுகுறித்து விடுத்த அறிக்கையில், உணவுப் பாதுகாப்பு மசோதாவால், தமிழக அரசுக்கு பொது விநியோகத் திட்டத்தில் கூடுதலாக 1,000 கோடி ரூபாய் செலவாகும் என்று குறிப்பிட்டார்கள். இது இடைக்கால பட்ஜெட்டாக இருந்தாலும்கூட, இப்போது அறிவிக்கப்பட்டுள்ள 200 கோடி ரூபாய் என்பது, 1,000 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும் என்கிற நிலைமையில், போதுமானதாக இல்லையென்று நான் கருதுகிறேன். பொது விநியோகத் திட்டம் இதனால் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதுதான் என் கவலை. 1,350 கைத்தறி நெசவாளர் சங்கங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. இந்தச் சங்கங்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கொண்டு வந்த உணவுப் பாதுகாப்புத் திட்டத்தினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆரம்பத்திலேயே அத்திட்டம் தமிழகத்திற்குப் பொருந்தாது, தமிழகத்தைப் பொறுத்தவரையில், அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். தமிழகத்தில் இருக்கின்ற அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு

[திரு. இரா. காமராஜ்] [2016 பிப்ரவரி 19

கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே, எங்களைப் பொறுத்தவரை, தமிழகத்தைப் பொறுத்தவரை, மத்திய அரசு கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டம் தேவையில்லை என்கிற கருத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வலியுறுத்தினார்கள். இதைத்தான் இன்றுவரை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மக்களைப் பாதிக்காத அளவில், பொது விநியோகத் திட்டம் பாதிக்கப்படாத அளவில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 1,350 உள்ளன. மிகவும் ஏழைத் தொழிலாளர்கள் அவற்றில் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுக்கு உரிய நேரத்தில் உரியது கிடைக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நூல் கூலி மற்றும் அனைத்தும் கிடைக்க வேண்டும். இந்தச் சங்கங்களுக்கு கடந்த 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து நிலுவையில் இருக்கிற தள்ளுபடி மானியம் 167 கோடி ரூபாய். கோ-ஆப்டெக்ஸ் வழங்க வேண்டிய 38 கோடி ரூபாயும் இந்தச் சங்கங்களுக்கு வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கிறது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் பெற்ற தகவலின் அடிப்படையில் சொல்கிறேன். நான் அதற்கான குறிப்பையும் பேரவைத் தலைவரிடம் கொடுத்திருக்கிறேன். கைத்தறிச் சங்கங்கள் சிதையாமல் இருப்பது மிக மிக முக்கியம். ஏனென்றால், அடித்தட்டில் உள்ள அந்த மக்களுக்கு நாம் பசுமை வீடுகள் எல்லாம் கட்டிக் கொடுக்கிறோம். ஆகவே, இந்த நிலுவைத் தொகைக்கு சற்று முன்னுரிமை கொடுத்து, அந்த கைத்தறிச் சங்கங்களுக்கு வழங்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தை வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.



2016 பிப்ரவரி 19]

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மூத்த உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் நீங்கள் பார்த்தது 167 கோடி ரூபாய் என்பது கடந்த ஆட்சிக் காலத்தில் நிலுவையில் உள்ள தொகை. (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு வழங்கவில்லையென்றாலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்தபின்பு, மாநில அரசின் தொகைகளை மிகச் சரியாக இன்றுவரை நிலுவை இல்லாமல் வழங்கியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதான் உண்மை. நீங்கள் நன்றாக அதனை மீண்டும் வாங்கி ஆராய்ந்து பார்க்கலாம். நான் வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நாளைக்கு புள்ளிவிவரங்கள் தருகிறேன். எந்த ஆண்டு, எவ்வளவு தொகை, மத்திய அரசு வழங்க வேண்டிய தொகை எவ்வளவு, மாநில அரசு நிலுவை இல்லாமல் எவ்வளவு வழங்கியுள்ளது என்பதையெல்லாம் நான் உங்களுக்கு எழுத்து வடிவில் தருகின்றேன்.

அதைப்போல், கோ-ஆப்டெக்ஸைப் பொறுத்தவரை, கொள்முதல் செய்யப்பட்ட தொகைகள் விற்பனை ஆக ஆக, அங்கே அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை கவனத்தில் எடுத்து, அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதனை மாண்புமிகு அம்மா அவர்களது மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் திருநெல்வேலி நடராஜன் பற்றிச் சொன்னார்கள். 10-1-2016 அன்று, provident fund-லிருந்து கூடுதலாக 63,551 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம், கிட்டத்தட்ட 3,10,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கின்றது. மீதி பணத்தை குறுகிய காலத்திற்குள் கொடுப்பதற்கு. . . (குறுக்கீடு) இருக்கின்றது. நான் இல்லையென்று சொல்லவில்லை. கூடுதலாக தற்போது கொடுத்திருக்கிறார்கள். 63,551 ரூபாய், 10-1-2016 அன்று கொடுக்கப்பட்டிருக்கின்றது.

[திரு. பி. தங்கமணி] [2016 பிப்ரவரி 19

அதேபோல், நான் ஏற்கெனவே பேசியபோது, ** முதல் கட்டம் என்று சொன்னேன். அவற்றில் ** என்பதை எடுத்துவிட்டு முதல் கட்டமாக மூத்த குடிமக்களுக்கு என்பதை மட்டும் பதிவேட்டில் பதிய வைத்துக்கொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் அலுவலர்கள் எல்லாம் நியமிக்கப்படாத காரணத்தால், அங்கு பணிகளெல்லாம் முடக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள்; அது தவறான கருத்து என்பதை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசு, பொறுப்பேற்றதற்குப் பின்னர், 20,83,198 கட்டுமானத் தொழிலாளர்கள் பயன்பெறுகிற வகையில், 540,37,74,000 ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொழிலாளர்களுக்கு வழங்கியிருக்கிறது என்பதை நான் மெத்த மகிழ்வோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று, ACL Panel-ஐ பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கு அப்ரூவல் பெற்று, அரசாணை வெளியிடப்பட்டுவிட்டது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-55

அடுத்து, திருப்பெரும்புதூர் ACL அலுவலகத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டார்கள். மிக விரைவிலே அந்த அலுவலகம் இரண்டாகப் பிரிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, 2010-2011 முதல் 2013-2014

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2016 பிப்ரவரி 19] [திரு. அ. சவுந்தரராசன்]

ஆம் ஆண்டு வரை நிலுவையில் இருக்கிறது என்றார்கள். 2010-2011 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி தான். ஆனால், அதன் நீட்சியாக 2013-2014 வரை நிலுவையிலேயே இருப்பதாக நான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** நம்முடைய அரசும் தொடர்ச்சியாக அதைக் கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை; கொடுக்கவில்லை என்பதல்ல என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கும் இந்தக் கோரிக்கை எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இது கடந்த ஆட்சியிலேயிருந்து தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கின்றது. மத்திய அரசு சில இடங்களிலே தன் பங்கினைக் கொடுக்கத் தவறிய கால கட்டத்திலும்கூட, மாநில அரசின் பங்குகளை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களுக்கு எந்தவிதமான சிக்கலோ, இன்னல்களோ இல்லாமல் பார்த்துக்கொள்வதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு.

அதைப்போல, கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ச்சியாக அரசு சார்பாக வேலைவாய்ப்பை வழங்கும் வகையில் விலையில்லாத வேட்டி-சேலை வழங்கும் திட்டம்; நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத்தான் பதில் சொல்கிறேன். அவர் வேறு எங்கோ பேசிக் கொண்டிருக்கின்றார். உங்களுக்குத்தான் பதில் சொல்கின்றேன். அரசு சார்பாக கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான். அவர்களுக்கு 4 செட் சீருடைகள் மற்றும் விலையில்லா வேட்டி சேலைகள் உற்பத்தித் திட்டத்தைக் கொடுத்து, அவர்களால் எவ்வளவு உற்பத்தி செய்ய முடியுமோ, அதற்குப் பின்புதான் விசைத்தறிக்கே உற்பத்தி செய்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் சீரிய திட்டங்களின் பயன்களை அவர்கள்

பெறும் வகையில், வாழ்க்கையிலே வேலைவாய்ப்பும், வருமானமும் தொடர்ச்சியாக வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மிக்க நன்றி. வீட்டு வசதி கூட்டுறவு நிறுவனங்கள் ** கடந்த 10 ஆண்டுகளாக கடனே வழங்கப்படவில்லை. வீட்டு வசதிக் கடனே வழங்காமல் வீட்டு வசதியை எப்படி பெருக்க முடியும்? கடனை முழுமையாக வழங்கியவர்களுக்கு பத்திரங்கள் வழங்கப்படாமல் இருக்கின்றன. ஊழியர்களுக்கும் 5 ஆண்டுகளாக சம்பளம் பாக்கியிருக்கிறது. ஓய்வு பெற்றவர்கள் மற்றும் இறந்தவர்களுக்கும் நிதிப் பயன் கிடைக்காமல் இருக்கிறது. வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் என்பது மிக, மிக இன்றியமையாதவை. வீட்டு வசதி பெரிதும் தேவைப்படுகின்ற ஒன்று. வீட்டு வசதிச் சங்கங்களைப் புனரமைத்து, செயல்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய வலியுறுத்தல் ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் நலிவுற்றிருந்தது என்பது உண்மை. மாண்புமிகு அம்மா அவர்கள் 2011-ல் முதலமைச்சராக வந்த பிறகு, 4 முறை வட்டிச் சலுகை கொடுக்கப்பட்டு, அந்தச் சங்கங்கள் கடன் கொடுப்பதற்கு, நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெறுவதற்கு அரசு உத்தரவாதத் தொகை 100 கோடி ரூபாய் ஒதுக்கி, இப்பொழுது 100 சதவிகிதம் வசூல் செய்த சங்கங்கள் கடன் கொடுக்கலாம் என்று சொன்னதன்பேரில், கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. பணம் கட்டியவர்களுக்கு வீட்டு வசதி இணையத்தின் மூலமாக பத்திரங்கள் 99 சதவிகிதம் கொடுக்கப்பட்டுவிட்டன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அடுத்து, வசூல் தொகையை சம்பளத்திற்கு எடுத்துக்கொள்கிறார்கள். கடந்த ஆட்சியில் ‘வரவு எட்டணா என்றால், செலவு பத்தணா’ என்றிருந்தது. ஒரு செயலாளர் ரூ.75,000/- சம்பளம் வாங்குகிற அளவிற்கு முன்பு இருந்தது. கடந்த ஆட்சியிலே உதவியாளர், செயலர் போன்றவர்களுக்கு, ஒரு சொசைட்டியில் எவ்வளவு வருமானம் வருகிறதோ அதைவிட சம்பளம் அதிகமாக இருந்தது. அவற்றையெல்லாம் ஒருநிலைப்படுத்தி, இப்போது வீட்டு வசதிச் சங்கத்திற்கு இணையத்தின் மூலமாக புத்துணர்ச்சி கொடுத்து, அதைக் கடன் கொடுக்கின்ற சங்கமாக மாற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தக்க நடவடிக்கையை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள் பேசும்போது, ** என்ற வார்த்தையை உபயோகப்படுத்தினார். அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. அ. சவுந்தரராசன்:** அதற்கும் நன்றி. முக்கியமான ஒரு கோரிக்கை. போக்குவரத்து ஊழியர்களுடைய வீட்டு வசதிச் சங்கம் சென்னையிலே இருக்கிறது. 20 ஏக்கர் நிலத்தை 18 வருடங்களுக்கு முன்பு வாங்கினார்கள். சென்னை, சோழிங்கநல்லூர் பக்கத்தில் உள்ள தையூரில் வாங்கினார்கள்.

பிற்பகல் 5-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. சவுந்தரராசன், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கையிலே, ** என்று சொன்ன வார்த்தை நீக்கப்படுகிறது. ‘முதற்கட்டமாக’ என்பது மட்டும் இருக்கலாம்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நுழைவதற்கு இடம் இல்லை. ஆகவே, ஒரு enter upon permission வேண்டுமென்று நாங்கள் கிட்டத்தட்ட

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*10 ஆண்டுகளாக, அந்த ஆட்சியிலேயும், இந்த ஆட்சியிலேயும் கேட்டுக்கொண்டேயிருக்கிறோம். இப்போது அந்த வீட்டு வசதிச் சங்கத்தினரால் எதுவும் செய்ய முடியவில்லை. அவர்களுக்கு* approval *கிடைக்கவில்லை; எதுவும் கிடைக்கவில்லை; மனையைப் பிரிக்க முடியவில்லை; மனையைப் பிரித்துக் கொடுக்க முடியவில்லை. ஆகவே,* unapproved-*ஆக நாங்கள் பிரித்துக் கொடுத்து விடுகிறோம் என்கிற முடிவிற்கு* desperate-*ஆக மிகுந்த வேதனையோடு அவர்கள் வந்திருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய வருவாய்த் துறை,* enter upon permission *அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அதுவொன்றும் பெரிய சிரமமான விஷயம் அல்ல. அவர்களின் மனைகளுக்கு அரசு அனுமதி கொடுத்து உதவ வேண்டும். 18 வருடங்கள் ஆகிவிட்டன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) தையூர் வீட்டு வசதித் திட்டம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்க உறுப்பினர்களுக்கு மனையைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்றால், அனுமதி பெற வேண்டும்.* D.R.O. *அவர்கள், அதற்கான* rate *எவ்வளவு என்று* fix *செய்ய வேண்டும். அதையெல்லாம் செய்து, முறையாக, சட்ட விதிகளுக்குட்பட்டுத்தான் வீட்டுமனையைப் பிரித்து, அந்த உறுப்பினர்களுக்குக் கொடுக்க முடியும்.* Unapproved layout-*க்கு அனுமதி கிடையாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** *உண்மைதான். (குறுக்கீடு) அப்படிப்பட்ட,* desperate *ஆக. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சங்கத்தை உருவாக்கியபோது, உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்தான் அப்போது தலைவராக இருந்தார்.*





Real estate *செய்து, அதை வாங்கியபோது, தடத்திற்கு ஒப்புதல் இல்லாமல் வாங்கிய காரணத்தினால்தான் இந்தப் பிரச்சினை தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். கடந்த கூட்டத் தொடரிலேயே நீங்கள் இதைக் கேட்கின்றபோதே சொன்னேன். அதற்குத் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள். அதற்குத் தடம் கிடைக்கின்றபோது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** *அந்த மனையை வாங்கியபோது, அந்த சொசைட்டியின் தலைவராக இருந்தவர் தி.மு.க. தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர். இப்போது தலைவர் அண்ணா தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நேரத்தைப் பாருங்கள். (குறுக்கீடு)*

**திரு. அ. சவுந்தரராசன்:** *5 நிமிடங்களில் உரையை முடித்து விடுகிறேன். விரைவில் படித்து விடுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** *சமூக நலத் துறையின்கீழ் உள்ள தையல் கூட்டுறவு அமைப்புகள், இலட்சக்கணக்கான பெண்களுக்கு வேலை தரக்கூடிய அமைப்புகள், பள்ளிச் சீருடை மட்டுமல்லாமல், அரசுத் துறையின் இதர சீருடைகளையும் தைக்க நாம் ஏற்பாடு செய்தால், அவர்களுடைய வருமானத்தை அதிகப்படுத்த முடியும். அந்த சொசைட்டிக்கு உள்ளே* cutting section *இல்லை. தனியாக, வெளியே தனியாரிடம் இருக்கின்றது. ஆகவே, அவர்கள் கூடுதலாகப் பணம் கேட்கிறார்கள். அங்கே முறைகேடு நடப்பதற்கும் வாய்ப்பிருக்கிறது. ஆகவே,* cutting section-*ஐ நம்முடைய சொசைட்டிக்குள்ளேயே கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*பொது விநியோகத் திட்டத்தில் மூன்று ஆண்டுகளில் 660 கோடி ரூபாய் நிலுவை வைக்கப்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்டத்திற்கு நாம் கொடுக்க வேண்டிய நிலுவை. பொது விநியோகத் திட்டத்திலே கூட்டுறவு சொசைட்டிகள்*

விநியோகம் போன்றவற்றை செய்கிறார்கள்; அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணம் நிலுவையுள்ளது; T.U.C.S. போன்று. குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புகளுக்குப் புத்துயிரூட்ட வைத்தியநாதன் குழு பரிந்துரை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு உறுப்பினர் ஒவ்வொரு துறையாக வருகிறார். என்னை 5-03-க்கு பதில் சொல்ல தோழர் எழுப்பியிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மட்டுமல்ல; பொதுவாக, இந்தப் பொது விநியோகத் திட்டத்தை சங்கங்கள் நடத்துவதற்கு எல்லா அரசுகளும் margin amount கொடுப்பது, மானியம் கொடுப்பது வழக்கம். ஏற்கெனவே இந்தப் பொது விநியோகத் திட்டத்தை நடத்துகின்ற சங்கங்கள் என பொதுவாக கூட்டுறவுச் சங்கத்திலே நான்கு பிரிவுகள் இருக்கின்றன. அவை, மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை; பிரதம கூட்டுறவு பண்டக சாலை போன்றவையாகும். இவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், பொது விநியோகத் திட்டத்தில் அரசாங்கம் கொடுக்கின்ற பொருளையும் விற்பனை செய்கின்றார்கள். அந்தச் சங்கம் முழுமையாகக் கொடுக்கின்ற அந்த விளிம்புத் தொகை, அங்கிருப்பவர்களுடைய சம்பளம் போன்றவற்றிற்கெல்லாம் கட்டுப்படியாகாது என்பதால் கட்டுப்பாடற்ற பொருட்களையும் அங்கே விற்பதற்கு அனுமதி உண்டு.

*பிற்பகல் 5-05*

அதேபோன்று, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள். இச்சங்கமும் பொது விநியோகத் திட்டத்தை நடத்துகின்றது; அரசாங்கம் கொடுக்கும் பொருட்களை குக்கிராமங்களில் வாழ்கின்ற பொது மக்களுக்குக் கொண்டு செல்கிறது. குக்கிராமங்களில் வாழ்கிற மக்களுக்கு தங்குதடையின்றி பொருட்களை வழங்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தப் பொது விநியோகத் திட்டம். அந்தத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்துகிற இந்தக் காலத்தில், இன்றைக்கு தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் பொறுத்தவரையில், அவை பயிர்க் கடன் வழங்குகின்றன, அதற்கு விளிம்புத் தொகை



கிடைக்கிறது, உர விநியோகம் செய்யப்படுகிறது; அதற்கு மானியம் கிடைக்கிறது. வேளாண் சேவை மையங்கள்; மாண்புமிகு அம்மா அவர்கள் வந்தவுடனேயே, ஏறத்தாழ 1,121 சங்கங்களுக்கு 80 கோடி ரூபாய் செலவிலே 50 விழுக்காடு; ஒரு சங்கம் ரூ.20 இலட்சம் பெறுமானமுள்ள கருவிகளை வாங்கிக்கொள்ளலாம். டிராக்டரோ, உழவு இயந்திரங்களோ, அறுவடை இயந்திரங்களோ எந்தக் கருவிகளை வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம். இவற்றை வாங்கியும் கொடுத்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்திற்கும் கூடுதல் வருமானம் கிடைக்கும் வகையில் குறைந்த வாடகைக்கு ½ ஏக்கர், 1 ஏக்கர் வார வாடகைக்கு விடும் விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதன்மூலமும் வருவாய் கிடைக்கும்.

பொது சேவை மையம். (குறுக்கீடு) இவையெல்லாம் என்னவென்றால், நீங்கள் வர வேண்டிய மானியங்கள் குறைவு என்று சொன்னீர்கள் அல்லவா? இதுபோன்று செய்தும்கூட மானியம் குறைவாக இருப்பதன் காரணம் என்ன? உதாரணமாக, தொழிலாளர்கள் ஏற்கெனவே தொகுப்பூதிய அடிப்படையில் வேலை செய்து வந்தார்கள். அவர்களுக்கு இப்பொழுது time scale-ல் சம்பளம் கொடுக்கிறோம். அரசாங்க ஊழியர்களுக்கு 6 மாதங்களுக்கு ஒரு முறை அகவிலைப் படியை உயர்த்துவதுபோன்று, இந்தத் தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டும். ஆக, இப்படி செலவுகள் கூடிக்கொண்டே இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கிறது. அப்படி சம்பளத்தை அதிகரிக்கும்போது கூட்டுறவுச் சங்கங்கள் நலிவடைகின்றன. அதுபோக, அரசாங்கம் பல்வேறு சலுகைகளை வழங்கியிருந்தாலும்கூட, இது தொடர் கதையாகவே இருந்தது. 14 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போதுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த சங்கங்களைக் கையில் எடுத்திருக்கிறார்கள். 14 ஆண்டுகளுக்குப் பிறகு, அரிசி குவிண்டாலுக்கு ரூ.45/- என்று இதுவரை வழங்கப்பட்டு வந்ததை, இப்பொழுதுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் 79 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். அதேபோல, 20 ஆண்டுகளாக கோதுமைக்கு ஒரு குவிண்டாலுக்கு 50 ரூபாய் என்று வழங்கப்பட்டு வந்த தொகையை 88 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். அதேபோன்று, சர்க்கரைக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ.12.55 காசுகளாக இருந்ததை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 22 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறது. மண்ணெண்ணெய் 200 லிட்டர் கொள்ளளவுள்ள barrel ஒன்றுக்கு

ரூ.92/- என்று இதுவரை வழங்கப்பட்டு வந்ததை 14 ஆண்டுகளுக்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 161 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறது. இப்படி உயர்த்திக் கொடுத்ததன் காரணமாக, படிப்படியாக ஏற்கெனவே நஷ்டங்களில் இருந்த இந்தச் சங்கங்களை இன்று மீட்டெடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்தச் சங்கங்களுக்கு வர வேண்டிய பணம் கடந்த ஆட்சியிலிருந்தே வர வேண்டிய தொகையாகும். 67 கோடி ரூபாய் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 67 கோடி ரூபாயையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கொடுக்கவில்லை. அதுமட்டுமல்ல, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பின்னால், இது படிப்படியாகக் குறைந்து, 419 கோடி ரூபாய் மொத்தம் வர வேண்டிய தொகையில், 102 கோடி ரூபாய் என்று நான்கு கட்டங்களாகக் கொடுத்து, இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்கிறது. இந்த நிலை இடைப்பட்ட காலத்தில் வந்தது அல்ல, ஏற்கெனவே இருந்து வந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

இன்றைக்கு கூட்டுறவுத் துறையில் பணியாற்றும் பணியாளர்களும் சரி, ரேஷன் கடையில் பணியாற்றும் பணியாளர்களும் சரி, அத்தனை பணியாளர்களுக்கும் ஒரு பொற்காலம் என்றால் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) அரசு ஊழியர்களுக்கு இணையாக காப்பீட்டுத் திட்டம் போன்ற அத்தனை திட்டங்களையும் இவர்களுக்கும் கொடுக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, கூடுதலாக ஒரு தகவல். ஒரு வாரத்திற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர்கள் புதிய தலைமுறை தொலைக்காட்சியைப் பார்த்திருப்பீர்கள். புதிய தலைமுறை தொலைக்காட்சியில், அடுத்த முறையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும், மாண்புமிகு அம்மா அவர்களும்தான் தமிழ்நாட்டை ஆளப் போகிறார்கள் என்பதற்கு 36 சதவீத மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பொது விநியோகத் திட்டத்தை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் இந்தியாவிலேயே சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது



என்பதால்தான் 36 சதவீத மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். ஆக, பொது சேவை செய்யும்போது இவ்வாறெல்லாம் சில குறைபாடுகள் இருக்கும். அவற்றை நிவர்த்தி செய்தால் அரசு சரியாக இயங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், நீண்ட நேரமாகிவிட்டது. உரையை முடியுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** 5 நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். என்னுடைய கேள்விக்கு சம்பந்தமில்லாமல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைய பதில் சொன்னார்கள். இருந்தாலும் அதிகமான விவரங்களைச் சொன்னார்கள். அதாவது, நான் கேட்டது, கூட்டுறவு நிறுவனங்கள் அம்மா உணவகத்திற்கு, மருத்துவமனைகளுக்கு, சிறைச்சாலைகளுக்கு, பொது நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்களை வழங்குகின்றன. அவ்வாறு உணவுப் பொருட்களை வழங்கும்போது, டி.யு.சி.எஸ். போன்ற கூட்டுறவு நிறுவனங்களுக்கு ரூ.8 இலட்சம், ரூ.7 இலட்சம், ரூ.8 கோடி என்று பாக்கி இருக்கிறது. அந்தத் தொகையைத் தர வேண்டுமென்று மட்டும்தான் நான் கேட்டேன். உங்களுக்காகத்தான் நான் வாதாடினேன்.

அடுத்ததாக, நியாய விலைக் கடை பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அது இன்னமும் அமல்படுத்தப்படவில்லை. அதை அமல்படுத்த வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 5-10

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** கூடுதல் பதிவாளர் மற்றும் வங்கி நிருவாகி ஆகியோர் தலைமையில் 3 மண்டலப் பதிவாளர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இதிலுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் கண்டுபிடித்து, உரிய முறையிலே சம்பளம் கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க அந்தக் குழு

அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மிக்க நன்றி. நீர்வள ஆதாரங்கள் மற்றும் பாசனம் என்ற பகுதியில் சமீபத்திய வெள்ளத்தில் ஏற்பட்ட பாதிப்புகள், நீர் வழி ஆக்கிரமிப்புகள், ஏரிக்கரைகளைப் பலப்படுத்துவது, ஆழப்படுத்துவது போன்றவை பற்றி குறிப்பிடப்படவில்லை. எல்லா நீர்நிலைகளையும் செப்பனிட, மராமத்து செய்ய, நீர் கொள்ளளவை உயர்த்த கூடுதல் நிதியை முன்னுரிமை கொடுத்து ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சதுப்பு நில மீட்பு பற்றி பட்ஜெட்டிலே குறிப்பிடப்பட்டுள்ளது. சென்னை பள்ளிக்கரணையிலே நன்னீர் சதுப்பு நிலம் 15 ஆயிரம் ஏக்கர் இருந்தது. இப்பொழுது 2 ஆயிரம் ஏக்கர்தான் இருக்கிறது. அதிகமான அளவில் சதுப்பு நிலங்களை ஆக்கிரமிப்புகளிலிருந்து மீட்டெடுத்து பாதுகாக்க வேண்டும். இங்கு மரங்களை வளர்த்து, பறவைகள் சரணாலயமாக மாற்ற வேண்டும். சென்னையில் வெள்ளப்பாதிப்பை எதிர்காலத்தில் தடுக்க இது அவசியம் தேவை.

திருப்பூர் போன்று பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நாமக்கல், ஈரோடு, சேலம், கரூர் ஆகிய ஊர்களிலே அமைப்பதற்கு திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது என்று பட்ஜெட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, இந்தப் பகுதிகளிலிருந்து dyeing factories, சாயப் பட்டறைகள் இராஜஸ்தானுக்குப் போகின்றன, குஜராத்துக்குப் போகின்றன என்றெல்லாம் நிறைய பேர் சொல்கிறார்கள். அங்கே போய் சாயம் போட்டு இங்கு கொண்டு வருகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, இன்னும் வேகப்படுத்த வேண்டும். இப்பொழுதுதான் கருத்துரு என்பது எனக்கு உகந்ததாகப்படவில்லை. வேலை வேகமாக இல்லாவிட்டால் நம்முடைய ஜவுளித் தொழில் பெரும் பாதிப்பிற்குள்ளாகும். கச்சத் தீவுப் பகுதியில் மீன் பிடி உரிமையை மீட்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு, ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு மத்திய அரசிடமிருந்து. . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாய ஆலைக்காக ஓர் இடத்தைத் தேர்வு செய்கின்றபொழுது, உங்கள் இயக்கத்தினர்கள்தான் முதலிலே போய் நின்று அந்த இடத்தில் வரக் கூடாது என்று சொல்கின்றார்கள். இது எந்தவிதத்தில் நியாயம்? நீங்கள் சட்டமன்றத்தில் உடனடியாகக் கொண்டு வர வேண்டுமென்று சொல்கின்றீர்கள். அங்கே உங்கள் இயக்கத்தினர் உடனே போராட்டம் செய்கின்றார்கள். இந்த இடத்தில் வந்தால் அருகிலுள்ள கிணறு, விவசாயம் எல்லாம் பாதிக்கப்பட்டுவிடும், நீங்கள் வேறு இடம் செல்லுங்கள் என்று சொல்லி இப்பொழுது போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) பொருத்தமான இடமாகத்தான் பார்த்திருக்கிறோம். எங்கே சென்றாலும் போராட்டத்தை அறிவித்தால் எப்படி நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** நான் இந்தக் கருத்தை ஆட்சேபிக்கிறேன். பொருத்தமான இடம் என்பதிலே உங்களுக்கும் எங்களுக்கும் ஆட்சேபணை இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, processing, சாயப் பட்டறைகள் பிரச்சினையைப் பொறுத்தவரையில், சிதம்பரத்தில்கூட அதைத் தடை செய்ய வேண்டுமென்று முதல் ஆளாக நிற்பது மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய அண்ணன் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள்தான். எல்லா வகைகளிலும் அந்தத் திட்டம் வராமல் தடை செய்வதிலே முதல் ஆளாக அண்ணன் அவர்கள்தான் நிற்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, SIMA-வினுடைய தொழிற்சாலைகளுக்கான கட்டமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் அந்தத் தொழிற்சாலைகள் வந்தால், அங்கே மக்களுக்கு என்னென்ன பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம் செய்ய வேண்டுமென்று ஏற்கெனவே தொழில் துறை அமைச்சரோடு அந்தப் பகுதி விவசாயிகளையும் அழைத்து பேசியிருக்கிறோம். ஆனால், எதைப் பற்றியுமே கவலைப்படாமல் அந்தப் பகுதி மக்களுக்கு என்ன பாதிப்பு வரும்? அவர்களுக்கு என்ன கோரிக்கைகள் இருக்கின்றன, என்ன குறைகள் இருக்கின்றன என்பதைக் கேட்காமல், அந்த SIMA தான் அடித்த மூப்பாகச் செயல்படுகிறபொழுது அங்கு இருக்கிற மக்கள் அதை ஏற்க மறுக்கிறார்கள். ஏனென்றால், திருப்பூரிலே ஏற்படுகிற பாதிப்பு, எங்களுக்கும் ஏற்படும் என்ற அச்சத்தின் காரணமாக அங்கு இருக்கிற மக்கள் குரல் எழுப்புகிறபோது சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவர்களுடைய குரலை பிரதிபலிக்க வேண்டியிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஊர் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்றது. SIMA நிறுவனம் அந்தப் பகுதிகளில் தேவையானவற்றைச் செய்கிறோம் என்று சொல்வதை வரவேற்கின்றார்கள். தாங்கள்தான் அதை வரவிடாமல் தடுப்பதிலே முதல் ஆளாக இருக்கின்றீர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை மக்கள் வரவேற்கிறார்கள் என்று சொன்னால், வரவேற்பதில் முதல் ஆளாக நாங்கள் இருப்போம். மக்கள்



எதிர்க்கின்ற காரணத்தினால்தான் நாங்கள் அவர்களுக்கு பக்கபலமாக இருக்க வேண்டியிருக்கிறது என்பதை மீண்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** பாக் நீரிணைப் பகுதியில் மீன்பிடி உரிமையை நாம் பாதுகாக்க வேண்டும், கச்சத் தீவை பாதுகாக்க வேண்டும் என்று ஆளுநர் உரையிலே ஒரு மாதிரி இருந்தது. ஆனால், இதிலே அழுத்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில் மாற்று வழியை நாம் கண்டுபிடிக்க வேண்டும். ஆழ் கடல் மீன் பிடிப்பிற்காக 1,520 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே அது சொல்லப்படவில்லை. ஆகவே, அதற்கு அழுத்தம் கொடுத்து, இந்த மீன் பிடிப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

பிற்பகல் 5-15

இறுதியாக 2006-வன உரிமைச் சட்டம் உச்ச நீதிமன்றத்தில் இப்போது தீர்ப்பாகிவிட்டது. பிப்ரவரி 1-லிருந்து அமலாக வேண்டும். தமிழகத்திலே அனைத்து மாவட்டங்களிலும் இந்தச் சட்டத்தை முழுமையாக அமலாக்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். ஏற்கெனவே 27,000 மனுக்கள் சம்பந்தப்பட்டவர்களால், பழங்குடியின மக்களால், இதர பிரிவினரால் இந்தச் சட்டப்படி சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 3,714 மனுக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மிச்சமுள்ளவர்கள் பழங்குடியினர் அல்லவா, அவர்கள் வனத்திலிருந்து அகற்றப்படுவார்களா என்கிற கேள்வியெல்லாம் எழுகிறது. ஆகவே, மீண்டும் அந்த மனுக்களைப் பரிசீலித்து, தகுதியான அனைத்து பழங்குடியினர், இதர சமூகத்தினர் ஆகியோருக்கும், நகராட்சிப் பகுதிகளிலும் இந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

[2016 பிப்ரவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20-2-2016) சனிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5-15 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

42. (i) சென்னையிலுள்ள விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கூடுதல் உறுப்பினர் (நீதித் துறை) மற்றும் (ii) கோயம்புத்தூரிலுள்ள விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (கூடுதல் ஆயம்), கூடுதல் உறுப்பினர் (நீதித் துறை) நியமனம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (அ1) துறையின் 27-10-2015 ஆம் நாளிட்ட அரசாணை(டி) எண் 436-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

43. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

44. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

45. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

46. 2011-2012 முதல் 2014-2015 வரை தமிழ்நாட்டில் ஊராட்சிகளின் பணி குறித்த ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 166-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)



2016 பிப்ரவரி 19]

47. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் நாற்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

48. 2011-2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஊரக வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

79. அரசு உறுதிமொழிக் குழுவின் நூற்று எண்பத்தெட்டாவது அறிக்கை. (2015-2016)

80. அரசு உறுதிமொழிக் குழுவின் நூற்று எண்பத்தொன்பதாவது அறிக்கை. (2015-2016)

81. அரசு உறுதிமொழிக் குழுவின் நூற்று தொண்ணூறாவது அறிக்கை. (2015-2016)

82. அரசு உறுதிமொழிக் குழுவின் நூற்று தொண்ணூற்றொன்றாவது அறிக்கை. (2015-2016)

83. அரசு உறுதிமொழிக் குழுவின் நூற்று தொண்ணூற்றிரண்டாவது அறிக்கை. (2015-2016)

84. அரசு உறுதிமொழிக் குழுவின் நூற்று தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை. (2015-2016)

85. அரசு உறுதிமொழிக் குழுவின் நூற்று தொண்ணூற்று நான்காவது அறிக்கை. (2015-2016)

86. அரசு உறுதிமொழிக் குழுவின் நூற்று தொண்ணூற்றைந்தாவது அறிக்கை. (2015-2016)

87. அரசு உறுதிமொழிக் குழுவின் நூற்று தொண்ணூற்றாறாவது அறிக்கை. (2015-2016)

88. அரசு உறுதிமொழிக் குழுவின் நூற்று தொண்ணூற்றேழாவது அறிக்கை. (2015-2016)

[2016 பிப்ரவரி 19

*89.* அரசு உறுதிமொழிக் குழுவின் நூற்று தொண்ணூற்றெட்டாவது அறிக்கை. *(2015-2016)*

*90.* அரசு உறுதிமொழிக் குழுவின் நூற்று தொண்ணூற்றொன்பதாவது அறிக்கை. *(2015-2016)*

*91.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருநூறாவது அறிக்கை. *(2015-2016)*

*92.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருநூற்றொன்றாவது அறிக்கை. *(2015-2016)*

*93.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருநூற்றிரண்டாவது அறிக்கை. *(2015-2016)*

*94.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருநூற்று மூன்றாவது அறிக்கை. *(2015-2016)*

*95.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருநூற்று நான்காவது அறிக்கை. *(2015-2016)*

*96.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருநூற்றைந்தாவது அறிக்கை. *(2015-2016)*

*97.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருநூற்றாறாவது அறிக்கை. *(2015-2016)*

*98.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருநூற்றேழாவது அறிக்கை. *(2015-2016)*

*99.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருநூற்றெட்டாவது அறிக்கை. *(2015-2016)*

*100.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருநூற்றொன்பதாவது அறிக்கை. *(2015-2016)*

*101.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருநூற்று பத்தாவது அறிக்கை. *(2015-2016)*

*102.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருநூற்று பதினொன்றாவது அறிக்கை. *(2015-2016)*

*103.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருநூற்று பன்னிரெண்டாவது அறிக்கை. *(2015-2016)*



2016 பிப்ரவரி 19]

*104.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருநூற்று பதின்மூன்றாவது அறிக்கை. *(2015-2016)*

*105.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருநூற்று பதினான்காவது அறிக்கை. *(2015-2016)*

*106.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருநூற்று பதினைந்தாவது அறிக்கை. *(2015-2016)*

*107.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருநூற்று பதினாறாவது அறிக்கை. *(2015-2016)*

*108.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஏழாவது அறிக்கை. *(2015-2016)*